
முத்துலட்சுமி ராகவன்
எங்கிருந்தோ ஆசைகள்...
பாகம் – 4

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# எங்கிருந்தோ ஆசைகள்...

## பாகம் - 4


**லட்சுமி பாலாஜி பதிப்பகம்**

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி. நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் : bchandar24@yahoo.com

website : www.muthulakshmiraghavan.com

**முத்துலட்சுமி ராகவன் எழுதிய**

# எங்கிருந்தோ ஆசைகள்... *பாகம்* - 4


உரிமை : **ஆசிரியருக்கு**

| | | |
|---|---|---|
| பொருள் | : | நாவல் |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2013 |
| வெளியீடு | : | **லட்சுமி பாலாஜி பதிப்பகம்**<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி. நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |
| நூலின் அளவு | : | 1x8 கிரவுன் |
| தாள் | : | 11.6 kg புக் பிரிண்ட் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| மொத்தப்பக்கங்கள் | : | 400 |

**விலை : ₹ 200/-**

லேசர் டைப் செட் : **விஜி கிராஃபிக்ஸ்,** மதுரை.

அச்சிட்டோர் : **பாரதி அச்சகம்,** சென்னை–**6.**

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது.... இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்...

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ... திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்...

இப்படிக்கு

முத்துலட்சுமி ராகவன்

# ஆசிரியர் கடிதம்...

## முகம் காட்டா முகநூல் நட்பு...

'முகநூல்' எனப்படும் 'Face book'–ல் அறிமுகமான சிலர் என்னை வசீகரித்திருக்கிறார்கள்.. அவர்களின் வார்த்தைகளின் வடிவத்தில் நான் மனம் விட்டுச் சிரித்திருக்கிறேன்... சிந்தித்திருக்கிறேன்... இவர்களில் யார் உண்மையான ஐடி.. யார் ஃபேக் ஐடி என்று எனக்கு இது வரை தெரியாது...

எப்படி எனது எழுத்துத்தான் என் முகம் முகவரி.. என்று நான் சொல்கிறேனா.. அதைப்போல.. அவர்களின் எழுத்தை மட்டுமே நான் கவனத்தில் கொள்கிறேன்... அது சொல்லும் பெயர்.. முகவரியே போதும் என்ற எண்ணம் எனக்கு...

அனுப்பிரியா..! சரவெடி என்று இவருக்குப் பெயர் வைத்திருக்கிறேன்.. வங்கியில் வேலை பார்க்கிறார்...

"வாட்டர் கேன் போடும் பையன் வந்தான்.. வாட்டர் கேனைப் போடவா என்றான்.. நான் மேனேஜரைப் பார்த்து சார் தண்ணி போடலாமா என்று கேட்டேன்... அலுவலகமே என்னை விசித்திரமாகப் பார்த்தது.. ஏனுங்கோ..."

அப்பாவியாய் இவர் போட்ட ஸ்டேட்டஸில் நான் விழுந்து விழுந்து சிரித்தேன்.. இவருக்கு இப்போதுதான்

திருமணமானது.. தூத்துக்குடியில் திருமணம்.. போக முடியவில்லை...

அடுத்து பிரியங்கா முரளி.. அனுபிரியா சரவெடியென்றால் இவர் அணுகுண்டு..! சமீப காலமாக வெற்றிடத்தைக் கொடுக்கும் அனுபிரியாவின் இடத்தை தன் அதிரடி சிரிப்பு வெடி ஸ்டேட்டஸ்களினால் இட்டு நிரப்புகிறவர் இவர்...

'என் சவ ஊர்வலத்தில்...'

என்று ஸ்டேட்டஸ் போடும் தில் யாருக்கு உண்டு..? அது இவருக்கு உண்டு.. அதற்கு...

'நான் சங்கூதுவேன்...'

'நான்தான் முன்னாடி டான்ஸ் ஆடுவேன்...'

என்பதைப் போன்ற உடனடிக் கமெண்டுகளைப் போட்ட ஆருயிர் தோழமைகளைப் பெற்ற பாக்கியசாலி இவர்... எனது பிரியமான தோழி...! என் ஆழ்மனதில் இவர்மீது பிரியம் உண்டு...

அடுத்து ரம்யா முத்து..!

பிரியங்காவின் தோழி..! நான் மனம் தளர்ந்த ஒரு சமயத்தில் நான் சாய்ந்து கொள்ளத் தோள் கொடுக்கும் வகையில் எனக்கான ஆறுதல் வார்த்தைகளைக் கூறி என்னை மடிதாங்கியவர்...

சுகந்தி ரமேஷ்...!

இவரும் அதைப் போலத்தான்.. நான் இளைப்பாற வகை செய்தவர்... என் ஒவ்வொரு வார்த்தைகளையும் ரசித்துச் சொல்லுவார்...

‘இன்னும் புவனேஸ்வரி.. காணப்பிரியா, சசிமுத்துக்கண்ணு, சாரதா கிருஷ்ணன், ஜான்ஸி ராணியாகப்பட்ட மாலதிராணி, ஐஸ்வர்யா, சுமதிஸ்ரீனி, குமுதா தேவி, பொற்கொடிசண்முகம், ஸ்நேகா ஸ்ரீதரன், நந்தினிநகி, சகிஆசிப், அமிர்த வர்ஷிணி, ஹேமசிவா, பிரியதர்ஷினி, பொன்மாரியம்மாள், பாமினி, அம்ரிதா, Infanta, கோமதி, சுபலட்சுமி, ஷமீனா, தங்கமலர், வெற்றிச்செல்வி, மித்ராணிமுகன், வித்யா மோகன், நித்யா கார்த்திகன், பிரியா கௌதம், ஆர்த்தி, தேன்மொழி, டேனிஷ்தேவராஜா, தங்கதேவி, Nathasa, மணிமேகலை, மாலா மாதவன் என்று பலர் இங்கே அறிமுகமாகியிருக்கிறார்கள்.. ஏறக்குறைய அனைவரையும் எழுதிவிட்டேன் என்று நினைக்கிறேன்...’

யாரையாவது நான் எழுத மறந்திருந்தால்.. அதை பெரிதாக நினைக்க வேண்டாம்.. இந்த நொடியில் அவர்களின் பெயர்கள் நினைவுக் குவியலுக்குள் புதைந்திருக்கும்.. அவை என்றும் பொக்கிசமாக அங்கே உறைந்திருக்கும்...

வாழ்க்கை அதன் வர்ண ஜாலங்களை உணர்த்தியபடி ஓடிக் கொண்டிருக்கிறது.. இன்பமும்.. துன்பமும் மாறிமாறி வரும் வாழ்வில்.. இன்பம் கனவில்.. துன்பம் எதிரில் என்று பலநேரம் என்னை உணர வைத்துக் கொண்டிருக்கிறது.. இறைவன் மீதான எனது பிடிப்பு தளராமல் இருக்க வேண்டும்..

இதுவே.. கடவுள்களிடம் நான் இப்போது வைக்கும் ஒரே பிரார்த்தனையாகும்...

இதுவரை நான் இறையருளை உணர்ந்த வாழ்வைத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.. இறுதி வரை அது நிலைக்க வேண்டும்.. அதைத் தவிர்த்து வேறில்லை...

மற்றபடி.. இந்த நூறாவது கதைக்குப் பின்னால்.. என் மனதில் ஒர்விதமான அமைதி உண்டாகியிருக்கிறது.. அது எனக்கான பதிவை.. என் வாழ்நாளின் ஏடுகளில் நான்பதிய வைத்து விட்டேன் என்ற நிம்மதியினால் உண்டானது..

இது ஒரு சாதனையல்ல.. பதிவு மட்டுமே.. ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியவர்கள் இருக்கிறார்கள்.. அவர்கள் முன்னால் நான் வெறும் தூசு...

என் சிறுமிப் பருவம் முதல்.. இன்றைய காலகட்டம் வரை இமயத்தின் உச்சியில் அசையாமல் வீற்றிருக்கும் ரமணி சந்திரன் மேடம் இருக்கிறார்... அவர் மலை..! நான் மடு..!

எழுதுகிறேன்.. எழுதுவேன்.. என் இறுதி மூச்சுவரை என் கற்பனைகளை கதைகளாக வடிப்பேன்...

இதுமட்டுமே நான்..! வேறு ஒன்றுமேயில்லை...



– நட்புடன் –

**முத்துலட்சுமி ராகவன்**

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
website : www.muthulakshmiraghavan.com

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# ‘எங்கிருந்தோ ஆசைகள்’

பாகம் – 4

## 107

*நெஞ்சினிலே உன் நினைவுமுகம்..*
*நித்தமும் தோன்ற ஆசைகொண்டேன்...*

**த**டக்.. தடக்கென்று சீரான லயத்துடன் ரயில் ஓடிக் கொண்டிருந்து... ஏஸி கம்பார்ட்மென்டின் கண்ணாடி ஜன்னலோரமாக சரிந்து அமர்ந்திருந்த காவ்யாவின் விழிகள் இலக்கில்லாமல் சூன்யவெளிளை வெறித்துக் கொண்டிருந்தன.. கடந்து போன மின் கம்பங்களின் நியான் விளக்குகளின் ஒளிர்வையும்.. தூரத்தில் தெரியும் ஊர்களின் விளக்குகள் கார்த்தீகை தீபங்களின் அணி வகுப்பைப் போல மிளிர்வதையும் அவள் கண்டு கொள்ளவே இல்லை...

அவளுக்கு எதிர் புறமாக அமர்ந்திருந்த கண்ணதாசன் தங்கையின் உயிர்ப்பில்லாத பார்வையில் மனம் துடித்தான்.. துள்ளித்திரியும் மான்குட்டியாக அவள் ஓடித்திரிந்த காலங்கள் திரும்பவும் வராதா என்று ஏங்கினான்...

அப்போதெல்லாம் அவன் தங்கை அவனுடன் முகம் கொடுத்துப் பேசமாட்டாள்.. அவன் பாசமாக பேசப் போனாலும் வெடுக்.. வெடுக்கென்று பச்சை மிளகாயின் காரத்தோடு பதில் சொல்லுவாள்... அவனுடன் பேச விரும்பாமல் முகம் திருப்பிக் கொள்வாள்.. ஒரு வார்த்தையாவது அவள் பாசத்துடன் பேசிவிட மாட்டாளா என்று அவன் ஏங்கிப்போவான்...

இப்போது அப்படியில்லை.. அவன் தங்கை அவனிடம் தான் சரண் அடைந்திருக்கிறாள்.. அண்ணா என்னை இந்தத் துக்கத்திலிருந்து காப்பாற்று என்று அவனிடம் இறைஞ்சி ஓடி வந்திருக்கிறாள்.. அவன் பேசுவதை மட்டுமே கேட்கிறாள்.. அவன் சொல்வதை மறுத்துப் பேசாமல் உடனே செய்து விடுகிறாள்....

இருந்தும் கண்ணதாசனின் மனதில் சந்தோசமில்லை..

உயிர்ப்பை தொலைத்து.. அடிபட்ட குழந்தையாக அவன் மடி மீது விழுந்திருக்கும் தங்கையின் மன மாற்றத்தில் அவனால் மகிழ்ந்து விட முடியவில்லை.. அவனுடைய தங்கை சிரித்த முகத்தை தொலைத்து விட்டு.. அவனிடம் திரும்பி வந்திருப்பதால் அவனுக்கு வெற்றி எதுவும் கிடைத்து விடவில்லையே...

“காவ்யா...” அவன் அழைத்தான்...

“ம்ம்ம்...” அவள் விழிகள் உயர்ந்து அவனைப் பார்த்தன..

“குளிரா இருந்தா போர்த்திக்கம்மா.. அதான் பெட்சீட் கொடுத்திருக்காங்கள்ல...” கனிவுடன் சொன்னான்...

“ம்ம்ம்...” அவள் சோகையாக தலையசைத்து விட்டு.. ஜன்னல் பக்கமாக வெறிக்க ஆரம்பித்தாள்...

பழைய காவ்யாவாக இருந்திருந்தால் இப்படியா செய்திருப்பாள்...?

“குளிரினா போத்திக்கனும்னு எனக்குத் தெரியாதா..? அதைக்கூட நீ சொல்லிக் கொடுத்துத்தான் நான் தெரிஞ்சுக்கனுமா.. மெத்தப் படிச்சுட்டா நீ பெரிய மேதாவியாயிருவியா..? நாங்களும்தான் படிச்சிருக்கோம்.. படிக்க விடாம முடக்கி வைச்சிட்டு சொல்லித் தர வர்றியா..? படிக்க விட்டிருந்தா இவ நம்மள மிஞ்சிப் போயிருவான்னு உன் அப்பாவையும் அம்மாவையும் ஏன்னு கேட்காம விட்ட ஆள்தானே நீ... தங்கச்சி நினைச்ச படிப்ப படிக்க முடியலையேங்கிற கரிசனமில்ல.. குளிரெடுத்தா போத்திக்கன்னு கரிசனம் காட்டறியா..?” என்று பிலுபிலுவென்று உலுக்கி எடுத்திருப்பாள்...

அந்தக் காவ்யா எங்கே போனாள்..?

கலைந்த தலைமுடி கற்றையாக நெற்றியை மறைக்க.. சோர்ந்து சீட்டின் மூலையில் சரிந்து ஜன்னல் கண்ணாடியில் முகம் பதித்திருந்த தங்கையின் தோற்றத்தில் கண்ணதாசனின் மனம் வலித்தது...

‘இதுக்குத்தானே அவன் ஆசைப்பட்டான்...?’

அர்ஜீனின் நினைவில் அவன் பல்லைக் கடித்தான்...

‘காதலியைக் காப்பாத்தற திறமையிருக்கவன் காதலிக்கனும்.. அதை விட்டுட்டு வெட்டியா வீர வசனம் பேசிக்கிட்டு இருக்கிறவன் காதலிக்கக் கூடாது.. நான்தான் படிச்சுப் படிச்சு சொன்னேனில்ல.. உன் தகுதிக்கேத்த பொண்ணப் பாரு.. எந்தங்கச்சிய விட்டு விலகிருன்னு.. கேட்டானா..? கடைசியில என்ன ஆச்சு..? எல்லாப் பணக்காரங்க வீட்டிலயும்.. காதலைப் பிரிக்க என்ன தகிடு தத்தங்களைச் செய்வாங்களோ.. அத அவன் வீட்டிலயும் செஞ்சுட்டாங்க.. இவன் கடைசி நிமிசத்தில் வந்து நின்னு என்ன பிரயோசனம்..? என் தங்கையை காப்பாத்த முடியலையே...’

கண்ணதாசன் பெருமூச்சோடு.. தங்கையைப் பார்த்தான்.. அவன் பார்வையை உணராதவளாக அவள் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.. அவர்கள் இருந்த முதல் வகுப்புப் பெட்டியின் அறைக்கதவு தட்டப்பட்டது.. அந்த சப்தம் காவ்யாவை துளிக்கூட பாதிக்கவில்லை.. அவள் காதில் கண்ணதாசனின் பேச்சைத் தவிர வேறு எந்த சப்தமும் நுழைவதில்லை என்பதை வருத்தத்துடன் நினைத்துப் பார்த்தான் அவன்...

அறைக் கதவை திறந்த போது.. கையில் சாப்பாடு டிரேக்களுடன் ரயில்வே சிப்பந்தி நின்றிருந்தான்...

"உங்க டிபன் சார்..."

கண்ணதாசன் இரண்டு டிரேக்களை வாங்கி சீட்டில் வைத்துவிட்டு கதவை அடைத்தான்.. சாப்பிட வசதியாக ஜன்னலோரமாக இருந்த சாப்பாட்டு மேஜை போன்ற இழுப்பறையை இழுத்தான்.. அதில் தட்டுக்களை வைத்துவிட்டு.. தண்ணீர் பாட்டிலை திறந்து வைத்தான்..

"காவ்யா.. சாப்பிட வா..."

காவ்யா மெதுவாக திரும்பினாள்.. தட்டிலிருந்த சாப்பாத்தியை விண்டு வாயில் போட்டுக் கொண்டாள்...

"குருமாவைத் தொட்டுக்கம்மா.." கண்ணதாசன் கவலையுடன் அவளுக்கு நினைவு படுத்தினான்...

"ம்ம்ம்..." காவ்யா அப்போதுதான் குருமாக் கிண்ணத்தையே கவனித்தாள்...

இயந்திர கதியில் சாப்பிட்டு முடித்தவளிடம் தண்ணீர் பாட்டிலை நீட்டினான்.. அவள் தண்ணீரைக் குடித்து முடித்ததும்.. எழுந்தான்...

"வா.. கை கழுவிட்டு வந்துரலாம்..."

காவ்யா பொம்மை போல அவனைப் பின் தொடர்ந்தாள்.. கை கழுவியவுடன்.. அவளுக்கு பாத்ரூம் கதவைக் காட்டிவிட்டு.. அவள் வரும் வரைக்கும்.. வெளியே இருந்த வாசல் பக்கமாக போய் நின்றான்

கண்ணதாசன்.. சிகரெட் பிடித்துக் கொண்டு நின்றிருந்த வேறொருவன் திரும்பி இவனைப் பார்த்து சிநேகிதமாக சிரித்தான்...

“ஏஸி கோச்.. ஸ்மோக் பண்ண முடியல...”

கண்ணதாசன் தலையை ஆட்டி விட்டு.. ரயில் பாதையைப் பார்த்தான்.. கதவு வழியாக வந்த எதிர் காற்று வேகத்துடன் அவர்களின் உடல்மீது படிந்தது...

“ஆயிரம்தான் சொல்லுங்க.. இயற்கை காத்துக்கு ஈடில்லை.. என்னதான் ஏஸி கோச்சானாலும்.. இந்த காத்து கொடுக்கிற ஃபீலிங்கை.. அந்தக் காத்து கொடுக்குதா..?”

“இல்லைதான்...”

கண்ணதாசன் காவ்யாவைப் பற்றிய நினைவோடு லேசாக சிரித்துவிட்டு அவனிடமிருந்து கழன்று கொண்டான்.. அவன் உள்ளே போனபோது காவ்யா வந்து விட்டிருந்தாள்.. அவளுடன் சீட்டுக்குத் திரும்பினான் அவன்...

காவ்யாவை படுத்துக் கொள்ள சொன்ன போது அவள் மறுத்து விட்டாள்.. மறுபடியும் ஜன்னலோர மூலையில் சரிந்து கண்ணாடியில் முகம் புதைத்துக் கொண்டவளைப் பார்க்கையில் அவன் மனம் பிசைந்தது...

‘இவளுக்கு இந்த நிலைமை வந்திருக்கக் கூடாது..’ கண்ணதாசன் மனம் வருந்தினான்...

அவனுக்கு காவ்யாவின் காதலில் உடன்பாடில்லை தான்.. ஆனால் அவள் காதலில் தோற்க வேண்டுமென்று அவன் நினைத்ததில்லை.. அர்ஜீனை அவன் எச்சரித்த போது... அர்ஜீன் மறுத்துப் பேசின விதத்தில் அவன் ஏமாற்றுக்காரனாக இருக்கமாட்டான் என்றே கண்ணதாசன் நம்பினான்.. வேறு இனமென்ற பிரச்னை வரும்... சிவதாணுவும்.. அன்னபூரணியும் சம்மதிக்க மாட்டார்கள்.. சிவதாணுவை திருக்குறளை மேற்கோள் காட்டிச் சம்மதிக்க வைத்து விடலாம்.. அன்னபூரணியின் முன்னால் காவ்யாவை இரண்டு சொட்டு கண்ணீர் விடச் சொன்னால் போதும்.. அவளும் மகளின் மனதுக்குப் பிடித்த வாழ்க்கையை வாழட்டும் என்று விட்டுக் கொடுத்து விடுவாள் என்றுதான் கண்ணதாசன் நினைத்திருந்தான்...

அவன் நினைத்துப் பார்க்காததெல்லாம் நடந்துவிடும் என்று அவன் நினைத்ததில்லை...

அர்ஜீனின் அப்பா சென்னையிலிருந்து வந்து மதுரையில் மையம் கொள்வார்.. கூடவே அர்ஜீனின் வருங்காலப் பெண்டாட்டியென்று சொல்லிக்கொண்டு மமதைபிடித்த பணக்கார ராங்கிக்காரி ஒருத்தியும் வந்து டேரா போடுவாள்.. அவர்கள் யாராலும் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் காவ்யாவின் மனதைப் புண்படுத்தி அர்ஜீனின் வாழ்க்கையிலிருந்து விரட்டி விடுவார்கள் என்று அவன் நினைத்தா பார்த்தான்...?

‘எல்லாம்.. அந்த எடுபட்ட நாயாலே வந்தது...’

தேவராஜனின் நினைவில் அவன் பல்லைக் கடித்தான்...

‘அவன் மட்டும் போட்டுக் கொடுக்காமல் இருந்திருந்தா அந்த பார்த்தசாரதிக்கு விசயமே தெரிந்திருக்காது... அர்ஜீன் கனடாவில இருந்து வர்றதுக்கு முன்னாலேயே அந்த ஆளு மதுரைக்கு வந்து நின்னிருக்க மாட்டாரு... அந்தப் பிடாரியயும் சென்னையில இருந்து வரவழைச்சிருக்க மாட்டாரு.. இத்தன பாடும் வந்திருக்காது...’

கண்ணதாசனுக்குத் தெரியும்.. அர்ஜீன் வருவதற்கு முன்னால் பார்த்தசாரதி வராமலிருந்திருந்தால்.. காவ்யாவின் காதல் ஜெயித்திருக்கும் என்று...

அர்ஜீன் சொன்னதை செய்திருப்பான்.. நிச்சயமாக அவன் வீட்டினருடன் கண்ணதாசனின் வீட்டுக்கு வந்து காவ்யாவை பெண் கேட்டிருப்பான்...

அப்படி நடக்க விடாமல் செய்தது எது...? அர்ஜீன் கனடாவிலிருந்து திரும்பி ஓடி வந்தபோது.. காவ்யா திருட்டுப் பழியேற்று உயிர்துடிக்க அவன் முன் குற்றவாளியாக நிற்கும்படி செய்தது எது...? அவளுக்காக அர்ஜீன் வாதாட முடியாமல்.. அவன் வாயைக் கட்டிப் போட்டு.. அவளிடமே அவனை விளக்கம் கேட்க வைத்தது எது...?

ஒரு நாளும் அதை விதியென்று கண்ணதாசன் சொல்ல மாட்டான்...

'அது சதி...! அந்த பார்த்தசாரதியும்.. அந்த மேனா மினுக்கியும் கூட்டுச்சேர்ந்து போட்ட சதி...' அவன் பல்லைக் கடித்தான்...

காவ்யாவின் இக்கட்டான நிலையிலிருந்து அவளை மீட்டு கண்ணதாசன் அழைத்துக் கொண்டு போன போது.. மகளின் நிலையைக் கண்டு அன்னபூரணி பதறினாள்...

"என்னடா கண்ணா.. இப்பத்தான் இவ வேலைக்கு கிளம்பிப் போனா.. உடனே திரும்பி வந்து நிக்கிறா.. கூட நீயும் வந்திருக்க.. இவ ஸ்கூட்டியைக் காணோம்.. காரில கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்க.. என்னடா விசயம்...?"

பெற்றவளின் மனம் துடித்தபோது.. காவ்யா.. தாயைக் கண்டதும்...

"அம்மா..." என்று கதறினாள்...

"என்னடி..? நான் பெத்த மகளே..! உனக்கு என்னடி ஆச்சு.. ஏண்டி அழுகற.. உன் அம்மா உயிரோடதான் இருக்கேன்.. நீ தாயத்துப் போகலைடி மகளே..! தாயில்லாப் புள்ள போல எம்மகதவிச்சு நிக்கிறாளே.. என்ன நடந்துச்சுன்னு தெரியலையே..." அன்னபூரணி பதறினாள்...

காவ்யா கதறிக் கொண்டிருந்தபோது கண்ணதாசன் தான் நிதானித்தான்...

அவனுக்குத் தெரியும்.. அன்னபூரணிக்கு விவரம் தெரிந்தால் முதலில் காவ்யாவை நான்கு சாத்து சாத்துவாள். அதன் பின்பு வீட்டிலிருக்கும் விளக்கு மாறை தூக்கிக் கொண்டு போய் மகளின் மீது திருட்டுப்பழியை சுமத்திய நேகாவை மாத்து.. மாத்தென்று மாத்தி விடுவாள்...

அந்த ரகளையெல்லாம் வேண்டாம் என்பதற்காக கண்ணதாசன் காவ்யாவின் காதல் விவகாரத்தை பெற்றவர்களிடம் சொல்லாமல் மறைத்து விட்டான்..

“கடைசியில நீ சொன்னதுதான் நடந்திருச்சும்மா...”

“என்னடா சொன்னேன்..?”

“காவ்யாவை வேலைக்கு அனுப்ப வேண்டாம்ன்னு சொன்னியே...”

“அதுக்கென்னடா இப்ப..?”

“இது வேலை.. வேலைன்னு.. நேரத்துக்கு சாப்பிடாம உடம்பைக் கெடுத்துக்கிட்டிருக்காம்மா...”

“அதான் தெரியுமே... முருங்கைக்காய் மாதிரி.. வத்தலும்... தொத்தலுமா இருக்காளே... நம்ம ஊரு புள்ளைகள்ளாம் இவளப் போலவாடா இருக்குதுக...?”

“அதான்.. வயித்து வலி வந்திருச்சு..”

“அடக்கடவுளே...!”

“கடையிலேயே வயித்தைப் பிடிச்சுக்கிட்டு துடிச்சிருக்கா.. இவளோட பிரண்டு பாவனாயில்ல..”

“ஆமாம்.. அவளுக்கென்ன...?”

“அவளுக்கு ஒன்னுமில்லம்மா...”

“எப்படியிருக்கும்..? அவதான் எப்பப் பாத்தாலும்.. ரைஸ்மில்லு மாதிரி வாயில எதையாச்சும் போட்டு அரைச்சுக்கிட்டே இருப்பாளே.. அவளுக்கு என்ன.. தாட்டியமாத்தான் இருப்பா.. நம்ம வீட்டிலயும் இருக்குதே.. நேரா நேரத்துக்கு வயித்தில எதையும் போட்டுக்காம.. என்னமோ அந்தக் கடையே இவதலை மேலதான் நடக்குதுங்கிற மாதிரி.. அப்புறம் வயித்துவலி வராம என்ன செய்யும்...?”

“அந்தப் பாவனாதான் எனக்குப் போன் பண்ணிச்சு...”

“அதையும் இவ செய்யலையா...? திமிருடா கண்ணா..”

“பாவம்.. இதைத் திட்டாதீங்கம்மா.. இதாலே வலி தாங்க முடியல.. அப்புறம் எப்படி போன் பண்ணும்..?”

“வாடி.. டாக்டர்கிட்டப் போகலாம்...”

“நான் கூப்பிட்டுக்கிட்டுப் போயிட்டுத்தான் வரேன்ம்மா...”

கண்ணதாசனால் கோர்வையாக பொய்களை அடுக்க முடிந்தது...

# 108

## மேகத்தை தேராக்கி – நீயெனைத் தேடிவர ஆசைகொண்டேன்...

ரயிலின் ஆட்டம்... தூளியில் யோட்டு ஆட்டி விடுவதைப் போல இருந்தது.. அந்த ஆட்டத்தில் சுகமான தூக்கம் வந்து கண்களில் அமரவா என்று கேட்டது...

'ஊஹீம்...' என்று அதை விரட்டியடித்தான் கண்ணதாசன்...

அவனால் தூங்க முடியாது.. எப்படித் தூங்க முடியும்..? அவன் கண்முன்னால் அவன் தங்கை ஊமை காயம் பட்டவளாக உறக்கத்தை தொலைத்து சரிந்து கிடக்கும் போது.. தூக்கம் அவன் கண்களில் அமருமா...?

மகளுக்கு உடல்நிலை சரியில்லையென்று மகன் சொன்ன பொய்யில் அன்னபூரணியும் அன்று தூக்கத்தை தொலைத்தாளே..

"டாக்டர் என்னடா சொன்னாரு..."

"குடல்ல புண் வந்திருக்காம்மா..."

“வராம என்ன செய்யும்..? அடி பாவி மகளே..! சொல்லச் சொல்லக் கேக்காம.. வேலைக்குப் போறேன்னு போயி.. இல்லாத வியாதியையெல்லாம் இழுத்துக்கிட்டு வந்திருக்கியே...”

அன்னபூரணி போட்ட சப்தத்தில் கதவு மூடியிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான் கண்ணதாசன்...

இல்லாவிட்டால் காவ்யாவுக்கு வரக்கூடாத நோய் வந்திருக்கிறது என்று அந்தத் தெரு முழுவதும் பரவி விடும் அபாயம் இருக்கிறதே...

“ஏம்மா.. கல்யாண வயசில இருக்கிற புள்ளைக்கு கண்ட சீக்கு வந்திருக்குன்னு நீயே பரப்பி விட்டு வந்திருவ போல இருக்கே...”

“இல்லடா கண்ணா.. நீ குடல்ல புண்ணு வந்திருக்குன்னு சொல்றயே...”

“அது எல்லாருக்கும்தான் வரும்.. நேரா நேரத்துக்கு ஒழுங்காச் சாப்பிட்டு.. ரெஸ்ட் எடுத்தாச் சரியாப் போயிரும்.. முக்கியமா இது வெளியில அலையவே கூடாது...”

“சொல்லிட்டேல்ள.. இனிமே.. இவ வேலைக்குன்னு வீட்டுக்கு வெளியே காலை எடுத்து வைக்கட்டும்.. வைக்கிற காலை ஒடிச்சு அடுப்பில வைக்கிறேன்.. என்ன நினைச்சுக்கிட்டு இருக்கிறா..? இவ சம்பாரிச்சு வந்து கொட்டற காசிலதான் இந்த வீட்டில உலை கொதிக்குதா..?

கால்மானம் வைக்கிற கால்ல சூடு இழுக்கனும்.. அப்பத்தான் இவ அடங்குவா...”

பேச்சு பேச்சாக இருக்க.. மகளின் முகத்தை நீவி.. சோபாவில் படுக்க வைத்து.. மின்விசிறியை ஓட விட்டு.. அவசர கதியில் பழச்சாறை தயாரித்துக் கொண்டு வந்து மகளை எழுப்பி.. மார்போடு சாய்த்து.. குழந்தைக்கு புகட்டி விடுவதைப் போல புகட்டிவிட அன்னபூரணியால் மட்டுமே முடியும்...

“அடிச்சுக் கொன்னே போட்டிருவேன்.. வீட்டிலயே அடங்கிக்கிட..”

மகளின் முகம் வருடி அவள் சொன்னபோது.. அவளின் அந்த அதீதமான முரட்டுப் பாசத்தில் காவ்யா விம்மியபடி அவள் மடி சாய்ந்தாள்.. கண்ணதாசனின் கண்கள் பனித்தன...

“ரொம்பவும் வலிக்குதாடி..?” அன்னபூரணி கவலையுடன் கேட்டபோது.. புண்ணாகிப் போன மனதின் வலிதாங்க முடியாதவளாக...

“ஆமாம்மா...” என்று அழுதாள் காவ்யா...

“இவ இந்தப் பாடு படறாளேடா... பேசாம ஆஸ்பத்திரியில சேத்துரலாமா..?” அன்னபூரணி பயந்தாள்..

“வேணாம்மா.. வயசுப் பொண்ணு.. வயித்து வலின்னுதான் நாம் ஆஸ்பத்திரிக்கு போவோம்.. அக்கம்

பக்கத்திலே இருக்கிறவள்களுக்கு அது தெரியுமா..? பெரிசா ஏதோ வியாதி வந்திருக்குன்னு கதை கட்டி விட்டிர மாட்டாங்களா..?" கண்ணதாசன் வேறுவகையில் பயமுறுத்தினான்...

"வேணாம்.. வேணாம்..." அந்த யோசனையை அவசரமாக மனதிலிருந்து அழித்தாள் அன்னபூரணி...

"இனி வேலைக்குப் போறதுங்கிற பேச்சே இருக்கக் கூடாது..." மகனிடம் அவள் மிரட்டியபோது...

"போகவே மாட்டேம்மா..." என்று தீனமான குரலில் சொன்னாள் காவ்யா...

அந்த ஒன்றே அன்னபூரணிக்கு போதுமானதாக இருந்தது.. அவள் நிம்மதியுடன் மகளைத் தேற்றும் வழியில் ஈடுபட்டாள்.. இரண்டு.. மூன்று நாள்களில் காவ்யா பழையபடி நடமாட ஆரம்பித்தாலும்.. அவளிடம் பழைய உற்சாகம் தொலைந்து போயிருந்தது...

"என்னடா கண்ணா.. இப்படியிருக்கா..?" அன்னபூரணி சந்தேகப் பட்டாள்...

"ஏம்மா.. படிக்க.. வேலைக்குன்னு வெளியே துறுதுறுன்னு போய் வந்துகிட்டு இருந்த பொண்ணு.. திடிர்ன்னு வீட்டுக்குள்ள அடைஞ்சு கிடக்கனும்னா அதுக்கும் என்னமோ போல இருக்காதா..?" நியாயம் கேட்டான் கண்ணதாசன்...

“அதைச் சொல்லு...” உடனடியாக அந்த நியாயத்தை ஒப்புக் கொண்டாள் அன்னபூரணி..

மகள் வீட்டுக்குள்ளே வளைய வருவதில் அவளுக்கு சந்தோசம்தான்.. ஆனால் அவள் சந்தோசமில்லாமல் வளைய வருவதில் சந்தோசமில்லை...

“இப்பவாவது இவளுக்கு ஒரு மாப்பிள்ளய பாத்து கல்யாணம் பண்ணி வைச்சிரலாமா கண்ணா..?” நீண்ட நாள்களாக மனதிலிருந்த மனக்கிடக்கையை வெளிப்படுத்தினாள் அன்னபூரணி...

“செய்யலாம்தான்.. நம்ம வீட்டில நீ ஆக்கிப் போட்டு சாப்பிட்டுக்கிட்டு இருக்கையிலேயே இதுக்கு வயித்து வலி வந்துருச்சு.. போற இடத்தில.. இப்படி தட்டில சோற்றைப் போட்டு நீட்டுவாங்களா... என்ன..? அங்கே போனவுடன் இது வயித்து வலின்னு உக்காந்தா.. வியாதிக்காரப் பொண்ண அவங்க தலையில கட்டி விட்டுட்டோம்ன்னு நமக்கு பட்டம் கட்டிர மாட்டாங்களா..?”

எப்படிச் சொன்னால் அன்னபூரணியின் வாய் மூடுமோ.. அப்படிச் சொன்னான் கண்ணதாசன்...

“அதைச் சொல்லு...”

அப்போதைக்கு அன்னபூரணி வாய் மூடிக் கொண்டாலும் அடுத்த நாளே...

“இதுக்கு என்னதான் வழி..?” என்று மகனிடம் கேட்டாள்...

“ஒரு வருசம் போகட்டும்மா... இது வீட்டில இருந்து மருந்து மாத்திரையை சாப்பிடட்டும்... வயித்துவலி குணமானவுடனே கல்யாணத்தையும் பண்ணி வைச்சிரலாம்..” கண்ணதாசன் வழிசொன்னாள்...

“அப்படியா சொல்ற...?” ஏக்கமாக கேட்டாள் அன்னபூரணி...

ஒற்றைமகளுக்கு காலாகாலத்தில் ஒரு கல்யாணத்தை பண்ணி வைத்துப் பார்க்க முடியாத ஆற்றாமை அவளிடம் தெரிந்தது....

“ஆமாம்மா.. கல்யாணம் எங்கே ஓடிறப் போகுது..? முதல்ல காவ்யா குணமாகட்டும்.. கல்யாணத்தப் பத்தி அப்புறமா யோசிக்கலாம்...”

கண்ணதாசன் அப்போதைக்கு அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான்...

கண்ணதாசனைத் தேடி அவன் அலுவலகத்திற்கே வந்தான்தான் அர்ஜீன்...

“இது ஆபிஸ்.. பெர்ஸனலா பேசற இடமில்ல..” முக இறுக்கத்துடன் பேசினான் கண்ணதாசன்...

“எனக்கும் தெரியுது.. பட்.. வேற எங்கே நாம பார்க்கறதுன்னு நீங்களே சொல்லுங்க...”

“வேற எங்கேயும் எதற்குப் பார்த்துக்கனும்...?”

“லுக் மிஸ்டர் கண்ணதாசன்.. நான் உங்க தங்கையைத்தான் காதலிக்கிறேன்.. உங்களையில்லை..”

அர்ஜீன் கிண்டலாக சொல்லிய விதத்தில் கண்ணதாசனின் முகம் சிவந்து விட்டது...

“இது மட்டமான ஜோக்...”

“இருக்கட்டும்.. எனக்கு உங்க தங்கையைப் பார்க்கனும்...”

“அது யாரையும் பார்க்காது...”

“அது எனக்கும் தெரியும்.. நான் என்னைப் பார்க்கத்தான் சொன்னேன்...”

“இந்த வியாக்கினத்துக்கு ஒன்னும் குறைச்சலில்லை மிஸ்டர் அர்ஜீன். ஆனா... எந்த மூஞ்சியை வைத்துக்-கிட்டு என் தங்கையைப் பார்க்கனும்னு என்கிட்டேயே சொல்றீங்கன்னுதான் தெரியலை...”

“இந்த முகத்துக்கென்ன கண்ணதாசன்..? நல்லாத்தானே இருக்கு..? இதைப் பார்த்துத்தானே உங்க தங்கை என்னைக் காதலிக்க ஆரம்பித்தா..? ஸோ.. எனக்கு இந்த முகமே போதும்.. இதை வைத்துக்கிட்டே உங்க தங்கையைப் பார்க்கிறேன்...”

“இவ்வளவு நடந்த பின்னாலும் தைரியமா என் முன்னால் வந்து உட்கார்ந்துக்கிட்டு தெனாவெட்டா பேசறிங்க.. இந்த தெனாவெட்டை என் தங்கை ரசிக்காது..”

“அதை அவளே சொல்லட்டும் கண்ணதாசன்...”

கண்ணதாசன் அவனையே இமைக்காமல் பார்த்தான்.. சளைக்காமல் அவன் பார்வையை எதிர் கொண்டான் அர்ஜீன்.. ஒரு நிமிடத்திற்கு பின்னால் கண்ணதாசன் மௌனப் பார்வையோடு செல் போனை எடுத்து காவ்யாவை அழைத்தான்.. மறுமுனை ‘ஸ்விட்ச் ஆஃப்...’ என்றது...

“காவ்யா போனை ஆஃப் பண்ணி வைச்சிருக்கு... அதனால நடையைக் கட்டறிங்களா..?”

அர்ஜீனை நிமிர்ந்து பார்க்காமல் மேஜையில் இருந்த கோப்புக்களில் ஒன்றை எடுத்து கண்ணதாசன் பிரிக்க ஆரம்பிக்க.. கைநீட்டி அதைத் தடுத்தான் அர்ஜீன்...

“பொறுங்க கண்ணதாசன்.. உங்க தங்கை போனை ஸ்விட்ச் ஆஃப் பண்ணிட்டான்னு எனக்கும் தெரியும்...”

“இது உங்க வேலைதானா..? அதுக்கு போன் பண்ணினீங்களா..? அதுதான் உங்க குரலைக் கேட்டாலே டென்சன் ஆகுதே.. திரும்பவும் எதுக்காக அதை டிஸ்டர்ப் பண்றிங்க..?”

“என் குரலைக் கேட்டதும் போனை கட் பண்ணிட்டா.. அதனாலதான் உங்களைத் தேடி வந்தேன்... அவளை டிஸ்டர்ப் பண்ணாம இருக்க என்னால முடியாது கண்ணதாசன்.. ஐ லவ் ஹெர்..”

“என்னைத் தேடி வந்தா.. என்னால என்ன செய்ய முடியும்..? காதலிச்சா.. அந்த காதலை காப்பாத்திக்கத் தெரியனும்.. அதை விட்டுட்டு இப்படி தும்பை விட்டு

வாலைப் பிடிக்கக் கூடாது... நான் சொன்னப்ப நீங்க அதை காதில போட்டுக்கலை.. இப்ப என்னாச்சு..?"

"சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு அட்வைஸை அள்ளி விடறிங்களா...? வேண்டாம் கண்ணதாசன்... இது அட்வைஸ் பண்ற நேரமில்லை..."

"ஊஹூம்.. சொல்லிக் காட்டறேன்.. என் வீட்டுக்கு உங்க குடும்பத்தோட வந்து என் தங்கையை பெண் கேட்பீங்கன்னு சொன்னீங்க.. அன்னைக்கு எனக்கு அர்ஜீன்னா யாருன்னு தெரியும்ன்னு சொன்னீங்க.. கடைசி வரைக்கு நீங்க யாருன்னு காட்டாமலே போயிட்டீங்களே.. தச்சு.. தச்சு.." கண்ணதாசன் சூள் கொட்டி போலியாக அனுதாபப் பட்டான்...

அர்ஜீனின் முகம் இறுகியது.. அவன்...

"இன்னும் கடைசிங்கிறது வரலை கண்ணதாசன்.." என்று பதில் கொடுத்தான்...

"இதைப் பாருடா.. அப்ப நீங்க யாருன்னு ஒருநாள் இந்த உலகத்துக்கு சொல்வீங்கன்னு சொல்லுங்க..."

"உங்களுக்குச் சொல்வேன்..."

"அத்தைக்கு மீசையை வரைந்தால்தான் உண்டு.. முளைக்க வைக்க முடியாது அர்ஜீன்..."

"இது வீண் பிடிவாதம் கண்ணதாசன்.. ஒரு தடவை.. ஒரேயொரு தடவை.. நான் காவ்யாவை நேரில் பார்த்துப் பேசினால் போதும்.. என்னை அவளுக்கு புரிய வைச்சிருவேன்.. நான் பேசினாலே நீ யாருன்னு கேட்கிறா..

என்னைத் தெரியாதுன்னு சொல்றா.. போனை கட் பண்ணிடறா.. இது எதுக்கு கண்ணதாசன்..? ஒரு சான்ஸ் கொடுக்கச் சொல்லுங்க.. என்னை ஒருதடவை அவள் பார்த்தால் போதும்.. என்மேல் குற்றமில்லைன்னு புரூவ் பண்ணிருவேன்..” நம்பிக்கையுடன் பேசினான் அர்ஜீன்...

“நீங்களும்.. உங்க அப்பாவும் புரூவ் பண்றதிலேயே இருங்க...” கண்ணதாசன் குத்தலாக பேசினான்...

“இது உங்க டர்ன் கண்ணதாசன்.. பேசிப் பார்க்கறிங்க.. ஓகே.. காவ்யாவேட அண்ணங்கிறதினால நான் பொறுத்துப் போகத்தான் வேணும்.. அவ என் கூட பேச மாட்டேங்கிறா.. ஒரு தடவை அவளை என்கூட பேச வைச்சிருங்க.. எனக்கு அது போதும்...”

கண்ணதாசன் மௌனமாக யோசித்தான்.. செல்போனை எடுத்து வீட்டின் லேண்ட் லைனுக்கு போன் போட்டான்.. அன்னபூரணி எடுத்தாள்...

“காவ்யாகிட்ட போனை குடும்மா...” என்றான்...

“என்னண்ணே...” என்ற காவ்யாவின் குரலைக் கேட்டதும்... அர்ஜீனைப் பார்த்தபடி.. ஜாக்கிரதையாக வார்த்தைகளை தேடிப்பிடித்து கோர்வையாக சொல்ல ஆரம்பித்தான் கண்ணதாசன்...

“குற்றவாளியா இருந்தாலும் அவங்க பக்க நியாயத்தை நாம கேட்டாகனும் காவ்யா...”

“இதை எதுக்காக என்கிட்டச் சொல்ற..? நான் குற்றவாளின்னு நீயும் முடிவு கட்டிட்டயா..?”

“சேச்சே.. என்ன பேச்சுன்னு பேசறம்மா.. நான் அர்ஜீனைச் சொன்னேன்... அவர் இங்கே வந்திருக்கார்...”

“நினைச்சேன்.. நான் போனை கட் பண்ணினதும்.. உன்கிட்ட வந்தாச்சா..? இதோ பாருண்ணா.. நீ சொல்கிறதைப் போல ஒரு ஆளை எனக்குத் தெரியவே தெரியாது...”

“காவ்யா...”

“அது முடிஞ்சு போன கதை.. என்னைக்கு மத்தவங்க முன்னாலே என்கிட்ட விளக்கம் கேட்டாங்களோ.. அப்பவே எனக்கு அத்துப்போச்சு.. நான் மனசுக்குள்ள செத்துப் போயிட்டேன்.. அவங்க பேச நினைக்கிற காவ்யா உயிரோட இல்லைன்னு அங்கே சொல்லிருண்ணே...”

“என்னம்மா இப்படிப் பேசற...?”

“உனக்கும் சேத்துத்தான் சொல்றேன்.. மத்தவங்க பேச்சைக் கேட்டுக்கிட்டு அவங்களுக்காக நீ பேசறது இதுவே கடைசித்தடவையா இருக்கட்டும்.. மீறி பேசினா.. நான் நிசமாவே உயிரை விட்டிருவேன்.. சொல்லிட்டேன்..”

அதற்குப் பின்னாலும் காவ்யாவிடம் பேச கண்ணதாசனுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது.. அவன் அவசரமாக போனை வைத்துவிட்டான்...

“காவ்யாவை விட்டு விடுங்க அர்ஜீன் அது மனசில துக்கம் இருக்கு.. அது நம்பி ஏமாந்த துக்கம்.. நம்பியவனே கஷ்டத்தில இருந்து காப்பாத்தாம கூடச் சேர்ந்து கேள்வி கேட்ட துக்கம்.. ஸோ அதை மறந்துருங்க..”

கண்ணதாசன் முடிவாகச் சொன்னபோது.. அர்ஜீன் நீண்டநேரத்திற்கு மௌனமாக.. அசையாமல் அவன் முன்னால் உட்கார்ந்திருந்தான்...

## 109

***எங்கேயோ என்குரல் கேட்டால் – நீ***
***இனம் காண ஆசைகொண்டேன்...***

**கா**வ்யாவின் இமைகள் கனத்து விழிகளை மூடுவதைப் பார்த்தான் கண்ணதாசன்.. ரயிலின் ஆட்டத்தில் அவளையுமறியாமல் அவள் உறங்கி விட்டதில் அவன் மனதுக்குள் நிம்மதி வந்தது...

காவ்யாவின் தலைக்கு தலையணையை கொடுத்து அவளை படுக்க வைத்தவன்.. போர்வையை விரித்து அவளை போர்த்தி விட்டான்.. குழந்தையைப் போல உறங்கிக் கொண்டிருந்தவளின் வாடிய முகத்தைப் பார்த்த போது அவன் மனதில் துயரம் பிழிந்தது...

*"மலர்களைப் போல்*
*தங்கை உறங்குகிறாள்..*

*அண்ணன் வாழவைப்பான்..*
*என்று அமைதி கொண்டாள்..*
*கலைந்திடும் கனவுகள்..*
*அவள் படைத்தாள்..*
*அண்ணன் கற்பனைத் தேரினில்..*
*பறந்து சென்றான்..”*

மெலிதான குரலில் பாடிப் பார்த்தவனின் கண்கள் பனித்தன.. அவள் கலைந்திடும் கனவுகளைத்தான் படைத்து விட்டாள்.. அவளின் கலைந்து விட்ட கனவுகளால் அவள் படும் துன்பத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

காவ்யா பேச மறுத்து விட்டதை அறிந்த அர்ஜீன்.. நீண்ட நேரத்திற்கு நெடுமரமாக அமர்ந்திருந்தது அவன் மனக் கண்ணில் விரிந்தது..

ஒரு பெருமூச்சுடன் தோள்களைக் குலுக்கினான் அர்ஜீன்.. அவன் முகம் கலங்கிச் சிவந்திருந்தது...

“அவமேல உயிரையே வைத்திருக்கேன் கண்ணதாசன்.. இது அவளுக்குத்தான் புரியலை.. உங்களுக்குமா புரியலை..?”

“எனக்குப் புரிந்து என்ன செய்ய மிஸ்டர் அர்ஜீன்.. நான் இதில் பார்வையாளன் மட்டும்தான்...”

“நீங்க நியாயம் தெரிந்தவர்.. என்பக்க நியாயத்தைச் சொல்ல உங்க தங்கை எனக்கொரு வாய்ப்பைக்

கொடுக்கலை.. நீங்களாவது அதை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாதா..?” கெஞ்சுதலாகப் பேசினான் அர்ஜீன்..

“நான் சொல்ல முடியாது அர்ஜீன்.. சொன்னா என் தங்கை செத்துருவேன்னு சொல்லுது...”

“கண்ணதாசன்...?!”

“ம்ம்ம்...”

“இந்த அளவுக்கு என்னை வெறுக்கனுமா கண்ணதாசன்..?”

“இதை அதுகிட்டத்தான் நீங்க கேட்கனும்...”

“அதைத்தானே நானும் சொல்கிறேன்.. ஒருமுறை பேச வாய்ப்புக் கிடைச்சாப் போதுமே...”

“முடியாதுன்னு சொல்லிருச்சே.. அதுக்கப்புறம் நான் என்ன செய்ய...?”

“ஐ லவ் ஹெர்...”

“நீங்கதான் சொல்றிங்க.. காவ்யா சொல்லலை...”

அர்ஜீன் அடிபட்ட பார்வை பார்த்தான்... கண்ணதாசன் மனம் இரங்கவில்லை.. உயிர்ப்பில்லாதவளாக வீட்டில் நடமாடிக் கொண்டிருக்கும் தங்கையின் உற்சாகத்தை தொலைத்தவன் இவன்தானே என்ற கோபம் அவனுக்குள் கிளர்ந்திருந்தது...

“காவ்யா குற்றமில்லாதவன்னு எல்லோர் முன்னாலயும் புரூவ் பண்ணிட்டுத்தான் வந்திருக்கேன்...”

“எங்களுக்கே அது தெரியுமே.. எங்களைப் பத்தி தெரிஞ்சவங்களுக்கும் அது தெரியுமே.. நீங்க எதுக்காக மெனக்கெட்டீங்க..?”

“இது உங்களுக்கே ஓவராத் தோணலையா கண்ணதாசன்...?”

“இல்லை.. எனக்கு சந்தோசத்தை தொலைத்து விட்டு நிற்கிற என் தங்கைதான் தோணறா..”

“நான் அவளைப் பற்றி நினைக்கலைன்னா நினைக்கறிங்க..?”

“காலங்கடந்த நினைவுகளுக்கும்.. நியாயங்களுக்கும் எப்போதுமே மதிப்பில்லை அர்ஜீன்.. அதை நீங்க புரிஞ்சுக்கனும்...”

அர்ஜீன் இறுகிய முகத்துடன் எழுந்தான்.. கதவருகே போனவன் நின்றான்.. கண்ணதாசனைத் திரும்பிப் பார்த்தான்...

“நான் அவளை உண்மையா காதலித்தேன் கண்ணதாசன்.. இப்பவும் காதலிக்கிறேன்.. இனிமேலும் காதலிப்பேன்...”

“டயத்தை வேஸ்ட் பண்றீங்க.. காவ்யா உங்களை மறந்துருச்சு... அது முடிந்து போனகதை...”

“அவளாலே அது முடியாது...”

"அது உங்களை மறந்துருச்சு அர்ஜீன்..."

"இல்லை மிஸ்டர் கண்ணதாசன்... உங்க தங்கையாலே என்னை மறக்கவே முடியாது.. உங்களாலே என்னை மறக்க வைக்கவும் முடியாது... இது நான் உங்களுக்கு விடும் சவால்..."

உறுதியுடன் சொல்லி விட்டு வேக நடையுடன் அங்கிருந்து சென்று விட்டான் அர்ஜீன்.. அவனின் அந்த உறுதியில் கண்ணதாசனுக்குள் ஆச்சரியம் உண்டானது...

அர்ஜீன் விட்ட பெருமூச்சைப் போலவே.. ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்து அமர்ந்து வேலையில் மூழ்கினான்.. அன்று மாலையில் அவன் வீடு திரும்பிய போது.. அவனைத் தேடி அவன் அறைக்கு வந்தாள் காவ்யா...

"என்னம்மா..?" கனிவுடன் அவன் கேட்டான்...

"என்னை எங்கேயாவது கூப்பிட்டுக்கிட்டுப் போயிடுண்ணே.. கண்காணாத தேசத்திலே கொண்டு போய் விட்டுரு.. எனக்கு இந்த மதுரை வேணாம்..." காவ்யா குமுங்கி அழுதாள்...

"இது நம்ம ஊரும்மா.. நாம ஏன் வெளியூருக்கு ஓடனும்..?"

"பயமாயிருக்குண்ணே.. இந்த ஊரில் நானிருந்தா நடந்ததை நினைச்சு.. நினைச்சு.. செத்தே போயிருவேன்.." காவ்யாவின் விழிகள் மிரட்சியாய் சுழன்றன...

“ச்சீ... பைத்தியம்..! அப்படியென்ன நடந்திருச்சு..? அந்த நேகாதான் பணத்தை எடுத்திருக்கா.. அர்ஜீன் அதைக் கண்டு பிடிச்சு எல்லோர் முன்னாலேயும் சொல்லிட்டான்.. நம்ம பணத்தை அவன் கொண்டு வந்து கொடுத்துட்டான்.. இதுதானே நடந்துச்சு..? இதுக்குப் போயா ஊரை விட்டுப் போகனும்கிற..?”

கண்ணதாசன் சமாதானப் படுத்தினான்.. அவனையே இமைக்காமல் பார்த்த காவ்யா...

“அப்ப... எல்லாம் சரியாப் போயிருச்சுன்னு நினைக்கறியாண்ணே...?” என்று கேட்டாள்...

“அப்படியில்லை காவ்யா.. உன்மேல போட்ட பழியை பொய் பழின்னு அவன் புருவ் பண்ணிட்டான்...”

மேலே பேசப் போன கண்ணதாசனை கையெடுத்துக் கும்பிட்டுத் தடுத்து நிறுத்தினாள் காவ்யா...

“வேணாம்ண்ணே.. பேசாதே.. இதைப்பத்தி இனிமே நீ ஒத்தை வார்த்தை பேசினாலும் என்னை உயிரோட பாக்க மாட்ட...”

“காவ்யா...”

“இங்கே இருந்தா துரத்தற நினப்புக்கள்ல இருந்து தப்பிக்க முடியாம நான் தொலைஞ்சு போயிருவேண்ணே.. என்னைக் காப்பாத்து...”

அதுவரை அவனிடம் அவளுக்காக என்று எதையும் கேட்டிராத அவன் தங்கை.. முதன் முதலாக அவனிடம் இறைஞ்சி நின்றாள்...

கண்ணதாசன் முடிவெடுத்து விட்டான்.. அவன் அனுப்பிய மாறுதல் கோரிய விண்ணப்பத்திற்கு உடனடியாக பதில் வந்துவிட்டது...

"அம்மா.. என்னை திருநெல்வேலிக்கு டிரான்ஸ்பர் பண்ணியிருக்காங்க..." என்று அன்னபூரணியிடம் சொன்ன போது அவள் அரண்டு விட்டாள்..

"என்னடா தம்பி.. இடியைத் தூக்கிப் போடற..?"

"கவர்ண்மென்ட் வேலையில இதெல்லாம் சர்வ சாதாரணம்மா..."

கண்ணதாசன் இலகுவாக சொல்லி விட்டான்.. ஆண்பிள்ளை எந்த ஊருக்கு மாறுதலாகிப் போனாலும்.. ஓர் அளவுக்கு மேல் அவனைப் பெற்றவர்கள் கவலைப்பட மாட்டார்கள்...

சிவதாணு அதைத்தான் செய்தார்..

"அப்ப.. நம்ம கண்ணன் மதுரைக்கு வர்றப்பல்லாம் ஒரிஜினல் திருநெல்வேலி அல்வாவ வாங்கிட்டு வருவான்.." என்று குதுகலித்தார்..

அவருக்கு அவர் பிரச்னை...

“திங்கறதிலேயே இருங்க...” பல்லைக் கடித்தாள் அன்னபூரணி...

“நீ அல்வாப் பொட்டலத்தை கொண்டு வருகிறதெல்லாம் இருக்கட்டும்.. நேரா நேரத்துக்கு சாப்பிட்டுரு.. வாரம் ஒரு தடவை எண்ணை தேய்ச்சு குளிச்சுரு.. மாசத்துக்கொரு தடவையாவது மதுரைக்கு வந்துட்டுப்போ...”

“ஹோட்டல் சாப்பாடெல்லாம் எனக்கு ஒத்துக்காதும்மா...”

“வேறென்னத்தை செய்றதுடா தம்பி.. இங்க உங்க அப்பாவும் கவர்ண்ட்மென்ட் ஆபிசிலதான் வேல பாக்குறாரு.. வயசான மனுசன கைக்கஞ்சி ஆக்கிக் குடிக்க வைச்சுட்டு.. நான் உன்கூட வர முடியுமாடா..?”

“முடியாதுதான்.. ஆனா காவ்யா என்கூட வரலாமில்லையா...?”

கண்ணதாசன் கேட்டபோது.. இது கூடப் பரவாயில்லையே என்று தோன்றினாலும்.. அன்னபூரணி மலைக்கத்தான் செய்தாள்..

“அவளுக்கு சோறாக்கத் தெரியாதேப்பா.. தட்டில போட்டதை சாப்பிடக்கூடத் தெரியாதவ.. அவளைக் கூப்பிட்டுக்கிட்டுப் போனா அவ உனக்கு என்னத்தை ஆக்கிப் போடப் போறா...? அவளே உடம்பு சரியில்லாதவ..

நாம அவளைப் பார்க்கனும்.. அவ உன்னைப் பார்க்கிறதா..? இது நடக்கிற காரியமா கண்ணதாசா..?”

“முடிஞ்ச வரைக்கும் செய்யட்டும்மா.. இல்லைன்னா ஆள் போட்டுக்கறேன்.. எனக்கு குவார்ட்டர்ஸ் கொடுப்-பாங்கம்மா.. தனியா இருந்தாத்தான் சமையலுக்கு ஆள் போடறதில சங்கடம் வரும்.. அதுவே வீட்டில ஒரு பெண்ணிருந்தா.. தயங்காம வேலைக்கு ஆள் வருவாங்கள்ல...”

“அதுவும் சரிதான்...”

காவ்யா சமைக்க வேண்டிய தேவையில்லை என்றதும் அன்னபூரணி நிம்மதியடைந்தாள்...

“இவளும் வேலையை விட்டுட்டுப் பித்துப் பிடிச்சவளப் போல இருக்கா.. நீயும் கல்யாணத்த ஒரு வருசம் கழிச்சு நடத்தலாம்ன்னு சொல்ற.. அதுக்கு இங்க இருப்பானேன்..? உங்கூட திருநெல்வேலிக்கே வரட்டும்.. உனக்கும் துணையாச்சு.. அவளுக்கும் ஒரு மாற்றமாச்சு.. அக்கம் பக்கத்திலயும் காவ்யா வேலைக்கு போகலையா.. காவ்யாவுக்கு இன்னும் கல்யாணம் முடிக்கலையான்னு கேட்டுத் தொலைக்க மாட்டாங்க.. கண்ணுல பட்டாத்தானே வம்பு..? கண் காணாத இடத்தில இருந்தா.. இதுக வேற வேலையப் பாத்துக்கிட்டு போயிரும்கள்ல...”

அன்னபூரணிக்கு எல்லாவற்றிலும் தப்பித்து விட்ட உணர்வு ஏற்பட்டது.. காவ்யா கண்ணதாசனுடன்

திருநெல்வேலிக்கு கிளம்பி விட்டாள்.. அத்தியாவசியமான பாத்திரங்களையும்.. பொருள்களையும்.. அட்டைப் பெட்டியில் அடுக்கிக் அழகாக கட்டிக் கொடுத்திருந்தாள் அன்னபூரணி...

“குவார்ட்டர்ஸில கேஸ் கனெக்சன் இருக்கும்மா.. கட்டில் மேஜை.. நாற்காலி கூட இருக்கு.. அதனால.. கையை வீசிக்கிட்டு நாங்க போகலாம்...” என்று சொல்லிப் பார்த்தான் கண்ணதாசன்..

அன்னபூரணி அதை காதில் போட்டுக் கொள்ளவேயில்லை...

“கேஸ் இருந்தா சோறாக்கிற முடியுமா..? அதுக்கு பண்ட பாத்திரம் வேணாமா..?” என்று மகனை அடக்கி விட்டு.. பொருள்களை அடுக்கி விட்டாள்...

எல்லாவற்றையும் பார்த்துப்பார்த்துச் செய்தவள்.. ரயில் கிளம்பும் போது கண் கலங்கி விட்டாள்...

“தங்கச்சியை பத்திரமாப் பாத்துக்கப்பா..”

“அதவிட எனக்கு வேற வேலையென்னம்மா இருக்கு..?”

“நீ கூட படிப்பு.. டிரெயினிங்குன்னு பிரிஞ்சு போயிருக்கிற.. இவ அப்படியில்ல.. அடிச்சாலும்.. பிடிச்சாலும்.. பூனைக்குட்டியப் போல எங்காலைச் சுத்திச்சுத்தி வருவா...”

“எனக்குத் தெரியாதாம்மா..”

“இவ இல்லாம வீடே வெறிச்சுன்னு ஆகிப் போயிரும்...”

“இப்ப கண்ணைக் கசக்கு.. இவளத்தான் கல்யாணம் பண்ணிக் குடுத்துருன்னு புலம்பிக்கிட்டே இருக்கிற...”

“உள்ளூரிலதானப்பா மாப்பிள்ள பாக்கச் சொன்னேன்..?”

“அதுவேற இருக்கா...”

“ஆமாம்ப்பா.. ஒத்தைப் பொண்ண.. உத்து உத்து பாத்து.. பொத்திப் பொத்தி வளத்து வைச்சிருக்கேன்.. இவள கண்காணாத இடத்தில கட்டிக் கொடுத்துட்டு... நான் எப்படி பொழப்ப நடத்துவேன்..? அதே உள்ளூரா இருந்தா.. காலம் பூராவும் கண்ணுக்கு முன்னால வைச்சுப் பாத்துக்கலாமில்ல...”

அன்னபூரணியின் தாய் மனது தன் முகத்தைக் காட்டியது..

‘இதுதான் இந்தியத்தாயின் மனது...’ கண்ணதாசன் நினைத்துக் கொண்டான்...

‘கடிந்து கொள்வதும்.. கட்டுப்பாட்டில் வைப்பதும்.. பெற்ற மகளின் நன்மைக்காகத்தான்.. அந்த மகளை திருமணம் செய்து கொடுத்து விட்டால் சாதாரண ரசம் வைத்தால் கூட.. இந்த ரசம் என் மகளுக்கு பிடிக்குமே..

அவ வாக்கப்பட்டு போன இடத்தில இந்த ருசியோட ரசம் கிடைக்குமான்னு கவலப் பட்டுக்கிட்டு.. பச்சைத் தண்ணிகூட பல்லில்படாம பட்டினி கிடப்பாங்க...'

அன்னபூரணி சேலை முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொள்ள ரயில் நகர்ந்தது.. கையை ஆட்டியபடி நின்றவள் புள்ளியாக மறைய தளர்ந்து அமர்ந்திருந்த தங்கையை கனிவுடன் பார்த்தபடி கண்ணதாசன் அவளுக்கு எதிராக அமர்ந்தான்...

அவனுக்குத் தேவை அவன் தங்கையின் நிம்மதி மட்டும் தான்... அதற்காகத்தானே பிறந்து வளர்ந்த ஊரிலேயே வேலை பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தும் அறியாத ஊருக்கு மாறுதல் வாங்கிக் கொண்டு பயணமாகிறான்...?

## 110

***நீ செல்லும் வழியினிலே..***
***என் முகம் பார்க்க ஆசைகொண்டேன்...***

**தி**ருநெல்வேலி ஜங்சனில் ரயில் நின்றது.. தூங்கிக் கொண்டிருந்த காவ்யாவை எழுப்பி விட்டான்

கண்ணதாசன்.. கண்களை கசக்கிக் கொண்டு எழுந்து அமர்ந்தவளிடம்..

"ஊர் வந்தாச்சு காவ்யா.. இறங்கனும்.." என்றான்..

மௌனமாக எழுந்து பெட்டிகளை எடுத்துக் கொண்டவளிடம்...

"வேண்டாம்.." என்று தடுத்தான்...

"திங்க்ஸ் நிறைய இருக்கு.. போர்ட்டர்ஸைக் கூப்பிட்டுக்கலாம்.. அவங்களுக்கும் வேலை கொடுக்கனுமில்ல.."

காவ்யா அதற்கும் மௌனமாக தலையசைத்து விட்டு நகர்ந்து நின்றாள்.. போர்ட்டர்களிடம் பெட்டிகளையும்.. அட்டைப் பெட்டிகளையும் எடுத்தவரச் சொல்லிவிட்டு பிளாட்பாரத்தில் இறங்கி நின்றான் கண்ணதாசன்.. தொடர்ந்து வந்த காவ்யா இறங்க கை கொடுத்தான்...

"அப்பாம்மாவுக்கு கார் தேவைப்படலாம்.. எனக்கு ஆபிஸ்கார் இருக்கு.. நீ குவார்ட்டர்ஸிலதான இருக்கப் போகிற.. உன்கூட வெளியே போகும்போது கால்டாக்ஸியை வரச் சொல்லிக்கலாம்ன்னு நினைச்சுத்தான் காரை மதுரையிலேயே விட்டுட்டு வந்தேன்.." என்றான் கண்ணதாசன்...

இது தெரிந்த சங்கதிதானே.. ஏற்கனெவே என்னிடம் சொல்லி விட்டாய் தானே.. புதிதாய் எதற்காக

சொல்லுகிறாய் என்று காவ்யா கேட்கவில்லை.. மெதுவாக தலையசைத்து விட்டு.. கண்ணதாசன் கூட நடந்தாள்..

ரயில்வே ஜங்சனின் வாசலில் இருந்த டாக்ஸிகளில் ஒன்றின் டிக்கியில் போர்ட்டர்கள் கொண்டு வந்த பெட்டிகளை இறக்கிவைக்கச் சொல்லி விட்டு அவர்களுக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தான் கண்ணதாசன்.. டாக்ஸி டிரைவரிடம் போக வேண்டிய இடத்தைச் சொல்லிவிட்டு காவ்யாவை டாக்ஸியில் ஏறச் சொன்னான்.. காவ்யா ஏறியதும் கார் கிளம்பியது.. நெல்லைச் சீமையின் காலை நேரக் காற்று.. காவ்யாவை வரவேற்பதைப் போல.. அவள் முகத்தைத் தழுவிச் சென்றது...

கண்ணதாசனின் அலுவலகம் அளித்திருந்த குவார்ட்டர்ஸின் முன்னால் கார் நின்றது.. அவசரமாக ஓடிவந்து நின்ற வாட்ச்மேனிடம் பெட்டிகளை இறக்கச் சொல்லிவிட்டு... குவார்ட்டர்ஸை திறந்தான் கண்ணதாசன்..

“வா.. காவ்யா..” என்றான்..

காவ்யா வீட்டிற்குள் பிரவேசித்தாள்..

வீடு அழகாக.. அம்சமாக இருந்தது.. ஆபிசர்களுக்கான குவார்ட்டர்ஸ் என்பதால் அளவில் பெரியதாகவும்.. மாடியுடனும் இருந்தது.. கீழே ஹால்.. இரண்டு

படுக்கையறைகள்... பூஜைரூம்... டைனிங்ஹால்... சமையலறை என்று இருக்க.. மாடியில் ஒரு அறையும்.. பால்கனியும் இருந்தன...

காவ்யா கொண்டு வந்த பொருள்களைப் பிரித்து அடுக்க ஆரம்பித்தாள்.. வீட்டில் சோபாக்களும்.. கட்டில்களும்.. டைனிங் டேபிளும் இருந்தன.. சமையலறையில் கண்ணதாசன் சொன்னதைப் போல கேஸ் ஸ்டவ் இருந்தது.. அதே சமயத்தில் அன்னபூரணி சொன்னதைப் போல பாத்திரங்களும்.. மளிகைப் பொருள்களும் இல்லை...

பூஜையறையில் விநாயகர் படம் மட்டும் இருந்தது.. அன்னபூரணி கொடுத்து விட்டிருந்த தெய்வங்களின் படங்களை மாட்டி விட்டு.. குத்து விளக்கில் எண்ணை நிரப்பி திரி போட்டு வைத்தாள் காவ்யா...

“வீட்டைக் கழுவி சுத்தம் பண்ணிவைச்சிருக்கேங்க ஐயா..” என்ற வாட்ச் மேனிடம்...

“குட்.. இதைப் போலவே சமையலுக்கும்.. மேல் வேலைக்கும் சேர்த்து ஒரு ஆளை தேடிப் பிடித்துக் கொண்டு வாயேன்..” என்று சொல்லிக் கொண்டிருந்தான் கண்ணதாசன்..

குளிக்கக் கிளம்பிய காவ்யா.. அவர்களைத் திரும்பிப் பார்த்து..

"வேலைக்கெல்லாம் ஆள் வேணாம்ண்ணே.." என்றாள்...

"இருக்கட்டும்மா..." என்றான் கண்ணதாசன்...

"எனக்கும் பொழுது போகனுமில்ல.." என்றவளிடம்..

"அதுக்குத்தானே ஆள் தேடறேன்..? உனக்கும் பேச்சுத் துணையா இருக்குமில்ல..?" என்று இலகுவாக சிரித்தான்...

அவனின் கனிவான பாசத்தில்.. மனம் நனைந்தவளாய்.. கண்கள் கலங்க.. அதை அவனிடம் மறைப்பதற்காக முகத்தை திருப்பிக் கொண்டு குளிக்கப் போனாள் காவ்யா...

குளித்து உடைமாற்றி வந்தவளிடம் பால் பாக்கெட்டை நீட்டினான் கண்ணதாசன்...

"அதுக்குள்ள வாங்கிட்டு வந்திட்டியா..? அம்மா முதல்ல பால் காய்ச்சி சாமி கும்பிட்டுட்டுத்தான் மத்த சோலியப் பார்க்கனும்னு சொல்லுச்சு.. உங்கிட்ட சொல்ல மறந்துட்டமேன்னு நினைச்சேன்.. நீ எனக்கு அந்த வேலய வைக்காம ரெடியா கையில பிடிச்சுக்கிட்டு நிக்கிற.." சிரிக்க முயன்றாள் காவ்யா...

"நாங்கள்ளாம் எள்ளுங்கிறதுக்குள்ல எண்ணையா நிப்போமுள்ல..." காலரை தூக்கி விட்டுக் கொண்டான் கண்ணதாசன்...

"தாய் சொல்லைத் தட்டாத புள்ளதான்.. ஒப்புக்கறேன்.. நீயும் குளிச்சிட்டு வந்திட்டின்னா.. சேந்து சாமியக் கும்பிடலாம்..." அடுப்பில் பாலைக் காய்ச்சிக் கொண்டே சொன்னாள் காவ்யா...

"இதோ.. ஒரு நொடியில ஓடி வந்திர மாட்டேன்..?" என்றபடி குளியலறைக்குள் புகுந்தான் கண்ணதாசன்...

அவன் குளித்து உடைமாற்றி வருவதற்குள் பாலைக் காய்ச்சி.. பூஜையறையில் வைத்திருந்தாள் காவ்யா.. அவன் வந்ததும் குத்து விளக்கையேற்றினாள்.. அண்ணனும்.. தங்கையும்.. கரம் குவித்து மனதுக்கு நிம்மதியைத் தருமாறு கடவுள்களிடம் வேண்டிக் கொண்டார்கள்...

"அவசரத்துக்கு உப்புமாதான் லாயக்கு..."

காவ்யா உப்புமாவை டைனிங் டேபிளில் வைத்தபடி சொன்னாள்..

"நீ தெரிஞ்சவரைக்கும் செய்யும்மா.. பசிக்குத்தான் சாப்பாடு..." டைனிங் டேபிளின் முன்னால் சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான் கண்ணதாசன்...

"நாம மதுரைக்காரங்க அண்ணே.. சாப்பிடப் படிச்சவங்க.. ஒத்தை இட்லியா இருந்தாலும்.. அதுக்கு உணக்கையா ஒரு கிண்ணம் சாம்பாரு.. அரைக்கிண்ணம் தேங்காச் சட்னி.. காக்கிண்ணம் தக்காளிச்சட்னி...

அதுவும் பத்தாதுன்னு எண்ணையா ஓடற இட்லி மிளகாப் பொடின்னு இருந்தாத்தாத்தான நம்ம தொண்டையில இறங்கும்...?”

கலகலப்பாக பேச முயன்றபடி பரிமாறிய காவ்யாவின் மனதுக்குள் இருந்த வேதனையை கண்ணதாசனால் புரிந்து கொள்ள முடிந்தது...

அவள் இயல்பாக பேசுவதைப் போல நடித்தாள்.. ஆனாலும் அவள் வார்த்தைகளில் இருந்த துள்ளல்.. முகத்திலும்.. குரலிலும் இல்லையே...

அண்ணனுக்காக சிரிக்க முயலும் தங்கையின் முயற்சியை கண்ணதாசன் கண்டு கொண்டான்.. அவளது முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் அவன் அவளை கண்டு கொண்டதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பலமாக சிரித்து வைத்தான்...

“அதச் சொல்லு.. வெறும் ரசம் சோறா இருந்தாலும்.. அதுக்கு உப்பும்.. உறப்புமா வெஞ்சனத்தை தேடற ஆளுகள்ல நாம...”

“தெரியுதில்ல..? அதனால என்ன தெரிஞ்சவரைக்கும் சமைச்சுப் போடுன்னு சீராட்டாம.. வேணும்கிறதை கேட்டு வாங்கிச்சாப்பிடு...”

“எங்கேம்மா..? ஓட்டல்லயா...?”

“அண்ணே...”

காவ்யா சிணுங்கிக் கொண்டிருந்தபோது.. வாசலில் வாட்ச்மேனின் சத்தம் கேட்டது...

"ஐயா.. ஐயா.."

"வாட்ச்மேனா கூப்பிடறது..?"

"அப்படித்தான் தெரியுதுண்ணே.. நீ சாப்பிடு.. நான் போயி என்னான்னு கேட்டுட்டு வர்றேன்..."

"ஏம்மா..? அத நான் செய்ய மாட்டேனா..? அறியாத ஊரு.. பழகினவங்கதானேன்னு நீ பாட்டுக்கு பேசிப் பழகி.. வைக்காதே.. நான் சாப்பிட்டு முடிச்சிட்டேன்.. நான் போயி என்ன ஏதுன்னு கேட்டுக்கறேன்..."

"ம்ஹீம்.. இதுக்கு நான் மதுரையிலேயே இருந்திருக்கலாம்..."

"ஏன்..? என்னாச்சு..?"

"அன்னபூரணியோட மகன்ங்கிறது நிருபிச்சுக்கிட்டே இருக்கியே... எதுக்கெடுத்தாலும் தடாவா..?"

காவ்யா நொடித்துக் கொள்வதைப் போல பாவனை செய்ய.. சிரித்துக் கொண்டே வாசலுக்குப் போனான் கண்ணதாசன்...

"என்ன குமாரு..?" என்று வினவினான்...

"சமையலுக்கும்... மேே வேலைக்கும் ஆளு வேணும்ன்னு சொன்னீங்களே.."

“ஆமாம்.. அதுக்கென்ன..?”

“ஆளக் கூட்டியாந்துட்டேன்.. ஏ மருக்கொழுந்து.. முன்னால வா...”

குமாரு எனப்படும் ராம்குமார் அழைத்ததில்.. நடுத்தர வயதைத் தாண்டிய பெண்மணியொருத்தி ஏகத்துக்கும் வெட்கப்பட்டுக் கொண்டு முன்னால் வந்தாள்...

“இவங்கதான் புதுசா வந்திருக்கிற ஆபிசரய்யா.. கும்பிட்டுக்க...” என்ற குமாரின் கட்டளைக்கு அடி பணிந்த மருக்கொழுந்து..

“கும்பிடறேனுங்க..” என்று கண்ணதாசன் நின்றிருந்த திசைக்கு எதிர்திசையில் பார்த்துக் கொண்டு கும்பிடு போட்டாள்...

அப்படியொரு காலை வணக்கத்தை எதிர்பார்த்திராத கண்ணதாசன்..

‘தேவைதான் எனக்கு...’ என்று மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டான்...

“இந்தப் புள்ள கைபட்டா.. பச்சமிளகாகூட இனிக்கும்ங்கய்யா...”

“சரியாப் போச்சு.. நாக்குச் செத்துப் போகும்ன்னு சொல்லு...”

“நான் அப்படிச் சொல்லைங்கய்யா.. இது அருமையாச் சமைக்கும்ன்னு சொல்றேன்...”

"ஓஹோ.. இப்பத்தான் சொன்னேன்.. அதுக்குள்ள வேலைக்கு ஆளைக் கூப்பிட்டுக்கிட்டு வந்திட்டயே.. தீயாய் வேலை செய்யற குமாரு..." என்று கண்ணதாசன் மனதார பாராட்ட..

"அப்படியில்லைங்கய்யா.. இது எம்பொஞ்சாதிதான்.." என்று ஒரு போடு போட்டான் குமாரு...

"அப்ப.. நீ தீயாய் வேலை செய்யல.. மெதுவாத்தான் வேலை செஞ்சிருக்க.. எத்தனை புள்ளைக...?"

"ஆணொன்னு.. பொண்ணொன்னு அளவா ரெண்டுதாங்க ஐயா..."

"அதில உனக்கு ரொம்பத்தான் வருத்தம் போல.."

"ஐயையோ.. அப்படியெல்லாமில்லிங்க..."

"நம்பறேன்.. ஆமாம்.. புள்ளைக படிக்குதா..?"

"ஆமாங்கய்யா.. பொம்பளப்புள்ள பத்தாவது படிக்குது.. பையன் இப்பத்தான் எட்டாவதுக்கு வந்திருக்கான்..."

"படிக்கிற புள்ளைகளை ஸ்கூலுக்கு அனுப்பற வேலையை விட்டுட்டு.. உன் வொய்ப் எப்படி எங்க வீட்டில வேலை செய்ய முடியும்...?"

அதுநேரம் வரை கண்ணதாசன் செய்த புலன் விசாரணை அக்கறையினால் வந்தது அல்ல.. இதை

தெளிவு படுத்திக் கொள்ள வந்தது என்பதை புரிந்து கொண்ட குமாரு...

'அதனாலதான் இவரு ஆபிசரா இருக்காரு...' என்று நினைத்துக் கொண்டான்..

அதுவரை.. கண்ணதாசனின் நிழலைப் பார்க்கக்கூட வெட்கப்பட்டுக் கொண்டு நாணிக் கோணி நின்றிருந்த மருக்கொழுந்து.. வேலையை உறுதிபடுத்திக் கொள்வதற்காக வாயைத் திறந்தாள்..

"புள்ளைகள்ளாம் ஏழே முக்காலுக்கே ஸ்கூலுக்கு கிளம்பி போயிருங்கய்யா.. ஐயாவுக்கு ஆபிசு பத்து மணிக்குதானுங்களே..."

"அதுக்கு..? பத்து மணிக்கு நான் வீட்டை விட்டுக் கிளம்பினா போதும்கிறயா...?"

"அப்படிச் சொல்வேனுங்களா..? எட்டு மணிக்கு வந்தா.. ஒரு மணி நேரத்தில காலைப் பலகாரத்த செஞ்சு வைச்சுப் புடுவேன்..."

"அதுசரி..."

"அதுக்கப்புறமா.. பன்னெண்டு மணிக்கு வந்தா மதியத்துக்கு சோறாக்கி.. குழம்பு வைச்சு..."

"நீ சொல்லும் போதே எனக்கு கண்ணக்கட்டுது.. விட்டுரு..."

“அதையெல்லாம் செஞ்சுட்டு வீட்டு வேலையை செஞ்சுவைச்சுட்டு எங்க வீட்டுக்கு ரெண்டு மணிக்குப் போனா...”

“என்னது ரெண்டு மணிக்கெல்லாம் நடையைக் கட்டிருவியா..”

“திரும்பவும் ஐஞ்சு மணிக்கு வந்துருவேங்கய்யா.. வந்து சாயந்திரக் காபிபோட்டு ராத்திரிக்கு பலகாரத்த செஞ்சு வைச்சுட்டு ஆறு மணிக்குத்தான் எங்க வீட்டப் பாக்கவே போவேன்...”

“என்னே உன் கடமை..! புல்லரிக்குது போ.. ஆனா பாரு குமாரு.. இப்படி ஆத்தில ஒரு காலு.. சேத்தில ஒரு காலுன்னு மூணுநேரமும் முக்கா மணி நேரத்துக்கு வந்துட்டுப் போறதெல்லாம் எங்களுக்கு சரிப்படாது..” கண்டிப்புடன் கண்ணதாசன் சொல்லிக்கொண்டிருந்த போது...

“இருக்கட்டும்ண்ணே...” என்ற காவ்யாவின் குரல் கேட்டது...

“நீ எப்பம்மா வந்த..?” என்று திரும்பினான்...

“நீ தீயாய் வேலை செய்கிற குமாருன்னு மெச்சிக்கிட்டு இருந்தப்பவே வந்துட்டேன்.. பாவம்ண்ணே.. ஸ்கூலுக்குப் போகிற புள்ளைக இருக்கிற வீடு.. அது சொன்னதப்போலவே வரட்டும்.. நான் சமாளிச்சுக்கறேன்..”

கண்டமுதல் நாளே அவளின் வேலையை காப்பாற்றிக் கொடுத்து விட்ட காவ்யாவை மருக்கொழுந்துக்கு பிடித்துப் போய் விட்டது...

# 111

*நீ கேட்கும் இசையினிலே...*
*என்குரல் கேட்க ஆசைகொண்டேன்...*

“**டி**ங்.. டிங்...”

ஒருவித தாள லயத்துடன் நெல்லையப்பர் கோவிலின் கோவில் மணி ஒலித்துக் கொண்டிருந்தது.. நெல்லையப்பரையும்.. காந்திமதியம்மனையும் சேவித்து விட்டு பிரகாரத்தை வலம் வந்து கொண்டிருந்தாள் காவ்யா...

“ஒன் நாத்தனா பொண்ணு கல்யாணத்துக்கு என்ன செஞ்ச...?”

அவளைக் கடந்து போன இரண்டு பெண்களில் ஒருத்தி மற்றவளிடம் கேட்டுக் கொண்டிருந்தாள்.. அதற்கு அந்தப் பெண் என்ன பதிலைச் சொல்கிறாள் என்று அறியும்

ஆர்வமின்றி.. கோவில் கோபுரத்தில் கூடு கட்டியிருந்த புறாக்களைப் பார்த்தபடி நடந்தாள் காவ்யா...

கண்ணதாசனுக்கு அவைகளைப் பார்க்க மிகவும் பிடிக்கும் என்பதை நினைத்துப் பார்த்தவளுக்கு.. அவளுக்காக அவன் மேற்கொள்ளும் சிரமங்களை நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்தது.. சில காலமாக அவனது பாசத்தைப் புரிந்து கொள்ளாமல் விலகி நின்று விட்டு விட்டோமே என்ற வருத்தம் ஏற்பட்டது...

லேசான பெருமூச்சுடன் அவள் நடையை எட்டிப் போட்டாள்.. அவள் தனியாக கோவிலுக்கு வந்திருக்கிறாள் என்பது கண்ணதாசனுக்கு தெரியாது.. மருக்கொழுந்தை துணைக்கு அழைத்துக் கொண்டு போ என்றுதான் அவன் சொல்லியிருந்தான்.. மருக்கொழுந்துக்கு அவள் வீட்டின் நினைப்பு...

“புள்ளைக பள்ளிக்கூடத்தில இருந்து வர்ற நேரம்மா...” என்றாள்...

காவ்யாவுக்கு பாவம் என்று தோன்றிவிட்டது...

“நீ உன் வீட்டுக்குப் போக்கா.. அண்ணன் கேட்டா.. நீ துணைக்கு வந்தேன்னு நான் சொல்லிக்கிறேன்..” என்று சொல்லிவிட்டு தனியாக கோவிலுக்கு வந்து விட்டாள்...

கோவிலில் சுற்றி வரும் போது அவள் மனதில் ஏற்படும் அமைதிக்காக அடிக்கடி அவள் கோவிலை

நாடினாள்.. அமைதியில்லாத மனத்துடன் அதை மறைத்துக் கொண்டு.. கண்ணதாசனிடம் சிரித்துப் பேச முயல்வதை விட அதைத் தேடி கோவிலுக்குப் போவதே சாலச்சிறந்தது என்று அவளுக்குத் தோன்றி விட்டது...

“உன் கோல நோட்ட நேக்குக் குடுடி..”

அவளுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த பாவாடை தாவணியணிந்த இளம் பெண்களில் ஒருத்தி மற்றவரிடம் கேட்டுக் கொண்டடிருந்தாள்..

“நோக்குக் கொடுக்கறதுக்கு என்னடி.. ஆத்துக்கு வரச்சே எடுத்துண்டு போ.. பத்திரமா காபி பண்ணிண்டு திருப்பிக் கொடுத்துரனும்.. புரியுதோல்லியோ..” மற்றவள் தாராள மனதுடன் சொல்லிக் கொண்டிருந்தாள்...

இதுபோன்ற பாவாடை தாவணி பருவத்தில் காவ்யாவும் வீட்டு வாசலில் கோலம் போட்டதுண்டு.. அதுவும் மார்கழி மாதத்தில் வாசலையடைத்து கோலம் போட்டு அதன் நடுவில் பூசணிப்பூவை வைப்பாள்.. அதற்காகவே அன்னபூரணி தோட்டத்தில் பூசணி விதையை ஊன்றியிருப்பாள்...

‘அதெல்லாம் ஒரு காலம்..’

என்னவோ நூற்றுக்கிழவியாகி விட்டதைப் போல நினைத்துக் கொண்டாள் காவ்யா..

‘அப்போல்லாம் புதுசா துணியெடுத்து உடுத்திக்-கிட்டா ஒரு சந்தோசம் வரும்.. நகை போட்டுக்கிட்டா ஒரு

துள்ளல் வரும்.. நிறைய பூ வைச்சுக்கத் தோணும்.. அடிக்கடி கண்ணாடி பார்க்கனும் போல இருக்கும்..'

முன்னம் ஒரு நாளில் நடந்தவைகளாக காவ்யா நினைத்த அனைத்தும்.. ஆறு மாத காலத்திற்கு முன்னால் வரை நடந்து கொண்டுதான் இருந்தன என்பதை காவ்யா மறந்து விட்டாள்...

என்று அவள் அர்ஜீனை விட்டுப் பிரிந்தாளோ.. அன்றிலிருந்துதான்.. அதுபோன்ற நிகழ்வுகளை காவ்யா மறந்து விட்டிருந்தாள்..

*'பூ முடிப்பதும்..*
*பொட்டு வைப்பதும்*
*யாருக்காக..?'*

என்ற பழைய பாடல் ஒன்று உண்டு...

அதில் சொல்லப் பட்டிருப்பதைப் போல.. காவ்யா அர்ஜீனுக்காகத்தான் அலங்காரம் பண்ணிக் கொண்டாள்.. அவனுக்காக.. அவனின் ஆசைப்பார்வைக்காக.. என்று பார்த்துப் பார்த்து உடுத்திக் கொண்டாள்..

இன்று அவனிடமிருந்தும்.. அவனது ஆசைப் பார்வையிடமிருந்தும் விலகி வெகு தூரம் வந்து விட்டாள்.. இப்போது கடந்து போனவை எல்லாம்.. என்றோ நடந்ததைப் போலத்தானே தோன்றும்..?

காவ்யாவுக்கு முன்னால் போய் கொண்டிருந்த இளம் பெண்கள் வேக நடையுடன் விரைந்து சென்றுவிட.. மெதுவாக.. இட்ட அடி நோக.. எடுத்த அடி கொப்புளிக்க.. என்று நடந்து வந்து கொண்டிருந்த காவ்யா.. பிரகாரத்தின் சுற்றில் திருப்பத்தில் திரும்பியபோதுதான்.. அந்த வயதான பெண்மணியைக் கவனித்தாள்...

கண்கள் செறுக.. மூச்சுத் திணறலுடன்.. தள்ளாடியபடி.. மண்டபத்தின் தூணில் சாய்ந்து நிற்க முயன்றவளின் தள்ளாட்டம் எதையோ உணர்த்த.. தன் மனவேதனையை மறந்து அவளருகே ஓடினாள் காவ்யா..

“பாட்டி.. என்னாச்சு பாட்டி...”

பதட்டத்துடன் அவள் கைபிடித்த போது அந்த மூதாட்டி அவள் மீதே சரிந்து விட்டாள்...

அவளைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று கோவில் மண்டபத்தின் படிக்கட்டில் உட்கார வைத்த காவ்யா.. அவசரமாக ஓடி.. தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த சிறுமியொருத்தியிடம்..

“ப்ளீஸ் பாப்பா.. என் பாட்டிக்கு மயக்கம் வந்திருச்சு.. கொஞ்சம் இந்த தண்ணிப் பாட்டிலைக் கொடுக்கிறயா..” என்று கெஞ்சி அந்தப் பாட்டிலை வாங்கி.. தண்ணீர் பிடித்துக் கொண்டு அந்த மூதாட்டியிடம் ஓடினாள்...

தண்ணீர் பாட்டிலை இரவல் கொடுத்த அந்தச் சிறுமியும் பாட்டிலை திரும்பப் பெற வேண்டுமென்பதற்காக... காவ்யாவின் பின்னாலே ஓடினாள்...

“பாட்டி.. பாட்டி...”

மூதாட்டியின் முகத்தில் தண்ணீரை அடித்து.. அவள் கன்னத்தில் தட்டி.. உணர்வை வர வைக்க முயன்றாள் காவ்யா.. அவள் முயற்சிக்கு பலன் இருந்தது.. மெதுவாக கண்விழித்துப் பார்த்தாள் அந்தப் பாட்டி..

“தண்ணி குடிங்க பாட்டி...”

அவள் விழித்துக் கொண்ட சந்தோசத்துடன் அவளை மார்பில் சாய்த்துக் கொண்டு தண்ணீரை குடிக்க வைத்தாள் காவ்யா...

தன்னுணர்வு வரப் பெற்ற அந்த முதியவள் காவ்யாவைப் பார்த்து நன்றியுடன் லேசாக சிரித்தாள்...

“இது உங்க பாட்டியாக்கா..?”

தண்ணீர் பாட்டிலை கைப்பற்றிக் கொண்ட சிறுமி கேட்டாள்...

“ஆமாம்...” என்றாள் காவ்யா...

விட்டுச் சிறகடிக்கும் சிட்டுக்குருவியாக அந்தச்-சிறுமி பறந்தோடிப் போய்விட.. காவ்யா பாட்டியை பார்த்தாள்..

"நீங்க யாரு பாட்டி...?"

"அம்புஜம் பாட்டி.." என்றாள் அவள்..

"பெயரையா கேட்டேன்..?" காவ்யா சிரித்தாள்..

முன்பின் தெரியாத போதிலும் ஓடிவந்து உதவி செய்த அந்த இளம் பெண்ணை அம்புஜத்திற்கு பிடித்துப் போய் விட்டது...

"நீ யாரும்மா..?" என்று கேட்டாள்..

"நான் காவ்யா.." அம்புஜத்தைப் போலவே சொல்லிவிட்டு தலைசாய்த்துச் சிரித்தாள் காவ்யா...

"போக்கிரி..."

அம்புஜத்திற்கு என்னவோ.. அப்போதுதான் காவ்யாவிடம் பேசிப் பழகுவதைப் போலத் தோன்றவில்லை.. நீண்ட நெடும் நாள்களாக அவளுடன் பேசிப் பழகிக் கொண்டிருப்பதைப் போல அவள் உணர்ந்தாள்...

காவ்யாவின் முகத்திலும் அதே சொந்தம்தான் தெரிந்தது...

"தனியாவா வந்திருக்கீங்க பாட்டி..?" அவள் விழிகள் சுற்று முற்றும் துழாவின...

"தனியான்னு சொல்ல முடியாது.. ஆனா.. தனியாத்தான் வந்தேன்.." புதிர் போட்டாள் அம்புஜம்..

“என்ன பாட்டி இது..? எங்கம்மா போடற சொலவடையைவிட பெரிய சொலவடையா இல்ல இது இருக்கு..” குழம்பினாள் காவ்யா...

“சொலவடையா..? பழமொழியைச் சொல்றியா..?” அம்புஜம் கண்டுபிடித்துவிட்டாள்...

“அதே...” என்றாள் காவ்யா...

“நீ மதுரைப் பக்கத்துப் பெண்ணா..?” அம்புஜம் கேட்டாள்...

“பக்கமெல்லாம் இல்ல.. மதுரையில பிறந்து வளர்ந்த பெண்ணேதான்.. ஆமாம்.. எப்படி அதைக் கண்டு பிடிச்சீங்க...?”

“உன் பேச்சை வைத்துத்தான்...”

“ஆஹா... பேச்சுக் காட்டிக் கொடுத்துருச்சா... எப்படியோ... என் ஊரைக் கண்டு பிடிச்சுட்டிங்க... அதப் போல நீங்க போட்ட சொலவடையையும் என்னைக் கண்டு பிடிக்க வைச்சிருங்களேன்...”

“அதை நீயில்ல செய்யனும்...?”

“பாருங்க பாட்டி.. உங்களுக்காக அந்த பொடிசுகிட்ட தண்ணி பாட்டிலை கடன் வாங்கி தண்ணி பிடிச்சுக்கிட்டு வந்தேன் தெரியுமா..? அந்த முக்காத்துட்டு பெறாத

பாட்டிலுக்காக.. அந்தப் பொடிசு என் பின்னாலேயே வந்துச்சு.. அம்புட்டு பாடுபட்டு உதவிசெஞ்ச என்னத் தலமுடிய பிச்சுக்க வைக்கலாமா..?”

காவ்யா நியாயம் கேட்ட விதத்தில் சிரித்து விட்டாள் அம்புஜம்..

“வேணாம்மா.. உனக்கு அழகான தலைமுடி.. வைகைத் தண்ணியில்ல.. அதான் முடி.. இப்படி கருகருன்னு வளர்ந்திருக்கு.. அந்த முடியை என்னால நீ பிச்சுக்கிறதா..? வேண்டவே வேண்டாம்.. விடையை நானே சொல்லிடறேன்...”

“சொல்லுங்க.. சொல்லுங்க...”

“என்கூட என்வீட்டு ஆள்கள் யாரும் வரலை.. அதனால தனியாத்தான் வந்தேன்..”

“அப்ப முதல்ல சொன்னது..?”

“அதா.. எங்க வீட்டு காரில வந்தேன்.. காரை டிரைவர் ஓட்டிக்கிட்டு வந்து.. கோவில் வாசல்ல எனக்காக காத்திருக்கான்.. அதனால தனியாவும் நான் வரல..”

“அட...”

அம்புஜத்தின் புத்திசாலித்தனமான பேச்சில் வியந்து போனாள் காவ்யா.. பேசியபடியே அவர்கள் கோவில்

வாசலுக்கு வந்துவிட.. காத்திருந்த காரில் ஏறப் போன அம்புஜம்...

"என் வீட்டுக்கு வந்துட்டுப் போம்மா.." என்று காவ்யாவை அழைத்தாள்...

"அதுக்கென்ன பாட்டி.. இன்னொரு நாளைக்கு வந்துட்டாப் போச்சு..." இலகுவாக பின்வாங்கினாள் காவ்யா...

"ஏம்மா.. முன்ன பின்ன தெரியாதவங்க வீட்டுக்கெல்லாம் போகக் கூடாதுன்னு உங்க வீட்டில சொல்லியிருக்காங்களா..?" புத்திசாலி அம்புஜம் கண்டு பிடித்து விட்டாள்..

"அப்படியெல்லாமில்ல பாட்டி.. அண்ணன் ஆபிஸ் விட்டு வர்ற நேரமாச்சு.. அது வர்றப்ப நான் வீட்டில இருக்கனும்..." காவ்யா மறுத்தாள்...

"அம்மா இருப்பாங்கள்ல.. அவங்க கவனிச்சுக்க மாட்டாங்களா..?" அப்போதும் அம்புஜம் விடவில்லை...

"அம்மாப்பா மதுரையில இருக்காங்க பாட்டி.. அண்ணனுக்கு டிரான்ஸ்பர்.. ஆபிஸ் குவார்ட்டர்ஸ் இருக்குன்னுச்சு.. அதான் அண்ணன்கூட நான் மட்டும் வந்திருக்கேன்.." விளக்கம் சொன்னாள் காவ்யா...

"உன் அண்ணன் என்ன வேலை பாக்கறாப்புல..?"

அம்புஜத்தின் கேள்விக்கான பதிலை சொன்னாள் காவ்யா..

"பெரிய ஆபிசர்தான்.. உங்க குவார்டர்ஸ் எங்கேயிருக்கு..?"

அதற்கான பதிலையும் காவ்யா சொல்லி முடித்ததும்..

"அப்போச் சரி.." என்று ஒருவழியாக விடைபெற்றுக் கொண்டு கிளம்பினாள் அம்புஜம்...

'க்யூட் பாட்டி...'

அம்புஜத்தை மனதுக்குள் சிலாகித்தபடி காவ்யா வீட்டை அடைந்தாள்.. சற்று நேரத்தில் கண்ணதாசன் வந்துவிட.. அம்புஜத்தை மறந்து விட்டாள்.. ஆனால் அம்புஜம் காவ்யாவை மறக்கவில்லை.. அந்தவார இறுதியில்.. ஞாயிற்றுக்கிழமைக்கான மெத்தனத்துடன் கண்ணதாசன் ஹாலில் உட்கார்ந்து பேப்பரை மேய்ந்து கொண்டிருந்த போது.. பழக்கூடையை சுமந்து கொண்டு வந்த டிரைவருடன் வந்து கதவைத் தட்டினாள்...

"யாருன்னு பாருக்கா..."

மருக்கொழுந்தை வாசல் பக்கம் விரட்டிவிட்டு.. டிவியில் காவ்யா கண்ணைப் பதித்திருந்த போது...

"ஐயா.. இவங்க நம்ம பாப்பாவைத் தேடித்தான் வந்திருக்காங்க..." என்று வாசல் பக்கமிருந்து குரல் கொடுத்தாள் மருக்கொழுந்து...

# 112

*தாமிரபரணி தண்ணீரிலே – நீ*
*தழைந்து நனைய ஆசைகொண்டேன்..*

**க**ண்ணதாசன் கையிலிருந்த பேப்பரை கீழே நழுவவிட்டு... வீட்டுக்குள் எந்தப் பாப்பா தவழ்ந்து கொண்டிருக்கிறது என்று திரும்பிப் பார்த்தான்..

எந்தப் பாப்பாவும் தவழாமல் தரை சுத்தமாக இருக்க.. காவ்யா டிவியை விட்டுத் திரும்பிப் பார்த்தாள்...

“என்னத்தைண்ணே இந்த அக்கா சொல்லித் தொலைக்குது..?”

“என்னைக் கேட்டா..? எனக்கென்ன தெரியும்..? நீதானே அக்கா.. அக்கான்னு சொல்லிக்கிட்டு இருக்க.. நீயே போய் கேளு..”

“அந்தக் கதையே வேணாம்.. இதான் சாக்குன்னு வாசல் பக்கம் போய் அந்த அக்காகிட்ட வாய் கொடுக்கச் சொல்றியா..? அந்த அக்கா உன் முன்னாலதான் அடக்கி வாசிக்கும்.. என்னைக் கண்டா திறந்த வாயை மூடாது...” கறாராக சொல்லிவிட்டாள் காவ்யா...

‘சரி.. பாப்பாவைத் தேடி வந்த பீப்பாய் யாருன்னு பார்க்கலாம்..! என்று தரையில் நழுவி விழுந்த பேப்பரை மறந்துவிட்டு.. வாசல் பக்கமாக நடையைக் கட்டினான் கண்ணதாசன்...’

அந்தக் காலத்து நடிகை எஸ்.ஆர்.வரலட்சுமியைப் போல கம்பீரமாக.. கண்களில் தங்க பிரேமிட்ட கண்ணாடியும்.. காது.. கழுத்து.. கைகளில் வைர நகைகளும்.. அணிந்து.. விலையுயர்ந்த பட்டுப் புடவையுடுத்தி.. நின்று கொண்டிருந்த அம்புஜத்தை பார்த்ததும் திகைத்தான்...

‘வீடு மாறி வந்திட்டாங்களோ...’

அம்புஜத்தின் பின்னால் நின்ற டிரைவரின் கையிலிருந்த பழக்கூடையை நோட்டம் விட்டபடி...

“யாரைப் பாக்கனும்..?” என்று விசாரித்தான்...

“அதாங்கய்யா.. நம்ம பாப்பாவப் பாக்கனும்ன்னு வந்திருக்காக...” என்றாள் மருக்கொழுந்து..

“பாப்பாவா..?” கண்ணதாசன் புருவங்களை உயர்த்திய போது..

“காவ்யாவப் பார்க்க வந்தேன்...” என்று விளக்கமாக எடுத்துரைத்து.. பாப்பாவைத் தேடும் வேலையிலிருந்து கண்ணதாசனைக் காப்பாற்றினாள் அம்புஜம்...

"காவ்யாவையா பார்க்கனும்..?"

இந்தப் பெண்மணிக்கு அவன் தங்கையை எப்படித் தெரியும் என்ற நினைவோடு சந்தேகக் குரலில் கேட்டான் கண்ணதாசன்...

"காவ்யாவத்தான் பார்க்க வந்தேன்.. நீங்கதானே கண்ணதாசன்..?"

'என்பெயர் இந்தம்மாவுக்கு எப்படித் தெரிந்தது..' என்ற குழப்பத்துடன்...

"ஆமாம்.." என்றான் கண்ணதாசன்...

"அப்ப இந்த வீட்டிலதான் காவ்யா இருக்கா.. காவ்யா.. காவ்யா.."

கண்ணதாசனின் அனுமதியை எதிர்பாராமல் அம்புஜம் உள்ளே போய்விட.. எஜமானியம்மாளே உள்ளே போய்விட்டாள்.. எனக்கெதற்கு உன் அனுமதி என்ற பார்வையோடு பழக்கூடையை சுமந்து கொண்டு கை வலிக்க நின்றிருந்த கார் டிரைவரும் உள்ளே போய் விட்டான்...

'என்னாங்கடா நடக்குது இங்கே...'

புருவங்களை நெறித்தபடி கண்ணதாசன் மருக்கொழுந்தைப் பார்க்க.. அவள் ஏகத்துக்கும் வெட்கப் பட்டுத் தொலைத்து.. கட்டை விரலால் தண்ணீரை வர வைப்பவளைப் போல பூமியைத் தோண்டினாள்...

'போச்சுடா.. இது வேறயா..?' என்று நொந்து போன கண்ணதாசன் வீட்டுக்குள் போனான்..

அங்கே அம்புஜத்தின் அணைப்பில் ஐக்கியமாகி-யிருந்தாள் காவ்யா..

'இது எப்போலருந்து..' கண்ணதாசனுக்குள் கேள்வி எழுந்தது...

ஒரு வழியாய் அம்புஜத்தின் அன்புப் பிடியிலிருந்து விடுபட்ட காவ்யா.. அப்போதுதான் கண்ணதாசன் என்ற அண்ணன் ஒருவன் அவளுக்கு இருக்கிறான் என்ற நினைவு வந்தவளாக...

"அண்ணே.. இவங்கதான் அம்புஜம் பாட்டி.." என்று அறிமுகம் செய்து வைத்தாள்..

"வணக்கம்.." என்று வேறு வழியில்லாதவனாக கை குவித்த கண்ணதாசனிடம்..

"ஏம்ப்பா.. இப்பத்தான் வாசல்ல நின்னு பேசிக்கிட்டு இருந்தோம்..? நாம என்ன அன்னியமா.. அசலா..? புதுசா என்னத்துக்கு வணக்கம் சொல்ற..?" என்று கேட்டு வைத்தாள் அம்புஜம்...

'அன்னியமா.. அசலாவா..? அப்புறமென்ன.. இவங்களும் நாங்களும்.. ஒன்னுக்குள்ள ஒன்னா..?'

கண்ணதாசனுக்கு அந்த விவரத்தை தெரிந்து கொண்டே ஆக வேண்டும் போல இருந்தது.. அவன் அம்புஜத்தை பார்த்து..

“உட்காருங்க...” என்றான்...

“நீயும் உட்காரும்மா..” அவள் காவ்யாவை இழுத்துப் பிடித்துக் கொண்டுதான் உட்கார்ந்தாள்..

“அம்மா.. பழக்கூடையை எங்கே வைக்க..?” கைவலி தாளாமல் நின்றிருந்த டிரைவர் கேட்டான்...

“இவ்வளவு பெரிய வீட்டிலே அதை வைக்கவா இடமில்லை..? இங்கே இறக்கி வைச்சுட்டுப் போ..” என்று கை காட்டினாள் அம்புஜம்...

சுமையை இறக்கிவைக்கும் சந்தோசத்தை அவன் முகத்தில் பார்த்த கண்ணதாசனுக்கு ‘ஐயோ பாவம்..’ என்றிருந்தது.. காரோட்டும் டிரைவருக்குத்தான் எத்தனை துணை வேலைகள்..?

‘இவங்க யாரு..?’

வாய்வரை வந்துவிட்ட வார்த்தைகளை தடுத்து நிறத்தி தொண்டைக்குழிக்குள் தள்ளி விட்டுக் கொண்டிருந்த கண்ணதாசனைப் பார்த்து...

“இவங்களை கோவிலில் பார்த்தேன் அண்ணா..” என்றாள் காவ்யா...

“சும்மாவும் பார்க்கலைப்பா.. நான் மயங்கி விழுந்தப்ப இவதான் ஒரு சின்னப் பாப்பாகிட்டயிருந்து தண்ணி பாட்டிலை பிடுங்கிக்கிட்டு வந்து என் முகத்தில அடிச்சு மயக்கம் தெளிய வைச்சா..” என்றாள் அம்புஜம்...

“அப்ஜெக்சன் பாட்டி.. முதலாவதா நான் அந்தப் பாப்பாகிட்ட இருந்து தண்ணி பாட்டிலை பிடுங்கிக்கிட்டு வரலை.. கடன் வாங்கிட்டு வந்தேன்.. இரண்டாவதா உங்க முகத்தில தண்ணியை அடிக்கலை.. தெளிச்சு விட்டேன்...” காவ்யா பலமான ஆட்சேபனையை தெரிவித்தாள்...

“சுளீர்ன்னு முகத்தில வலிச்ச எனக்குத்தானே தெரியும்..? நீ அடிச்சியா.. இல்ல.. தெளிச்சியான்னு...”

“ஆனாலும் இது அபாண்டம் பாட்டி...”

“ஒரு பாண்டமும் இல்ல.. நீதான் எங்க வீட்டுக்கு வர மாட்டேன்னு சொல்லிட்ட.. நானாவது உன் வீட்டுக்கு வரலாமேன்னுதான் வந்தேன்...”

“அதுக்கென்ன பாட்டி.. இது உங்க வீடு மாதிரி...”

“சந்தடிசாக்கில கவர்ண்மென்ட் குவார்ட்டர்ஸ பட்டா போட்டுக் கொடுக்கப் பார்க்கிற.. பார்த்தியா..?”

அவர்கள் கலகலத்துச் சிரித்த போது தெறித்து விழுந்த அன்யோன்யத்தில் மனம் நெகிழ்ந்தான் கண்ணதாசன்..

அந்தச் சிரிப்பை காவ்யா உண்மையாக சிரித்தாள்.. கடமைக்காகவோ.. நடிப்புக்காகவோ சிரிக்கவில்லை.. அந்தச் சிரிப்பை மீட்டுத் தந்த அம்புஜத்தை நன்றியுடன் பார்த்தான் கண்ணதாசன்..

“நீங்க இருக்கீங்களே பாட்டி...”

“இருக்கேன்தான்.. வந்த சுருக்கிலேயே என்னைப் போகச் சொல்கிறயா..?”

“ஐயையோ பாட்டி.. நான் அப்படியா சொன்னேன்..?”

“பின்னே..? அப்படிச் சொல்லலையா..?”

“இல்லவே இல்லை...”

“அப்ப உன்னை நம்பி உட்காரலாம்ன்னு சொல்லு..”

“தாராளமாக நம்பலாம்...”

காவ்யா உரிமையுடன் அம்புஜத்தின் கைவிரல்களைப் பிடித்து நீவியபடியே எதையோ சொல்லிச் சிரித்தாள்.. அதை தலையை ஆட்டி மறுத்த அம்புஜம் வேறு எதையோ சொல்லிச் சிரித்தாள்.. சற்று நேரத்தில் இருவருமே மெதுவான குரலில் எதையோ சொல்லிவிட்டு கூட்டணி போட்டுச் சிரித்தார்கள்...

“இதப்பாருங்கய்யா.. பாட்டியும்.. பாப்பாவும் கூட்டுப் போட்டுக்கிட்டு பழம பேசறத..” மருக்கொழுந்து முகவாயில் கை வைத்தாள்...

அவள் காவ்யாவை பாப்பாவாக்குவதில் கண்ணதாசனுக்கு சம்மதமில்லை.. சந்தடிசாக்கில் பாப்பாவின் அண்ணனான அவனைத் தம்பி என்று அவள் அழைத்துவிட்டால் என்ன செய்வது என்ற எதிர்காலக் கவலையில் அவன் ஆழ்ந்தான்...

“பாரு மருக்கொழுந்து..” என்று அவன் சொல்ல.. உடனே மருக்கொழுந்து அவன் முகத்தை வெட்கப்பட்டுக் கொண்டே பருகு.. பருகென்று பார்க்க ஆரம்பித்து தலையைக் குனிந்து கொண்டாள்...

‘ம்ஹீம்.. நல்ல வேளையா இதுக்கு வெட்கம் வந்து தொலைக்குது.. அதுவும் இல்லாமப் போச்சுன்னா.. இது பாக்கிற பார்வையிலே நான் அம்பேல் ஆகிருவேன்..’

வழக்கப்படி மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டான் கண்ணதாசன்...

‘இது புத்தி தெரிஞ்சும்.. நான் ‘பாரு’ன்னு பேச்சை ஆரம்பிப்பேனா..? என்னைச் சொல்லனும்...’

மனதுக்குள் தன்னைத் திட்டித் தீர்த்தவாறே கவனமாக வார்த்தைகளைத் தொடுத்தான் கண்ணதாசன்..

“பாருன்னு சொன்னா.. நான் சொல்றதக் கேளுன்னு அர்த்தம்...”

“சொல்லுங்கய்யா..”

“காவ்யா வளர்ந்த பொண்ணு...”

“அது எனக்குத் தெரியாதுங்களா..?”

“தெரிஞ்சும் எதுக்காக அதைப் போயி பாப்பா.. பாப்பா..ன்னு கூப்பிடறே...?”

“ஒரு பிரியம்தானுங்க...”

“பிரியத்த மனசுக்குள்ள வைச்சுக்க.. இப்படிப் பாப்பான்னு கூப்பிட்டு அது கையில ஃபீடிங் பாட்டில கொடுக்காதே..”

“போங்கய்யா.. நீங்க வேற.. அப்படி யாராச்சும் செய்வாங்களா...?”

மருக்கொழுந்து வெட்கப்பட்டு முகத்தை மூட.. அரன்டு போய் விட்டான் கண்ணதாசன்..

‘உத்து உத்துப் பாக்காதீங்க மாமா.. வெக்கமாயிருக்கு’ என்று சொல்லாத குறை மட்டும்தான்.. மற்றபடி.. அது போலத்தான் அவள் முகத்தை மூடி வெட்கப் பட்டுக் கொண்டிருந்தாள்...

‘குமாரு.. இப்படி ஒரு அரை வேக்காட்டைக் கட்டிக்கிட்டு ஆயுசு பூரா அவதி படறியேய்யா...’

கண்ணதாசனுக்குள் குமாரின் மீதான பரிதாபம் பொங்கியது.. அவன் அவதிப் படுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் கண்ணதாசனையும் அவதிப் பட வைக்கிறானே என்று மனம் நொந்தபடி...

“அதைக் காவ்யான்னு கூப்பிட்டுப் பழகு.. தெரியுதா..?” என்று லேசாக அதட்டினான்..

மருக்கொழுந்து அதற்கெல்லாம் அயர்ந்து போகிற ஆளாகத் தெரியவில்லை...

“இதைச் சொல்லுவீங்களா.. அதை விட்டுட்டு என்னென்னமோ சொல்றீங்களே...” என்று திரும்பவும் முகம்சிவந்தாள்...

‘என்னென்வோ சொன்னேனா...? என்னத்தைச் சொன்னேன்..?’ கண்ணதாசனுக்கே சந்தேகம் வந்து விட்டது...

“சொன்னதை விட்டுத் தள்ளு மருக்கொழுந்து..”

“அதுக்கென்னங்கய்யா.. நீங்க சொல்லி என்னைக்கு நான் மாட்டேன்னு மறுத்துச் சொல்லியிருக்கேன்...?”

‘இவள் வில்லங்க வீராயி..’ பல்லைக் கடித்த கண்ணதாசன் இவளிடம் எடுத்துச் சொன்னால் வேலைக்கு ஆகாது என்ற முடிவுடன்...

“போம்மா.. வந்திருக்கிறவங்க பெரிய மனுசங்க போல இருக்கு.. அவங்களுக்கு காபி.. பலகாரம் எதையாச்சும் கொண்டு வந்து கொடு.. போ...” என்று ஒரு திரைப்படத்தின் கதாநாயகி கையைக் காட்டுவதைப் போல கையை நீட்டிக் காட்டினான்...

“ஒரு கூடை நிரம்ப பழத்தோட காரில வந்து இறங்கியிருக்காங்க.. அப்ப பெரிய மனுசங்களாத் தானே இருப்பாங்க..” என்று தன் கண்டுபிடிப்பை அறிவித்து விட்டு.. சமையலறையை நோக்கிச் சென்றாள் மருக்கொழுந்து..

ஒரு மனிதனை பெரிய மனிதராக்குவதும்... சிறிய மனிதராக்குவதும் அவனுடைய வசதிதானா என்று சிந்திக்க ஆரம்பித்தான் கண்ணதாசன்...

## 113

***ஊருறங்கும் வேளையிலும்...***
***உனைநினைக்க ஆசைகொண்டேன்...***

**அ**ம்புஜத்தின் வரவு ஒரு தொடர்கதையானது.. அவள் ஒரு தொடர்கதையாக அவள் தினமும் காவ்யாவைத் தேடி கண்ணதாசனின் வீட்டுக்கு வர ஆரம்பித்தாள்.. அவர்கள் சேர்ந்து கோவிலுக்குப் போனார்கள்.. அது படிப்படியாக முன்னேறி.. சேர்ந்து கடைவீதிகளுக்குப் போனார்கள்.. அது முதல்படிக்கு முன்னேறி.. சேர்ந்து சினிமாக்களுக்குப் போவதில் வந்து நின்றது...

“அந்தப் பாட்டி என்ன நம்ம பாப்பாவைக் காதலிக்குதா...?”

வழக்கம் போல வெட்கப்பட்டு கால் நகத்தால் தரையைப் பெயர்க்க முயன்றபடி ஆச்சரியப்பட்டாள் மருக்கொழுந்து...

காவ்யா இல்லாத வீட்டில் மருக்கொழுந்தை தனியாக சமாளிக்க வேண்டிய துர்பாக்கிய நிலைமைக்கு ஆளாகியிருந்த கண்ணதாசன் அவளை முறைத்தான்..

‘இது வாயில வர்ற பேச்சைப் பாரேன்...’ அவனுக்கு கடுப்பு கிளம்பியது...

அவனே காவ்யாவின் மனதில் இருந்த சோகம் அமிழ்ந்து பழைய உற்சாகம் வெளிவருவதில் சந்தோசமாக இருக்கிறான்.. அதைத் தெரியாமல் மருக்கொழுந்து வாய் விடுவாளா...?

“ஏன் மருக்கொழுந்து.. உன் பொண்ணு என்ன படிக்குதுன்னு சொன்ன..?”

“பத்தாவதுங்கய்யா...” அவள் நாணிக்கோண...

‘இவ இதுக்கும் வெட்கப்படுவாளா..?’ என்றிருந்தது அவனுக்கு..

“அது உன்கூட கோவில் குளம்.. கடைத்தெரு.. சினிமான்னு வெளியே வராதா...?”

“ஏன் வராது..? எங்கே போறதா இருந்தாலும் அதுக்கு நான்தான் ஜோட்டுப்புள்ளயா போயாகனும்”

“ஜோட்டுப் பிள்ளையா..?”

“சிநேகிதப் புள்ளன்னு அர்த்தம்ங்கய்யா...”

“நீ எதைப் பேசினாலும் இப்படித்தான் எகனைக்கு மொகனையா பேசுவியா..?”

“அப்படியெல்லாமில்லீங்கய்யா...”

“என்னைக் கண்டா மட்டும் உனக்கு இளிச்சவாயனைப் போலத் தெரியுதா..?”

“ஐயோ சாமி.. அப்படி நான் நினைப்பேனுங்களா..?”

“போகுது போ.. கூடப் படிக்கிற புள்ளைகள விட்டுட்டு உன்னை உன் பொண்ணு ஜோட்டு புள்ளையா நினைக்குதே.. அது உன்னை காதலிக்குதா..?”

நிறுத்தி நிதானமாக கண்ணதாசன் வினவ... மருக்கொழுந்து திருதிருத்தாள்...

“இப்ப எதுவும் பேச மாட்டியே.. ஆமா.. உன் பொண்ணை எப்படிக் கூப்பிடுவ..? பாப்பான்னா...?”

“பத்தாவது படிக்கறி புள்ளையைப் போயி பாப்பான்னு யாராவது கூப்பிடுவாங்களாய்யா..?”

“அதானே.. பட்டப் படிச்ச புள்ளையைத்தான் பாப்பான்னு கூப்பிடுவாங்க...”

“விளையாடாதீங்கய்யா...”

“விளையாடறேனா..? நானா..? உன்கிட்டயா..? நேரம்தான்.. ஏம்மா.. உன் பொண்ண பாப்பான்னு கூப்பிட்டுத்தான் பாரேன்...”

“ஐயே.. அது சண்டைக்கு வந்துரும்ய்யா...”

“அதுக்கு பயப்படுவ.. எனக்கு பயப்படமாட்ட.. ஏன்..? உன் பொண்ணு எதுக்காக சண்டைக்கு வரனும்..?”

“அது கூடப் படிக்கிற புள்ளைக காதில விழுந்தா என்புள்ளய கேலி பண்ணி சிரிக்க மாட்டாங்களா..?”

“அப்ப.. நீ அறிவோடதான் இருக்க.. எங்க முன்னால அது இல்லாதத போல பாவலா பண்ணிக்கிட்டு உன் இஷ்டத்துக்கு பேசிக்கிட்டு இருக்க...”

“என்னாங்கய்யா.. இதுக்குப் போயி கோவிச்சுக்-கறீங்க..? இப்ப என்ன..? நானு நம்ம பாப்பாவ.. பாப்பான்னு கூப்பிடக்கூடாது.. அவ்வளவுதானே..? நாளையில இருந்து பாருங்க.. நம்ம பாப்பாவ பாப்பான்னு கூப்பிடவே மாட்டேன்...” அவள் நீட்டி முழக்கினாள்...

இமைக்காமல் அவளையே முறைத்துப் பார்த்த கண்ணதாசன்..

“ஒரு பாப்பாவுக்கு.. எத்தனை பாப்பா போடுவ..? அத எதுக்கு நாளைக்கு தள்ளி வைக்கிற..? ஏன்..? இன்னைக்கு நாள் நல்லாயில்லையா..?” என்று கேட்டான்...

"ஹி.. ஹி.. பழக்க தோசத்த மாத்த ஒரு நாளாவது ஆகுமில்லங்கய்யா..?" தலையைச் சொரிந்தாள் மருக்கொழுந்து..

இவளை திருத்தவே முடியாதா என்ற கோபத்தோடு வாசல் பக்கமாக போனான் கண்ணதாசன்... அங்கே...

"மருக்கொழுந்து.. அடியே.. மருக்கொழுந்து.." என்றபடி குமாரு வந்து நின்றான்...

"வாய்யா குமாரு.. எங்கே உன்னை ஆளையே காணோம்.." என்று நலம் விசாரித்தான் கண்ணதாசன்...

"எங்கேங்கய்யா.. நைட்டெல்லாம் முழிக்கனும்.. பகலெல்லாம் தூங்கனும்னு எனக்கு தலையில எழுதி வைச்சிருக்கு..." குமாரு அவன் சோகக் கதையைச் சொன்னான்...

"இப்ப மட்டும் எப்புடி வந்த..?"

"நான் வரனும்னா நினைச்சேன்..? புள்ளைகளுக்கு லீவுநாளு.. இவ வீட்டில இல்லன்னா என்னத் தூங்க விட மாட்டேங்குதுக.. அதான் வேலை முடிஞ்சிருச்சுன்னா இவளக் கையோட கூப்பிட்டுக்கிட்டு போயி.. அதுக கையில இவள ஒப்படைச்சிட்டு ஆனந்தமா தூங்கலாம்ன்னு வந்தேன்..."

"உன் புள்ளைகளை அடக்க உன்னால முடியலையா..?"

“எங்கேங்கய்யா.. அதுகளத்தான் பொறந்ததில இருந்து இவ கைக்குள்ள அடக்கி வைச்சிருக்காளே...”

“நீதான் இரவினில் ஆட்டம்.. பகலினில் தூக்கம்ன்னு இருக்கிற ஆளாச்சே.. அப்புறம் எப்படி உன் புள்ளைக உன் சொன்னபடி கேக்கும்..?”

கண்ணதாசன் பேசிக் கொண்டிருந்த போது.. வீட்டுக்குள் இருந்து தூக்குவாளியுடன் வெளியில் வந்த மருக்கொழுந்து...

“வந்துட்டியா மச்சான்..” என்று ஆவலோடு கணவனை விசாரித்தாள்...

“ஆமாண்டி.. நானு வெளிநாட்டுக்குப் போயி.. பத்து வருசமா குப்பை கொட்டிட்டு இப்பத்தான் உன் கண்ணு முன்னால் வந்து நிக்கறேன்.. நீ வந்துட்டியா மச்சான்னு ஓடி வந்துரு.. அடச்சீ.. இப்பத்தான் வீட்டில என்னைப் பார்த்துட்டு வந்த.. அதுக்கப்புறமா எதுக்குடி இந்த ஓவர் ஆக்டிங்கு..?” குமாரு எரிந்து விழுந்தான்...

“ஒரு ஆசையில சொன்னா சிலிர்த்துக்கறயே.. சரிசரி.. வா வீட்டுக்குப் போகலாம்..” என்று கணவனிடம் சரசமாடியபடியே கிளம்பிய மருக்கொழுந்து...

“போயிட்டு வரட்டுமாங்கய்யா..” என்று தேனொழுகும் குரலில் கண்ணதாசனிடம் கேட்டாள்...

இன்றைக்கு இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு கண்ணதாசன் வந்தான்..

"போம்மா.. திரும்பி நீ வேலைக்கு வரலாமா.. வேணாமான்னு நானு குமாருகிட்டச் சொல்லிவிடறேன்.." என்று குண்டைத் தூக்கிப் போட்டான்..

"ஐயா..."

கணவனும் மனைவியும் ஒரே குரலில் அலறியபடி நின்று விட்டார்கள்.. சமையல்.. மேல் வேலை.. இரண்டுக்குமாகச் சேர்ந்து கண்ணதாசன் ஐயாயிரம் ரூபாய் சம்பளத்தை தந்து கொண்டிருந்தான்.. அவர்களுக்கு அது பெரிய தொகை.. போதாக் குறைக்கு.. சமைக்கும் பதார்த்தங்களில் தனக்கான பங்கை பாத்திரங்களில் போட்டு மருக்கொழுந்து வீட்டுக்கு கொண்டு போய் விடுவாள்.. அதை அவளுடைய பிள்ளைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.. காவ்யா வேறு அவளிடம் இருந்த புதிதான சேலைகளை மருக்கொழுந்துவிடம் கொடுத்து விட்டிருந்தாள்.. இவை அத்தனையும் நின்றுவிட்டால் என்ன ஆவது..?

"ஏண்டி.. ஐயா இப்படிச் சொல்றாரு..? நம்ம வீட்டில் கெஞ்சதைப் போல சாம்பார தீய வைச்சிட்டயா..?"

"இல்ல மச்சான்.."

"சோத்தக் குழைய வைச்சிட்டியா..?"

“இல்ல மச்சான்..”

“கண்றாவியா குழம்ப வைச்சியா..?”

“இல்ல மச்சான்..”

“கரிக்கட்டையா பொரியல வைச்சியா..?”

“இல்ல மச்சான்..”

“இட்லியால அடிவாங்கி யாரு மண்டையாவது உடைஞ்சு போச்சா..?”

“இல்ல மச்சான்..”

“தோசைச்சட்டியில இருந்து தோசை வரவே மாட்டேன்னு ஓட்டிக்கிட்டு அடம் பிடிச்சுச்சா..?”

“இல்லவே இல்லை மச்சான்...”

குமாரு சொல்லச் சொல்ல.. காவ்யாவும்... தானும்.. எப்பேற்பட்ட கொடுமைகளில் இருந்தெல்லாம் தப்பித்திருக்கிறோம் என்று ஆசுவாசப்பட்டுப் போனான் கண்ணதாசன்...

“ஏங்கய்யா.. இத்தனையில ஒன்னைக்கூட இவ பண்ணலைன்னு சொல்றாளே.. அப்புறமும் எதுக்காகய்யா.. இவள வர வேண்டாம்ன்னு சொல்றிங்க..?”

“அத அப்புறமா பேசலாம்.. முதல்ல இதுக்கு ஒரு பதிலைச் சொல்லு.. உன் வீட்டில இந்த லட்சணமாத்தான் சமையல் நடக்குதா..?”

“ஆமாங்கய்யா.. ஆமாம்...”

“பாவம்தான் நீ.. வேலைக்கு வந்த இடம்ங்கிறதினால இந்தத் திறமையையெல்லாம் உன் பொண்டாட்டி ஒளிச்சு வைச்சிருச்சு.. இது வேற விசயம்...”

“அப்பாடி தப்பிச்சீங்கய்யா...”

“அதில இருந்தெல்லாம் தப்பிச்சாச்சு.. ஆனா இது வாயில இருந்துதான் தப்பிக்க முடியல...”

“நினைச்சேங்கய்யா..” என்றான் அந்த குமாராகப் பட்டவன்..

“காவ்யாவ பாப்பாங்குது.. நான் ஒன்னைச் சொன்னா இது ஒன்னு சொல்லுது.. உனக்கே தெரியும் குமாரு.. ஆபிசில ஆயிரத்தைஞ்சு டார்ச்சரோட வேலை பார்த்துட்டு நான் வீட்டுக்கு வர்றேன்...”

“ஆமாங்கய்யா...”

“வந்த மனுசன் நிம்மதியா உட்காரனுமா வேணாமா..?”

“வேணும்.. வேணும்...”

“அந்த சமயம் பார்த்து மருக்கொழுந்து எதையாவது பேசி வைச்சா.. நான் ரெஸ்ட் எடுப்பேனா.. இல்ல இதைப் பேசனும்.. இதைப் பேசக் கூடாதுன்னு இதுக்கு டியூசன் எடுப்பேனா..?”

“இதுதான் பிரச்னையா...?”

“ஆமாம் குமாரு.. உன் பொண்டாட்டி வாயைத் திறக்காம வேலை பார்க்கிறதா இருந்தா வேலைக்கு வரட்டும்.. இல்ல.. அது இஷ்டத்துக்குத்தான் பேசிக்கிட்டு இருக்கும்ன்னா வேலைக்கேவர வேண்டாம்...”

“ஐயா அப்படிச் சொல்லக்கூடாது.. இனிமே இவ ஊமைன்னு நினைச்சுங்க...”

“மச்சான்...”

“நீ வாயை மூடுடி.. எல்லாம் உன்னால வந்தது...”

“பேசிக்கிட்டு இருக்கிறவள ஊமையாப் போன்னு சொன்னா நான் என்ன மச்சான் பண்ணுவேன்..? எனக்கு பேச்சே மறந்து போயிராதா..?”

“இந்த வித்தாரமெல்லாம் இங்கே வேணாம்.. நீ இங்கே வந்து போறது மூணே மணி நேரம்தான்.. இருபத்தி நாலு மணி நேரத்தில மூணு மணி நேரம் நீ மௌன விரதம் இருக்கிறதா நினைச்சுக்கடி.. ஐயா.. இவ இனிமே உங்க வீட்டில வேலை செய்யற நேரத்தில பேச மாட்டாங்கய்யா..”

குமாரு தந்த உத்திரவாதத்தில்...

“அப்போச்சரி...” என்று தலையசைத்தான் கண்ணதாசன்...

பேசுவதற்கு ‘தடா’ விதிக்கப்பட்ட சோகத்துடன் குமாரை பின்பற்றினாள் மருக்கொழுந்து...

மிகப்பெரிய பிரச்னையிலிருந்து விடுபட்டு விட்ட சந்தோசத்துடன் வீட்டுக்குள் போகத் திரும்பினான் கண்ணதாசன்.. சர்ரென்று அவன் வீட்டுக்கு முன்னாள் கார் வந்து நிற்க.. அதிலிருந்து உற்சாகமாக பேசியபடி அம்புஜமும்.. காவ்யாவும் இறங்கினார்கள்...

“அந்த காமெடியன் பண்ணின கூத்து இருக்கே..” காவ்யா பொங்கிச் சிரிக்க.. அந்த நினைவில் அம்புஜமும் சிரித்தாள்...

“சினிமாவுக்கு போயிருந்தீங்களா..?” அம்புஜத்தை பார்த்தபடி காவ்யாவிடம் கேட்டான் கண்ணதாசன்...

“ஏம்ப்பா.. உன்கிட்ட போனில பர்மிசன் கேட்டுட்டுத் தானே என் பேத்தியை நான் கூப்பிட்டுக்கிட்டுப் போனேன்... மறந்து போயி விசாரணைக் கமிசன் வைக்கிறயா..?” அம்புஜம் சண்டைக்கு வந்தாள்...

மெல்ல.. அம்புஜம் அந்த வீட்டில் ஒருத்தியாக மாறிப்போனாள்...

# 114

***காற்றில் வரும் கீதத்திலே –என்***
***கண்ணனின் குழல் கேட்க ஆசைகொண்டேன்...***

“இன்னும் என்ன பண்றேண்ணா..?” காவ்யா அவசரப் படுத்தினாள்...

ஈரமுகத்தை துண்டினால் அழுந்தத் துடைத்தபடி வந்த கண்ணதாசன் “பொறும்மா.. இப்போத்தானே ஆபிசில இருந்து வந்திருக்கேன்..?” என்றான்...

“நீ வாரதுக்காகத்தானே நான் காத்திருந்தேன்..? நீ என்கிட்ட போனில் என்ன சொன்ன..? ரெடியா இரு காவ்யா.. நான் ஆபிசில இருந்து வந்ததும் கிளம்பிரலாம்ன்னு சொன்னயா.. இல்லையா..?”

“சொன்னேன்தான்.. அதுக்காக.. குளிச்சு டிரஸ்ஸை மாத்திக்காமக் கூட வர்றேன்னா சொன்னேன்..?”

“ஒரு மணி நேரமாவா குளிப்ப..?”

“இதோ.. கிளம்பிட்டேன்.. இதுக்குப் போயி இத்தனை அவசரமா..?”

“உனக்கென்ன தெரியும்..? பாட்டிக்கு கால் பிசகிருச்சுன்னு கேட்டதில இருந்து எனக்கு கையும் ஓடலை.. காலும் ஓடலை.. தெரியுமா..?”

காவ்யாவுக்கு லேசாக கண்கலங்கி விட்டது.. அம்புஜத்தின் மீது அவள் வைத்திருக்கும் அதீத பாசத்தைப் புரிந்து கொண்டிருந்த கண்ணதாசன் அவளுக்கு சமாதானம் சொன்னான்...

“ஒன்னும் ஆகியிருக்காது காவ்யா.. வயசானவங்க.. பாத்ரூமில கால் வழுக்கி விழுந்திருப்பாங்க.. இதுக்குப் போயி பயப்படலாமா...?”

“ஒன்னும் ஆகலைன்னு இங்கேயிருந்து எப்படி நமக்குத் தெரியும்..? போயிப் பாத்தாத்தானே எதுவும் தெரியும்...?”

“ஐஞ்சேநிமிசத்தில போயிரலாம்.. கவலையே படாதே...”

கண்ணதாசன் போனை எடுத்து கால் டாக்ஸியை வரச்சொல்லிக் கொண்டிருந்தான்...

“இன்னும் இதைச் செஞ்சு முடிக்கலையா..?” என்று தலையில் கையை வைத்தாள் காவ்யா...

“கிளம்பின பின்னாடிதானேம்மா வரச்சொல்ல முடியும்..? அது பாட்டுக்கு வந்து.. வாசல்ல

நின்னுக்கிட்டு இருந்தா வெட்டியா வெயிட்டிங் சார்ஜில்ல கொடுக்கனும்..?" நியாயம் கேட்டான் கண்ணதாசன்...

"என்னவோ பண்ணு..." முணுமுணுத்தபடி மருக்கொழுந்தைப் பார்த்தாள் காவ்யா..

அதுநேரம் வரை அண்ணனும்.. தங்கையும் பேசுவதை வாய் பார்த்துக் கொண்டிருந்த மருக்கொழுந்து.. காவ்யா திரும்பிப் பார்த்ததும் அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

"அக்கா.." காவ்யா அழைத்தாள்...

"ம்ம்ம்.." மருக்கொழுந்து அவள் முகம் பார்த்தாள்...

"வேலை முடிஞ்சதும் வீட்டைப் பூட்டிச் சாவியை பக்கத்து குவார்ட்டர்ஸில கொடுத்துட்டுப் போக்கா.."

"ம்ம்ம்..."

"உன் பையனுக்கு முறுக்குப் பிடிக்குன்னு சொன்னயே.. நேத்து நம்ம குவார்ட்டர்ஸ் பக்கம் முறுக்குப் பாக்கெட் வித்தாங்க.. ஒரு பாக்கெட்ட வாங்கி வைச்சிருக்கேன்.. எடுத்துட்டு போ..."

"ம்ம்ம்..."

"உனக்கு என்ன ஆச்சு..? இந்த ஒரு மாசமா நான் எதப் பேசினாலும்.. இம் கொட்டிக்கிட்டு இருக்கியே.. வாயத்திறந்து நாலு வார்த்த பேசினா என்ன..? உன்

வாய்க்குள்ள பதுக்கி வைச்சிருக்கிற வைரமெல்லாம் உதிர்ந்து ஓடிப் போயிருமா..?" என்ற காவ்யாவின் கேள்விக்கு...

'என் வேலை ஓடிப் போயிரும்..' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்ட மருக்கொழுந்து.. காவ்யாவிடம் 'ஈ'யென்று பல்லைக் காட்டிச் சமாளித்தாள்..

"சகிக்கலை.. இதுக்கு நீ 'இம்' கொட்டறதே தேவலை..." என்று காவ்யா சொல்லிக் கொண்டிருந்த போதே கார் வந்து விட்டது..

அவள் மருக்கொழுந்தையும்.. அவள் பேச்சையும் மறந்துவிட்டு வாசலுக்கு ஓடி விட்டாள்.. கண்ணதாசன் மருக்கொழுந்தை ஒரு மௌனப் பார்வை பார்த்தான்.. அந்தப் பார்வைக்கு வீட்டைப் பத்திரமாக பார்த்துக் கொள் என்ற அர்த்தம் என்பதை புரிந்து வைத்திருந்த மருக்கொழுந்து.. ஆகட்டும் என்ற பாவனையில் தலையை ஆட்டினாள்..

'அஃது..' என்ற முறைப்புடன் கண்ணதாசன் தங்கையின் பின்னால் போய் விட்டான்...

"அப்பாடா..."

வாய் விட்டுப் பேச முடியாத சூழலில் இருந்து தப்பித்து விட்ட விடுதலையுணர்வை வாய் விட்டுச் சொன்னாள் மருக்கொழுந்து..

“ஒரு வீடானப்பட்ட வீட்டில பேச்சுச் சத்தம் இருக்கக்கூடாதுன்னா என்ன அர்த்தம்..? அதோட என்னத்தான பேச வேணாம்ன்னு ஐயா சொன்னாரு..? இப்ப இவரும் சேர்ந்துக்கிட்டு மௌனவிரதம் காக்கிறாரே.. இது நாயமா..?” தனக்குத் தானே பேசிக் கொண்டு கடுகு டப்பாவை தேட ஆரம்பித்தாள் அவள்...

நீண்டு சென்ற சாலையில் விரைந்த கார்.. அகலமான ஒரு தெருவில் திரும்பியது.. இருபக்கமும் அடர்ந்த பூமரங்களுடன் இருந்த அந்த சாலையின் வளவளப்பும்.. எதிரும் புதிருமாக.. வரிசையாக அமைந்திருந்த மிகப் பெரிய வீடுகளும் அந்தத் தெருவின் பணக்காரத்தனத்தை உணர்த்தின.. அந்தத் தெருவிலே பாதியை அடைத்தது போல விஸ்தாரமாக விரிந்து பரந்திருந்த பங்களாவின் சுற்றுச்சுவரின் பிரதான கேட்டைத் திறந்து விட்டான் செக்யூரிட்டி....

காவ்யாவுடன் இறங்கிய கண்ணதாசன்.. பிரம்மாண்டமான அந்த பங்களாவை அண்ணாந்து பார்த்து வியந்தான்..

‘அந்த அம்புஜப் பாட்டி இவ்வளவு பெரிய பணக்காரங்களா..?’

காவ்யாவின் மனதிலும் அதே கேள்விதான் என்பதை அவள் முகமே காட்டிக் கொடுத்தது..

அவர்கள் வீட்டை நோக்கிச் சென்ற பாதையில் நடக்க ஆரம்பித்தார்கள்..

அம்புஜம் அவர்களுக்கு அதிக அளவில் முக்கியத்துவம் கொடுத்து வரவேற்க வைத்திருந்தாள்..

"வாங்க.. வாங்க..."

இருகரம் கூப்பி வணங்கிய பெண்மணி அன்னபூரணியின் வயதில் இருந்தாள்.. அம்புஜத்தை போலவே வைரமும்.. பட்டுப்புடவையுமாக டாலடித்தாள்...

"அத்தை சொன்னாங்க தம்பி.. நீங்க தான் கண்ணதாசனா..? இது உங்க தங்கை காவ்யாவா..?"

அத்தையென்று அவள் அம்புஜத்தை சொன்னதி-லிருந்து அவள்தான் அம்புஜத்தின் மருமகள் சுமதியென்று புரிந்துகொண்ட காவ்யா...

"ஆமாங்க..." என்றபடி பதிலுக்கு கைகுவித்தாள்..

"அத்தை ரெஸ்ட் எடுத்துக்கிட்டு இருக்காங்க.. நீங்க உட்காருங்க..."

சுமதி அவர்களை உபசரித்தபடி வேலையாளைப் பார்க்க.. அவள் கண்ணசைவில் குளிர்பான தம்ளர்கள் வந்தன...

"பாட்டி எப்படியிருக்காங்க..?" காவ்யா பரபரத்தாள்..

அவள் கேள்வியில் வெளிப்பட்ட பதட்டத்தை உணர்ந்து கொண்டவளாக வாத்சல்யத்துடன் சிரித்தாள் சுமதி...

“பரவாயில்லையே.. அத்தை மேல இவ்வளவு பாசமா இருக்கியே.. அதான் அவங்க எப்பப் பார்த்தாலும் உன்னைப் பத்தியே பேசிக்கிட்டு இருக்காங்களா..?”

“அப்படியில்ல..” காவ்யாவுக்கு வெட்கம் வந்து விட்டது...

“சுமதி..” என்று அழைத்தபடி சிவதாணுவின் வயதில் வந்த மனிதரின் முகசாயலில் இருந்து அவர்தான் அம்புஜம்மாவின் மகனான சரவணனாக இருக்கக் கூடும் என்று யூகித்தாள் காவ்யா...

“இங்கே இருக்கேங்க..” என்றபடி எழுந்துநின்ற சுமதி.. கண்ணதாசனையும்.. காவ்யாவையும் அவருக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள்..

“ஓ.. நீதான் அந்த காவ்யாவா..?” என்று சரவணன் சொன்னதிலிருந்து தான் அந்த வீட்டிற்கு எந்த அளவிற்கு பரிச்சயமானவள் என்பதை புரிந்து கொண்டாள் காவ்யா...

“அம்மா வாயைத் திறந்தால் உன் பெரைத்தான் சொல்கிறாங்க.. என் மகன்கூட சண்டைக்கு போயிட்டான்.. என்ன பாட்டி.. விட்டால் சொத்து முழுவதையும் அந்த காவ்யாவுக்கே எழுதிக் கொடுத்திருவீங்க போல

இருக்கேன்னு நேந்றுக்கூடச் சொன்னான்...” பலமாக சிரித்தார் சரவணன்..

“நாங்க மதுரைக்காரங்க சார்.. மத்தவங்க சொத்துக்கு ஆசைப்பட மாட்டோம்.. அதனால உங்க மகனை பயப்படாம இருக்கச் சொல்லுங்க...” சிரித்தபடி பதில் சொன்னான் கண்ணதாசன்...

“மறக்காமச் சொல்லிடறேன்.. அப்பத்தான் அவன் நிம்மதியா உறங்குவான்..” மீண்டும் உரத்த சிரிப்பை சிரித்தார் சரவணன்...

பொதுவான விசாரிப்புகளுக்குப் பின்னால் அவர் வெளியே கிளம்பிச் சென்றுவிட.. சுமதி கண்ணதாசனையும் காவ்யாவையும் அம்புஜத்தின் அறைக்கு அழைத்துச் சென்றாள்..

பெரிய கட்டிலில் படுத்திருந்த அம்புஜம்... அவர்களைக் கண்டதும் எழுந்து அமர முயன்று கால் வலியில்

“அம்மா..” என்று முகம் சுளித்தாள்...

“பார்த்து பாட்டி..”

பக்கத்தில் சுமதி நிற்பதையும் மறந்து போனவளாய் அம்புஜத்தின் அருகே விரைந்தாள் காவ்யா...

“இப்படி உட்காருங்க...”

அம்புஜத்தின் முதுகுக்கு அணைவாய் தலையணையை போட்டு விட்டு அவள் கால்நீட்டி உட்கார உதவி செய்தாள்..

அவளின் அந்தப் பரிவில் சுமதியின் முகத்தில் ஆச்சரியம் தெரிந்தது.. அம்புஜம் பெருமிதத்துடன் மருமகளை பார்த்துக் கொண்டாள்...

“பாட்டி காலொடிஞ்சு போய் கிடக்கிறேன்.. என்னப் பார்க்க இவ்வளவு லேட்டாத்தான் வருவியா..?” செல்லமாக காவ்யாவை கோபித்துக் கொண்டாள் அம்புஜம்...

“காலொடிஞ்சு போச்சா..?” காவ்யா பதறிப் போய் அம்புஜத்தின் கால்களைப் பார்த்தாள்..

அவை கட்டுக்களில்லாமல் தேமே என்று இருந்தன..

“சுளுக்கைத்தான் அப்படிச் சொல்றாங்க...” காவ்யாவை சமாதானப் படுத்தும் வகையில் சிரித்தாள் சுமதி...

“சதை பிரண்டிருக்காம்.. நீ இப்படி உட்காரு..” காவ்யாவை இழுத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள் அம்புஜம்..

கண்ணதாசன் அருகிலிருந்த சோபாவில் உட்கார்ந்தான்...

“டாக்டர்கிட்ட காண்பிச்சீங்களா..?” என்ற வழக்கமான கேள்வியைக் கேட்டான்...

“அதைத்தானே முதலில் செஞ்சாங்க.. பாத்ரூமில் விழுந்து கிடக்கிறவளைத் தூக்கி என்ன ஆச்சு.. ஏதாச்சுன்னு கேட்காம காருக்குள்ள போட்டுக்கிட்டு ஹாஸ்பிடலுக்கு கொண்டு போயிட்டாங்க...” என்றாள் அம்புஜம்..

“அப்படித்தானே செய்யனும்..?”

“நீ வேறப்பா.. கால் பிசகியிருக்கு.. அதை அசைச்சா வலி உயிர் போகுது.. அதை முதல்ல கவனிக்காம.. ஆயிரம் டெஸ்ட எழுதிக் கொடுத்திட்டாங்க அந்த ஹாஸ்பிடல்ல. ஒவ்வொண்ணா எடுத்து முடிக்கிறதுக்குள்ள வலி தாங்காம நான் மயக்கமே போட்டுட்டேன்னா பார்த்துக்கயேன்...”

“அடடா.. அப்புறம்..?”

“நானென்ன கதையா சொல்றேன்..?”

“ஒரு ஆர்வக் கோளாறில கேட்டுட்டேன் பாட்டி.. நீங்க சொல்லுங்க..”

“என்னத்தைச் சொல்ல..? நான்தான் கால்ல சதை பிசகியிருக்கும்ன்னு கரடியாக் கத்தறேன்.. என் பேச்சைக் கேட்காம பிசகின காலை அங்கே நீட்டு.. இங்கே நீட்டுன்னு ஆயிரம் டெஸ்டப் பண்ணி முடிச்சிட்டு.. கடைசியில நான் சொன்னதைத்தான் அவங்களும் சொல்றாங்க...”

“எங்க ஊருப்பக்கம்ன்னா இந்நேரத்துக்கு சுளுக்கெடுத்து விட்டிருப்பாங்க.. உங்களுக்கு வலியும் போயிருக்கும்...”

“மதுரைப் பக்கம்தானே.. அங்கேதான் கை வைத்தியத்தைக் கத்து கைக்குள்ள வைச்சிருப்பாங்களே..”

“உங்களுக்கு மதுரை கை வைத்தியத்தைப் பத்தி தெரிஞ்சிருக்கே...”

“ஏன் தெரியாம..? என் அக்காவை மதுரையில தானே கட்டிக் கொடுத்தாங்க..” என்றாள் அம்புஜம்...

“அட.. உங்க அக்கா எங்க ஊருக்காரங்களா..?”

“இல்லப்பா.. உண்மையில அக்கா வீட்டுக்காரரோட பூர்விகம் திருநெல்வேலிதான்... இப்ப அவங்கள்ளாம் சென்னைக் காரங்களா ஆகி ரொம்ப வருசமாச்சு...”

“அப்படியா..?”

கண்ணதாசனுடன் பேசிக் கொண்டிருந்த அம்புஜத்திடம்...

“நான் வேணும்னா சுளுக்கெடுத்து விடவா பாட்டி..?” என்று கேட்டாள் காவ்யா...

“எதுக்கும்மா..? நல்லாத்தானே போய்க்கிட்டு இருக்கு..? உனக்கு என்மேல ஏதாச்சும் கோபமிருந்தா முதுகில நாலு போடு போட்டிரு.. அதவிட்டுட்டு..

பிசகிக்கிடக்கிற காலைச் சுளுக்கெடுகிறேன் பேர்வழின்னு இன்னும் கொஞ்சம் பிசக வைச்சுராதே...” பயந்தவளைப் போல பாவனை செய்தாள் அம்புஜம்..

அவர்கள் கிளம்பும் போதுதான் அந்தக் கோரிக்கையை வைத்தாள் அம்புஜம்.. என்ன பதில் சொல்வதென்று யோசித்தான் கண்ணதாசன்...

## 115

*நடக்கின்ற நாள்களெல்லாம்...*
*நன்மை நடக்க ஆசைகொண்டேன்...*

“**க**ண்ணதாசா...”

“சொல்லுங்க பாட்டி..”

“படுத்த படுக்கையா போயிட்டேன்.. கால் சரியாகி எழுந்திருக்க கொஞ்ச நாளாகும்ன்னு தோணுது...”

“சீக்கிரம் சரியாகிரும் பாட்டி...”

“சரியாகனும்.. எனக்கு மட்டும் அந்த ஆசையில்லையா என்ன..? என்ன ஒன்னு.. கோவில் குளம்ன்னு சுத்திக்கிட்டு இருந்த மனுஷி.. கட்டில

விட்டு இறங்க முடியாம இருக்கறதுதான் மனசுக்கு கஷ்டமா இருக்கு..."

"நாங்க அடிக்கடி வந்து பார்த்துட்டுப் போறோம் பாட்டி..."

"அடிக்கடின்னா எப்படி..? வாரத்துக்கு ஒரு தடவையா..?"

"அப்பத்தானே ஞாயித்துக்கிழமை வருது பாட்டி..? எனக்கும் நேரம் கிடைக்குது..."

"அதுவரைக்கும் கட்டிலை விட்டு அசையாம நான் கிடக்கனுமே.. ஒன்னு செய்யறியா..?"

"என்ன பாட்டி..?"

"காரை அனுப்பி வைக்கிறேன்.. தினமும் காவ்யாவை அனுப்பி வைக்கறியா.. ஒரு ரெண்டு மணி நேரத்துக்கு அவ என்கூட இருந்து எதையாச்சும் வாசிச்சுக் காட்டிக்கிட்டு இருந்தா எனக்கும் கொஞ்சம் தெம்பா இருக்கும்ப்பா.."

அம்புஜத்தின் இறைஞ்சுதலை கண்ணதாசனால் சட்டென்று மறுக்க முடியவில்லை.. அதே சமயத்தில் அவளது கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை...

அவன் தங்கை தினமும் அம்புஜம் அனும்பும் காரில் ஏறி அவள் வீட்டுக்கு வந்து போவதா..?

கண்ணதாசனின் மௌனத்தில் அம்புஜத்தின் முகம் வாடிவிட்டது.. தமையனை மறுத்துப் பேச முடியாமல் காவ்யாவும் மௌனம் சாதித்தாள்.. சுமதிதான் ஊடே புகுந்து பேசினாள்...

“இந்தத் திருநெல்வேலியில எங்க குடும்பத்தைப் பற்றி நீங்க விசாரிச்சுப் பாருங்க தம்பி...”

இதை எதற்காக அவள் சொல்கிறாள் என்று கண்ணதாசனுக்குப் புரியவில்லை...

“விசாரிக்க என்னஙக இருக்கு..? சரவணன்சார் குடும்பம்ன்னா.. எல்லாரும் கையைக்கட்டி மரியாதையாய் பதில் சொல்றாங்களே...” புகழ்ச்சியாகச் சொன்னான் கண்ணதாசன்...

“எங்க வீட்டைநம்பி உங்க தங்கையை அனுப்பி வைக்கலாம்...” என்று சுமதி சொன்னபின்புதான் அவள் எதற்காக அவர்களின் குடும்பத்தைப் பற்றிப் பேசினாள் என்று கண்ணதாசனுக்குப் புரிந்தது...

“அதுக்கில்லங்க...”

“நீங்க எதுக்கும் கவலைப்படவேணாம்.. உங்க தங்கையை பத்திரமாப் பார்த்துக்கிறது எங்க பொறுப்பு...”

“எங்க ஊரில அம்மா பக்கத்து வீட்டுக்குக் கூட காவ்யாவ தனியா அனுப்பி வைக்க மாட்டாங்க...”

“இப்ப என்ன..? தினமும் காரில நான்வந்து காவ்யாவக் கூப்பிட்டுக்கிட்டு வர்றேன்.. அப்ப உங்களுக்கு அவளை அனுப்பி வைக்கிறதில ஆட்சேபனை இருக்காதில்ல...”

“என்னங்க இப்படிச் சொல்லிட்டீங்க.. அந்த அளவுக்கு உங்க குடும்பத்து மேல நம்பிக்கையில்லாமலா நாங்க இருக்கோம்..?”

“எனக்கும் உங்களை வற்புறுத்தறதில சங்கடமாத் தான் இருக்கு தம்பி.. ஆனா.. பாருங்க.. அத்தை முகத்தில இப்பத்தான் தெளிவு வந்திருக்கு.. நாங்களும் மாறி மாறி அவங்க பக்கத்தில இருக்கத்தான் செய்கிறோம்.. எங்களாலே அவங்க முகத்திலே இந்தத் தெளிவையும் சிரிப்பையும் கொண்டு வர முடியல.. அதுவே உங்க தங்கையைப் பார்த்ததும் அவங்க முகத்தில இத்தனை தெளிவும்.. சிரிப்பும் வந்திருக்குது.. அதனாலதான் சொல்றேன்.. அத்தையோட கால் சரியாகிற வரைக்கும் உங்க தங்கையை எங்க வீட்டுக்கு அனுப்பி வையுங்க.. அவங்க கால் சரியாகிட்டா.. அவங்க உங்க தங்கையைத் தேடி உங்க வீட்டுக்கே வந்துவிட மாட்டாங்களா..?”

அதுநாள்வரை அம்புஜம் தான் காவ்யாவைத் தேடி கண்ணதாசனின் வீட்டிற்கு வந்தாள் என்ற நினைவில்.. கண்ணதாசன் மறுப்புச் சொல்ல முடியாமல் தலையை அசைத்து சம்மதம் சொல்லி விட்டான்...

காவ்யா தினமும் அம்புஜத்தைப் பார்க்க அவளின் வீட்டுக்கு போய்வர ஆரம்பித்தாள்..

ஆரம்பத்தில் கண்ணதாசன் கவலைப்பட்டான்.. காவ்யா கிளம்பும் போதும்.. அம்புஜத்தின் வீட்டிலிருக்கும் போதும்.. போன் மேல் போனாக போட்டுக் கொண்டிருந்தான்.. மெல்ல மெல்ல அது குறைந்து.. அன்னபூரணி அடிக்கடி சொல்வதைப் போல..

'கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி.. அதுவும் தேய்ந்து காணாமல் போனது...' என்று ஆனது...

அம்புஜத்தை பார்க்கப் போகும் போது.. கதைப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு போனாள் காவ்யா...

அம்புஜம் கண்மூடி படுத்திருக்க.. அவளருகே உட்கார்ந்து கதையை வாசிப்பாள்.. இமை மூடி 'ஊம்' கொட்டி அதைக் கேட்டுக் கொண்டிருப்பாள் அம்புஜம்...

சில நேரங்களில் அவர்கள் இருவரும் ஏதேனும் ஒரு நகைச்சுவை திரைப்படத்தின் சிடியை ஓடவிட்டு.. டிவியில் சினிமா பார்த்துச் சிரித்து கொண்டிருப்பார்கள்...

அந்த நாள்களில்தான் சரவணனின் மகனான கார்த்திக் அவளுக்கு அறிமுகமானான்...

அவள் அம்புஜத்திற்கு கதையை வாசித்துக் கொண்டிருந்தபோது... "பாட்டி.." என்று சப்தமாக அழைத்தபடி அறைக்குள் வந்து விட்டான் அவன்..

அறிமுகமில்லாத இளம் வாலிபனைக் கண்டதும் காவ்யா பதட்டத்துடன் எழுந்து நின்றாள்.. அவள் கையிலிருந்த கதைப் புத்தகம் நழுவிக் கீழே விழுந்தது.. குனிந்து அதை எடுத்தவளின் அழகில் வசீகரிக்கப் பட்டவனாக சுவராஸ்யத்துடன் அவளைப் பார்த்தான் அவன்...

அவன் போட்ட சத்தத்தில் விழித்துக் கொண்ட அம்புஜம்..

“நீதானா..?” என்று.. என்னவோ.. நீதானா அந்தக்குயில் என்ற நீதியில் அவனைக் கேட்டு வைத்து விட்டு காவ்யாவைப் பார்த்தாள்..

“இவன்தான் என் பேரன் கார்த்திக்ம்மா..” என்று காவ்யாவுக்கு பேரனை அறிமுகம் செய்து வைத்தாள்..

‘இத்தனை நாளா இவனை இந்த வீட்டில பார்க்கலையே...’ காவ்யாவின் மனதில் ஓடிய சிந்தனையை அறிந்தவளாக...

“பாரின் போயிருந்தான்ம்மா.. நேத்துத்தான் திரும்பி வந்தான்.. பாரேன்.. இவன் இல்லாதப்ப வீடு எப்படி அமைதிப் பூங்காவா இருந்துச்சு.. இன்னைக்குப் பார்த்தியா.. சும்மா அதிருதில்ல...” என்று கேட்டாள் அம்புஜம்..

“இதுக்குத்தான் சினிமாப் பைத்தியமா இருக்காதீங்கன்னு சொல்கிறது..” பாட்டியுடன் செல்லச் சண்டை போட்டபடி காவ்யாவை மீண்டும் பார்த்தான் கார்த்திக்...

அவன் விழிகளில் தெரிந்த ஆர்வத்தில் சங்கடமுற்றாள் காவ்யா.. அவளை ஊடுறுவதைப் போல அவன் பார்த்த பார்வையின் வேகத்தை தாங்க முடியாதவளாக பார்வையை விலக்கிக் கொண்டு வேறு திசையில் பார்த்தாள்...

“நான் யாருன்னு மட்டும் இவங்ககிட்ட சொல்லிட்டாங்க.. இவங்க யாருன்னு என்கிட்டச் சொல்ல வேண்டாமா..?” துளைக்கும் பார்வையோடு கேட்டான் கார்த்திக்...

“இவ யாரா..? இவதான் உனக்கு போட்டிக்காரி...” என்ற அம்புஜத்தின் அறிமுகத்தில் காவ்யாவின் சங்கடம் அதிகமானது...

முன்பின் அறிமுகமில்லாத நபர்களிடம் வாயடிக்கும் பழைய காவ்யாதான் தொலைந்து போய் விட்டாளே.. இந்தக் காவ்யா மௌனமெனும் கவசத்தின் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கும் பேதையாயிற்றே...

“ஓ.. இவங்கதானா அவங்க..?”

அவளை எற இறங்கப் பார்த்த கார்த்திக்கின் குரலில் விசமம் சொட்டியது..

“ஆக.. உங்களின் சொத்துக்களை இவங்களுக்குத் தான் நீங்க எழுதி வைக்கப் போறிங்க..?”

“ஆமாண்டா.. ஆமாம்...”

“ஸோ.. இவங்கதான் உங்க வாரிசு..?”

“அப்படித்தான்.. என்ன செய்வ..?”

“எதுவும் செய்ய மாட்டேன்.. உங்களுக்கு இவங்க வாரிசுன்னா எனக்கு அத்தை முறையா பாட்டி..?”

‘அத்தையா..? நானா..? இவனுக்கா..?’

காவ்யா சட்டென்று அவன் முகம் பார்க்க.. அதற்காகவே காத்திருந்ததைப் போல அவன் பார்வை அவள் பார்வையைக் கவ்விக் கொள்ள முனைந்தது.. அகப்பட்டுக் கொள்ளாமல் காவ்யாவின் பார்வை விலகிக் கொண்டது...

“ஏண்டா உன் வயசென்ன.. இவ வயசென்ன..? இவளை உனக்கு அத்தையாக்கறியே.. இது உனக்கே நியாயமாய் இருக்காடா...?” அம்புஜம் முறைத்தாள்...

“ஹலோ.. ஓல்டு லேடி.. நீங்கதான் இவங்களை உங்க வாரிசுன்னு டிக்ளேர் பண்ணினீங்க...”

“பண்ணினா...?”

"உங்க வாரிசு உங்களுக்கு மகளாத்தானே இருக்கனும்...?"

"அடப்பாவி.. நீ அப்படி வர்றியா..?"

"ஆமாம்.. இப்ப என்னாங்கறிங்க..?"

"நீ அடாவடிக்காரண்டா.."

"எவ்வளவு அழகான சின்ன அத்தை..."

கார்த்திக் ரசித்துச் சொல்ல காவ்யா முகம் சிவந்து போனவளாக தரையைப் பார்த்தாள்.. பேரனின் தலையில் செல்லமாக கொட்டு வைத்தாள் அம்புஜம்...

"துடுக்குத்தனத்தை விடாம இருக்கான் பாரு.. இவன் ஒரு கம்பெனிக்கு எம்.டியாம்.."

"உங்களுக்கு அதுவும் பொறுக்கலியா..? அதையும் இந்த சின்ன அத்தைக்கு எழுதிக் கொடுத்திரவா..?"

"இவளுக்கு சின்னத்தைன்னே பெயர் வைச்சிட்டயாலே..? இவ பெயர் காவ்யாலே.."

"காவ்யா..."

ரசித்துச் சொன்னான் கார்த்திக்.. அப்போது அவன் முகத்தில் தெரிந்த ஜ்வலிப்பில் வீட்டிற்கு கிளம்பி விடலாமா என்று யோசித்தாள் காவ்யா...

"காவ்யான்னா.. காவியம்ன்னு அர்த்தம் வருது... ஏன் பாட்டி.. இவங்களைப் பார்த்தா ரவிவர்மா வரைஞ்ச

ஓவியம் போலல்ல இருக்குது.. ஆக்சுவலா இவங்களுக்கு ஓவியான்னுதான் பெயர் வைச்சிருக்கனும்...”

“ஆரம்பிச்சுட்டியாலே.. வேணும்ன்னா மதுரைக்குப் போய் இவளோட அப்பாம்மாகிட்ட பெயர் விளக்கம் சொல்லிட்டு வர்றியா..?” மிரட்டினாள் அம்புஜம்..

அப்படி அவன் மதுரைக்குப் போனாள் என்ன ஆகும் என்று யோசித்துப் பார்த்தாள் காவ்யா...

“யாரு வைச்ச பேரை யாரு குத்தம் சொல்றது..? அரும.. பெருமையா.. பெத்து வளத்த என் புள்ளைக்கு நான் இஷ்டப்பட்ட பேரை வைப்பேன்.. எடுத்துச் சொல்ல நீ யாரு...? வந்தோமா... காபித்தண்ணிய குடிச்சோமான்னு போயிக்கிட்டே இருக்கனும்... அத விட்டுட்டு எங்கிட்ட வந்து என் புள்ளைக்கு நான் வைச்ச பேரை நொட்டை சொல்லிக்கிட்டிருக்கக் கூடாது.. உனக்குப் பேரை வைக்கிறப்ப.. உங்க அப்பனும் ஆத்தாளும் எங்கிட்ட கேட்டுக்கிட்டா பேரை வைச்சாங்க..” என்று ஆரம்பித்து அன்னபூரணி பின்னிப் பெடலெடுத்து விடுவாள் என்ற நினைவில் அவள் இதழ்களில் புன்னகை மலர்ந்தது....

# 116

*நீ சொன்ன வார்த்தையெல்லாம்..
நினைவில் நிற்க ஆசைகொண்டேன்...*

**அ**ன்றுதான் மலர்ந்த பூவைப் போல இதழ் விரித்துச் சிரித்த காவ்யாவின் சிரிப்பை ரசித்தான் கார்த்திக்.. அவளுடைய இயற்கையான வனப்பின் வசீகரம் அவனை காந்தம் போல ஈர்த்தது...

‘இந்தப் பாட்டிக்கு இப்படியொரு கேர்ள் பிரண்டா..?’

இந்தக் கேள்வியை காவ்யா போனபின்னால் அவன் அம்புஜத்திடம் கேட்டபோது அவள் செல்லமாக அவனை அடித்தாள்...

“கேர்ள் பிரண்டெல்லாம் உனக்குத்தான் இருக்கனும்.. வயசான பாட்டிகூட அதை இணைகூட்டறியா..? படவா ராஸ்கல்..!”

“நான் என்னத்தை தப்பா சொல்லிட்டேன்னு இந்த போடு போடறிங்க யு ஆர் ஓல்டு லேடி.. ஓல்டு லேடிக்கு ஓல்டு லேடிதான் பிரண்டா இருக்கனும்.. சின்னப்

பொண்ணு பிரண்டா இருந்தா அதை கேர்ள் பிரண்டுன்னு தான சொல்லனும்...?”

“வயசான கிழவி.. கிழவி கூடத்தான் பேசனும்னு சொல்ற...”

“அப்படிச் சொல்வேனா பாட்டி.. ஓல்டு லேடின்னு சொன்னேன்..”

“அதுக்குப் பெயர் கிழவிதானேலே..”

“இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க..?”

“இந்தக் கிழவிக்கு குமரிப்பொண்ணு சிநேகிதியா இருக்கிறதில உனக்கென்ன கஷ்டம்..? அதைச் சொல்லுலே..”

‘கஷ்டமா.. ரொம்ப.. ரொம்ப இஷ்டம் பாட்டி..’

மனதுக்குள் நினைத்ததை வெளியில் சொல்லாமல் கைகளை உயர்த்திச் சிரித்தான் கார்த்திக்..

மறுநாளில் இருந்து அவன் கம்பெனிக்குச் செல்லும் நேரம் மாறியது...

ஒன்று காவ்யா வந்து சென்ற பின்னால் கம்பெனிக்குப் போவான்.. இல்லையென்றால் சீக்கிரமாகவே கம்பெனிக்கு போய்விட்டு காவ்யா வீட்டுக்குள் நுழையும் நேரத்திற்கு மிகச் சரியாக அவனும் வீடு திரும்பி விடுவான்..

அம்புஜத்துடனான தனிமைப் பேச்சுக்கள் அவனால் தடைபடுவதை உணர்ந்தாள் காவ்யா.. பூவுக்கும்.. பெண்ணுக்கும் வசீகரிக்கும் வாசமும் உண்டு.. வண்டின் வருமை அறியும் சூட்சுமமும் உண்டு..

காவ்யா.. கார்த்திக்கின் மனதை அறிய ஆரம்பித்தாள்..

அவளைக் கண்டவுடன் அவனது கண்கள் மின்னின.. அம்புஜத்தின் அறையில் அவளிருக்கும் நேரங்களில் வருகின்றவனின் விழிகள் அவளைச் சுற்றியே வட்டமிட்டன.. அவள் இருப்பாள் என்ற நினைவில் அறைக்குள் வருபவனின் கண்கள் அவளைத் தேடி துழாவின.. அவள் இருக்குமிடத்தை அறிந்து கொள்ளும்போது ஓர்விதமான நிம்மதியும்.. ஆசையும் அவன் கண்களில் தெரிந்தன.. அவள் கண்களைச் சந்திக்கும் பொழுதுகளில் அவன் பார்வை அவளை ஊடுறிவியது..

காவ்யா கவலை கொள்ள ஆரம்பித்தாள்..

எங்கிருந்தோ வரும் ஆசைகளின் அலைகளில் சிறு துரும்பென அவள் அலைக்கழிந்தது போதாதா...?

ஓர் முறை அவள் மனதில் மலர்ந்த பூ.. திரும்பவும் பூக்குமா...?

எங்கிருந்தோ வரும் ஆசையின் சுழல் தானாக சுழன்று தானே அவள் மனதில் மையம் கொண்டது..? அவள் அந்தச் சுழலை வாவென்று அழைக்கவில்லையே...

காவ்யா கார்த்திக்கை தவிர்க்க ஆரம்பித்தாள்...

அவன் இருக்கும் பொழுதுகளில் அவன் அம்புஜத்தின் அறைக்குள் வந்தால்.. அவளுக்கு தாகம் ஏற்பட்டு விடும்.. தண்ணீர் குடிக்க ஹாலுக்குப் போனால்.. கார்த்திக் அந்த அறையை விட்டு வெளியேறிய பின்னால்தான் திரும்பி வருவாள்..

அவளிடம் அவன் பேச முயன்றால் பதில் பேச மாட்டாள்.. காது கேளாதது போல அகன்று விடுவாள்...

அவளின் அந்தச் செய்கைளில் அவனது புருவங்களின் மத்தியில் முடிச்சு விழுவதை அறிந்தாலும் நின்று அவனுடன் பேசமாட்டாள்...

அவளின் அந்த ஒதுக்கத்தை கார்த்திக்கும் புரிந்து கொள்ளதான் செய்தான்.. அதை இயல்பான மத்திய தர வர்க்கத்தினரின் பயம் என்று அவன் நினைத்துக் கொண்டான்.. அவனது வசதிகளில் அவள் பயப்படுகிறாள் என்று அவன் நினைத்தான்.. அவனது உயரத்தைக் கண்டு விலகுகிறாள்.. அவனது பணத்தைக் கண்டு மிரளுகிறாள் என்பது அவன் கணிப்பு..

கார்த்திக் அவளை வட்டமிட ஆரம்பித்தான்.. காவ்யா என்ன செய்வதென்று என்று புரியாமல் தவித்தாள்.. கண்ணதாசனிடம் அவளால் இதைச் சொல்ல முடியாது.. சொன்னால் அம்புஜத்துடனான காவ்யாவின் நட்பு அறுபட்டு விடும்..

கார்த்க்கின் ஆசை வீச்சிற்கு அம்புஜம் எப்படி காரணமாவாள்..? அவளது அன்பும் பாசமும் உன்னதமான தல்லவா..?

காவ்யா மௌனமாக தன்னைச் சுற்றி ஒரு வேலியைப் போட்டுக் கொண்டு அம்புஜத்தின் வீட்டுக்கு வந்து போக ஆரம்பித்தாள்...

அப்படி வந்து போகும் நாள்களில் கிருஷ்ண ஜெயந்தியும் வந்தது.. கட்டிலில் அமர்ந்திருந்த அம்புஜம்..

“ஒரு பாட்டு பாடும்மா..” என்று காவ்யாவிடம் கேட்டாள்...

பக்கத்தில் சட்டமாக அமர்ந்து கொண்டிருந்த கார்த்திக்கை சங்கடத்துடன் பார்த்தாள் காவ்யா...

‘இவனை வைச்சுக்கிட்டு என்ன பாட்டைப் பாடறது..?’

கார்த்திக் அசைகிற வழியாய் தெரியவில்லை.. அங்கிருந்து அகல காரணத்தைத் தேடினாள் காவ்யா...

“தண்ணி தாகமா இருக்கு பாட்டி.. நான் போயி தண்ணி குடிச்சுட்டு வர்றேன்...”

நகர முயன்றவளை தடுத்து நிறுத்தியது கார்த்திக்கின் குரல்...

“இந்தாங்க...” என்று நீட்டிய அவன் கையில் ஒன்றுக்கு இரண்டாக தண்ணீர் பாட்டில்கள் இருந்தன...

“என்னது..?” காவ்யா திகைத்தாள்..

“இது ஆர்டினரி மினரல் வாட்டர்.. இது ஐஸ் வாட்டர்..?”

அவன் சொன்னதில் அம்புஜத்திற்கு ஆச்சரியமாகி விட்டது...

“எதுக்குடா ரெண்டு பாட்டில்...?”

“அதுவா பாட்டி.. இவங்க கையில் வெறும் தண்ணியைக் குடுத்தா ஐஸ் வாட்டர் வேணும்னு சொல்லிருவாங்க.. ஐஸ் வாட்டரைக் குடுத்தா வெறும் தண்ணிதான் வேணும்னு சொல்லுவாங்க.. எதுக்கு வம்புன்னு நான் இரண்டையும் கையில பிடிச்சுக்கிட்டு வந்திட்டேன்...”

‘உன் டெக்னிக்கைப் பத்தி எனக்குத் தெரியாதா..?’

கார்த்திக்கின் விழிகள் காவ்யாவிடம் வினவின...

‘இவன் கண்டுக்கிட்டான்..’ காவ்யா உதட்டைக் கடித்தாள்...

அவர்கள் இருவரின் நடுவிலும் நிலவிய சங்கேதங்களை அறியாதவளாக அம்புஜம் சிரித்தாள்...

"கெட்டிக்காரண்டா நீ.. இன்னைக்கு காவ்யாவோட பாட்டைக் கேட்டு விடனும்கிறதில குறியாய் இருக்கியே.. நீ தப்பிக்க முடியாது போல காவ்யா.. பேசாம பாட்டைப் பாடிரு..."

'தப்பிக்க முடியாதா..?'

காவ்யா மனம் தவித்தாள்.. வேறு வழி தெரியாதவளாக கார்த்திக்கின் முன்னால் உட்கார்ந்தாள்.. ஆழ்ந்து பாட்டுப் பாடும் சாக்கில் அவள் இமைகள் மூடிக் கொண்டன.. மூடிய இமைகளுக்குள்.. கங்கைக்கரை தெரிந்தது.. இருபுறமும் கரையைத் தொட்டு ஓடிய கங்கை தெரிந்தாள்.. அவள் தெறிந்து விட்ட நீரில் நனைந்து விளையாடிய கோபியர்கள் தெரிந்தார்கள்.. அந்தக் கோபியரில் ஒருத்தியாக அவளும் தெரிந்தாள்...

தன்னையறியாமல் அவள் பாட ஆரம்பித்தாள்..

*"கங்கை கரைத் தோட்டம்...*
*கன்னிப் பெண்கள் கூட்டம்*
*கண்ணன் நடுவினிலே..*
*காலையிளங் காற்று..*
*பாடிவரும் பாட்டு...*
*எதிலும் அவன் குரலே..."*

அம்புஜம் பேச மறந்தாள்.. அவள் காலத்தைச் சேர்ந்த தேன்சுவை பாடலில் தன்வயமிழந்தாள்.. என்றும் இனித்திடும் அந்த தேன்குரலில் தவழ்ந்து வந்த பாடலை காதாரக் கேட்டு மகிழ்ந்தாள்...

காவ்யாவின் காதுகளிலோ கண்ணனின் குழலோசை கேட்டது...

*“கண்ணன் முகத் தோற்றம் கண்டேன்..*
*கண்டவுடன் மாற்றம் கொண்டேன்..*
*கண்மயங்கி ஏங்கி நின்றேன்..*
*கன்னி சிலையாகி நின்றேன்..*
*என்ன நினைத்தேனோ...*
*தன்னை மறந்தேனோ..*
*கண்ணீர் பெருகியதே...”*

காவ்யாவின் விழிகளில் கண்ணீர் பெருகி அவள் கன்னங்களில் இறங்கி வழிந்தோடியது.. அவள் மனக் கண்ணில் கண்ணன் தெரிந்தான்.. அவளருகில் வந்தான்.. அவனது முகம் அர்ஜீனின் முகமாக இருக்க.. காவ்யாவின் உடல் அதிர்ந்தது.. அவன் முகவடிவில் அவள் மயங்கி நின்றாள்...

*“கண்ணன் என்னைக் கண்டுகொண்டான்..*
*கையிரண்டில் அள்ளிக்கொண்டான்..*
*பொன்னழகு மேனியென்றான்..*
*பூச்சரங்கள் சூடத் தந்தான்..”*

காவ்யாவின் இதழ்களில் அவள் மனதில் ஆசையை விதைத்தவனின் நினைவுகள் பொங்கியெழுந்தன.. அவன் தொட்ட தருணங்களையும்.. அவளை அள்ளிக் கொண்ட தருணங்களையும் எண்ணிப் பார்த்தாள்...

பூச்சரங்களை அவள் தலையில் சூடியவன் போனதெங்கே..? நினைத்துப் பார்த்தவளின் நெஞ்சம் விம்மியது.. அவள் கண்களில் நிற்காமல் கண்ணீர் பெருகியது...

***"கண் திறந்து பார்த்தேன்..***
***கண்ணன் அங்கு இல்லை..***
***கண்ணீர் பெருகியதே..."***

அவள் குரலில் இழையோடிய சோகத்தில் அந்த அறைக்குள் நுழைந்த சுமதியும் கட்டுண்டாள்.. மகனிடம் கம்பெனிவிவகாரமொன்றை பேசுவதற்காக வந்த சரவணனும் கட்டுண்டார்...

***"கண்ணன் முகம் கண்ட கண்கள்..***
***மன்னன் முகம் காண்பதில்லை..***
***கண்ணனுக்கு தந்த உள்ளம்...***
***இன்னொருவர் கொள்வதில்லை..."***

காவ்யா கண்திறவாமல் உணர்ச்சிப் பெருக்குடன் பாடிக் கொண்டிருக்க அறை வாசலில் நிழலாடியது.. திரும்பிப் பார்த்தவர்கள் முகத்தில் வியப்புக் குறியுடன் வரவேற்க வாய் திறக்க முனைந்தபோது.. வந்து நின்றவன்..

“உஸ்ஸ்...” என்று ஒற்றை விரலை வாயின் மீது வைத்து அவர்களை அமைதிப் படுத்தினான்..

*“கண்ணன் வரும் நாளில்..*
*கன்னி இருப்பேனோ..*
*காற்றில் மறைவேனோ...”*

காவ்யாவின் குரலில் இழைந்தோடிய சோகத்தில் கண்ணனைத் தேடும் ராதையைக் கண்டாள் அம்புஜம்...

*“நாளை வரும் கண்ணன்...*
*கோல மணி மார்பில்..*
*நானே தவழ்ந்திருப்பேன்..”*

பாடியபடி கண்திறந்த காவ்யாவின் விழிகளில் ஒரு கோடி சூரியன்கள் ஒன்றாகச் சேர்ந்து பிரகாசித்தனர்...

‘இவனா..? இவன் இங்கே எப்படி வந்தான்..?’

அவள் விழி கேட்ட கேள்வியைக் கவனித்தபடி அழுத்த நடையுடன் அறைக்குள் வந்து நின்றான் அர்ஜீன்...

# 117

**கண்ணன் வரும் நாளையெண்ணி..**
**கன்னி ஏங்கி ஆசைகொண்டேன்...**

'இவன் எப்படி இங்கே வந்திருக்க முடியும்...?'

காவ்யாவினால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.. இமை கொட்டி விழித்துப் பார்த்தாள்.. எதிரில் நின்றவனின் தோற்றம் கலையவில்லை.. அவள் விழிகள் அகலமாக விரிந்தன...

'இது பிரமையில்லை.. இவன் நிஜமாகத்தான் வந்திருக்கிறான்...'

அவள் சட்டென்று எழுந்து நின்றாள்.. அவனை அங்கே.. அந்த நேரத்தில் எதிர்பாராததில் அவள் கைவிரல்கள் நடுங்க ஆரம்பித்தன.. விரல்களை மூடித்திறந்து தன்னைக் கட்டுக்குள் கொண்டு வர அவள் போராடிக் கொண்டிருந்தாள்...

அர்ஜீனைத் தவிர அவளின் அந்தப் போராட்டத்தை மற்றவர்கள் உணரவில்லை.. அவனும் அவளை உறுத்துப் பார்த்தானேயொழிய வேறு எதையும் பேசவில்லை...

“அர்ஜீன் வாலே.. வா..”

அம்புஜம் உட்கார்ந்தபடியே இரு கைகளை நீட்டி அவனை அழைத்தாள்.. சட்டென்று காவ்யாவின் மீதிருந்த பார்வையை விலக்கிய அர்ஜீன் அம்புஜத்தின் அருகே சென்று உரிமையுடன் பக்கத்தில் அமர்ந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்...

“கவனமா இருக்க வேண்டாமா பாட்டி..? இப்படியா காலை பிசக வைத்துக்கிறது..?”

“இன்ஸிசெண்டுன்னா நாம சமாளிக்கலாம்.. ஆக்ஸிடெண்டை எப்படிலே சமாளிக்கிறது..? சொல்லாம நடக்கிறதுக்கு பெயர்தானே ஆக்ஸிடெண்டு...”

“உங்களைப் பேச்சில ஜெயிக்க முடியாது பாட்டி..”

கைகளை உயர்த்தியவன் சரவணனின் பக்கமாக திரும்பி...

“டாக்டர் என்ன சொல்கிறார் சித்தப்பா..?” என்று விசாரித்தான்...

“பெட்ரெஸ்டில இருக்கனும்கிறார்.. சதை பிரண்டிருக்கு...”

“ம்ஹீம்.. ஒரு இடத்தில அடங்கியிருக்காத பாட்டிக்கு இப்படியொரு சோதனையா..? உங்களை அடக்கி உட்கார வைக்க.. இப்படித்தான் ஆகனுமா..? உங்க பாதம் படாம

திருநெல்வேலிச் சீமை மண்ணு ஏங்கிப் போயிராதா பாட்டி..” அர்ஜீன் போலியாக வருத்தப்பட்டதில்..

“போக்கிரி..” என்று அவன் தலையை கலைத்து விட்டுச் சிரித்தாள் சுமதி..

“கஷ்டப்பட்டு வாரின தலை சித்தி...” அர்ஜீன் முடியைக் கோதி விட்டான்...

“வீனா மெனக்கெடாதே.. உன்னைப் போலவே உன முடியும் அடங்காத முரட்டு முடி.. நீ என்னத்தைக் கோதினாலும் வழிக்கு வராது..” என்றாள் அம்புஜம்...

“அப்படியாடா கார்த்தி..?” கார்த்திக்கின் பக்கமாக திரும்பிக் கேட்டான் அர்ஜீன்...

“நீ வேறண்ணா.. இது வம்பு பிடிச்ச பாட்டி.. இந்த ளொள்ளு பாட்டிய கொள்ளுப் பாட்டியாக்கினாத்தான் வழிக்கு வரும்ன்னு நான் முடிவே பண்ணிட்டேன்..” காவ்யாவை ஒரு மார்க்கமாக பார்த்தபடி சொன்னான் கார்த்திக்...

அப்போதுதான் காவ்யா எழுந்து நின்று விட்டதைக் கவனித்த அம்புஜம்...

“பயப்படாதேம்மா.. இவன் வேற யாருமில்லை.. என் அக்கா பேரன்தான்.. அர்ஜீன்னு பெயர்..” என்று காவ்யாவுக்கு அவனை அறிமுகப் படுத்திவைத்தாள்...

‘யாருக்கு யாரை அறிமுகப் படுத்தி வைப்பது...’ காவ்யாவின் மனம் வலித்துக் கொண்டிருந்த போதே..

“வணக்கம்..” என்று கைகுவித்து வைத்தான் அர்ஜீன்...

‘நேரம்..!’ காவ்யா வெறுத்துப் போய்விட்டாள்..

“இவங்க யாரு பாட்டி..”

குவித்த கை மாறாமல் அறிமுகமற்ற பார்வையுடன் கேட்டவனை இழுத்து வைத்து முதுகில் நான்கு சாத்து சாத்தினால்தான் என்ன என்ற வேகம் காவ்யாவின் மனதில் தோன்றியது...

‘உனக்கு என்னைத் தெரியாதாடா..?’ அவனை முறைத்தாள்...

அவன் அந்த முறைப்பிற்கெல்லாம் அயர்கிற வனாகவோ.. அஞ்சுகிறவனாகவோ இல்லை...

சலனமில்லாத முகத்துடன் அம்புஜத்தின் அறிமுகத்திற்காக காத்திருந்தான்..

“இதுதான் காவ்யாடா..” பெருமையுடன் சொன்னாள் அம்புஜம்...

அவள்பார்வை மயிலிறகைப் போல காவ்யாவின் மீது படிந்து வருடிக் கொடுத்ததை தீர்க்கமாக கவனித்தான் அர்ஜீன்...

“ஓ.. இவங்க எந்த நாட்டுக்கு அதிபதிபாட்டி..?” இடக்காக கேட்டான்..

காவ்யாவின் வெட்டும் பார்வையினை அலட்சியமாக சந்தித்தவனின் உதடுகள் அதைவிட அலட்சியமாக சுழித்து மடிந்து வளைந்தன...

‘திமிரைப் பாரு..’ கொதித்துப் போனாள் காவ்யா...

‘ஐயா ரேன்ஜீக்குத்தான் சென்னைக்கே அதிபதி போல அந்த நேகா வந்து நின்னாளே.. அப்புறம் என்னவாம்.. மத்தவங்களை அதிபதியான்னு குத்திக்காட்டிப் பேசற வேலை வேண்டிக்கிடக்கு..?’

அவளின் முகத்தில் பிரதிபலித்த உணர்வுகளை.. பாறைபோல இறுகிய முகத்துடன்.. கண்கள் இடுங்க அவன் அவதானித்துக் கொண்டிருந்தான்...

“என்னாலே விளையாடறியா..?” அம்புஜம் செல்லமாக அவனை அதட்டினாள்...

“விளையாட்டா..? நானா..? சேச்சே..! மொட்டையா காவ்யான்னு சொன்னா.. பின்னே எப்படிக் கேட்பாங்க..? இன்னார்ன்னு சொல்ல வேண்டாமா..?” அர்ஜீன் நிதானமாக கேட்டான்..

‘நான் இன்னார்ன்னு உனக்குத் தெரியாதா..?’ காவ்யா பல்லைக் கடித்தாள்...

“எங்கே..? அதைச் சொல்கிறதுக்குள்ளதான் நீ இவ எந்த நாட்டுக்கு அதிபதின்னு கேட்டுட்டியே...”

“‘இவ’ன்னு சொல்லலை.. இவங்கன்னு சொன்னேன்..”

“இவங்கன்னு நீ சொல்லலாம்.. நான் சொல்ல முடியுமா..? இவ என் பேத்திடா...”

“அப்ப உங்க சொத்தையெல்லாம் இவங்களுக்குத் தான் எழுதி வைக்கப் போறீங்கன்னு சொல்லுங்க...”

“போக்கிரி.. கார்த்திக்கும் இப்படித்தான் வம்புக்கு இழுக்கிறான்லே...”

“அப்படியாடா கார்த்திக்...?”

“ஆமாண்ணா.. பாட்டிக்கு அலைபாய்கிற மனசு.. இந்த அலை இப்ப காவ்யாமேல அடிச்சுக்கிட்டு இருக்குது.. யாரு கண்டது.. இவங்க எந்த நாட்டுக்கும் அதிபதியாகிறாங்களோ இல்லையோ.. பாட்டியோட சொத்துக்கு அதிபதியாகிரலாம்...”

“ஈஸிட்..?”

அர்ஜீன் புருவங்களை உயர்த்தியபடி காவ்யாவைப் பார்க்க.. அவளுக்கு அந்த இடத்தை விட்டு ஓடி விட வேண்டும் போல இருந்தது...

“இரண்டு பேரும் கூட்டுச் சேர்ந்துக்கிட்டு என் பேத்தியைக் கலாட்டா பண்ணாதீங்கடா..” அம்புஜம் அதட்டினாள்...

“கலாட்டாவா..? இவங்களையா..? பாவம்.. இவங்களைப் பார்த்தா மகாசாது போல இருக்காங்க.. பேசவே மாட்டாங்க போல இருக்கு.. இப்படியொரு பேசாமடந்தையைப் போய் யாராவது கலாட்டா பண்ணுவாங்களா பாட்டி..?” அர்ஜீன் நியாயம் கேட்டான்...

“நீ சொன்னாலும் சொல்லலைன்னாலும் இவள் பேசாமடந்தைதான்.. பேசவே மாட்டா.. சிரிக்கக் கூலி கேட்பா.. அமைதின்னா அமைதி.. அப்படியொரு அமைதிலே...” அம்புஜம் சிலாகித்தாள்..

“அப்படியா பாட்டி..?” அர்ஜீன் ஆச்சரியப்பட்டுப் போனான்...

அவன் கண்களில் தெரிந்த கேலியில் காவ்யாவின் கடந்தகால அதிரடி வரலாற்றைப் பற்றிய செய்தி இருந்தது...

“ஆமாண்லே அர்ஜீன்.. இவங்க மதுரைக்காரங்க..”

“இவங்கன்னு சொல்ல மாட்டிங்கன்னு சொன்னீங்க..”

“குறுக்கே.. குறுக்கே பேசாதேலே...”

“என்னாச்சு பாட்டி.. ஃப்ளோ கெட்டுப் போகுதா..?”

“அடிச்சேன்னா பாரு.. அரட்டை..! இவங்கன்னா.. இவளும் இவ அண்ணனும்னு அர்த்தம்லே...”

“ஓ... எனக்கென்ன தெரியும் பாட்டி...?”

“தெரியலைன்னா வாயை மூடிக்கனும்...”

“என் வாயை மூட வைக்கிறதிலயே குறியாய் இருங்க...”

“படவா.. இவ அண்ணன் ஸ்டேட் கவர்ண்மென்டில பெரிய போஸ்டில இருக்கான்...”

“அப்படியா..?”

அர்ஜீன் அறியாத பாவனையில் கதை கேட்க.. பக்கத்திலிருந்த பீங்கான் சிலையை எடுத்து அவன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டாலென்ன என்ற ஆசை காவ்யாவுக்குள் தோன்றியது...

“திருநெல்வேலிக்கு டிரான்ஸ்பர் ஆகிருச்சாம்.. இவங்கப்பாவுக்கு மதுரையில வேலையாம்.. அவரை விட்டுட்டு இவங்க அம்மாவாலே கூட வரமுடியலையாம்.. அதனால அண்ணனும்.. தங்கையுமா இங்கே வந்து இறங்கியிருக்காங்க..”

“ஓ...”

அர்ஜீன் விழிகளில் காவ்யாவின் திருநெல்வேலிப் பிரவேசத்தைப் பற்றிய தெரிந்து கொள்ளல் தெரிந்தது...

“ஆறுமாசமா இங்கேதான் இருக்காங்க...”

“இங்கேன்னா.. இந்த வீட்டிலயா..?”

அர்ஜீன் குத்தலாக கேட்டான்.. காவ்யா பல்லைக் கடித்தாள்...

அவள் எதற்காக இன்னொருவரின் வீட்டில் இருக்க வேண்டும்..? அவளுடைய அண்ணன் அப்படியொன்றும் எளிதானவன் இல்லையே.. அவன் நினைத்தால் அந்த ஊரிலும் ஒரு சொந்த வீட்டை வாங்கி அதில் காவ்யாவை குடிவைப்பான்..

“இங்கேன்னா.. இந்த வீடுன்னு அர்த்தமாகுமா..? எப்போலயிருந்து இப்படி டியுப் லைட்டா மாறின அர்ஜீன்...?”

“அதையேன் கேட்கறிங்க பாட்டி.. நானுண்டு... என் பிஸினெஸ் உண்டுன்னுதான் நான் இருந்தேன்... எப்ப மதுரையில சின்னதா ஒரு கடையை வாங்க வேண்டி வந்ததோ.. அப்போதிருந்துதான்.. இப்படி ஆகிப் போனேன்...”

காவ்யாவைப் பார்த்தபடியே அர்ஜீன் சொல்ல...

‘எப்படி ஆகிப் போனாய்..?’ என்று மனம் கொதித்தாள் காவ்யா...

‘உனக்கென்ன.. ஊர் ஊராய் சுற்றிக்கிட்டு நிம்மதியாகத்தான் இருக்கிறாய்.. என்னைச் சொல்லு..

நிம்மதியை தொலைத்துட்டு ஊர் விட்டு ஊர் ஓடி வந்திருக்கிறேன்.. நீ இங்கேயும் வந்து நிற்கிறாய்ன்னா என் விதியை என்னன்னு சொல்ல..?'

"இதைப் பாருடா கார்த்திக்.. எப்படியிருந்த நம்ம அர்ஜீன் இப்படியாகிப் போயிட்டானே..."

அம்புஜத்தின் கிண்டலில் எல்லோரும் சிரித்தார்கள்.. அர்ஜீன் ஒப்புக்கு சிரித்தபடி காவ்யாவை முறைத்துக் கொண்டேயிருந்தான்...

"இவங்க அண்ணன் ஹை போஸ்டில இருக்கிறவன்.. குவார்டர்ஸ் கொடுத்திருக்காங்க.. அதில்தான் இருக்கிறாங்க..."

"அப்படியா..?"

"அப்படித்தான்..."

அம்புஜம் அர்ஜீனின் தோளில் செல்லமாகத் தட்டினாள்.. சரவணன் தொழில் சம்பந்தமாக அர்ஜீனிடம் விசாரிக்க ஆரம்பித்தார்.. சுமதி குடும்ப விவரங்களை விசாரிக்க ஆரம்பித்தாள்.. காவ்யாவுக்கு ஆறாவது விரல் போல அவள் அங்கிருப்பதைப் போல தோன்றியது.. எழுந்து கொண்டாள்...

"அப்ப.. நான் கிளம்பறேன் பாட்டி..."

"இரும்மா.. சுமதி.. டிரைவர் இருக்கானில்ல..."

"எதுக்கு பாட்டி.. நான் இவங்களை டிராப் பண்ணிட்டு வர்றேனே..."

கார்த்திக் உற்சாகமாக கிளம்பியதில் காவ்யாவுக்கு சுத்தமாக உடன்பாடில்லை...

‘இது என்ன புதுப்பழக்கம்..?’ என்று முகம் மாறினாள்...

“டிரைவர் வாசல்ல இருக்கிறாப்புல அத்தை...” சுமதி சொன்னாள்...

கார்த்திக்கின் முகத்தில் கவிழ்ந்த ஏமாற்றத்தை கண்டு கொள்ளாமல் தலையசைத்து அம்புஜத்திடம் விடைபெற்று விட்டு காவ்யா அவசரமாக அந்த அறையை விட்டு வெளியேறினாள்.. முன்னால் போன சுமதி டிரைவரை கூப்பிட போய்விட.. அவள் மட்டும் வாசலருகே நின்று கொண்டிருந்தபோது...

“அடுத்த இன்னிங்ஸ் ஆரம்பமா..?” என்ற குரல் காதில் விழுந்தது...

‘அடுத்த இன்னிங்ஸா..?’ வெகுண்டு போய் திரும்பிப் பார்த்தாள்...

அங்கே இகழ்ச்சியான பார்வையுடன் அர்ஜீன் நின்றிருந்தான்..

“உன்னை டிராப் பண்ண அவன் குதிச்சுக்கிட்டு கிளம்புறானே.. தினமும் அவன்தான் உன்னைக் காரில் கூப்பிட்டுக்கிட்டு திருநெல்வேலியை சுத்தி வர்றானா..?”

அர்ஜீன் பேசப்பேச.. காவ்யா உக்கிரமானாள்...

# 118

*மேகத்திலே நான் ஏறி - அந்த*
*விண்ணைத் தொட ஆசைகொண்டேன்...*

**எ**ன்ன தைரியமிருந்தால் அவள் முன் வந்து நெஞ்சை நிமிர்த்தி நிற்பதோடு மட்டுமில்லாமல் இப்படியொரு கேள்வியை கேட்டுவைப்பான்..?

அவனைக் கண்டதும் கிளம்பிய மெலிதான மயக்கம் கலந்த ஆசைதரும் காதல் உணர்வுகள் சொல்லாமல்.. கொள்ளாமல் அவளை விட்டு ஓடிவிட்டன..

“உளராதீங்க...” அவள் சீறினாள்...

“உளரலா..? அதுசரி.. நான் பேசினா அது உளரலாத்தான் உனக்கு இருக்கும்... இதுவே அவன் பேசினா தேனைப் போல இனிக்கும்...”

“வாயை மூடுங்க.. தேவையில்லாம பேசினா எனக்கு கெட்ட கோபம் வரும்..”

“இப்ப உனக்கு நான் தேவையில்லைதான்.. அவன் தானே உனக்குத் தேவை..?”

“ச்சே.. என்னவொரு மட்டமான புத்தி.. என்னைப் பாத்து திருட்டுப்பட்டம் கட்டின ஆளுதானே நீங்க..? உங்க புத்தி எப்படிப் போகும்..?”

“அதனாலதான் உனக்கு உசந்த பட்டமா கொடுக்கிறவனாப் பாத்து தேடிப் பிடிச்சிருக்கியா..?”

“அர்ஜுன் வேணாம்...”

“அட.. என் பெயர்கூட உனக்கு ஞாபகமிருக்கா..? எங்கே.. அவன் பெயர் மட்டும்தான் உன் மைண்டில் பதிவாகியிருக்கோன்னு நினைச்சுட்டேன்...”

“உங்களுக்கு விளக்கம் சொல்லனும்கிற அவசியம் எனக்கில்லை...”

“அதுதான் தெரியுதே..”

“நீங்க யாரோ.. நான் யாரோ..”

இதைச் சொல்லும் போது மனதுக்குள் எதற்காக அப்படியொரு துக்கம் பொங்குகிறது என்று தெரியாமல் திகைத்தாள் காவ்யா...

“நான் யாரோதான்.. அவன்தானே உனக்கு எல்லாமும்...”

“இது அம்புஜப் பாட்டியோட வீடுன்னுதான் நான் வந்தேன்...”

“இல்லையாமே.. அவனைப் பார்க்கத்தான் தினமும் இங்கே வருகிறயாமே.. உன்னை உருகி உருகி காதலிக்கிறதா என்னிடமே அவன் சொல்கிறான்.. அவன் காதலிக்கிற பெண்ணைப் பார்த்துட்டுப் போகலாமேன்னு தான் இங்கே கிளம்பி வந்தேன்.. வந்து பார்த்தால் அது நீயாய் இருக்கிற.. வெரிகுட்.. இப்படித்தான் இருக்கனும்.. ஒன்று போனால் இன்னொன்று...”

“மட்டமா பேசாதீங்க..”

“நானா..?”

“பின்னே தெருவில் போகிறவனா இப்படிப் பேசறான்..? அதுசரி.. அப்படியாப்பட்ட அப்பாவுக்கு புள்ளையா பொறந்தவருக்கு புத்தி எப்படிப் போகும்..? இப்படித்தானே போகும்...”

“அதனாலதான் குணவானா இருக்கிற சரவணன் சித்தாப்பாவோட மகனாப் பார்த்து காதலிக்க ஆரம்பிச்சியா...?”

ஆமாம்.. அப்படித்தான் என்று சொல்லி விடலாமா என்ற வேகம் காவ்யாவுக்குள் எழுந்தது.. அவள் ஆடிப் போயிருந்தாள்.. எவனைப் பார்த்து விடக் கூடாது என்று மதுரையை விட்டு திருநெல்வேலிக்கு அவள் ஓடி வந்தாளோ... அவன் வந்து அவள் முன்னால் நிற்கிறான்...

எவனைப் பற்றிய நினைவுகள் அவளைத் துரத்துகின்றன என்று துரத்தும் அந்த நினைவுகளில் இருந்து தப்பிப் பிழைக்க அவள் கண்ணதாசனிடம் கதறினாளோ.. அவன் அவள் முன்னால் வந்து நின்றதோடு விடாமல் அவளின் காதலில் குறை கண்டு குற்றம் சாட்டுகிறான்..

‘இந்த தைரியத்தை இவனுக்கு யார் கொடுத்தது..?’

காவ்யா அவனை நிமிர்ந்து பார்த்து முறைத்தாள்.. அர்ஜீன் பேசியதில் உண்மை இருக்கிறதா.. இல்லையா.. என்பதைப்பற்றி அவள் யோசிக்கவில்லை...

அதில் உண்மையிருக்கிறது என்று நம்புகிறவனை எப்படி அவள் ஒரு காலத்தில் உருகி உருகி காதலித்தாள் என்றுதான் அவள் யோசித்தாள்...

“நீங்க யார் சார் என்னை கேள்வி கேட்கிறதுக்கு..?”

அவள் நிமிர்ந்து நின்று அவனிடம் கேட்டாள்..

“சாரா..?” அர்ஜீன் முகம் மாறினான்...

“ஆமாம் சார்.. எனக்குச் சம்பந்தமில்லாதவங்கள சார்ன்னுதான கூப்பிடனும்..?”

“அவனை எப்படிக் கூப்பிடுவ..? ‘கார்த்திக்’ ‘கார்த்திக்..’ அப்டின்னா..?”

அவன் பேசிக்காட்டிய விதத்தில் அவன் பல்லை உடைத்துக் கையில் கொடுத்தாலென்ன என்ற ஆசை அவளுக்குள் தோன்றியது...

எங்கிருந்தோ வந்து அவள் இதயத்தை புயலாய் ஆக்ரமித்த ஆசைகளில் இது போன்ற ஆசையும் தோன்றக்கூடும் என்று அதுநாள்வரை அவள் நினைத்தும் பார்த்ததில்லை...

"அதைப் பற்றி உங்களுக்கென்ன சார்..? அவரை நான் பெயர் சொல்லியும் கூப்பிடுவேன்.. பெயர் சொல்லாமலும் கூப்பிடுவேன்.. ஏன்..? புதுசாய் ஒரு பேரைச் சொல்லியும் கூப்பிடுவேன்.. அது என் இஷ்டம்.. நீங்க யாரு சார் கேக்கிறதுக்கு..?"

"நான் யாரா..?" அர்ஜீனின் சிவந்த முகம் கருத்துப் போனது...

அதில் காவ்யாவுக்கு உவப்பென்றால் உவப்பு.. அப்படியொரு உவப்பாக இருந்தது...

'இப்படித்தானே எனக்கும் இருந்திருக்கும்..' அவள் மனதுக்குள் குதூகலித்தாள்...

'இந்நேரம் வரைக்கும் உனக்கு நான் யாருன்னு தெரியாது... என் பேரென்னன்னு தெரியாது... என் ஊரென்னன்னு தெரியாதுன்னு உள்ள உக்காந்து அம்புட்டு

பீலா விட்டியேடா மச்சான்.. இப்ப உன்ன யாருன்னு நான் கேள்வி கேட்டா மட்டும் இஞ்சிதின்ன குரங்கப் போல இந்த முழி முழிக்கற...'

"ஓ.. அப்ப.. அவன் சொன்னதெல்லாம் உண்மை..?"

காவ்யா துணுக்குற்றாள்.. அவளுக்கு அர்ஜீனின் மீது கோபம்தான்.. அவனிடமிருந்து விலகி தொலைதூரத்துக்கு ஓடிவிட நினைத்துத்தான் அவள் ஓடி வந்திருக்கிறாள்.. அதற்காக இன்னொருவனின் பெயர்கூட அவள் பெயரை அவன் இணைத்துப் பேசுவதில் அவளுக்கு விருப்பமில்லை..

அதை அவனிடம் சொல்லவும் அவளுக்கு மனமில்லை...

திடிரென்று அவள் முன்னால் வந்து நின்றவன் மீண்டும் ஒரு பழியைத் தூக்கி அவள்மீது போட முனைந்ததில் அவளுக்குள் வெறுப்பு பெருகியது...

"இதோ வந்திட்டேன்ம்மா..."

அங்கே இல்லாத சுமதியின் குரலுக்கு பதில் சொல்வதைப் போல குரல் கொடுத்தபடி அவள் வேகமாக போய் விட்டாள்.. அவள் போவதையே கோப முகத்துடன் பார்த்தபடி நின்றிருந்தான் அர்ஜீன்...

அவன் சொன்னதற்கும்.. அவன் கேள்விக்கும் பதில் சொல்லாமல் அவள் ஒடியதில் அவனுக்குள் வெறி கிளம்பியிருந்தது...

“என் செலக்சன் எப்படியண்ணா..?”

கார்த்திக்கின் குரலில் திரும்பினான் அர்ஜீன்.. அவனுடைய காதலியைப் பார்த்து கார்த்திக் அப்படிக் கேட்டதில் அர்ஜீனுக்குள் கொலைவெறி கிளம்பியது...

“ம்ம்ம்.. உன் பிஸினெஸ் எப்படிப் போகுது கார்த்திக்...?”

“உன்னுடையதைப் போல இல்லை.. ஏதோ ஓடுது.. அதை டாடி சொல்லிக் காண்பிச்சுக்கிட்டே இருக்கிறார்.. அர்ஜீனைப் பார்.. நான் கொடுத்ததில் கால்வாசி கூட பார்த்தசாரதி அவனுக்கு கொடுக்கலை.. அவன் அதை வைச்சு பிஸினெஸ் ஆரம்பித்து ஆறே மாதத்தில் வட்டியும் முதலுமா அந்தப் பணத்தை அவன் டாடியிடம் திருப்பிக் கொடுத்துட்டான்.. இப்ப எங்கேயோ போயிட்டான்.. நீ அவன் அளவுக்கு வானத்தை தொட வேணாம்.. பூமியைத் தொடவாவது முயற்சி பண்ணுன்னு ஒரே உபதேச மயம்தான்..”

“நீயும் தான் கொஞ்சம் ஜெயிக்க முயற்சி பண்ண வேண்டாமா..?”

“முடியலைன்னு சொல்ல மாட்டேன்.. உன்னைப் போல முழு மனதா அதில் இறங்கலைன்னுதான் சொல்லுவேன்...”

“அப்படியிருக்கிறப்ப எதுக்காக காதல்.. கீதல்ன்னு மனதை அலை பாய விடுகிற..?”

“அது பாட்டுக்கு அது.. இது பாட்டுக்கு இது...”

“கார்த்திக் முதலில் பிஸினெஸ்ஸில் உன்னை புரூவ் பண்ணிக் காட்டு.. காதல் எங்கே ஓடி விடப் போகுது..?”

“அப்படியெல்லாம் அசால்ட்டா இருந்துவிட முடியாதுண்ணா.. மொட்டை மாடியில் காயப் போட்ட வத்தலும்.. முறைப்பொண்ணும் ஒன்னு.. எப்ப வேணும்னாலும் யாராவது வந்து கொத்திக்கிட்டுப் போயிருவாங்கன்னு என் பிரண்ட்ஸ் சொல்லுவாங்க...”

“நீயின்னும் காலேஜ் டேஸ்ல இருந்து வெளியில வரவே இல்லைடா கார்த்தி.. இன்னும்.. பிரண்ட்ஸ் அது இதுன்னு சுற்றிக் கிட்டு இருக்கிற.. பிஸினெஸ் மேனா லட்சணமா இருந்து தொலைடா...”

“அது என்ன தேவைக்கு..? நான் பிஸினெஸ்ஸை பார்க்கப் போயிட்டா காவ்யாவை எப்படிப் பார்க்கிறது..?”

“அதான் சொன்னியே.. முக்கியமான மீட்டிங்கை விட்டுட்டு காவ்யாவுக்காக வீட்டில உட்கார்ந்திருக்கன்னு.. ஏண்டா இப்படி இருக்கிற..?”

"உனக்குத் தெரியாதுண்ணா.. இதிலெல்லாம் கவனமாய் இருக்கனும்.. பாட்டி அடிக்கடி ஒரு பழமொழியைச் சொல்லுவாங்க.."

"என்னன்னு..?"

"காத்திருந்தவன் காதலியை நேற்று வந்தவன் தள்ளிக்கிட்டு போயிடுவானாம்.." கார்த்திக் விழிவிரித்துச் சொல்ல..

'யார்.. யாரிடம்.. இந்தப் பழமொழியைச் சொல்வதென்றே இல்லையா..?' என்று நொந்து போய் விட்டான் அர்ஜீன்...

அவனுடைய காதலியை நேற்று அவளைப் பார்த்து வைத்திருக்கும் கார்த்திக் தள்ளிக் கொண்டு போக நினைக்கும் நினைவைப்பற்றி அவனிடமே கூறிவிட்டு.. கூடவே இந்த பழமொழியையும் சேர்த்த சொல்லி வைத்தால் அவனுக்கு எப்படியிருக்கும்..?

'கொடுமைடா...'

"அதனால அண்ணா.. நான் என் காதல் விவகாரத்தில் ரிஸ்க் எடுக்கறதாவே இல்லை..."

'புத்திசாலிடா நீ.. இந்தப் புத்தி எனக்கில்லாம போயிருச்சே...'

"அழகா.. அம்சமா.. புத்திசாலியா ஒரு பொண்ணு மனதுக்கு பிடித்தபடி கிடைக்கிறது என்பது எவ்வளவு

பெரிய விசயம்..? அந்தக் காதலை கைநழுவ விடாம பார்த்துக் கிறதைவிட்டுவிட்டு.. வேறு வேலையில் கவனம் திருப்ப நான் ரெடியா இல்லை.. பிஸினெஸ்ஸீக்கு என்ன அண்ணா..? எப்ப வேணும்னாலும் பார்த்துக்கலாம்.. காதல் அப்படியா..?”

அவனைவிட இளையவனான கார்த்திக்கின் காதல் பற்றிய ஆழ்ந்த அறிவில் செல்லரித்துப் போய் விட்டான் அர்ஜீன்...

அந்தக் கார்த்திக் யார் மீது வேண்டுமானாலும் காதல் பாணத்தை தொடுக்கட்டும்.. அதில் அவனுக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை.. அதற்காக உதவிகரம் நீட்டவும் அவன் தயாராகத்தான் இருந்தான்...

அந்த காதல் அஸ்திரங்களை அர்ஜீனின் காதலி மீதே வீசிவிட்டு.. அதைப்பற்றிய ஆலோசனைகளை அள்ளி வழங்கும்படி அவன் அர்ஜீனிடமே கேட்டுக் கொண்டதில் அர்ஜீனுக்கு கோடானகோடி ஆட்சேபனைகள் இருந்தன..

“சொல்லுண்ணா.. இவளை எப்படி மடக்கிப் போடறது...?” கார்த்திக் கேட்டான்...

அப்படியே அவன் கன்னத்தில் நான்கு அப்பு அப்பினால் என்ன என்ற கொலைவெறி அர்ஜீனுக்குள் கிளர்ந்தது.. பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு...

“உன் காதலை அவளிடம் சொல்லி விட்டாயா கார்த்திக்..?” என்று கேட்டான்..

“ஊஹீம்.. இன்னும் சொல்லலை.. அதுக்கான நேரமும் இடமும் தோதா அமையலை.. காலைப் பிசகிக்கிட்டு உட்கார்ந்திருக்கிற பாட்டி முன்னாலே.. அவங்க காலுக்கு மருந்து தடவி விட்டுக்கிட்டு இருக்கிற காவ்யாகிட்ட காதலைச் சொல்கிறதா..? நினைக்கிறப்பவே கடுப்பு வரலை...?”

வரத்தான் செய்தது.. கார்த்திக் தினமும் காவ்யாவுக்காக காத்திருக்கிறான்.. அவள் வந்து போகும் வரை இருக்கும் இடைப்பட்ட நேரத்தில் அவளைச் சுற்றி சுற்றி வருகிறான் என்பதில் அர்ஜீனுக்கு கடுப்பு வராமல் இருக்குமா..?

# 119

## எனக்குமட்டும் சொந்தமென்று.. அவளிருக்க ஆசைகொண்டேன்...

**அ**ர்ஜீனின் பூர்விகம் திருநெல்வேலிதான்.. அவனின் தாத்தா காலத்தில் அவர்கள் திருநெல்வேலியை

விட்டு மதுரைக்கு குடி பெயர்ந்தார்கள்.. அந்தத் தாத்தா உள்ளூரில்.. அதாவது திருநெல்வேலியிலேயே பெண் பார்த்து திருமணம் செய்து கொண்டவர்.. அவள்தான் அம்புஜம் பாட்டியின் அக்காவான பங்கஜம்..

எல்லோரின் வேர்களும் அவர்களின் பூர்விகத்தில் பின்னிப்பிணைந்திருக்கும்.. பார்த்தசாரதியின் வேரும் அப்படித்தான், மதுரையை விட்டு.. திருநெல்வேலியில் பின்னிப் பிணைந்திருந்தது...

திருநெல்வேலியில் அவர்களுக்கு பூர்விக வீடுண்டு.. அதை புதுப்பித்து அழகாக கட்டி வைத்திருந்தார்.. உறவினர்களின் திருமணங்களுக்கு வரும்போது அந்த வீட்டில்தான் பார்த்தசாரதியின் குடும்பம் தங்கும்...

திருநெல்வேலியை ஒட்டிய கிராமத்தில் தென்னந் தோப்புடன் கூடிய நிலமுண்டு.. அங்கே தோட்ட வீட்டைக்கட்டி.. சுற்றிலும் பழ மரங்களை நட்டு வைத்திருந்தான் அர்ஜீன்...

இந்த விவரமெல்லாம் காவ்யாவுக்குத் தெரியுமா..?

ஒளியத் தெரியாதவன் தலையாரியின் வீட்டில் ஒளிந்த கதையாக அவள் அர்ஜீனின் நினைவுகளில் இருந்து தப்பித்து ஒளிய அவனது பூர்விக ஊரான திருநெல்வேலிக்குப் போய் சேர்ந்து விட்டாள்...

போனவள் சும்மாவும் இருக்காமல் பழகிப் பார்க்க.. அர்ஜீனின் சொந்தக்காரப் பாட்டியைத் தேர்ந்தெடுத்து விட்டாள்...

‘அண்ணன்கிட்ட எப்படிச் சொல்வது..?’

இதுதான் அவளுடைய சிந்தனையாக இருந்தது.. அர்ஜீன், அவனது குடும்பம் திருநெல்வேலியில் இருந்து மதுரைக்கு குடி பெயர்ந்த கதையை அவளிடம் ஒர்முறை சொல்லியிருக்கிறான்தான்.. ஆனால் அது காவ்யாவின் மனதில் பதிந்து தொலைக்கவில்லை.. அதனால்தான் திருநெல்வேலிக்குப் போகிறோம் என்று கண்ணதாசன் சொன்னதும் மறுப்புச் சொல்லாமல் கிளம்பி விட்டாள்..

காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் சென்ற காவ்யா ஹாலில் உட்கார்ந்திருந்த கண்ணதாசனைக் கவனிக்காமல் மாடிப்படிகளில் ஏறிவிட்டாள்...

கண்ணதாசனின் புருவங்கள் உயர்ந்தன...

மாடியில் இருந்த ஒற்றை அறையை அலுவலக அறையாகவும் படிக்கும் அறையாகவும்தான் அவர்கள் உபயோகப் படுத்திக் கொண்டிருந்தார்கள்..

காவ்யா கீழேயிருந்த அறைகளில் ஒன்றை எடுத்துக் கொண்டதால்.. தங்கைக்கு துணையாக இருக்க வேண்டும் என்று மாடியறையை விட்டு விட்டு.. காவ்யாவின்

அறைக்கு பக்கத்து அறையை கண்ணதாசன் அவனுடைய அறையாக மாற்றிக் கொண்டிருந்தான்..

அறியாத ஊரில் பாதுகாப்பாக இருந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு...

காவ்யா அதிகமாக மாடியறைக்கு போக மாட்டாள்.. மனது சரியில்லையென்றால் மட்டும் மாடிக்குப் போய் பால்கனியில் உட்கார்ந்து தொலைதூர தொடுவானை வெறித்துக் கொண்டிருப்பாள்...

அன்று அவள் அண்ணனைக் கூடக் கவனிக்காமல் மாடிப்படியில் ஏறியதில் கண்ணதாசன் பேப்பரை கீழே போட்டுவிட்டு எழுந்து மாடிப்படியில் ஏற ஆரம்பித்தான்.. சமையலறையிலிருந்து அவசரமாக ஓடிவந்த மருக்கொழுந்து.. 'காபி வேண்டுமா..?' என்று சைகையில் கேட்க நினைத்து.. வலது கையின் நான்கு விரல்களை மடித்து கட்டை விரலை மட்டும் உயர்த்தி வாயருகே கொண்டு போய் சைகை காண்பித்தாள்...

'என்னத்தைக் கேக்குது..? அப்படியே தண்ணியடிக்கிறயான்னு கேக்கிறதைப் போலவே கேட்டு வைக்குதே...'

எரிச்சலுடன் தலையை ஆட்டி மறுத்து விட்டு கண்ணதாசன் மாடியேறினான்.. அங்கே அவன் நினைத்ததைப் போலவே காவ்யா முழங்கால்களைக்

கட்டிக் கொண்டு அமர்ந்து தொலைதூரதொடுவானை வெறித்துக் கொண்டிருந்தாள்...

‘நினைச்சேன்... ஆனா இது அம்புஜம் பாட்டி வீட்டுக்கத்தான போயிருந்துச்சு...?’

கண்ணதாசன் தங்கையின் அருகே சென்று அங்கேயிருந்த கூடை மர ஊஞ்சலில் உட்கார்ந்து லேசாக ஆடினான்...

அவனுக்கு தங்கையின் மௌனத்தை கலைக்க வேண்டியிருந்தது.. அவளை அவளது பழைய நினைவுகளிலிருந்து மீட்டெடுக்க வேண்டியிருந்தது...

“காவ்யா...”

“ம்ம்ம்...”

நினைவுகள் கலைந்தவளாக அவள் சட்டென்று கண்ணதாசனை ஏறிட்டுப் பார்த்தாள்...

“என்னண்ணா..?”

“ஏன் மூட் அவுட்டாயிருக்க..?”

“ஒன்னுமில்லையே...”

“பொய்.. இப்பத்தான் பாட்டி வீட்டில இருந்து திரும்பி வந்திருக்கிற.. வந்தவுடன் என்கிட்டப் பேசாம மாடிக்கு வந்தா என்ன அர்த்தம்..?”

அப்போதுதான் தான் செய்த தவறை உணர்ந்தாள் காவ்யா...

அவள் அம்புஜத்தின் வீட்டிற்குக் கிளம்பிப் போனபோது கண்ணதாசன் அலுவலகத்திற்குப் போயிருந்தான்..

எப்போதுமே முற்பகல் வேளையில்தான் காவ்யா அம்புஜத்தின் வீட்டிற்குச் செல்வாள்... அவளுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு அவள் மதிய உணவை முடித்து தூங்க ஆரம்பித்ததும் கிளம்பி வந்து விடுவாள்...

அன்று கிருஷ்ண ஜெயந்தி என்பதால் மாலையில் நடக்கும் பூஜையில் கலந்து கொள்வதற்காக பிற்பகல் வேளையில் அவள் கிளம்பிப் போயிருந்தாள்.. போனவள் திரும்பி வந்தபோது அலுவலகத்தில் இருந்து திரும்பி வந்திருந்த கண்ணதாசனைக் கவனித்திருக்க வேண்டுமா.. வேண்டாமா..?

“ஸாரிண்ணா.. நான் உன்னைக் கவனிக்கலை...”

“அதைத்தான் நானும் கேட்கிறேன் உன் கவனம் எங்கேயிருக்கு...?”

‘அவனிடம் இருக்கு..’

அதைச் சொல்ல முடியாமல் காவ்யா தவித்தாள்.. அர்ஜீனைப் பார்த்ததிலிருந்து அவள்.. அவளாகவே

இல்லை.. கனடாவிற்கு அவன் போவதற்கு முதல் நாளில் தன் காதலை அவனிடம் ஒப்புக் கொண்டவள்.. பிரிந்து சென்றவன் திரும்பி வரும் நாளிற்காக வழிமேல் விழிவைத்துக் காத்து கிடந்ததைப் பற்றி அவளுக்குத் தானே தெரியும்..?

அவனும் வந்தான்.. எப்போது..?

அவளைக் கையும்.. களவுமாக நேகாபிடித்து வைத்து விசாரணை செய்து கொண்டிருந்த போது வந்து நின்றான்..

காதல் ததும்ப... பிரிவின் ஏக்கம் தணிய.. அவனைக் கட்டிப்பிடித்து முகம் முழுவதும் முத்தங்களைப் பதிக்க வேண்டுமென்ற காத்திருந்தவள்.. அவனைக் கண்ணீரும் கதறலுமாகத்தானே ஏறிட்டுப் பார்த்தாள்...?

அவளுக்காக ஓடி வந்தவன்.. அவளைக் காத்து நிற்பதற்குப் பதிலாக விசாரணைதானே செய்தான்..?

அந்த நொடியில் அவனை விட்டுப் பிரியும் முடிவை அவளை எடுக்க வைத்து விட்டானே...

எவன் முகத்தைப் பார்ப்பதற்காக அவள் தவிப்பும்.. துடிப்புமாக காத்திருந்தாலோ.. அவன் முகத்தைச் சரியாக பார்க்கக் கூட முடியாமல் அவள் விலகி வந்தாள்.. வந்த இடத்தில் அன்று அவன் அவள் கண்முன் வந்து நிற்கிறான்.. பொங்கி வரும் உணர்வலையில் அவள் ஆட்படாமல் என்ன செய்வாள்..?

‘ஒன்று போனால் இன்னொன்றா..?’

இவன் மாறவே மாட்டான் என்ற நினைவில் அவளுக்குள் சினம் பரவியது..

‘அன்னைக்கு திருட்டுப் பழியைப் போட்டான்.. இன்னைக்கு வேற ஒரு பழியைப் போடறான்.. என்மேல பழி போட்டுக்கிட்டே இருக்கிறதுதான் இவனுக்கு வேலையா..?’

“என்னம்மா.. பேச மாட்டேங்கிற..?”

கண்ணதாசனின் குரலில் அவள் தந்நிலைக்கு திரும்பினாள்...

“அங்கே என்ன நடந்தது..?”

“எங்கே..?”

“சுசிலாப் பாட்டி வீட்டில..?”

“பூஜைதான் நடந்தது...”

“அதுக்கா அப்செட் ஆகியிருக்க..?”

“ஊஹீம்.. அவங்க கால் இன்னும் சரியாகலை.. அதைநினைச்சு வருத்தமாயிருந்துச்சு...”

காவ்யா எதையோ சொல்லி சமாளித்தாள்.. கண்ணதாசனின் முகத்தில் நம்பாத தன்மை தெரிந்தது..

“அது வெறும் கால் சுளுக்குதானேம்மா.. மெல்ல.. மெல்ல.. சரியாகிரும்ன்னு டாக்டர் சொல்லியிருக்காரே...”

“அதுக்கில்லைண்ணே.. நான் யார்மேலயாவது பாசம் வைச்சா அவர்களுக்கு ஏதாவது ஆகிருதுன்னு என் மனசுக்குப் படுது...” காவ்யா விசும்பினாள்..

கண்ணதாசனின் முகத்திலிருந்த நம்பாத தன்மை விலகியது.. அவன் இரக்கத்துடன் தங்கையின் தலையைத் தடவிக் கொடுத்தான்.. சுசிலாவுடன் அவள் சேர்ந்து வெளியில் போய் வந்ததில்.. அவனுக்கும் நிம்மதியாக இருந்ததே.. தங்கையின் மனதை அந்தப் பாட்டி விரக்தியிலிருந்து மீட்டுக் கொண்டிருக்கிறாள் என்று சந்தோசப் பட்டானே...

அந்தப் பாட்டியும் இப்படி காலைப் பிசக வைத்துக் கொண்டு கட்டிலில் கிடந்தால் காவ்யாதான் பாவம் என்ன செய்வாள்..? அவள் மனதை விட்டு விலகி ஓடியிருந்த கவலை மேகங்கள் திரும்பவும் வந்து நிற்காதா...?

“விடும்மா... இதுக்குப் போயி சங்கடப்பட்டுக்கிட்டு.. பாட்டிதான் இப்ப கட்டில்ல இருந்து இறங்கி மெல்ல நடக்க ஆரம்பிச்சிட்டாங்களாமே...”

“ஆமாண்ணே.. என் தோளைப் பிடிச்சுக்கிட்டு இன்னைக்குக்கூட ரூமுக்குள்ள நடந்தாங்க...” காவ்யா முகம் மலர்ந்தாள்...

"பரவாயில்லையே.. அப்படியே மெதுவா.. தோட்டத்துப் பக்கமா கூப்பிட்டுக்கிட்டுப் போயி நடக்க விடு.."

"ஆமாமில்ல.. அதை மறந்தே போயிட்டேன்..."

"இப்ப நினப்பில வைச்சுக்கிட்டியில்ல.. போதும்.. எழுந்திரு..."

"எதுக்கு.."

"என்னம்மா கேள்வி இது..? என்னடா அடுத்த வீட்டுப் பாட்டிய பத்தி இவ்வளவு கவலைப்படறோமே.. நம்ம அண்ணன்காரனை நம்மள நம்பித்தானே அம்மா அனுப்பி வைச்சிருக்கு.. அவனுக்கு ஒரு வாய் காபி கொடுத்து சாயந்திரத்துக்கு சாப்பிடன்னு எதையாச்சும் வயித்துக்கு கொடுக்கலாமேன்னு நீ நினைச்சுப் பார்க்கறியா...?"

"ஸாரிண்ணே.. ஸாரி..."

காவ்யா குற்ற உணர்வுடன் எழுந்து கொண்டாள்.. கண்ணதாசனுக்கு அதுதான் வேண்டியிருந்தது.. காவ்யாவை கடமையில் கட்டிப் போட்டால்தான் அவள் சரிப்பட்டு வருவாள் என்ற நினைவில் அவன் தாயைப் பிரிந்த பிள்ளை போல முகத்தை வைத்துக் கொண்டான்..

அண்ணனி மீதான பாசத்தில் மற்றவை மறந்து போக காவ்யாவும் வேகமாக மாடியிறங்கி விட்டாள்...

'உஸ்ஸ்.. அப்பாடா...'

மூச்சை இழுத்து நிம்மதிப் பெருமூச்சை விட்ட கண்ணதாசன் தற்காலிக நிம்மதியுடன் மாடிப்படிகளில் இறங்கினான்..

"எதைக் கேட்டாலும் சைகை காண்பிச்சுத் தொலைக்கிறேயேக்கா... உன் மௌன விரதம் என்னைக்குத்தான் முடியும்..?"

சமையலறைக்குள் காவ்யா மருக்கொழுந்திடம் கேட்டுக் கொண்டிருந்தாள்...

'எனக்குத் தெரிஞ்சா சொல்ல மாட்டேனா..?'

ஏக்கத்துடன் திரும்பிய மருக்கொழுந்தின் இறைஞ்சல் பார்வையை ஒர் முறைப்புடன் புறக்கணித்து விட்டு பேப்பரைப் படிக்க ஆரம்பித்தான் கண்ணதாசன்..

# 120

***விண்ணோடு நிலவாக – நான்..***
***விற்றிருக்க ஆசைகொண்டேன்...***

அர்ஜீனுக்கு தலை வேதனையாக இருந்தது.. அவனைத் தொடர்ந்து வந்து காதலைப் பற்றிய அவனது ஆலோசனைகளைக் கேட்டுக் கடுப்படித்துக் கொண்டிருந்தான் கார்த்திக்...

அவனிடமிருந்து தப்பிக்க தோப்புப் பக்கமாக அர்ஜீன் கிளம்பிப் போனால் அவன் அங்கேயும் தொடுத்து வந்து அவனிடம் ஆலோசனை கேட்டு ரம்பம் போட்டான்...

'இப்படி மொட்டை ரம்பமா போடறானே..'

அர்ஜீனுக்கு கொலை கொலையாய் முந்திரிக்காயென்று கொலை கொலையாய் கொலைவெறி கிளம்பியது.. அதையறியாமல் தன் போக்கில் சொடக்குப் போட்டு..

*"வொய் திஸ் கொலைவெறி..*
*கொலைவெறி.. கொலைவெறிடா..."*

என்று பாட்டுப் பாடி வேறு வைத்துத் தொலைத்தான் கார்த்திக்...

“டேய்.. அடங்குடா..” எரிச்சலுடன் அவனை அடக்கினான் அர்ஜீன்...

“ஒரு பாட்டுக்கூட பாட விடமாட்டேங்கிற..” கார்த்திக் குறைபட்டான்...

“பாட்டுப் பாடற வயசாடா உனக்கு..? ஒரு கம்பெனிக்கு முதலாளியா இருக்கிற.. கம்பெனிப் பக்கம் போகாம தென்னந்தோப்பில நின்றுக்கிட்டு சின்னப்பையன் போல பாட்டுப் பாடிக்கிட்டு இருக்கிற.. உன்னை.. என்ன செய்தால் தேவலாம்...?”

“என் காதலியை கணக்குப் பண்ணச் சொல்லிக் கொடுத்தால் தேவலாம்...”

கண்கள் செருக சொன்னவனைப் பிடித்து கிணற்றுக்குள் தள்ளி விட்டாலென்ன என்று ஆசை அர்ஜீனுக்குள் கிளர்ந்தது...

கார்த்திக்கிற்கு நீச்சல் தெரியும் என்பதினாலும்.. மதிய நேரத்தின் உக்கிர வெயிலில் நிற்கும் போதே சொடக்குப் போட்டுப் பாட்டுப் பாடுகிறவன்.. தண்ணீருக்குள் மூழ்கி எழுந்து குளுகுளு மனநிலைக்கு போய் விட்டால் எப்படியெல்லாம் பாடி வைப்பானோ என்பதினாலும் அந்த ஆசைக்கு அணை போட்டு வைத்தான் அர்ஜீன்...

“அந்த எழுமிச்சை பழத்தைப் பார்த்தியாண்ணா..”

“பார்த்தேன்.. பார்த்தேன்.. உனக்குத் தோதான பழமில்ல..?”

கார்த்திக்கின் உச்சந் தலையில் பித்தம் தெளியத் தேய்க்கப் பயன்படும் மரம் என்ற அர்த்தத்தில் அர்ஜீன் சொல்ல.. அதை உணராதவனாக கண்கள் செறுக...

“ஆமாண்ணா.. ஆமாம்..” என்று ஆமாம் சாமி போட்டான் கார்த்திக்...

‘இவனுக்கு பித்துப் பிடிச்சிருக்குன்னு இவனே ஒப்புக்கிறானா..?’

ஆச்சரியம் அலைமோத.. ஒன்று விட்ட தம்பியை கொன்று விடும் கொலைவெறியுடன் உற்று உற்றுப் பார்த்தான் அர்ஜீன்.. அவனோ.. ஒரு மார்க்கமாக சிரித்தபடி...

“ஏண்ணா அப்படிப் பார்க்கிற..?” என்று பாசமாக கேட்டு வைத்தான்..

‘ம்ஹீம்.. பித்தம் தலைக்கேறினா இப்படித்தான்..’

அவனைப் பார்த்தால் அவன் காவ்யாவை பார்க்கும் பார்வை நினைவில் வந்து தொலைக்குமென்பதால் அவனைப் பார்ப்பதை விட்டுவிட்டு வானத்தைப் பார்க்க ஆரம்பித்தான் அர்ஜீன்...

“அவ இந்தக் கலர்லதான் இருக்காண்ணா..”

போதையுடன் கார்த்திக் சொன்னதில் தூக்கி வாரிப் போட்டவனாக அவனைத் திரும்பிப் பார்த்தான் அர்ஜீன்...

“எவ.. அவ..?” கண்கள் சிவக்க கேட்டான்...

“என்னண்ணா.. இப்படிக் கேட்கிறிங்க.... நான் எவளைப் பற்றிச் சொல்லுவேன்..? என்னவளைப் பற்றித் தான் சொல்லுவேன்...”

உரிமையுடன் பேசியவனின் செவுளைப் பேர்க்கும் அறையை விட்டால் என்ன என்று எழுந்த கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்ள வெகுவாக சிரமப்பட்டுப் போனான் அர்ஜீன்...

‘வேணாம்டா அர்ஜீன்.. இவன் சரவணன் சித்தப்பாவோட மகன்.. உன்னோட பாசமான தம்பி...’ அவனுடைய அறிவு அவனை தடுத்தாட் கொண்டது...

“உன்னவளா..? அதை இப்பவே முடிவு பண்ணினா எப்படிடா கார்த்திக்..?” பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு கேட்டான் அர்ஜீன்...

“எப்பவும் என் முடிவு மாறாதுண்ணா.. அவதான் எனக்குன்னு நான் முடிவு பண்ணிட்டேன்..” உறுதியாகச் சொன்னான் கார்த்திக்..

“அவ முடிவு பண்ண வேண்டாமா..?” எரிச்சலுடன் கேட்டான் அர்ஜீன்...

அவன் மனம் புகைந்தது.. சுழித்தோடும் வாய்க்கால் நீரைப் பார்த்தான்.. அந்த நீரின் குளுமையினால் அவன் மனதில் புகைச்சலை அணைக்க முடியவில்லை...

‘எந்த நம்பிக்கையில் அவ முடிவு பண்ண மாட்டான்னு நினைக்கிற..?’ புகைந்த அவனது மனம் கேட்டது...

‘உன் போனை அட்டெண்ட் பண்ணலை.. நீயிருக்கிறதினால.. அவ பிறந்து வளர்ந்த மதுரையை விட்டு திருநெல்வேலிக்கு ஒடி வந்திருக்கிறா.. எப்போதாவது மதுரைக்கு வந்து போகிற உன்னை பார்த்து விடுவோமோ என்று அவளைப் பெற்று வளர்த்த தாய் தந்தையரை விட்டுத் தனியாக அண்ணனின் துணையோடு முன்பின் தெரியாத ஊருக்கு வந்திருக்கிறா.. இத்தனை மாதங்கள் கழித்து உன்னைப் பார்த்தும்.. உன் காதலை பற்றிய நினைவலைகள் அவள் கண்ணில் தெரியவில்லை.. இங்கேயும் வந்து விட்டானேங்கிற அதிர்ச்சியுடம்.. எரிச்சலும்தான் தெரிந்தன.. அப்படியிருக்கும் போது கார்த்திக்கின் காதலை அவ ஏற்றுக் கொள்ள மாட்டாள்ன்னு எதை வைத்து முடிவு பண்ணுகிற..?’

அவனால் அவன் மனம் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியவில்லை.. அண்ணாந்து வானத்தைப் பார்த்தான்.. கூட்டமாகப் பறந்து சென்ற பறவைகளின் கூட்டம் அவன் கருத்தில் பதியவில்லை...

மாறாக எட்டாத உயரத்தில் அவனை விட்டு விலகிப் போகும் அவன் காதலிதான் அவன் கண்ணுக்குத் தெரிந்தன...

“அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்குவேண்ணா...”

காதலுடன் சொன்னான் கார்த்திக்.. அவன் காதல் மொழிகளைக் கேட்கச் சகிக்காமல் முகத்தை திருப்பிக் கொண்டான் அர்ஜீன்...

அவனும்தான் அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்குவான்.. ஆனால் அதற்கான வாய்ப்பை காலம் அவனுக்கு கொடுக்கவில்லையே...

அவளைக் கண்டவுடன் காதல் கொண்டான்.. அவளுக்காக வெளிநாட்டு ஒப்பந்தங்களை மறந்து மதுரையே கதியாக கிடந்தான்.. அவளிடம் காதல் சொல்லவே பல மாதங்களாகிவிட்டன...

அந்த மகராசி உடனடியாக அவனது காதலை ஏற்றுக் கொள்ளவுமில்லை.. அவன் மீதான அவளின் காதலை

ஒப்புக் கொள்ளவுமில்லை.. இழுத்தடித்து.. ஒரு வழியாக.. ஒரு வருடம் முடிந்த பின்னால்தானே அவள் காதலை சொன்னாள்..?

அவள் சொன்னவுடன் அவளுடன் மதுரையைச் சுற்றி வலம் வந்து அவர்களின் காதலைக் கொண்டாட அவனால் முடிந்ததா..?

மறுநாளே கனடாவுக்கு பயணமாகி விட்டான்.. உடனடியாக திரும்ப முடியாமல் இரண்டு மாதங்களுக்கும் மேலாக அங்கேயே மாட்டிக் கொண்டான்...

ஒருவழியாக அவன் திரும்பிவந்தபோது அவள் என்ன நிலையில் நின்று கொண்டிருந்தாள்..?

அன்றைய காவ்யாவின் கண்ணீர் முகம் நினைவுக்கு வந்ததில் துயரம் தாங்காமல் கண்களை மூடிக் கொண்டான் அர்ஜீன்...

“அம்மாவும்.. டாடியும் ஓகேன்னு சொல்லிடுவாங்க..” கார்த்திக்கின் குரலில் நிச்சயம் இருந்தது...

“என் விருப்பம் தான் டாடியின் விருப்பமும்.. என் மனசுக்கு மாறா எதையும் அவர் செய்ய மாட்டார்...”

அவன் பெருமையுடன் பேசப்பேச அர்ஜீனின் மனதுக்குள் பொறாமைத்தீ கொழுந்து விட்டு எரிந்தது...

‘கொடுத்து வைத்தவன்...’

அவன் அனல் பெருமூச்சை விட்டான்...

தங்களின் ஆசைகளை பிள்ளைகளின் மீது திணிக்காத பெற்றோர்கள் கிடைக்கப் பெற்ற பிள்ளைகள் கொடுத்து வைத்தவர்கள்தானே...

சரவணன் அப்படிப்பட்டவர்.. அர்ஜீனைப் போல அவர் மகனும் சாதிக்க வேண்டுமென்ற ஆசை அவரிடமிருந்தது.. ஆனாலும் அவன் அதை செய்துதான் ஆக வேண்டுமென்று அவர் கட்டாயப் படுத்தியதில்லை.. அர்ஜீனைச் சுட்டிக் காட்டி அவர் மகனுக்கு உபதேசம் செய்ததுண்டு.. ஒப்பிட்டுப் பேசியதில்லை.. அந்த உபதேசம் கூட மகனைத் தூண்டுவதற்கான முயற்சி தான்...

‘இவன் வரம் வாங்கினவன்...’

அர்ஜீனால் இதை நினைக்காமலிருக்க முடியவில்லை...

மதுரை சம்பவத்திற்கு பின்பு அவன் பார்த்த சாரதியுடன் பேசவே இல்லை.. என்ன நடந்ததென்று தெரியாமல் சுந்தரி தவித்தாள்.. ஆனந்திக்கு போன் போட்டு விவரம் சொன்னாள்..

“என்னன்னு தெரியலை ஆனந்தி.. அர்ஜீன் டாடியை அவாய்டு பண்றான்...”

“எதுக்குன்னு கேட்டிங்களாம்மா..?”

“கேட்டேனே.. பதில் சொல்ல மாட்டேங்கிறான்...”

“டாடியிடம் கேட்டிங்களா...?”

“இவர் அதுக்கும்மேலே உர்ருக்கு என்னை முறைக்கிறார்..”

“எதுவா இருக்கும்ன்னு நீங்க நினைக்கறிங்க..?”

“தெரியலையே.. நீ அர்ஜீன்கிட்டப் பேசிப் பாரேன்..”

“ம்ம்ம்...”

ஆனந்தி தம்பியிடம் பேசினாள்.. அது விசாரணையாக இல்லாமல் மனக் காயத்திற்கு மயிலிறகால் மருந்து தடவி ஒத்தடம் கொடுப்பதைப் போல இருந்தது...

“கானடா டிரிப் சக்சஸ்தானே அர்ஜீன்..?”

“ம்ம்ம்...”

“இந்த டிரிப் லாங் டிரிப்பா இருந்துருச்சு போல இருக்கே..?”

“ம்ம்ம்..”

“ஆர் யு ஆல்ரைட்..?”

“அக்கா...”

“என்னன்னு சொல்லு அர்ஜீன்..”

“நத்திங்...”

“நீ என்கிட்டப் பொய்கூடச் சொல்லுவியா..?”

“இனிச் சொல்லி எதுவும் ஆகப் போவதில்லைக்கா.. நான் கனடா போகிறதுக்கு முன்னாலேயே உன்கிட்டப் பேசியிருக்கனும்.. செய்யாம விட்டுட்டேன்.. அதுக்கான பலனைத்தான் இப்ப அனுபவிக்கிறேன்...”

“அர்ஜீன்...”

“எல்லாம் என் கைக்குள்ள இருக்குதுங்கிற ஆணவம்க்கா எனக்கு.. எதுவும் என் கை மீறிப் போகாது.. நான் போக விடமாட்டேன்ங்கிற நிச்சயம் எனக்கு...”

“நீ அப்படிப்பட்டவன்தான் அர்ஜீன்...”

“இல்லையே.. என் பிஸினெஸ்ஸை என் கண்ட்ரோலில் வைக்க முடிஞ்சது.. பட்.. குடும்பத்தை என்னால் கண்ட்ரோல் பண்ண முடியலையே...”

அர்ஜீன் போனைத் துண்டித்து விட.. யோசனையுடன் பார்த்தசாரதிக்கு போன் போட்டாள் ஆனந்தி.. மறைமுகமான அவளது கேள்விக்கு அர்ஜீன் சொன்ன அதே பதிலைத்தான் பார்த்தசாரதியும் சொல்லி வைத்தார்..

“மதுரையில இருந்து கிளம்பி வந்தேன்...”

“மஞ்சள் பையோடு வரலையே டாடி..”

“கிண்டலா..?”

“இல்லைடாடி.. உங்களிடம் தாத்தாவோட சொத்திருந்தது.. கூடுதலா அம்மாவோட பணமும் சொத்துக்களும் வந்தன...”

“வாட் டு யு மீன்..?”

“நீங்க தாத்தாவோட பணத்தையும். அம்மாவோட பணத்தையும் அவங்களிடம் திருப்பிக் கொடுக்கலை...”

“எதுக்குக் கொடுக்கனும்..? எல்லாமே என்னுடையது தானே...? அதுக்கு உரிமைக்காரன் நான்தானே...”

“அர்ஜீன் இப்படி நினைக்கலையே டாடி...”

“ஆனந்தி...”

பார்த்தசாரதியின் கர்ஜனைக்கு ஆனந்தி பயப்பட வில்லை.. அவள் நியாயவதி.. அதுவும் தம்பிக்கு ஒன்று என்றால் துணிந்து நின்று போராடுகிறவள்.. அவன்பக்க நியாயத்திற்காக ஓங்கி குரல் கொடுப்பவள்.. அன்று மட்டும் பின் வாங்கி விடுவாளா...?

# 121

*எனக்காக குரல் கொடுக்க..*
*நீ வரவே ஆசைகொண்டேன்...*

“ஆக்சுவலா.. நீங்க உங்க பிஸினெஸ்ஸில் இன்வெஸ்ட் பண்ணினது தாத்தாவோட பணத்தையும்.. அம்மாவோட பணத்தையும் தான்...”

“சொல்லிக் காட்டறியா..?”

“நினைவு படுத்தறேன் டாடி.. அது ரெண்டுக்கும் உரிமையானவன் அர்ஜீன்.. இருந்தும் அவன் நீங்க பிஸினெஸ்ஸிக்காக கொடுத்த பணத்தை வட்டியோட திருப்பிக் கொடுத்தான்...”

“நான் கேட்கல...”

“தாத்தாவும்.. அம்மாவுத்தான் கேட்கல.. சொல்லிக் காட்டல.. நீங்க அதை உங்களுக்கு சாதகமாக பயன் படுத்திக்கிட்டிங்க...”

“அது யாருக்கு போகப் போகுது..? எனக்குத்தானே வரப் போகுது..?”

“தாத்தாவோட சொத்து பேரனுக்குத்தான்.. தாய் வழிச்சொத்தும் அவங்களோட பிள்ளைகளுக்குத்தான்.. இருந்தும் அர்ஜீன் அது இரண்டையும் உங்களுக்கு விட்டுக் கொடுத்தான்.. அவன் வாங்கின பணத்தையும் திருப்பிக் கொடுத்தான்..”

“எனக்குன்னு எதுவுமில்லைங்கறியா...”

“ஊஹீம்.. அவனிடம் இருக்கிற கோடிக்கணக்கான பணமும் சொத்தும் அவன் சுயமா சம்பாதித்ததுன்னு சொல்றேன்...”

மகள் நினைவு படுத்தியதில் எரிச்சலாகி விட்ட பார்த்தசாரதி...

“அதை எதுக்காக இப்பச் சொல்கிற..?” என்று கேட்டார்...

“அவன் உங்க கண்ட்ரோலில் இருக்கனும்ங்கிற அவசியமில்லைன்னு சொல்றேன்...”

“என் குடும்பம் என் கண்ட்ரோலில் இருக்க வேண்டாமா..?”

“இல்லாம எங்கே போனது..? அம்மா உங்க பேச்சை மீறினாங்களா..?”

“அர்ஜீன் மீறுகிறானே...”

“டாட்.. இது சரியில்லை.. அவன் கனடா போயிருந்தப்ப நீங்க எதுக்காக மதுரைக்கு போனீங்க..?

உங்க பிஸினெஸ்ஸை விட்டுவிட்டு இரண்டு மாதமா மதுரையில எதுக்காக ஸ்டே பண்ணினீங்க..? உங்களுக்கும்.. அர்ஜீனுக்கும் இடையிலிருக்கும் போராட்டத்துக்கும் இதுக்கும் நிச்சயமாக ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கு டாடி..."

ஆனந்தி புத்திசாலி.. பிரச்னையின் வேரை அவள் கண்டு பிடித்து விட்டாள்.. அதில் பார்த்தசாரதிக்கு அவ்வளவாக உடன்பாடில்லை...

"மாப்பிள்ளை எப்படியிருக்கிறார் ஆனந்தி..?"

"இது என்ன டாடி புதுசா கேட்கறிங்க..? நேத்துத்தானே நாங்க நம்ம வீட்டுக்கு வந்திருந்தோம்..? மாப்பிள்ளை எப்படியிருக்கார்ன்னு அப்ப நீங்க பார்க்கலையா..? இதைத் கேட்கிறது மூலமா நீங்க என்ன சொல்ல வர்றீங்க டாடி..? நான் மாப்பிள்ளையை மட்டும் கவனிச்சுக்கனும்.. என் பிறந்த வீட்டைக் கவனிக்க கூடாதுன்னு சொல்ல வர்றீங்களா..?"

"உன் வீட்டை நீதானே கவனிக்கனும்..?"

"அப்படியெல்லாம் என்னை பிரித்து நிறுத்தி விட முடியாது டாடி.. அர்ஜீனை நான் எந்தக் காலத்திலும் விட்டுக் கொடுக்க மாட்டேன்..."

"அவனுக்குத்தான் புத்தியில்லைன்னா உனக்கும் இல்லை ஆனந்தி..."

"ஈஸிட்..? இத்தனை நாளா உங்க சார்பா அர்ஜீனிடம் நான் பேச வேண்டி வந்தப்ப நான்தான் புத்திசாலின்னு சொல்வீங்க.. இப்ப அவன் சார்பா உங்களிடம் பேச வந்தா எனக்கு புத்தியில்லாம போய்விட்டதா.? வெரிகுட்.."

"பாரு ஆனந்தி.. உன் தம்பி உன் பேச்சைக் கேட்பான்..."

"ஸோ.. வாட்..?"

"நீ ஏன் அவனுக்கு புத்தி சொல்லக் கூடாது..?"

"அவன் ஊருக்கே புத்தி சொல்வான்..."

"இப்ப அதைக் கடன் கொடுத்திட்டானே..."

"யாரிடம் டாடி..? உங்களிடமா..?"

"தேவையில்லாம கோபப்படற ஆனந்தி.. நேகா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டியை மேரேஜ் பண்ணிக்கிறதுன்னா சும்மாவா..? அது எவ்வளவு பெரிய வாய்ப்பு தெரியுமா..?"

ஆனந்தி நிதானித்தாள்.. பிரச்னையின் சிக்கலான முடிச்சு எங்கிருந்து ஆரம்பித்திருக்கிறது என்பதற்கான நூல்முனை அவளுக்குக் கிடைத்து விட்டது...

"ஸோ.. நீங்க அந்த நேகாவை அர்ஜீனுக்கு மேரேஜ் பண்ணனும்னு நினைக்கறிங்க..?"

“ஷ்யூர்.. திஸ் இஸ் எ கிரேட் ஆப்பர்சூனிட்டி..”

“யாருக்கு..?”

“அர்ஜீனுக்குத்தான்...”

“நோ டாடி.. அந்த நேகாவுக்குத்தான் இது கிரேட் ஆப்பர்சூனிட்டி...”

“இருக்கட்டுமே.. ஒற்றைப் பெண்ணாய்.. பெரிய தெழில் சாம்பராஜ்யத்தின் வாரிசாய் இருக்கிற சக்சஸ்புல் பெண் நம் அர்ஜீனின் வொய்பாக வந்தா அவனுக்குத்தானே நல்லது..?”

“நேகா குருப் ஆப் கம்பெனியை விட அர்ஜீன் அதிகமாக சம்பாதித்து வைத்திருக்கிறான் டாடி.. இவன் கம்பெனிக்கு பாரினில் பிரான்சஸ் இருக்கு.. நேகாவால் எட்டமுடியாத உயரத்தில் இருக்கிறவன் அர்ஜீன்.. அவனுடைய வொய்பின் புராப்பர்ட்டீஸ் வந்துதான் அவன் உயரனும்கிற அவசியமில்லை...”

“ம்ப்ச்.. இப்படி அவனிடமும் பேசிவைக்காதே ஆனந்தி...”

“மத்தவங்க சொல்கிறதைக் கேட்டு ஒருவரை எடை போடுகிற ஆள் அர்ஜீனில்லை.. அவனுக்கு எப்போதுமே நேகாவைப் பிடிக்காது...”

“நீ சொல்லக் கூடாதா ஆனந்தி..?”

“என்னன்னு..?”

“நேகாவை மேரேஜ் பண்ணிக்கிட்டா அவன் பியூச்சர் எப்படி பிரைட்டாகும்ன்னு சொல்லலாமே...”

“இப்பவே அவன் பிரைட் பியுச்சரோடுதான் இருக்கிறான் டாடி..”

“ஆனந்தி.. ஆனந்தி.. உனக்குச் சொன்னால் புரியாதா..? நீ சொன்னா அவன் கேட்டுக்குவான் ஆனந்தி.. எனக்காக இதைப்பற்றி நீ அவனிடம் பேசக்கூடாதா...?”

பார்த்தசாரதி கெஞ்சுதலாக கேட்டார்.. ஆனந்தி அதை மறுத்து விட்டாள்..

“நோ டாடி.. நான் சொன்னால் என் தம்பி கேட்டுக்கு வான்தான் அது என்மேல அவன் வைச்சிருக்க பாசத்தோட அடையாளம்.. அக்கா எதைச் சொன்னாலும் நம்ம நல்லதுக்குத்தான் சொல்லுவான்னு அவன் நம்பறானே.. அந்த நம்பிக்கையோட அடையாளம் அது.. அந்த நம்பிக்கையை நான் குலைக்க மாட்டேன்.. அவனுக்குப் பிடிக்காத மேரேஜை பண்ணிக்கன்னு ஒர்நாளும் அவனிடம் கேட்க மாட்டேன்...”

“இது அவனுடைய பியுச்சருக்கு நல்லது ஆனந்தி..”

“அவன் சாதனையாளன் டாடி.. அவன் தொழிலையும் எதிர்காலத்தையும் அவன்தான் தீர்மானிச்சான்...

அவனுக்குத் தெரியாததையா நீங்களும்.. நானும் தெரிந்து வைத்திருக்கிறோம்..?”

“அப்படின்னா.. நீ அவனிடம் எதையும் சொல்ல மாட்ட...?”

“யெஸ்.. நான் சொன்னா அவன் கேட்பான்ங்கிறதுக்காக அவன் மனதுக்குப் பிடிக்காத எதையும் செய்யுன்னு நான் சொல்ல மாட்டேன்..”

இதுதான் ஆனந்தி.. அவள் நியாயமானவள்.. தம்பியின் மீது பாசமானவள்.. அந்தப் பாசத்தினால் அவனைக் கட்டுப் படுத்தாமல் விலகி நிற்பவள்...

ஆனந்தி விலகிக் கொண்டாள்.. சுந்தரியோ நேகாவின் பெயரைக் கேட்டாலே நெருப்பாக முறைத்தாள்...

பார்த்தசாரதியால் தனித்து எதையும் செய்ய முடியவில்லை.. அர்ஜீன் மதுரையை விட்டு வந்து விட்டதில் அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி.. காவ்யா அவளுடைய அண்ணனுடன் தொலைதூரமாக விலகிப் பயணப்பட்டு விட்டாள் என்று தேவராஜனின் உபயத்தில் அவர் செல்போனில் வந்த செய்தியில் அவர் காதுகளில் தேனாறும்.. அவர் வயிற்றில் பாலாறும் பாய்ந்தன...

அந்த இரண்டினாலும் அவர் சந்தோசம் கொள்ள முடியாமல் அர்ஜீன் அவரிடமிருந்து விலகி நின்றான்...

சுந்தரியுடன் பேசுவான்.. ஆனந்தியைப் பார்க்க போய் வருவான்.. பார்த்தசாரதியைக் கண்டால் மட்டும் முகத்தில் ஓர் சுளிப்பு பரவ பேசாமல் போய் விடுவான்...

தானாக அவனிடம் பேசவும் பார்த்தசாரதிக்கு தைரியமில்லை... அவன் பேசாமலிருப்பதில் அவர் பலத்த மனப்பாதிப்புக்கு ஆளானார்...

அப்படிக் கொஞ்சம் நஞ்சம் பேசிக் கொண்டிருந்ததையும் கத்தரித்து விட்டிருந்தவனுக்கு கார்த்திக்கின் தந்தை பாசத்தில் கொலைவெறி கிளம்புமா.. கிளம்பாதா..?

"பெருமையடிக்காதே கார்த்திக்..."

சுள்ளென்று அவன் சொல்லி விட்டதில் அந்தக் கார்த்திக்கின் முகம் மாறிவிட்டது...

"என்னாச்சுண்ணா..?" அவன் கவலையுடன் கேட்டான்...

"எதுக்குடா இப்படி முகத்தை வைச்சுக்கிட்டு கேட்கிற..? எனக்கு என்ன ஆகனும்..?" அதற்கும் எரிந்து விழுந்தான் அர்ஜீன்...

"மூட் அவுட்டில் இருக்கியா..?"

"ஒரு அவுட்டிலும் இல்லை..."

“அப்படின்னா சரி.. அவளை எப்படி என்வழிக்கு கொண்டு வர்றதுன்னு எனக்கு வழி சொல்லேன்...”

“எனக்கு அதைப் பற்றியெல்லாம் அவ்வளவா நாலெட்ஜில்ல கார்த்திக்.. உன் பிஸினெஸ் விசயமான்னா கேளு.. சொல்றேன்..”

“அதை எதுக்கு இந்த நேரத்தில நினைவு படுத்தற..?”

‘அப்படியாவது நீ.. இந்தப் பேச்சை மறப்பியான்னு தான்...’

அர்ஜீன் எரிச்சலுடன் காரை நோக்கி நடந்தான்.. தனிமை தேடி தோப்புக்கு வந்தால் அங்கேயும் அது கெட்டு விட்ட கோபம் அவனுக்கு..

“நில்லுண்ணா...” கார்த்திக் அவன் பின்னால் ஓடினான்...

“பாருடா கார்த்திக்.. இது வேலைக்காகாத விசயம்.. நான் காதல் விவகாரத்தில் சுத்தமமான ஜீரோ.. ஸோ..”

“ஸோ..?”

“உனக்கு காதல் பாடம் சொல்லிக் கொடுக்க.. என்னால முடியாது.. அதுக்கு வேற ஆளைப் பார்த்துக்க..”

# 122

*விண்ணைத் தொடும் மலராக...*
*உன்னைத் தொட ஆசைகொண்டேன்...*

‘**நீ** வேணும்னா பாரேன்.. நீ வேணும்னா பாரேன்..’ என்று கார்த்திக் அவனைப் பார்க்க வைக்க முயன்ற அவனது காதல் விவகாரத்தில் அர்ஜீன் மனதுக்குள் அக்கினி பற்றிக் கொண்டது...

“அன்னைக்கொரு நாள் அப்படித்தான்.. அவ காரை விட்டு இறங்கினா.. இறங்கினவ வீட்டுக்குள்ள போக வேண்டியது தானே..? அதை விட்டுட்டு அண்ணாந்து பார்த்தா...”

“அதுக்கென்னடா..?”

“மாடி பால்கனியிலே நான் நின்றுக்கிட்டு இருந்தேண்ணா...”

‘ஓ மை காட்... இந்தக் கொசுத் தொல்லை தாங்கலையே...’

“அவ என்னைப் பார்த்தாளா.. நானும் அவளைப் பார்த்தேன்..”

‘இப்ப இவன் என்ன சொல்ல வர்றான்.. இவனும் நோக்கினான்.. அவளும் நோக்கனிாள்ன்னு காவியக் காதலை வம்பைக் கட்டி இழுக்கிறானோ.. இவனையெல்லாம் கம்பர் வந்துதான் நாலு மொத்து மொத்தனும்...’

“அச்சு அசல் ராமாயணக் காதலைப் போலவே சூப்பர் சைட் அண்ணா...”

கார்த்திக் புல்லரித்துப் போக.. அதற்கு மேல் தாங்க மாட்டாத அர்ஜீன்..

“டேய்.. ராமாயணக் காதலில.. சீதைதான் பால்கனியில நிப்பாங்கடா...” என்று சொல்லி விட்டான்...

“ஸோ வாட்..? இது என்ன இதிகாச காலமா..? ஒரு சேன்ஜீக்கு.. ஹீரோயினுக்குப் பதிலா ஹீரோ நின்னா ஆகாதா..?” என்று அயராமல் பதில் சொன்னான் கார்த்திக்...

‘இவன அடக்க முடியலையே...’ பல்லைக் கடித்தான் அர்ஜீன்...

“நீ வேணும்ன்னா பாரேன்...”

‘வேண்டாம்டா.. கொலைவெறியைக் கிளப்பாதே..’

“ஒருநாள் அவளாகவே வந்து அவளோட காதலை ஒப்புக்குவாண்ணா.. எனக்கு அந்த நம்பிக்கையிருக்கு...”

எந்த நம்பிக்கையின் அடிப்படையில் இப்படி நீ வேண்டுமென்றால் பாரேன் என்ற நிச்சயத்துடன் கார்த்திக் இந்த வார்த்தைகளைச் சொல்கிறான் என்று அர்ஜீனின் ஒட்டு மொத்த கோபமும் காவ்யாவின் பக்கமாக திரும்பியது...

அடுத்து வந்த நாள்களில் அவள் அம்புஜத்தைப் பார்க்க வரும் போதெல்லாம் குற்றவாளியைப் பார்ப்பதைப் போல இவன் அவளை உர்ரென்று முறைத்துக் கொண்டிருந்தான்...

‘செய்கிற அத்தனை அட்டூழியத்தையும் செஞ்சுட்டு.. என்ன தெனாவெட்டு இருந்தா என்னை இவன் முறைப்பான்.. இவன் கேட்ட கேள்வியை ஆயுசுக்கும் மறக்க முடியுமா..?’

பொறுமித்தவித்த காவ்யா.. அவனைக் குற்றம் சாட்டும் உக்கிரப் பார்வையை பார்த்தபடி ஒதுங்கிப் போனாள்..

‘அவனை மட்டும் அண்ணாந்து பார்ப்ப.. என்னைக் கண்டா ஒதுங்கிப் போவியா..?’ எரிமலையானான் அர்ஜீன்...

அன்றும் அதுபோல.. அம்புஜத்திற்காக புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த காவ்யா.. அறைக்குள் அர்ஜீன் வரவும் புத்தகத்தை மூடி வைத்து விட்டு எழுந்தாள்...

“என்னாச்சு பாட்டி.. உங்க பிரண்டோட வாசிப்பு என்னைக் கண்டா மட்டும் நின்னு போகுதே.. ஏன்..?” விசமமாக கேட்டான் அர்ஜீன்..

கார்த்திக் வந்தாலும் அவள் வாசிப்பைத் தொடர்வதைச் சுட்டிக் காட்டும் அவனது உள் குறிப்பைப் புரிந்து கொண்டவளாக...

“அண்ணனுக்கு போன் பண்ணனும்.. பேசிட்டு வந்திடறேன் பாட்டி...” என்று அம்புஜத்திடம் சொல்லி விட்டு அங்கிருந்து அகன்று விட்டாள்..

அவனுக்கான பதிலைக் கூட நேரடியாக அவனிடம் சொல்லாமல் அம்புஜத்திடம் அவள் சொல்லி விட்டுச் சென்றதில் கொதித்துப் போனான் அர்ஜீன்...

‘நான் இருக்கிற இடத்தில் கூட இவ நிற்க மாட்டாளாமா..?’

அந்தக் கொதிப்புடன் அம்புஜத்தின் அறையை விட்டு வெளியே வந்தவன்.. அவள் எங்கேயிருக்கிறாள் என்று பார்வையால் அவளைத் தேடினான்.. அன்று கார்த்திக் வந்திருக்கவில்லை...

“இம்பார்டண்ட் மீட்டிங்ன்னு டாடி என்னைக் கட்டித்தூக்கி காரில் போட்டுக்கிட்டு வந்துட்டாருண்ணா.. நான் வருகிற வரைக்கும் அவளை நிறுத்தி வைச்சிரு..

ப்ளீஸ்...” என்று அப்போதுதான் அர்ஜீனுக்கு கார்த்திக் போன் பண்ணியிருந்தான்..

‘அவன் வர்றதுக்குள்ள இவளை நாலு கேள்வி கேட்டு விடனும்..’

சுற்றிலும் துழாவிய அவன் பார்வையில்.. மாடி ஹாலின் முடிவிலிருந்த அகன்ற பால்கனியில் நின்று கொண்டிருந்த அவள் தென்பட்டு விட்டாள்..

‘அங்கே இருக்கிறாளா...’

அழுத்தமான காலடியோசையுடன் அவளை அவன் நெருங்கிய போது.. அவனது காலடியோசையை இனம் கண்டு கொண்டவளாக சட்டென்று அவள் திரும்பிப் பார்த்தாள்...

அந்த ஒரு நொடியில் சந்தித்துப் பிரிந்த அந்த இருவரின் விழிகளிலும் மின்னல் மின்னியது...

அவளின் காலடி சப்தத்தை அவனும்.. அவனின் காலடி சப்தத்தை அவளும் நன்கு அறிவார்கள்.. இதைப் பற்றி கனடாவிலிருந்த போது அர்ஜீன் பேசியதுண்டு..

“நீ கள்ளிடி.. என்னைக் காதலிக்காததைப் போல பாவ்லா காட்டுவ.. ஆனா.. என் காடிச் சத்தத்தில் சட்டுன்னு திரும்பிப் பார்த்துருவ.. அது நான்தான்கிற நிச்சயம் உன் பார்வையில் இருக்கும்.. எனக்கு அது பிடிக்கும்டி...”

“நீங்க மட்டும் என்னவாம்.. பாவனா நடந்து வந்தா நிமிர்ந்து பாக்க மாட்டிங்க.. அதுவே நான் உங்க ரூமுக்குள்ள காலடி வைச்ச அடுத்த செகண்டிலயே நிமிர்ந்து பாத்துருவீங்க.. அது நான்தான்னு உங்க முகத்தில எழுதி ஒட்டியிருக்கும்...”

“இதையெல்லாம் கண்டு வைச்சிருக்கிறவ காலா காலத்தில உன் காதலை சொல்லியிருக்கலாமில்ல..?”

“நீங்க ஆம்பளை.. நினைச்சதை சொல்லிடுவீங்க.. நான் அப்படியா..? ஆனா பாருங்க.. இந்த காலடி சத்தத்தை வைச்சு அந்தக் காலத்திலே ஒரு பாட்டே வந்திருக்கு...”

“பாடேன்...”

அர்ஜீனுக்கு அவளைப் பாடவைத்துக் கேட்பதில் இன்பம் அதிகம்.. அதை அறிந்தவளாக காவ்யாவும் செல்போனில் பாடிக்காட்டுவாள்...

*“ஓராயிரம் பார்வையிலே - உன்*
*பார்வையை நானறிவேன்...*
*உன் காலடி ஓசையிலே - நம*
*காதலை நானறிவேன்..”*

அந்தப் பாடல் இந்தப் பொழுதில் அவர்கள் இருவரின் மனதிலும் ஒலித்ததில் அவர்கள் இருவருமே பாதிப்புக்கு ஆளாகினார்கள்.. அந்தப் பாதிப்பில் ஒருவர் மனதை ஒருவர் குதறியெடுக்கும் ஆவேசத்திற்கும் ஆளானார்கள்...

“யாரைப் பார்க்க இங்கே நிற்கிற..?” அர்ஜீன் தான் ஆரம்பித்து வைத்தான்..

“நிச்சயமா உங்களைப் பார்க்க இல்ல..” திமிராக பதில் சொன்னாள் காவ்யா...

‘என்ன திமிர்..!’

அவள் எதிர்பார்த்ததைப் போலவே அர்ஜீனின் கண்கள் சிவந்தன.. அதைக் கண்ட காவ்யாவிற்கு திருப்தியாக இருந்தது...

‘கொதிக்கிற போல இருக்கே.. இப்படிக் கேள்வி கேட்டா இப்படித்தான் பதில் வரும்...’

அவளின் திருப்தி வெகு நேரத்திற்கு நீடிக்கவில்லை.. அவன் கடுமையான பார்வையுடன்...

“அதுதான் எனக்குத் தெரியுமே..” என்றான்...

காவ்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவனது அருகாமையில் குளிர் காய நினைத்த அவள் மனதின் உணர்வுகளை நினைத்து அவளுக்கே துன்பமா இருந்தது...

“நீ அவனுக்காகத்தான் காத்திருக்கேன்னு எனக்கும் தெரியும்...” அவளை ஊடுறிவி பார்த்தபடி சொன்னான் அர்ஜீன்...

“எவனுக்காக காத்திருக்கேன்..?”

இது என்ன புதுக்கதை என்று காவ்யாவுக்கு தூக்கிவாரிப்போட்டது..

“நான் யாரைச் சொல்கிறேன்னு உனக்குத் தெரியாதா..?” அர்ஜீனின் இதழ்கள் இகழ்ச்சியாக மடிந்து வளைந்தன...

அந்த இகழ்ச்சியில் காவ்யாவின் உயிர் துடித்தது...

‘இவன் கார்த்திக்கைச் சொல்கிறான்..’ அவள் சட்டென்று புரிந்து கொண்டாள்...

“யாருக்காகவும் நான் காத்திருக்கலை...” அவள் இறுக்கமான முகத்துடன் சொன்னாள்..

“இதைப் பாருடா.. இப்பத்தான் இவங்க யாருக்காக காத்திருக்கிறேன்னு கேட்டாங்க.. இப்ப என்னடான்னா.. யாருக்காகவும் இவங்க காத்திருக்கலைன்னு சொல்றாங்க.. யாருன்னு அதுக்குள்ள தெரிஞ்சு போச்சா..? அதுசரி.. ஹீரோவைப் பற்றி ஹீரோயினுக்கு தெரியாதா என்ன..?”

‘யாருக்கு யார் ஹீரோ..?’

முன்னால் நிற்பவனின் முடியைப் பிடித்து ஆட்டி இந்தக் கேள்வியை கேட்டுவிட வேண்டும் என்ற உக்கிரம் கொண்டாள் காவ்யா...

“பார்த்தா டீசன்ட்மேன் போல இருக்கீங்க... பேச்செல்லாம் அப்படியில்லையே...”

“என்னை நீ பார்த்ததே இல்லை பாரு.. என் பேச்சையும் இதற்கு முன்னாலே கேட்டதே இல்லை பாரு.. அதனால இதுவும் பேசுவ.. இதுக்கு மேலேயும் பேசுவ...”

“தெரிஞ்சாச் சரி.. பாட்டி வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளியாச்சேன்னு பார்க்கிறேன்...”

“இல்லையே.. என்னை நீ பார்க்கிறதே இல்லையே.. அவனைத்தான பார்க்கிற.. அவன் பால்கனியில் நின்றானாம்.. நீ காரிலிருந்து இறங்கினதும் அண்ணாந்து அவனைப் பார்த்தியாம்.. அண்ணா.. நான் அண்ணல்.. அவ என்னோட சீதை.. இந்த அண்ணலும் நோக்கினான்.. அவளும் நோக்கினாள்.. கண்ணோடு கண் கலந்து காதல் பிறந்திருச்சுன்னு அவன் அடிச்சுச் சொல்றானே.. என்ன..? ராமாயணக் காதலை உல்டா பண்ணி ஒரு வழியாக்கனும்னு முடிவே பண்ணிட்டிங்களா..? அது காவியக் காதல்டி.. பிழைச்சுப் போகட்டும்ன்னு விட்டு வையுங்க...”

‘இது எப்ப..?’ காவ்யாவுக்கு தலையைச் சுற்றியது...

அவள் எப்போது பால்கனியில் நின்று கொண்டிருந்த அந்த பாலகுமாரனைப் பார்த்தாள்..?

கார்த்திக் குறிப்பிட்ட அந்த நாளில் காவ்யா காரிலிருந்து இறங்கியதும் யதேச்சையாக அண்ணாந்து பார்த்ததென்னவோ உண்மைதான்.. ஆனால் அடித்துக்

கொண்டிருந்த உச்சி வெயிலில் அவள் கண்கூச வீட்டுக்குள் சென்று விட்டாள்...

இந்த லட்சணத்தில் அவள் பால்கனியில் நின்று கொண்டிருந்த கார்த்திக்கைக் கண்டாளாம்.. அவனும் நோக்க.. இவனும் நோக்கினாளாம்.. கண்ணோடு கண் கலக்க காதல் பிறந்ததாம்..

‘சகிக்கலை..’ கோபத்தில் முகம் சிவந்தாள் காவ்யா...

‘இப்படியெல்லாம் பழி போட இவனால் மட்டும்தான் முடியும்..’

“அவனிடம் சொல்லி வை...”

‘என்னடா இது..’ என்று ஆகிவிட்டது காவ்யாவிற்கு...

அப்போதுதான் அந்த வார்த்தைகளை அவனிடம் சொல்வதற்காக வாய் திறந்தாள் அவள்..

‘உங்க தம்பியிடம் சொல்லி வையுங்க.. இப்படியெல்லாம் கதை கட்டி விட்டுக்கிட்டு இருந்தா நான் மனுஷியா இருக்க மாட்டேன்.. என்னைப் பத்தி உங்க தம்பிக்கு தெரியாது.. உங்களுக்கு தெரியுமில்ல.. ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்காது.. என் அண்ணன்கிட்டச் சொன்னாக் கதை கந்தலாகிடும்.. பாட்டி முகத்துக்காக பாக்கறேன்...’

இதைச் சொல்ல வாய் திறந்தவளிடம் தான் கார்த்திக்கிடம் சொல்லி வைக்கும்படி சொன்னான் அவன்..

“எப்பப் பார்த்தாலும் என் காதலுக்கு ஹெல்ப் பண்ணு.. காதலுக்கு ஹெல்ப் பண்ணுன்னு உயிரைக் குறைக்கிறானே.. அவன் மனசில என்ன நினைச்சுக்கிட்டு இருக்கிறான்..?”

‘அடியாத்தி...! இத வேற அவன் செய்கிறானா..? உனக்கு வேணும்டா.. என்மேல திருட்டுப் பழி போட்டியே.. அதுக்கு இதுதான் தண்டனை.. நல்லாப் படு...’ காவ்யாவுக்கு உற்சாகமாகி விட்டது...

“என்னைக் கேட்டா..? எனக்கென்ன தெரியும்..? அவர்கிட்ட போய் கேளுங்க..?” என்றாள் அவள்..

“அவரா..?” அர்ஜீனின் முகம் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல ஆகிவிட்டது..

“எவர்.. அவர்..?”

“வேற யாரு.. உங்க தம்பிதான்...” காவ்யா எரிகிற தீயில் எண்ணையை ஊற்றினாள்...

அது பற்றிக் கொண்டு எரிந்ததை அர்ஜீனின் கொலைவெறி ததும்பும் பார்வை அவளுக்கு உணர்த்தியது..

அவனது ஓராயிரம் பார்வைகளில்.. அன்று அவன் பார்த்த அந்தப் பார்வையில் ஒரு கோடி இன்பம் கொண்டாள் காவ்யா..

# 123

## நீ கொள்ளும் உரிமையிலே... இதம் கொள்ள ஆசைகொண்டேன்...

அர்ஜீனின் சிவந்த முகம் கருப்பதிலே பேரானந்தம் கொண்டாள் காவ்யா..

அவளுக்கு அது பிடித்திருந்தது.. அவளைக் காயப் படுத்த வந்தவனைக் காயப்படுத்தி தற்காத்து கொள்ளும் புதியதோர் போர்முறையை அவள் கண்டு பிடித்து வைத்திருந்தாள்...

கார்த்திக் அவளைச் சுற்றி வருவதில் அவளுக்கு உண்டாகும் இம்சையை விட அவனுக்கு அதிகமான இம்சையுண்டாகும் என்பதை அவள் தெரிந்து வைத்திருக்காவிட்டால் அவனை விழுந்து விழுந்து காதலித்ததற்கு அர்த்தமேதும் இல்லாமல் போய் விடுமே...

“அவனை அவர்.. இவர்ன்னுதான் சொல்லுவியா..?” அதட்டினான் அர்ஜீன்...

“பின்னே..? வேற எப்படிச் சொல்றதாம்..? நீங்களே சொல்லுங்க..” அவனிடமே கேட்டாள் காவ்யா...

“ஆக.. அவன் பால்கனியில் நின்றப்ப தெரிந்தேதான் நீயும் அவனை அண்ணாந்து பார்த்திருக்கிற..?” கண்கள் இடுங்க கேட்டான் அர்ஜீன்...

‘அது தெரிந்திருந்தா வந்த வழியிலேயே திரும்பிப் போயிருக்க மாட்டேனா..? போடா.. டேய்..’ மனதுக்குள் அர்ஜீனைத் திட்டித் தீர்த்தாள் காவ்யா...

அவளே.. கார்த்திக்கிடமிருந்து தப்பிப்பதற்காக மதிய நேரம் பார்த்து வந்து சேர்ந்தாள்.. காலையில் வந்தால் தானே கார்த்திக் இருந்து தொலைப்பான் என்ற நினைவு அவளுக்கு...

அந்தக் கார்த்திக் வீட்டிலிருந்து அவளை அழைத்துக் கொண்டு வர கார் கிளம்பியவுடன் அந்த விவரத்தை அவனிடம் சொல்லி விடும்படி கார் டிரைவரை கணக்கு பண்ணி வைத்திருப்பான் என்று அவள் கனவா கண்டாள்...?

அவன் இல்லையென்ற நினைவில் உச்சி வெயிலில் வந்து இறங்கி யதார்த்தமாக அண்ணாந்து பார்த்தவள் சூரியனைக் காண்பாளா..? பால்கனியில் நின்று கொண்டிருக்கும் அவனைக் காண்பாளா...?

சுட்டெரிக்கும் சூரியனின் ஒளிக்கதிர்களில் கண்கூச சட்டென்று தலை குனிந்து வீட்டுக்குள் போய் விட்டவளை அவள் வெட்கத்தால் தலை குனிந்து வீட்டுக்குள் போய் விட்டதாக கார்த்திக் அர்ஜீனிடம் மகிழ்ந்து சொல்லி அவன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட விவரத்தைப்பற்றி அவளுக்கு என்ன தெரியும்..?

“அவனைப் பார்த்ததும் வெட்கப்பட்டு தலையைக் குனிஞ்சியாமே...”

‘இத வேற அவன் சொல்லி வைச்சிருக்கானா..? அவனை என்னதான் செய்யறது..?’

“அவனைப் பார்த்து அவ்வளவு வெட்கப்பட்டு முகம் சிவந்தாயாமே... நிஜமா..?”

வெயிலில் முகம் கண்ற மாடியேறி வந்தவளை அந்தக் கார்த்திக் என்னவெல்லாம் சொல்லி வைத்திருக்கிறான் என்று மனதுக்குள் திட்டித் தீர்த்தாள் காவ்யா...

அவளாலேயே அந்த வன்கொடுமையைக் கேட்கச் சகிக்கவில்லையெனும் போது.. அர்ஜீன் அதைக் கேட்டு சகித்துக்கொள்ள என்ன பாடுபட்டிருப்பான் என்ற நினைவில் அவனை

‘ஐயோ பாவம்..’ என்ற பார்வையை இரக்கத்துடன் பார்த்து வைத்தாள் அவள்...

“என்ன பார்வையெல்லாம் பலமாயிருக்கு.. பிடித்ததுதான் பிடித்தே.. வேற எங்கேயாவது போய் பிடித்துத் தொலைத்திருக்க வேண்டியதுதானே.. ஏண்டி.. என் சொந்தத்துக்குள் பிடித்துத் தொலைத்திருக்க..?” தாள மாட்டாமல் பொருமினான் அர்ஜீன்...

காவ்யாவினால் அதைக் காது கொடுத்து கேட்க முடியவில்லை...

“வாயை மூடுங்க...” அவள் சீறினாள்...

அந்த சீற்றத்தில் அவன் முகத்தில் பரவிய வெளிச்சத்தில் அவள் நிதானித்தாள்...

‘ஊஹீம்.. இது கூடாது..’ நிமிர்ந்து அவன் முகம் பார்த்தவள்..

“ஏன் சார்..? உங்க சொந்தத்திலே நான் ஆள் பிடிக்கக் கூடாதுன்னு சட்டம் கிட்ம் இருக்கா..?” என்று வினவினாள்...

“ஏய்ய்..” அவன் முகத்தில் வெளிச்சம் மறைந்து ரௌத்ரம் பரவியது...

“இது என் வாழ்க்கை சார்.. யாரைப் பிடிக்கனும்.. யாரைத் தள்ளி வைக்கனும்னு நான்தான் முடிவு செய்யனும்.. உங்க அப்பா முடிவு செய்யலை..? அந்த நேகாவைத்தான் மருமகளா பிடிச்சுவைச்சுக்கனும்..

இந்த காவ்யாவ தள்ளி வைக்கனும்னு அவர் முடிவு செய்யலை..? அவருக்கு ஒரு நியாயம்.. எனக்கு ஒரு நியாயமா..? அது ஏன் சார்..? நீங்கள்ளாம் பணக்காரங்க.. நான் அப்பாவி மிடில் கிளாஸ்ன்னா..?" விழி விரித்தாள் காவ்யா...

"அவர் யாருடி என் வாழ்க்கையை முடிவு பண்ண..?" ஆத்திரப் பட்டான் அர்ஜீன்...

"உங்க அப்பாவாச்சே.. என்ன ஒன்னு.. அவர் உங்க வாழ்க்கையை முடிவு பண்ணுகிறதோட நிறுத்தியிருக்கனும்.. அதை முடிவு பண்ண என்னைத் திருடின்னு உங்க வாயாலேயே சொல்ல வைத்தாரே.. அதை அவர் செய்திருக்கக் கூடாது.." காவ்யா உதட்டைக் கடித்து உணர்வுகளைக் கட்டுப் படுத்தினாள்...

அதில் அர்ஜீன் மனதில் அடி வாங்கினான்.. அவளை அவன் திருடியென்று சொன்னானா..? இல்லையென்று அவன் எப்படி நிருபிப்பான்..?

"நீங்க பணக்காரங்கல்ள..? எது வேணும்னாலும் பேசலாம்..." காவ்யா தொடர்ந்து பேசினாள்...

"யானையை பூனையாக்கலாம்.. பூனையை யானையாக்கலாம்.. நீங்க சொன்னா.. சாக்கடையில கிடக்கிற புழுகூட பூவாகிரும்.. பூ கூட புழுவாகி

சாக்கடையில போய் விழுந்திரும்.. இதை நான் தெரிஞ்சு வைச்சிருக்கனும்.. எத்தனையோ தெரிஞ்சு வைச்சிருந்தவ இதைத் தெரிஞ்சு வைச்சுக்காம போயிட்டேன்...”

“காவ்யா..”

“கண்ணதாசனே பாடியிருக்கார்...

*கதை கட்ட சிலபேர் இருந்துவிட்டால்..*
*கண்ணகி வாழ்விலும் களங்கமுண்டு*
*காப்பாற்ற சிலபேர் இருந்துவிட்டால்*
*கள்வர்கள் வாழ்விலும் நியாயமுண்டுன்னு..*

நான் சாதாரண மனுஷி... என்னால எப்படி உங்களோட அராஜகங்களை தட்டிக் கேக்க முடியும்..?”

“திருப்பித் திருப்பி இதையே பேசாதே.. நான் உன்னை என்ன கேட்டேன்.. உன் பொறுப்பில இருந்த பணம் எப்படிக் காணாம போச்சுன்னுதானே கேட்டேன்..? அது சாதாரண கேள்வி காவ்யா விசாரணையை அப்படித்தான் ஆரம்பிக்கனும்...”

“ஓ.. என்னைச் சந்தேகப்பட்டு கேட்கிற கேள்வி.. உங்களுக்கு சாதாரணமான கேள்வியா..?” காவ்யா கொதித்தாள்...

“நான் அந்த அர்த்தத்தில் கேட்கலை..” அர்ஜீன் விளக்கம் சொல்ல முயன்றான்..

“ஹ..! உங்களை எனக்குத் தெரியாதா..? என்னைப் பார்த்த முதல் நாளிலேயே திருடின்னு சொன்னவர்தானே நீங்க...” காவ்யா கோபத்துடன் சொன்னாள்..

“ஏய்ய்.. அது விளையாட்டுக்கு சொன்ன வார்த்தை காவ்யா... இப்படி வினையாய் உன் மனதில பதியும்ன்னு நான் நினைக்கலை...”

“விளையாட்டுக்கு எதை வேணும்னாலும் பேசிருவீங்களா..?”

“விளையாட்டாய் பேசும் போது இதைத்தான் பேசனும்.. இதைப் பேசக் கூடாதுன்னு நினைத்துப் பார்த்து யாராலும் பேசமுடியாது.. நீயும் நான் கனடா கிளம்பிப் போகிற வரைக்கும் அதை குற்றமா எடுத்து என்னிடம் ஒர்வார்த்தை சொன்னதில்லை...”

“நானும் அதை விளையாட்டாகத்தானே நினைத்தேன்.. அதில் இத்தனை உள்குத்து இருக்கும்ன்னு கனவா கண்டேன்..?”

“உள்குத்தா..? எனக்கு அதெல்லாம் தெரியாது...”

“உங்களுக்கு தெரியாது..? நீங்க எல்லாம் தெரிஞ்சவர்.. நான்தான் ஏமாளி.. நான் முதன் முதலா பேங்குக்குப் போய் பணத்தை எடுத்துக்கிட்டு வந்த அன்னைக்கு நீங்க சொல்லாம கொள்ளாம

திடிர்ன்னு சென்னையில இருந்து மதுரைக்கு வந்து இறங்கியிருந்தீங்க.. அப்பவே என்னைச் சந்தேகப்பட்டு செக் பண்ணத்தான் வந்திருக்கீங்கன்னு எனக்குத் தெரியாமப் போச்சே...”

“நீ பண விசயத்தில் பயந்த.. உன்னால் அதை ஹேண்டில் பண்ண முடியாம போனா பக்கத்திலிருந்து சொல்லிக் கொடுக்கலாமேன்னுதான் நான் கிளம்பி வந்தேன்.. உன்னைச் சந்தேகப்பட்டு வரலை.. உன்னைச் சந்தேகப்பட்டா அது என்னையே நான் சந்தேகப் படறதுக்கு சமம் காவ்யா.. புரிஞ்சுக்க...”

“ஆஹா..! பேச்செல்லாம் பிரமாதமாப் பேசிருவீங்க.. யாரு நீங்க..? எனக்கே திருட்டுப் பட்டம் கட்டின உங்கப்பாவுக்கு மகனாச்சே.. நீங்க எப்படி வேணும்னாலும் பேசிருவீங்க.. நரம்பில்லாத நாக்கு.. நாலாபக்கமும் திரும்பும்...”

“நீ என்ன வேணும்னாலும் சொல்லிக்க.. என் மனது சுத்தமானது.. உன்னை எனக்குப் பிடிச்சுப் போச்சு...”

அந்த வார்த்தைகளில் எதற்காக அவள் மனதில் இந்த அளவுக்கு இதம் பரவுகிறது என்று கவலை கொண்டாள் காவ்யா...

விலகி ஓடிவந்தவள்.. அவனை விலக்கி வைக்க நினைக்கிறவள்.. அவனது காதல் வார்த்தைகளில் இதம் காணலாமா..?

அவளது மனப் போராட்டத்தை அறியாமல் கிடைத்திருக்கும் வாய்ப்பில் தந்நிலை விளக்கத்தைச் சொல்லிவிட வேண்டுமென்ற வேகத்துடன் தொடர்ந்து பேசினான் அர்ஜீன்...

“நீ என்னில் பாதி காவ்யா.. நான் பாரினுக்கு போகிற சமயத்தில என் இடத்தில இருந்து என் கம்பெனியை நீ கவனிச்சுக்கனும்னு நான் ஆசைப்பட்டேன்.. அதுக்கான டிரெயினிங்கை மதுரைக் கடையின் அட்மினிஸ்ட்ரேசனை உன்கையில் கொடுப்பதிலிருந்து நான் ஆரம்பித்தேன்.. சாதாரணமா பேங்க்கு போய் வர பயப்பட்டா.. பின்னாளில் கோடிக்கணக்கான ரூபாய்களை எப்படி ஹேண்டில் பண்ணுவங்கிறதுதான் என் கவலையா இருந்தது.. நான் உனக்கு கொடுத்தது டிரெயினிங்தான் காவ்யா.. நம்பு...”

“நம்பித்தானே இந்த நிலைமையில வந்து நிற்கிறேன்..? துணைக்குகூட ஆள் இல்லாம பேங்குக்கு போய் வந்தேனே.. அந்த முதல் தடவையில என் அண்ணன் துணைக்கு வரப் போய் சமாளிச்சுட்டேன்.. இல்லைன்னா.. வழியில் யாராச்சும் பணத்தை பிடுங்கிக்கிட்டு ஓடிட்டாலும்

இதே கேள்வியைத்தானே நீங்க கேட்டிருப்பீங்க.. இந்த திருட்டுப் பட்டத்தைத்தானே அன்னைக்கும் நீங்க கட்டியிருப்பீங்க...”

“காவ்யா ப்ளீஸ்.. என்னை புண் படுத்தாதே.. உன் அண்ணன் சொன்னதும் முறையான செக்யூரிட்டிக்கு நான் அரேன்ஜ் பண்ணினேனா இல்லையா..?”

“அதையும் அண்ணன் சொல்லித்தானே நீங்க செய்தீங்க..? உங்களுக்கே தோணனல்ல.. பணம் காணாமப் போனபோதும் என்னைக் காப்பாத்த என் அண்ணன்தானே ஓடிவர வேண்டியிருந்தது..? அன்னைக்கு மட்டும் சரியான சமயத்தில பணத்தை புரட்டிக்கிட்டு என் அண்ணன் ஓடிவாரம இருந்திருந்தா என்ன கதியாயிருக்கும்..?”

அண்ணன்.. அண்ணன்.. என்று அவள் கண்ணதாசனிடம் காட்டிய சொந்தத்தில் தான் அன்னியப் பட்டுப் போனதைப் போல உணர்ந்தான் அர்ஜீன்...

கண்ணதாசன் வராவிட்டால் என்னவாகியிருக்கும்..? அந்தப் பணத்தை எடுத்தது யாரென்று அர்ஜீன் கண்டு பிடித்து காவ்யாவின் முன்னிலையில் நேகாவை தலைகுனிய வைத்திருப்பான்.. கடையை விட்டு பணம் வெளியில் போகவில்லை என்பது அவனுக்குத் தெரியும்..

கடையின் வாசலை மூடிவிட்டு.. அங்கிருந்தவர்களின் உடமைகளை அவன் சோதித்திருக்க மாட்டானா..?

காவ்யாவும்.. பாவனாவும் தான் அவர்களின் கைப்பைகளை கவிழ்த்து காட்டி விட்டார்களே.. பணத்தை காவ்யாவின் இருப்பிடத்தில் ஒளித்து வைத்தால் கை மறதியாக அவள் வைத்து விட்டாலென்று கதை திரும்பி விடுமென்று.. திருடி பட்டத்துடன்.. அந்தப் பணத்தையும் திருப்பிக் கட்டும் பொறுப்பில் அவளை பிணைத்துவிட நினைத்து நேகா தன் பொறுப்பில் அதை மறைத்து வைத்து விட்டாளே...

## 124

*தர்மத்தின் வாழ்வு தன்னை...*
*நீ காத்துவிட ஆசைகொண்டேன்...*

**அ**ர்ஜீனுக்கு நேகாவின் புத்தி எப்படிப் போகுமென்று அனுமானிக்க முடிந்திருந்தது...

காவ்யாவுக்கு இரண்டு வகையான இழப்புக்களை உண்டாக்க அவள் திட்டம் போட்டிருந்தாள்...

முதலாவது அவளுக்கு ‘திருடி’ பட்டம் கொடுக்க வேண்டும்.. இரண்டாவது அவள் லட்சக்கணக்கான பணத்தை கையிலிருந்து கட்ட வேண்டும்...

‘இவ இந்தக் கடையில வேலை செய்து வாங்கின சம்பளத்தை மொத்தமா சேர்த்தால்கூட இந்தப் பணத்துக்கு ஈடாகாது...’

இதுதான் நேகாவின் சிந்தனையாக இருந்தது.. அதை அர்ஜீனும் உணர்ந்து விட்டிருந்ததினால்தான் காவ்யாவிடமிருந்து விசாரணையை ஆரம்பித்தான்...

பணம் உன்பொறுப்பில்தானே இருந்தது என்ற கேள்விக்கு அவள் ஆமாம்.. இங்கேதான் வைத்திருந்தேன்.. பாத்ரூம் போய் விட்டு திரும்பி வருவதற்குள் காணாமல் போய்விட்டது என்று சொல்லியிருந்தால்.. கடையில் இருக்கும் அனைவரின் உடைமைகளையும் செக் பண்ண வேண்டும்.. கடையின் கதவை இழுத்து மூடுங்கள் என்று அர்ஜீன் சொல்லியிருப்பான்.. அதைவிட்டு எடுத்த எடுப்பில் அவன் அதைச் சொன்னால் காவ்யாவை விசாரிக்கவே இல்லையென்று ஆகிவிடும்...

அர்ஜீன் அதைத்தான் செய்தான்.. காவ்யாமட்டும் பொறுமையாக பதில் சொல்லி.. கண்ணதாசனும் அங்கே வராமல் இருந்திருந்தால்.. அவன் காவ்யாவின்

முன்னிலையில் நேகாவை கையும் களவுமாகப் பிடித்து அவள் முகத்திரையை கிழித்திருப்பான்...

அப்படி அவனைச் செய்ய விடாமல் யார் தடுத்தது..?

அந்த எரிச்சலில் அவன் எரிந்து விழுந்தான்..

“அண்ணன்.. அண்ணன்.. அண்ணன்.. அந்த அண்ணன் மட்டும் அன்றைக்கு வராமலிருந்திருந்தால் நான் உன்னிடம் அந்த நேகாவை மன்னிப்புக் கேட்க வைத்திருப்பேன்.. அதுக்கு வழி விடாம உன் அண்ணன் குறுக்கே வந்திட்டான்..”

“ஓ... அப்படியொரு ஆசை உங்க மனசில இருந்துச்சா சாமி.. எங்க அண்ணன் என்னைக் காப்பாத்திட்டதிலே உங்களுக்கு இம்புட்டு மனக்குறையா..?”

“புரியாம பேசாதேடி...”

“எல்லாத்தையும் புரிஞ்சுதான் பேசறேன்...”

“கிழிச்சே.. எப்பப் பாரு.. அண்ணன்.. அண்ணன்னு சொல்லிக்கிட்டு.. அண்ணன் மேல அவ்வளவு பாசமிருக்கிறவ எதுக்காகடி என்னைக் காதலிச்ச..?”

இது என்ன மாதிரியான வாதம் என்று காவ்யாவிற்கு சுத்தமாக பிடிபடவில்லை.. அண்ணன் மீது அன்பும் பாசமும் வைத்திருக்கிறவர்கள் காதலிக்கவே கூடாது

என்று இவன் சொல்லுகிறானா.. இல்லை.. இவனைக் காதலித்து தொலைத்தவளுக்கு.. அண்ணன்மீது பாசம் இருக்கக் கூடாது என்று இவன் சொல்லுகிறானா என்று குழம்பிப் போனாள் அவள்..

“இந்த வியாக்கினத்த எங்கேயும் நான் கேட்டதில்ல..”

“உன்னைப் போல ஒரு காதலியையும் எங்கேயும் நான் பார்த்ததில்ல...”

“நேகாவை விட்டுட்டீங்களே சாமி..”

காவ்யா நினைவு படுத்த அர்ஜீன் இமைக்காமல் அவளைப் பார்த்தான்.. ஒரு நொடிக்கு மேல் அவன் பார்வையை சந்திக்க முடியாமல் அவள் முகம் சிவக்க முகத்தை திருப்பிக் கொண்டாள்.. அவன் மனதில் வெற்றிக் கொடி பறந்தது...

“இப்ப எதுக்காக அவ பெயரை இழுக்கற...”

“இல்ல.. என்னப்போல ஒருத்தியத்தான் உங்களுக்கு பிடிக்காது.. அவ குடும்ப குத்து விளக்கு.. உங்களுக்கேத்த கோடிஸ்வர ஜோடி... உங்க அப்பாவோட மனம் கவர்ந்த மருமக...” காவ்யா அடுக்கிக் கொண்டே போக...

“கொஞ்சம் நிறுத்தறியா..?” என்று அவன் கடுப்பானான்...

“ஏஞ்சாமி..?” என்று அப்பாவியாக இமை கொட்டி அவன் கடுப்பை அதிகப் படுத்தினாள் அவள்...

“இப்ப எதுக்காக என்னை சாமி.. சாமிங்கிற..?”

“அதுவா..? நீங்க பெரிய கோடிஸ்வரர்..”

“ஓஹோ...”

“எனக்கு எட்டாத உசரத்தில இருக்கிற மகராசன்..”

“அப்ப சாமி.. இப்ப மகராசனா..?”

“உங்களுக்கு பூப்போட்டுக் கும்பிட்டாலும் குத்தமில்ல...”

“அதையெதுக்கு வேஸ்டா செய்யற..? என்கிட்ட வந்து.. கட்டி.. ஒரு முத்தம் கொடு போதும்.. இந்த சாமி உனக்கு கேட்ட வரமும் கொடுக்கும்.. நீ கேட்காத வரமும் கொடுக்கும்...”

அவன் நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாக அழுத்திச் சொல்ல அவள் முகம் ரத்தமாக சிவந்து விட்டது...

‘என்ன தைரியம்.. கொஞ்சம் இடம் கொடுத்தாப் போதுமே.. இவன் சந்துக்குள்ள சிந்து பாடிருவானே...’

“என்ன.. பேச்சையே காணோம்..?”

அவன் அவளைப் பார்த்தபடியே இமையை சிமிட்ட.. காவ்யாவின் ரத்த அழுத்தம் எகிறியது..

“கொழுப்பா..?” அடிக் குரலில் சீறினாள்...

“ஆமாண்டி.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?” அவனும் விட்டுக் கொடுக்கவில்லை...

“உங்க முகத்தில விழிச்சாக்கூடப் பாவம்ன்னுதானே ஊரு விட்டு ஊரு ஓடி வந்திருக்கேன்..? இங்கேயும் வந்து நிக்கனுமா..?” சூடாக அவள் கேட்டாள்...

அவனை விட்டு அவள் விலகி வந்து விட்டதை அவள் நினைவு படுத்தியதில் அவனது தன்மானம் அடிவாங்கியது...

“அதுதானே உன் பிழைப்பு..” அவன் கண்கள் இடுங்க கேட்டான்...

“என்னது..?” அவள் திகைத்து முறைத்தாள்...

“என் காதல் உண்மையானதுடி.. உன்னைப் போல பொய்யாய் நான் காதலிக்கலை...”

“நான் பொய்யாய் காதலித்தேனா..?”

“யெஸ்...”

“எதுக்கு சாமி.. உங்ககிட்ட இருக்கிற பணங்காசுக்கு ஆசைப்பட்டா பொய்யாய் காதலிச்சேன்..?”

“எதற்க்கெடுத்தாலும் இதை ஒன்றை சொல்லிவிடு..”

“வேற எதைச் சொல்ல சொல்றீங்க சாமி.. உங்க காரு.. பங்களாவைப் பார்த்து ஆசைப்பட்டேனா..?”

“ஏய்ய்...”

“இல்லை.. நீங்க மதுரையில வாங்கி வைச்சிருக்கிற கடையைப் பாத்து ஆசைப்பட்டேனா..?”

“காவ்யா...”

“பொய்யாய் காதலிச்சேனாமில்ல.. அப்ப உண்மையாய் யார் காதலிச்சதாம்..? அந்த நேகாவா..?”

“அவளை ஏண்டி இப்ப இழுக்கற..?”

“எனக்குத் தெரியனுமில்ல..? எதை வைச்சு நான் பொய்யாய் உங்களைக் காதலிச்சேன்னு சொல்றீங்க...”

“உண்மையாக் காதலிச்சவ விட்டுவிட்டு ஓடிப் போகிறதிலேயே குறியாய் இருக்க மாட்டா...”

“என்னது..? நான் உங்கள விட்டுவிட்டு ஓடிப்போறதிலேயே குறியாய் இருந்தேனா..? இது எப்ப..?”

“எதுக்கெடுத்தாலும் ரெஸிக்னேசன் லெட்டரை நீட்டினது யாருடி..? நீ தானே..?”

"ஓ.. மொட்டைத் தலைக்கும்.. முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டாகிறதா..? என் மரியாதை பாதிக்கப் பட்டதில நான் வேலையை விடறேன்னேன்.. அதுக்கும்.. இதுக்கும் என்ன சம்பந்தம்..?"

"நான் வேணும்ன்னு நினைச்சிருந்தா.. நீ எடுத்ததுக் கெல்லாம் வேலையை விட்டுப் போறேன்னு சொல்லியிருக்க மாட்டேடி..."

"உங்க ஊரில அது ஒரு குத்தமா சாமி..."

"இந்த இடக்குப் பேச்சுக்கொன்னும் குறைச்சலில்ல.."

"அதான் குறைச்சலில்லாம நேகா இருக்கிறாளில்ல.. அப்புறமும் எதுக்கு சாமி அலுத்துக்கறிங்க..?"

"இன்னொரு தரம் சாமின்னு சொன்ன.. உன்னை கொன்று புதைச்சிருவேன்.. வெறுப்பேத்தறதிலயே குறியாய் இருக்கா.. அந்த நேகாவோட பெயரைச் சொல்லாதேன்னு சொல்றேனில்ல.. அப்புறமும் எதுக்காகடி அவ பெயரை இழுக்கற..?"

"ஓ.. அவங்கள்ளாம் பெரியவங்க.. மாடி வீட்டு மகாராணி.. ஆனானப்பட்ட அர்ஜீனன் சாரைப் பெத்த பார்த்தசாரதி சாரோட மருமகளாகப் போகிறவங்க.. அவங்க பெயரை நான் இழுக்கலாமா..? கூடாதுதான்.. தப்புத்தான் சாமி.. மன்னிச்சிருங்க..."

“யாருக்கு.. யார் மருமகளாகப் போகிறது..? உன்னை...”

அர்ஜீன் கோபம் அதிகரித்தவனாக காவ்யாவின் கழுத்தில் விரலைப் பதித்து விட்டான்.. அவன் கைகளுக்கிடையில் கழுத்தை கொடுத்திருந்த போதும் அஞ்சாமல் அவள் அவன் முகம் பார்த்ததில் உதட்டைக் கடித்துக் கொண்டு விரலை விலக்கி விட்டு...

“என்னை கொலைகாரனாக்கறேயேடி..” என்று குமுறினான்...

“எதுக்கு சார் இத்தனை கோபம்..? அந்த நேகாவின் பெயரை நான் சொன்னதுக்கா இத்தனை கோபம்..?”

“வேணாம் காவ்யா.. விட்டுவிடு.. அவ பெயரைச் சொல்லாதே...”

“அதுதான் ஏன்..?”

காவ்யா விடாப்பிடியாய் வழக்கடிக்க...

“மனுஷியாடி நீ..?” என்று உக்கிரமானான் அர்ஜீன்...

“அவ பெயரைக் கேட்டாலே எனக்குப் பற்றிக்கிட்டு வருது.. அவளால்தானேடி இவ்வளவும்..?”

“ஏன்..? உங்கப்பாவினால் இல்லையா..?” காவ்யா நிதானாமாக கேட்டாள்..

"காவ்யா.."

"நேகா மேல தப்பிருக்கலாம்.. ஆனா அதுக்கு இடம் கொடுத்தது யாரு..? அவ என்ன அவமானப் படுத்தியிருக்கலாம்.. ஆனா அதை தூண்டி விட்டது யாரு..?"

"வேற பேசலாம்டி.."

"எதுக்கு..? திரும்பவும் நான் ஏமாறுகிறதுக்கா..?"

காவ்யாவின் கேள்வியில் அடிபட்டுப் போனவனாக முகம் சிறுத்துப் போனான் அர்ஜீன்...

"நான் ஏமாற்றுக்காரனாடி..?"

"நான் ஏமாறுகிறவ..."

"சொன்னாக் கேளு காவ்யா..."

"வேணாம்.. உங்களுக்கும் எனக்கும் ஏழாம் பொருத்தம்..."

"மொத்தப் பொருத்தத்தையும் நான் உண்டாக்கி காட்டறேண்டி.."

"அது என்ன தேவைக்கு..?"

"நான் உனக்கு தேவையில்லையா..?"

ஆழ்ந்த குரலில் அர்ஜீன் கேட்டான்.. அந்தக் குரலில் அடி மனதிலிருந்த காதல் எழும்ப முயல.. அதன் அதிர்வில் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள் காவ்யா.. விழியோடு விழி கலக்க இருவரும் அசையாமல் நின்றார்கள்..

“ஹாய்...”

கீழேயிருந்து கார்த்திகின் உற்சாகக் குரல் கேட்க.. இனிய கனவு கலைந்து போனவர்களாக இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.. கார்த்திக்கின் பார்வை காவ்யாவின் பார்வையைச் சந்தித்ததும் அவன் கண்களில் மின்னல் வெட்டியது...

“போச்சுடா...” அலுத்துக் கொண்டான் அர்ஜீன்...

“இன்னைக்கு ராமாயணக் கதை கரெக்டா நடந்திருச்சுன்னு சொல்லப் போறான்...”

அவன் காவ்யாவை முறைத்த முறைப்பில் அக்கினி கொழுந்து விட்டு எரிந்தது...

# 125

## கடல் தேடும் நதி போல் – நான்.. உனைத் தேட ஆசைகொண்டேன்...

“**அ**வன் எனக்குத் தம்பிடி...”

“நான் மட்டும் என்ன.. அவர் உங்களுக்கு மாமன்.. மச்சான் முறையாகனும்னா சொன்னேன்..?”

“நீ அடங்கவே மாட்டியா காவ்யா..?”

“அது என்ன தேவைக்குன்னுதான் நானும் கேட்டுக்கிட்டே இருக்கேன்...”

“நீ அவனுக்கு அண்ணி முறையாகனும்டி..”

அர்ஜீனின் இந்த வார்த்தைகளில் சிறகடித்துப் பறந்த மனதை இழுத்துப் பிடிக்க பகீரத பிரயத்தனம் செய்தாள் காவ்யா...

“அதுக்கு கல்யாணம்ன்னு ஒன்னு நடக்கனும்.. அந்த நினைப்ப மனசில வைச்சுக்கிட்டாத் தேவலை..”

“மேரேஜ்தானே..? வா.. பண்ணிக்கலாம்.. நான் உன் நினைப்பைத்தானே மனதில வைத்துக்கிட்ட இருக்கிறேன் காவ்யா…”

“டயலாக் விட்டது போதும்.. உங்க அப்பா இருக்கிற இருப்புக்கு.. உங்களுக்கும்.. எனக்கும் கல்யாணம் செஞ்சு வைச்சிட்டுத்தான் வேற வேலை பார்ப்பாரு…”

“அவரைப் பற்றி நீ கவலைப்படாதே…”

“உங்களுக்கென்ன சாமி.. ஈஸியா சொல்லிப் புடுவீங்க…”

“மறுபடியும் சாமியா..? ஏண்டி இந்தக் கொடுமை பண்ற..? கோபமிருந்தா நாலு அடி அடிச்சிருடி…”

“அந்த பழி பாவமெல்லாம் எனக்கு வேணாம்…”

“ஆமாமாம்.. நீ பழிபாவத்துக்கு அஞ்சாத ஆள்தான்.. உன்னைக் காதலிச்ச பாவத்துக்கு என்னை லோலோன்னு சுத்தவிட்டுட்டு நீ உணக்கையாய் பேசிக்கிட்டு நிற்கிற.. நானும் கேட்டுக்கிட்டிருக்கேன்…”

“ஆமாமாம்.. நீங்க ஒன்னும் தெரியாத கைப்புள்ள தான்.. இந்த கைப்புள்ள காதலச் சொல்லிட்டு கனடாவுக்கு பறந்துருமாம்.. இந்தக் கைப்புள்ளய பெத்த அப்பா கடைக்கு வந்து நிப்பாராம்.. வந்த மொத நாள்லயே என்ன ஓரம் கட்டி

உக்கார வைப்பாராம்.. அதுவும் பத்தாதுன்னு என்ன ஓட்டி விடறதுக்காக அவரோட வருங்கால மருமகள் பிளான் போட்டு வர வைப்பாறாம்.. பத்தாக் குறைக்கு அவருக்கு நான் ஆரத்தி எடுத்து உள்ளே கூப்பிடனும்பாராம்.. அதுவும் பத்தாதுன்னு அவரும் அவரோட மருமகளுமா கூட்டுசதி பண்ணி என்மேல திருட்டுப் பட்டம் கட்டுவாங்களாம்.. நான் இத்தனையையும் தட்டி விட்டுப்புட்டு இவரக் கண்டவுடன் கட்டித் தழுவி முத்தம் கொடுக்கனுமாம்.. இந்தக் கதையை எங்கேயும் கேட்டதில்ல...”

“போனதை விட்டுத் தள்ளுடி..”

“அது உங்க புத்தி.. என் புத்தி கிடையாது..”

“மறந்துவிடு காவ்யா...”

“உங்களைத்தானே...?”

காவ்யா விட்டுக் கொடுக்காமல் கேட்டதில் கண்சிவந்தான் அர்ஜீன்...

“நீயேண்டி அதிலயே குறியாய் இருக்க..?”

“ஏன்னா.. என்னாலே எதையும் மறக்க முடியாது..”

காவ்யா அழுத்தம் திருத்தமாக அவள் முடிவை சொல்லி விட்டாள்.. கார்த்திக்கின் குரல் கேட்டதில் அர்ஜீன்

திரும்பிப் பார்த்தான்.. அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்த கார்த்திக்கை வழியிலேயே மடக்கி விட்ட சரவணன்.. மகனிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருக்க.. அந்த இடைபட்ட நேரத்தை பயன்படுத்திக் கொண்ட அர்ஜீன்..

“எதையும் மறக்க முடியாதுன்னா.. என்னையும் உன்னாலே மறக்க முடியாதுடி..” என்று நிச்சயத்துடன் சொன்னான்...

“ஏற்கனெவே மறந்தாச்சு...”

“ஆர் யு ஷ்யூர்..?”

“ஆமாம்னு சொல்றேனில்ல...”

“ஈஸிட்..?”

சட்டென்று அவளை இழுத்த அர்ஜீன்.. பால்கனியின் சுவர் மறைவில் அவளைக் கட்டிப் பிடித்து.. அவள் முகம் நோக்கிக் குனிந்து அவள் உதடுகளில் அவன் உதடுகளை பதித்துவிட்டான்...

ஆழமான அந்த முத்தத்தில் இருந்து விடுபட முடியாமல் மூச்சுத் திணற நின்று விட்டாள் காவ்யா...

“அண்ணா..”

கார்த்திக்கின் குரல் சமிபித்துவிட... காவ்யாவை விடுவித்தவன் அவளை சுவர் மறைவில் விட்டுவிட்டு

அவன் மட்டும் வெளியேறி கார்த்திக்கிடம் போய் நின்று கொண்டான்...

அவன் இறுக்கிப் பிடித்திருந்ததால்.. அவளது பின்னந்தலையின் தலைமுடிய கலைந்து கசங்கியிருந்தது.. அவனின் நீண்ட முத்தத்தில் அவள் முகம் கன்றிச் சிவந்திருந்தது.. சீரான சுவாசத்தை விட முடியாமல் அவள் மூச்சுத் திணறி தவித்து நின்றாள்...

அந்தக் கோலத்தில் அவளைக் கார்த்திக் பார்த்து விடாமல் தடுத்து நிறுத்தி விட்ட அவனது யுக்தியில் அவள் தன்னை சரிப்படுத்திக் கொண்டு சீராக மூச்சு விட முயன்றாள்...

மதுரை கடையிலும்.. இதைப் போல பாவனாவிட-மிருந்து.. அவளை அவன் தப்புவித்த நிகழ்வு அவளுக்கு நினைவுக்கு வந்து தொலைத்தது...

‘செய்யறதையும் செஞ்சுட்டு.. எப்படித்தான் எதுவுமே நடக்காததைப் போல மத்தவங்க முன்னால போய் நிக்கிறானோ...’

அவளுக்கு ஆயாசமாக இருந்தது.. சற்று முன்னால் அவன் தொட்டபோது அவனைத் தள்ளி விட மறந்து அவன் கையில் பாகாய் குழைந்து உருகிய அவளது பலவினத்தில் தன்னைத்தானே அவள் நொந்து கொண்டாள்...

'அவன் முத்தம் கொடுத்தா.. தள்ளி விட்டிருக்க வேணாமா..? அத விட்டுட்டு.. அவன் தொட்டதுக்கு மறுப்புச் சொல்லாம இருந்து தொலைச்சா.. அவன் என்னைப்பத்தி என்னன்னு நினைப்பான்..?'

சுவர்மீது சாய்ந்து நின்று தனக்குள் மருகிக் கொண்டிருந்தவளின் காதில்..

"காவ்யா..." என்ற சுமதியின் அழைப்பு விழுந்தது...

"வந்துட்டேன்..."

வேறு வழியில்லாமல் அவள் பால்கனி சுவர் மறைவிலிருந்து வெளிப்பட்டு.. சுமதியை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்...

அவளுடன் தனிமையில் பேசி விடவேண்டும் என்று நினைத்திருந்தது நடக்காமல் போனதில் கார்த்திக் சோகமாகி விட்டான்..

"அண்ணா.. அவ போறாளே..."

"சித்தி கூப்பிட்டா.. போகத்தானே வேணும்..?"

"இன்னைக்காவது அவகூட ஒரு வார்த்தையாவது தனிமையில் பேசிவிடனும்னு ஆசைப்பட்டு ஓடி வந்தேண்ணா..."

"வந்தவன் நேரா பால்கனிக்கு வந்திருக்க வேண்டியதுதானே..? நீ கீழேயிருந்து 'ஹாய்' சொன்னதும்

அடுத்த செகண்டிலயே மாடிக்கு ஓடி வந்திருவேன்னு நினைத்தேன்.. ஊஹீம்.. நீ சுத்தவேஸ்டுடா.. காதலுக்கும் உனக்கும் காததூரம்...”

“அதெல்லாம் ஒரு கத்தரிக்காய் தூரமுமில்ல.. நான் ஓடி வந்தப்ப.. டாடி என்னைத் தேடி வந்திட்டார்...”

‘வாழ்க சித்தப்பா..’ மனதுக்குள் வாழத்தியபடி வெளியே...

“ஓ மை காட்..! சித்தப்பாதான் உன் காதலுக்கு குறுக்கே வந்துட்டாரா..?” என்று பரிதாபப் படுவதைப் போல கேட்டான் அர்ஜீன்...

“ஆமாம்ண்ணா..” சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னான் கார்த்திக்...

“என்னவோ.. உன் டாடி உன் காதலுக்கு குறுக்கே நிற்கமாட்டார்ன்னு சொன்ன..? இப்ப இப்படியாகிருச்சு..?” வாய்ப்புக் கிடைத்து விட்ட சந்தோசத்துடன் சொல்லிக் காட்டினான் அர்ஜீன்...

“அவரென்ன தெரிஞ்சுக்கிட்டா குறுக்கே வந்தார்..? இப்போப் பார்த்து அந்த மும்பை கிளையன்ட் அவருக்கு போன் பண்ணினா.. விவரம் கேட்க என் வழியை மறிக்காம அவர் என்ன பண்ணுவார்..?”

“என்னவோ போடா கார்த்திக்.. எனக்கென்னவோ.. நீ அவ்வளவு ஈஸியா அவளிடம் காதலைச் சொல்லி விட முடியாதன்னு தோணுது...” ஆழகான பார்வையுடன் சொன்னான் அர்ஜீன்..

அதையறியாத கார்த்திக்...

“ஏன் அப்படிச் சொல்ற..? இன்னைக்கோட நாள் முடிஞ்சிருச்சா என்ன..? நாளைன்னு ஒன்னு வரவே வராதா..?” என்று தன்னம்பிக்கையோடு கேட்டான்..

‘அவளை நீ விடவே மாட்டே..’ பல்லைக் கடித்தான் அர்ஜீன்...

“டிரை பண்ணு.. முடியுதான்னு பார்ப்போம்..” கைகளைக் கட்டியபடி கார்த்திக்கை முறைத்தான் அவன்..

“முடியும்ண்ணா.. இன்னைக்குத்தான் நீ பார்த்தியே..”

“என்னத்தைப் பார்த்தேன்..?”

“நான் கீழேயிருந்து ஹாய் சொன்னேன்.. அவ பால்கனியிலயிருந்து என்னைப் பார்த்தா...”

‘ஆரம்பிச்சுட்டாண்டா...’

“அவ என்னைப் பார்க்க.. நான் அவளைப் பார்க்க..”

‘டேய்.. ஊடே நானும் பார்த்தேண்டா.. அதையேண்டா நீ பார்க்கலை..?’

"கண்ணோடு கண் கலந்துச்சே.."

'ஒரு மண்ணும் கலக்கலை.. அவ கல்லையும் மண்ணையும் பார்க்கிறதைப் போலத்தான் உன்னையும் பார்த்து வைச்சா...'

"இது இதிகாசக் காதல்ண்ணா..."

'வேணாம்டா தம்பி.. இது நாள் வரைக்கும் உனக்கும் எனக்கும் நல்லாத்தான் போய்க்கிட்டு இருக்கு.. நீயே அதைக் கெடுத்துக்காதே... உனக்கு காதலிக்க ஊர் உலகத்தில வேறு பெண்ணா இல்லை..?'

"இதில இருந்து உனக்கு என்ன தெரியுது..?"

'நீ அடிவாங்காம அடங்க மாட்டேன்னு தெரியுது..'

"அவளுக்கு என்மேல காதலிருக்குன்னு தெரியலை..?"

'தெரியலை..'

கார்த்திக்கை ஜென்ம விரோதி போல முறைத்தபடி மனதுக்குள் திட்டிக் கொண்டிருந்த அர்ஜீனைப் பார்த்து பாசமாக சிரித்து வைத்தான் கார்த்திக்...

'பயபுள்ள பாசப்பறவையை பறக்க விடறானே...'

மதுரையில் இருந்த பழக்கத்தில் அந்த வட்டாரத் தமிழில் மனதுக்குள் பேசிவிட்டு...

‘நானா..? பேசியது நானா..?’ என்று வியந்து போனான் அர்ஜீன்..

‘இதப்போல காவ்யாவிடம் பேசிக் காட்டனும்.. மகிழ்ந்து போயிருவா...’

மனக் கண்ணில் காவ்யாவின் மகிழ்ந்த முகத்தை நினைத்துப் பார்த்தபடி

“எங்கேடா போற..?” என்று நகர முற்பட்ட கார்த்திக்கை நிறுத்தி வைத்தான் அர்ஜீன்...

“என்னண்ணா இது..?” வியப்புடன் அவனைப் பார்த்தான் கார்த்திக்...

“எப்பவும் என்னைத் தடுக்க மாட்டிங்க.. இன்னைக்கு என்னன்னா நகர விட மாட்டேங்கறிங்க...?”

‘நகர்ந்தால்தான் நீ காவ்யா இருக்கிற பக்கமாவே வட்டமடிக்கிறயே.. மற்ற நேரங்களில நீ எங்கே போனா எனக்கென்ன வந்தது.. காவ்யா வந்து போகிற நேரங்களில மட்டும் நீ என்னை விட்டு இந்தப்பக்கம்.. அந்தப் பக்கம்ன்னு ஓரடி கூட எடுத்து வைக்க முடியாதுடா தம்பி...’

“அவ கிளம்பிருவாண்ணா..”

“கிளம்பினா கிளம்பட்டும்...”

“அண்ணா...”

“நீதானேடா சொன்ன.. இன்னையோட நாள் முடிஞ்சிராதுண்ணா.. நாளைன்னு ஒருநாள் வரும்ன்னு..”

அப்படித்தான் ஆனது.. காவ்யா.. கார்த்திக்கிடம் அகப்பட்டு விடாமல் தப்பித்து அவள் வீட்டுக்கு கிளம்பிப் போய் விட்டாள்.. திருநாளை போவார் புராணம் போல.. கார்த்திக்கும் நாளைக்கு நம் காதலைச் சொல்லி விடலாம் என்ற நம்பிக்கையோடு முயற்சி செய்தான்.. ‘நாளை’ கள் பல வந்து போயின...

காவ்யாவிடம் அவனால் காதலைச் சொல்ல முடியவே இல்லை...

# 126

*காற்றாகி நான் உன்னைத் தொட்டு..*
*கட்டித்தழுவ ஆசைகொண்டேன்...*

*“எங்கிருந்தோ ஆசைகள்..*
*எண்ணத்திலே ஓசைகள்..*
*என்னென்று சொல்லத் தெரியாமலே..*
*நான் ஏன் இன்று வாடினேன்..?”*

**கா**வ்யாவின் காதுகளில் ஹெட் போன் இருந்தது.. செல் போனில் ஒலித்துக் கொண்டிருந்த பாடல் சப்தம் எழுப்பாமல் நேரடியாக அவள் செவிகளுக்குள் இறங்கிக் கொண்டிருந்தது..

அவள் உறக்கம் வறாமல் புரண்டு படுத்தாள்.. கண்களை மூடினால் மூடிய இமைகளுக்குள் அவன் வந்து நின்றான்.. ஒற்றைக் கண்ணை மூடி கண்சிமிட்டினான்.. முரட்டுத்தனமாக அவளை இழுத்து அவள் இதழ்களில் முத்தம் பதித்தான்..

*"தாளாத பெண்மை வாடுதே..*
*பாடுதே...*
*யாரது..? சொல்லாமல்..*
*நெஞ்சள்ளிப் போவது..?"*

பாடல் மாறியிருந்தது.. அவள் தாள மாட்டாத தவிப்புடன் கட்டிலை விட்டு எழுந்தாள்.. ஜன்னல் வழி வெளியே பார்த்தாள்.. இரவின் நிசப்தத்தில் அந்தப் பகுதியில் ஜன நடமாட்டம் அடங்கியிருந்தது.. வானில் எழுந்த முழுநிலவும்.. அதைச் சுற்றியிருந்த நட்சத்திரக் கூட்டமும் அவளைப் பார்த்துக் கண்சிமிட்டின..

காவ்யா ஜன்னல் கம்பியில் முகம் புதைத்தாள்...

"மறக்க முடியாதுடி..."

அவன் விட்ட சவால் அவள் காதுகளில் எதிரொலித்தது...

“என்னை மறந்து உன்னால் இருக்க முடியாது..”

காவ்யா விம்மினாள்.. நிச்சயமான அவன் வார்த்தைகள் உரைத்த சத்தியத்தில் அவள் மனம் கரைந்தது.. அவன் தொட்ட இடங்களும் நினைவுகளும் அவள் நெஞ்சில் தேனாய் இனித்தன...

‘அர்ஜீன்..’ அவள் மனம் அரற்றியது...

“நீ என்னுடையவள்...”

அவன் விரல் நீட்டிச் சொன்ன சொந்தத்தில் மனம் நானந்தவள் படுக்கைக்கு திரும்பினாள்.. பழைய நினைவுகளை அசைபோட ஆரம்பித்தாள்..

அர்ஜீனைப் பற்றிக் கோர்வையாக நினைக்கும் போது... அந்த நினைவின் ஊடே பார்த்தசாரதி வந்து நின்றார்...

இனிய நினைவுகளின் சங்கிலி அறுந்து போவதை துயரத்துடன் உணர்ந்தாள் காவ்யா..

அவனுடைய அப்பாவை அவள் எப்படி மறந்தாள்..?

அவருக்கு அவளை பிடிக்கவில்லை.. அதை உள்ளங்கையின் நெல்லிக்கனியாக தெரிந்து கொண்ட பின்பும் அர்ஜினை அவள் நினைப்பது முட்டாள்தனமல்லவா...?

'அதிலும்.. அவன் கேட்ட கேள்வி..!'

அதை பார்த்தசாரதிதான் அர்ஜினை விட்டு கேட்க வைத்தார் என்பதை அவள் நினைவு கூர்ந்தாள்..

காவ்யாவின் நெஞ்சம் நடுங்கியது.. இன்று அந்தக் கேள்விளை கேட்க வைத்தவர்.. நாளை வரும் வேளையில் வேறு எந்தக் கேள்வியினையும் கேட்க வைக்க மாட்டார் என்று என்ன நிச்சயம்..?

இந்த ஒரு கேள்வியிலேயே காவ்யா உருக் குலைந்து விட்டாள்.. வேறு கேள்விகள் வந்து விட்டால் அவள் தாங்குவாளா...?

திரும்பத்திரும்ப இதை மனதில் உருவேற்றிக் கொண்ட பின்புதான் அர்ஜீனின் முத்தத்தை மறந்து காவ்யாவினால் தூங்க முடிந்தது..

மறுநாள் அம்புஜத்தின் வீட்டில் அர்ஜினை யாரோ.. எவரோ.. என்ற ரீதியில் அவள் பார்த்து வைக்க.. அவன் பல்லைக் கடித்தான்... மற்றவர்கள் அறியாத வண்ணம் அடிக்குரலில்..

"என்னடி ஆச்சு..? வேதாளம் திரும்பவும் முருங்கை மரத்தில் ஏறிருச்சா...?" என்று உறுமினான்..

"அது இறங்கினாத்தானே ஏறுகிறதுக்கு.. அது எப்பவும் முருங்கை மரத்திலதான் குடியிருக்குது.." காவ்யாவும் தாழ்ந்த குரலில் பதில் கொடுத்தாள்...

“எதுக்குடி இப்படி அடம் பிடிக்கிற...?”

“அதை உங்க அப்பாகிட்டப் போய் கேளுங்க...”

“அவரிடம் என்னத்தைக் கேட்க..?”

“உங்க மனசுக்கு பிடிச்ச மருமக நேகாதானேன்னு கேளுங்க...”

அவள் வேண்டுமென்றே அவனை வெறியேற்றுவதை புரிந்து கொண்டவனாக அவன் அவளையே முறைத்துப் பார்த்தான்..

அவள் அந்தப் பார்வைக் கெல்லாம் அஞ்சுகிறவளாக இல்லை..

கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா... என் ரீதியில் ஒரு பார்வை பார்த்துவிட்டு அம்புஜத்திற்கு கதைப் புத்தகம் வாசித்துக் காட்ட உட்கார்ந்து விட்டாள்...

‘இவளை என்ன செய்தால் தேவலாம்...’

ஏற்ற இறக்கத்துடன் கதை வரிகளை வாசித்தவளின் முகத்தில் வந்து போன உணர்வலைகளை ரசித்தவனுக்கு... அவளை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற ஆசை நெஞ்சில் தேன்றியது...

‘எங்கே...? நேற்றாவது வசமா பால்கனியில மாட்டினா.. இன்னைக்கு அதுக்கும் வழியில்லாம

பாட்டி பக்கத்தில ஒண்டிக்கிட்டிருக்கா...' ஏக்கப் பெருமூச்சு விட்டான்..

அந்தப் பெருமூச்சில் அவனை நிமிந்து பார்த்தவள் விழிகளை விலக்கிக் கொள்ள முடியாமல் திகைத்து விட்டாள்...

ஒரு ஆக்டோபஸ் போல அவளை ஆக்ரமித்தது அவனது பார்வை.. அவளை ஊடுறுவும் அந்தப் பார்வையிலிருந்து தப்பிக்க முடியாமல் தலை குனிந்து தரையை பார்த்தாள் அவள்..

கட்டுப் படுத்த முடியாமல் பொங்கியெழும் ஆசையென்னும் பிரவாகத்தில் அடித்துக் செல்லப் படாமலிக்க அவள் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது...

துளைக்கும் அவனுடைய பார்வை அவளை உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை ஆராய்ச்சியாக பார்த்தபடி.. என்னவோ மேய்ச்சல் நிலத்தைக் கண்டதைப் போல மேய ஆரம்பித்தது...

அவனின் அந்தப் பார்வையின் தாக்குதலை எதிர் கொள்ள முடியாமல் அவள் தவித்துப் போனாள்.. அவள் வயிற்றில் பரபரவென்ற ஓர் உணர்வு உற்பத்தியாகியது.. இதமான அந்த இம்சையின் கிளர்வில் அவள் உணர்வுகளைக் கட்டுப் படுத்தப் போராடினாள்...

அர்ஜீனின் முகத்தில் அவளை அறிந்து கொண்ட குறுஞ்சிரிப்பு உதயமானது... அவளை ஊடுறிவி பார்த்தபடியே அம்புஜம் கேட்ட கேள்விகளுக்கு அவன் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்...

“எப்பலே கல்யாணம் பண்ணிக்கப் போற..?”

அம்புஜத்தின் கேள்வியில் காவ்யா.. அதிர்ந்து நிமிர்ந்ததில் அவன் கண்களில் மின்னல் வெட்டியது...

‘கண்டுக்கிட்டானே...’

உதட்டைக் கடித்தபடி அவள் பார்வையை தழைத்துக் கொண்டாள்... அவளைச் சாப்பிட்டு விடுவதைப் போல தாகத்துடன் பார்த்தபடியே

“எப்பவோ...” என்றான் அர்ஜீன்..

“ஏண்லே... உனக்கென்ன நேத்துத்தான் பிறந்திருக்-கோம்கிற நினைப்பா...? உன்கூட படிச்சவனுங்கள்ளாம் இப்ப கைக்குழந்தையோட அதுக்கு மூக்கை சிந்தி விட்டுக்கிட்டு நிற்கிறாங்க.. நீ என்னடான்னா.. பப்பா மாதிரி.. கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு அடம் பிடிக்கறயே..” அதட்டினாள் அம்புஜம்...

“யாரு அடம் பிடிக்கிறது...?”

அர்ஜீன் காவ்யாவை பார்த்து புருவங்களை உயர்த்த.. அவள் அரண்டு போனவளாக முகத்தை திருப்பிக் கொண்டாள்..

அம்புஜத்தின் முன்னால் அவன் அப்படி செய்து வைத்ததில் அவள் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பி விட்டன...

'ஆத்தாடி.. இந்த மனுசன் என்ன இப்படிச் செஞ்சு வைக்கிறாரு.. பாட்டி என்ன பச்சப்புள்ளன்னு நினைச்சுக்கிட்டிருக்கு.. இந்தாளு அந்த நினப்ப 'சூசூ'ன்னு விரட்டியடிச்சுருவாரு போல இருக்கே.. எதுக்கும் இந்த மனுசன் முகத்தப் பார்க்காம சூதானமா இருந்துக்கனும்..' மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டாள்...

என்னதான் பத்திரமாக இருந்து கொள்ள வேண்டும் என்று அவள் தீர்மானித்தாலும்.. அவளால் அவன் முகத்தைப் பார்க்காத பத்திரத்துடன் இருந்து கொள்ள முடியவில்லை...

அவன் முகம் பார்க்காத அவளின் பிடிவாதப் பார்வையில் அவன் நமட்டுச் சிரிப்புடன் வேண்டுமென்றே..

"ஸ்.. ஆ..." என்று கையை உதறினான்..

"பார்த்து..." பதறிப் போய் தலை நிமிர்ந்தாள் காவ்யா..

அவன் கண்களில் தெரிந்த ரகசிய சிரிப்பில் அவனது யுக்தி புரிந்து விட.. அகப்பட்டுக் கொண்ட உணர்வில் நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள்...

"என்னலே...?" என்றாள் அம்புஜம்..

“கை விரல் பாட்டி... சுளுக்கிருச்சு...”

இல்லாத சுளுக்கை இருப்பதாக சொல்லிக் கொண்டு ஐயோ பாவம் போல முகத்தை வைத்துக் கொண்டான் அர்ஜீன்..

“விரல்ல சுளுக்கா...? இங்கே காட்டு...”

“ஏன்..? உங்களுக்கு சுளுக்கெடுக்க தெரியுமா...?”

“உன்னை அடிக்கத்தான் தெரியும்லே.. அதெல்லாம் காவ்யாவுக்குத்தான் கொஞ்சம்.. கொஞ்சம் தெரியும்..”

“வொண்டர் புல்....”

கண்களில் பல்ப் எரிய அவளிடம் கை நீட்டியவனை திகைப்புடன் பார்த்தாள் அவள்...

“என்ன...?”

“ஏங்க.. உங்க முன்னாலேதானே பாட்டியிடம் சொல்லிக்கிட்டு இருந்தேன்..? விரல் சுளுக்கிருச்சு... சுளுக்கை எடுத்துவிடுங்க..”

அவன் பிடிவாதமாக நீட்டிய கையை மடக்காமல் இருக்க.. தாழ்ந்த குரலில்...

“கையை மடக்கறிங்களா...? இல்லை ஒடிச்சுரவா...?” என்று சீறினாள் காவ்யா...

“ஒடிப்பியா.. அப்படின்னா...?” அர்ஜீனுக்குப் புரியவில்லை..

அவனும் தாழ்ந்த குரலிலேயே விளக்கம் கேட்டான்..

“ம்ம்ம்... முறிச்சிருவேன்னு சொல்றேன்..” கிசுகிசுப்பாக நொடித்தாள் காவ்யா...

அந்த கிசுகிசுப்பில் வெளிப்பட்ட அடாவடித்தனத்தில் அவனின் பழைய காவ்யா தென்பட்டதில் அவன் கள்ளுண்ட வண்டாக குஷியாகிப் போனான்...

“நீ என்ன வேணம்னாலும் செய்துக்க.. நான் உன்னுடையவன்.. இது உன்னுடைய கை...”

“வேணாம்.. வம்புக்கு வராதீங்க...”

“உன்னிடம் வராம இருக்க என்னால் முடியுமா..?”

“என்னது...?”

“வம்புக்குடி...”

“அதானே பாத்தேன்.. எனக்கென்னவோ.. உங்க கை சுளுக்கலைன்னு தோணுது.. நாக்குத்தான் சுளுக்கிக்கிட்டு இருக்கு...”

அவர்கள் தாழ்ந்த குரலில் வழக்கடித்துக் கொண்டிருக்க..

“என்னலே..” என்று விசாரித்தாள் அம்புஜம்..

“ஒண்ணுமில்லை பாட்டி... எங்கே சுளுக்கிச்சு.. எப்படி சுளுக்குச்சுன்னு கேட்டுக்கிட்டு இருக்கேன்..”

அர்ஜீனை ரகசியமாக முறைத்தபடி பதில் சொன்னாள் காவ்யா...

“இவன் கையை வைச்சுக்கிட்டு சும்மா இருக்க மாட்டான்ம்மா..”

அம்புஜம் சொல்லிக் கொண்டிருந்த போதே அதை நிருபித்தான்.. அர்ஜீன்.. அவனது கை இறங்கி.. டீப்பாயின் அடியில் நுழைந்து காவ்யாவின் கையைப் பற்றிக் கொண்டதில் அவள் அரண்டே போனாள்...

‘ஆத்தி.. இவன் பக்கத்தில் வந்தப்பவே நான் தள்ளி உக்காந்திருக்க வேணாமா...? இவனே காஞ்ச மாடு கம்மங் கொல்லையை கண்டுக்கிட்டதைப் போல முழிச்சு முழிச்சுப் பார்த்துக்கிட்டிருக்கான்.. அவன் கைக்கு எம்புடதைப் போல கூறு கெட்டத்தனமா கிட்ட உக்காந்து தொலைப்பேனா...? நேத்துக் கதையை இவன் இன்னைக்கும் ஆரம்பிச்சுட்டா.. எனக்கு ராத்தூக்கம் டாட்டா காட்டிருமே...’

# 127

## உன் குறும்புகளில் மனம் நனைந்து திளைத்து விட ஆசை கொண்டேன்...

**கா**வ்யாவின் கலவரமான முகத்தை குறும்புடன் பார்த்தபடி.. அவள் கைவிரல்களைப் பற்றிக் கொண்டான் அர்ஜீன்... அவள் கையை உருவ முயன்றாள்.. முடியவில்லை.. அவனது பிடி இரும்புப் பிடியாக இருந்ததில் அவள் கை விரல்கள் சலித்து ஓய்ந்து அவன் விரல்களுக்குள் அடக்கமானது தான் மிச்சமாயிற்று.. அவள் விரல்களால் விடுபட முடியவே இல்லை...

“கையை விடுங்க...” ரகசிய குரலில் அவள் மன்றாடினாள்...

“ஊஹீம்.. உன்னைக் கை விடறதாகவே இல்லை..” அவன் இருபொருள்பட முணுமுணுத்தான்..

“பாட்டி இருக்காங்களேன்னு பாக்கறேன்...”

“நானும் அதுக்காகத்தாண்டி பாக்கிறேன்.. இல்லைன்னா நடக்கறதே வேற...”

அர்ஜீனின் கண்சிமிட்டலில் என்ன நடந்திருக்கும் என்ற நினைவு வந்தவளாக முகம் சிவந்து போனாள் காவ்யா.. அவள் உடலில் கதகதப்பான ஓர் உணர்வு பரவியது.. இன்பமான அந்த அவஸ்தை உணர்வுகளில் சிக்கித் திணறினாள் அவள்..

'என்ன நடக்குமாம்...?' வாய் வரை வந்து விட்ட வார்த்தைகளை தொண்டைக் குழிக்குள்ளேயே தள்ளி விட்டாள் காவ்யா..

உடனே அவன் நீதானே கேட்டாய்.. பதிலைச் சொல்கிறேன் கேள் என்று நடத்த நினைத்தை பிட்டுப் பிட்டு வைத்து விட்டால் அவள் என்ன செய்வாள்...?

அர்ஜீனின் கை விரல்கள் அவள் விரல்களை நீவி விட ஆரம்பித்தன.. அவனின் தொடுகையில் மலர்ந்த மனதின் உணர்வுகளை மறைக்க முடியாமல் தத்தளித்தாள் காவ்யா...

அம்புஜத்தின் முன்னால் முகத்தின் உணர்வுகளை முகத்தில் பிரதிபலிக்காமல் கட்டுப்படுத்த திணறிப் போனவள்..

"பாட்டிகிட்டச் சொல்லிருவேன்..." என்று மிரட்டினாள்..

"சொல்லு.. என் வேலை ஈஸியா போயிரும்.."

“வேலையா...?” என்ன வேலை...?

“உன்னை மேரேஜ் பண்ணிக்கிற வேலைதான்..”

“நடக்கிற கதையை பேசறிங்களா..?”

“இதுதான் நடக்கும்டி...”

“இதைக் காதில பூவைச்சிருக்கிற யாருகிட்டயாவது சொல்லுங்க.. கேட்டுக்குவாங்க...”

“என்ன நீ...? உன் அண்ணன் என்னடான்னா அத்தைக்கு மீசை முளைக்கட்டும்ங்கிறான்... நீ என்னடான்னா காதில பூவைச்சிருக்கிறவங்களை தேடிப் பிடிக்கச் சொல்கிற.. ஏண்டி.. உனக்கும் உன் அண்ணனுக்கும் என்னைப் பார்த்தா எப்படி இருக்கு...?”

“நிச்சயமா எங்க வீட்டு மாப்பிள்ளை போல இல்லை...”

எதைச் சொன்னால் அவன் கோபப்படுவானோ.. அதைச் சொல்லி அவனைக் கடுப் பேற்றினாள்.. காவ்யா.. அவள் எதிர்பார்த்ததைப் போலவே அவன் கோபத்துடன் அவளை உறுத்துப் பார்த்தான்.. அவனது கவனம் சிதறிய அந்த நொடியில் தன் கை விரல்களை உருவிக் கொண்ட காவ்யா.. எதற்கும் இருக்கட்டுமென்ற ஜாக்கிரதை உணர்வுடன் அம்புஜத்தின் அருகே நகாந்து அமர்ந்து கொண்டாள்...

“உன் கற்பைக் காப்பாத்திக்கிறயாடி...” பற்களின் இடையே வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் அவன்...

காவ்யாவின் முகம் சிவந்து போனது.. அம்புஜம் அவனை புரியாத பார்வை பார்த்து..

“என்னமோ இவன் உன்கூட சண்டை போடற மாதிரியே எனக்குத் தோணுதே.. என்னவாம்..?” என்று காவ்யாவிடம் விசாரித்தாள்...

காவ்யா என்னவென்று சொல்லுவாள்...?

‘இதுக்குத்தான் தலைப்பாடாய் அடிச்சுக்கிட்டேன்.. இவன் கேட்டானா..’ அவள் அர்ஜீனை முறைத்தாள்...

“சுளுக்கெடுக்கிறேன் பேர்வழின்னு என் கைவிரலை உடைச்சுட்டாங்க பாட்டி...”

உண்மையாகவே கைவிரல்கள் வலிப்பதைப் போல் அவன் செய்த பாவனையில்...

‘எப்படித்தான் இப்படி நடிக்கிறானோ...’ என்று அதிசயித்துப் போனாள் அவள்...

“ஏம்மா.. அப்படியா...?”

காவ்யாவிடம் அம்புஜம் கேட்டாள்.. இப்போது ஆமாமென்றும் சொல்ல முடியாமல்.. இல்லையென்றும் சொல்ல முடியாமல் அவஸ்தைக்கு உள்ளானாள் காவ்யா..

“வேணும்னு செய்யலை பாட்டி.. அழுத்தி நீவி விட்டதில அவருக்கு வலி வந்திருக்கலாம்...”

அவன் சொன்ன காரணத்தையொட்டியே அவள் சொன்ன பதிலில் சமாதானமடைந்து விட்டாள் அம்புஜம்..

“மலையைப் பெயர்த்தெடுக்கிற ஆம்பளை நீ... இந்தச் சாதாரண விசயத்துக்குப் போய் இவ கூட சண்டைக்கு போறியாலே...? நல்லா இருக்குலே..” என்று அர்ஜீனை கடிந்து கொண்டாள்..

“ஹாய் பாட்டி...”

ஆர்ப்பாட்டமாக அறைக்குள் நுழைந்த கார்த்திக்கைக் கண்டதும் காவ்யாவின் முகம் மாறியது..

‘வந்துட்டானா...’ எரிச்சலுடன் அம்புஜத்தின் பக்கமாக முகம் திருப்பிக் கொண்டாள்...

விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல முகத்தைவைத்துக் கொண்டிருந்தவளிடம் தாழ்ந்த குரலில்

“இவனப் பார்த்தா உங்க வீட்டு மாப்பிள்ளை போல இருக்கா...?” என்று கேட்டான் அர்ஜீன்...

“என்னது...?!”

காவ்யாவின் உக்கிரமான விழிகள் அர்ஜீனைச் சுட்டெரிக்கும் சூரியனாக மாறின..

அதற்குள் அவர்களை சமீபித்து விட்ட கார்த்திக் உல்லாசமாக காவ்யாவை பார்த்தபடி படுஸ்டைலாக.. கண்ணுக்கு மாட்டியிருந்த கூலிங்கிளாஸை அவிழ்ந்து கையில் பிடித்து சுழற்றினான்...

'வீட்டுக்குள்ளேயும் கூலிங்கிளாஸ் போடறது மில்லாம.. அதை கையில பிடிச்சு ரங்கராட்டினம் போல சுத்தி வித்தை காண்பிக்குது..' காவ்யாவுக்கு பற்றிக்கொண்டு வந்தது...

"பார்த்தியா.. என் தம்பி அச்சு அசல் ரஜனி போல ஸ்டைல் காட்டறான் உனக்கேத்த மாப்பிள்ளைதான்.." அர்ஜீன் விடாமல் கலாய்த்தான்...

"அப்படியா...?" அவனை ஒரு மார்க்கமாக பார்த்த காவ்யா..

'இருக்குடா மச்சான் உனக்கு..' என்று மனதுக்குள் கருவிக் கொண்டாள்..

"எப்படி இருக்கீங்க..?" என்று காவ்யாவைப் பார்த்து கேட்ட கார்த்திக் அவள் முறைக்கவும்...

"பாட்டி.." என்று சோர்த்துச் சொல்லித் தப்பித்தான்..

"ஏன்லே.. கோட்டிக்காரனப் போல பேசி வைக்கிற.. இப்பத்தான காலம்பர நீ கம்பெனியைப் பார்க்க கிளம்பிப் போனப்ப என்னைப் பார்த்துட்டுட்டுப் போன.. போன பய

வேலயைக் கவனிக்காம போன சுருக்கில வந்து நிற்கிறதுமில்லாம என்னைப் பார்த்து எப்படி இருக்கீங்கன்னு வேற கேட்டு வைக்கறியேலே.. இது உனக்கே நல்லாயிருக்காலே..."

அம்புஜம் போட்ட போட்டில் கார்த்திக்கின் முகத்தில் வழிந்த அசடை பிடித்து வைக்க எத்தனை அண்டாக்கள் தேவைப்படும் என்று யோசித்தாள் காவ்யா...

"ஹி.. ஹி.. கம்பெனிக்கு போனாலும் எனக்கு உங்க ஞாபகம் தான் பாட்டி..." காவ்யாவைப் பார்த்தபடி சொன்னான் கார்த்திக்

"உன் பாசத்துல மகிழ்ந்து போயிட்டேன்லே.." இடக்காக அம்புஜம் பதில் சொல்லிய விதம் கண்டு

"களுக்..." என்று வாய் பொத்தி சிரித்தாள் காவ்யா..

அவனைத்தான் அவள் கேலி செய்கிறாள் என்ற நினைவின்றி அவள் சிரிப்பதை ஆசையுடன் பார்த்தவனை என்ன செய்தால் தகும் என்ற கொலைவெறிக்கு ஆளானான் அர்ஜீன்...

அவனின் கோபத்தை கடைக்கண்ணால் பார்த்தபடி.. கார்த்திக்கை நோக்கி ஒர் பார்வை வீச்சை அனுப்பி வைத்தாள் காவ்யா..

அவ்வளவுதான்.. அவன் கள் குடித்த நரியானான்...

“அண்ணா.. அவ என்னைப் பார்க்கிறாண்ணா..” என்று அர்ஜீனின் காதோரமாக பரபரத்தான்.

காவ்யா அவனைப் பார்த்ததை அர்ஜீனும் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.. கண் சிவக்க.. கொதித்துப் போனவனை இன்னும் கொஞ்சம் உசுப்பி விட்டான் கார்த்திக்...

“ம்ம்ம்.. நானும் பார்த்தேண்டா...”

“கிரின் சிக்னல் விழுந்துருச்சோ..”

“தெரியலை... எதுக்கும் இது டேஞ்சரஸ் சிக்னலான்னு கண்பர்ம் பண்ணிட்டு காய் நகர்த்து...”

“என்னண்ணா பயமுறுத்தற...?”

“பயமுறுத்தலைடா.. பெண் எனும் மாயப்பிசாசுன்னு பட்டினத்தாரே பாடி வைச்சிருக்கார்.. அதனாலேதான் சொல்றேன்.. பார்த்து நடந்துக்க..”

“பட்டினத்தாரா...?” கார்த்திக் திருதிருத்தான்...

அவன் கண்ணதாசனையே கண்டதில்லை.. பட்டினத்தாரை எங்கு கண்டான்..? பா.விஜய் காலத்தில் இருக்கிறவனிடம் பட்டினத்தாரைப் பற்றிச் சொன்னால் பாவம்.. அவன் என்னதான் செய்வான்...?

“தெரியலைன்னா விட்டுவிடு.. அதுக்காக இந்த முழி முழிக்காதே.. இப்பத்தான் அந்தப் பொண்ணு உன் பக்கமா

திரும்பி ஒற்றைப்பார்வை பார்த்திருக்கு.. அதுக்குள்ளே இந்த முழி முழிச்சு.. அந்தப் பெண்ணைத் திரும்பிப் பார்த்து தப்புன்னு நினைக்க வைச்சிராதே..."

"ஊஹீஹீம்.." கார்த்திக் விழியை சரி செய்து கொண்டான்..

அண்ணன் தம்பியின் சன்னக்குரல் பேச்சு காதில் விழாமல் போனாலும்.. அது தன்னைப் பற்றிய பேச்சுத்தான் என்பதை புரிந்து வைத்திருந்த காவ்யா.. ஜாடையாக அர்ஜீனின் முகத்தை ஓரக்கண்ணால் பார்த்தாள்...

அதில் எள்ளும் கொள்ளும் வெடித்தன...

'என் முன்னாலேயே இவனை இந்தப் பார்வை பார்க்கறியே.. உனக்கு எத்தனை தைரியம்டி..' அவன் நேருக்கு நேராக அவளை முறைத்தான்...

அதை காவ்யா கண்டு கொண்டதைப் போலவே அம்புஜமும் கண்டு கொண்டாள்...

"இப்ப எதுக்காகலே அவளை இப்படிப் முறைக்கிற..? அவ என்ன வேணும்ன்னா உன் விரலை ஒடிச்சா...?" அம்புஜம் அர்ஜீனுடன் சண்டைக்குப் போனாள்...

"பாட்டி.. இங்கே யாரும் உங்க செல்ல பேத்தியை முறைக்கல.. போதும்டா சாமி.. எனக்கு விரல் சுளுக்கினதும் போதும்.. வீண் பழியை நான் சுமக்கிறதும் போதும்.."

அர்ஜீன் அலுத்துக் கொள்வதைப் போல பாவனை செய்தான்..

கார்த்திக்கோ இது எதையும் கண்டு கொள்ளாதவனாக.. காவ்யாவின் பக்கம் மன்மத மணங்களை தொடுப்பதிலேயே குறியாக இருந்தான்..

ஒரு கட்டத்துக்கு மேல் அவனின் மன்மத பாணங்களை தாங்க முடியாமல் எழுந்து விட்டாள் காவ்யா..

"என்னம்மா காவ்யா.." என்ற அம்புஜத்திடம்

"வீட்டுக்கு கிளம்பனும் பாட்டி.." என்றாள்..

"இப்பத்தானேம்மா வந்தே.." ஏக்கத்துடன் கேட்டாள் அம்புஜம்..

அதற்குள் கார்த்திக் குதித்துக் கொண்டு எழுந்தான்..

"டிரைவர் வெளியே போயிருக்கான்... நான் வேணும்னா உங்களை டிராப் பண்ணவா..?"

'நீ இதுக்குத்தானே காத்திருக்க..' காவ்யாவுக்கு தலை வலிக்க ஆரம்பித்து விட்டது..

"அதுதான் கரெக்ட்.. நீ போ கார்த்திக்..."

அவளைத் துளைக்கும் பார்வை பார்த்தபடி கார்த்திக்கை தூண்டிவிட்டான் அர்ஜீன்... குதூகலமாகி விட்ட கார்த்திக்.. அம்புஜத்திற்கு தெரியாமல் ஒரு கையை

இழுத்து.. 'ஹீர்ரே..' என்ற குறியீட்டை உணர்த்தும் வகையில் வெட்டி வைக்க.. அதை காவ்யா பார்த்து விட்டாள்...

'தூண்டி விடறயா..' அர்ஜீனை வெட்டும் பார்வை பார்த்தாள்...

'நீதானேடி ஆரம்பிச்சு வைச்ச..' அவன் பதிலுக்கு பார்வையால் வெட்டினான்...

# 128

*சொன்னபடி கேளென்று-உன்..*
*காதைப் பிடிக்க ஆசை கொண்டேன்..*

"**ப**ரவாயில்லை பாட்டி... நான் டிரைவர் வந்த பின்னாலேயே போய்க்கறேன்.. இப்ப உங்களுக்காக ஆரன்சு ஜீஸ் கொண்டு வர்றேன்..."

காவ்யா அம்புஜத்தின் பதிலை எதிர்பார்க்காமல் அறையை விட்டு வெளியேறிவிட்டாள்...

"சூப்பர் சான்ஸ் அண்ணா... இன்னைக்கு பட்ஷி என்னை பலதடவை பார்த்துருச்சு.." கார்த்திக் முணுமுணுத்தான்..

“பட்ஷியா..?” அர்ஜீன் முகம் மாறினான்..

அவனுடைய காதலியை கார்த்திக் பறவையாக்கியதில் அவனுக்கு கொஞ்சம்கூட உடன்பாடில்லை..

“அவளைத்தான் சொல்றேண்ணா.. இப்ப அவ பின்னாலேயே நான் போகப் போறேன்...”

“போயி....?”

“என் காதலைச் சொல்லப் போறேன்.. முடிஞ்சா..”

கார்த்திக் பேச்சை முடிக்காமல் கண்களைச் சிமிட்டி அர்ஜீனின் ரத்த அழுத்தத்தை எகிற வைத்தான்...

“முடிஞ்சா..?” கண்கள் இடுங்க அர்ஜீன் கேட்டான்..

“முதல் ‘இச்’சைக் கொடுக்கப் போறேன்..”

அர்ஜீனின் கை முஷ்டி இறுகுவதை அறியாக ஆர்வக் கோளாறுடன் சொல்லி விட்டு... படுவேகமாக காவ்யாவை தொடுத்தான் கார்த்திக்..

“இவன் எங்கேலே போறான்..?” அம்புஜம் அர்ஜீனிடம் கேட்டாள்..

காவ்யாவிடம் காதல் சொல்லப் போகிறான் என்று அவன் வாயால் எப்படி அர்ஜீன் சொல்வான்...? அதற்கென்று மற்றவர் வாயையும் இரவல் வாங்க முடியாது என்பதினால்..

“அதானே.. போய் என்னன்னு கேட்டுட்டு வந்துடறேன் பாட்டி..” என்று சொன்னபடி அவனும் எஸ்கேப் ஆகிவிட்டான்..

காவ்யா முன்னால் போக... அவள் பின்னால் படு ஸ்டைலாக விசிலை அடித்தபடி கார்த்திக் போக.. அவனைக் கொன்றுவிடும் கொலை வெறியுடன் அர்ஜீன் போக.. என்று அவர்கள் மூவரும்... ஒருவர் பின் ஒருவராக மாடிப்படிகளில் இறங்கினார்கள்...

வளைவினில் திரும்பிய கார்த்திக் ஹாலைப் பார்த்தான்.. அங்கே யாருமில்லையென்றதும்.. முன்னே சென்று கொண்டிருந்த காவ்யாவை இரண்டிரண்டு படிகளாக தாவி.. முந்தி.. வழிமறித்து நின்றான்...

“காவ்யா...”

மூச்சிரைக்க வந்து முன்னால் நின்றவனைப் பார்த்ததும் பயந்து போனவளாக இறங்கின படியிலிருந்து மேலே ஏறினாள் காவ்யா...

“நில்லுங்க காவ்யா... உங்களிடம் ஒன்னு சொல்லனும்...”

‘இவன் ஒன்னு... ரெண்டு சொல்ல நான்தான் கிடைச்சேனா..?’

“என் மனதுக்குள்ள உங்களுக்கு கோவில் கட்டியிருக்கேன் காவ்யா...”

‘என்னடா இது.. என்னவோ கும்பாபிஷேகத்துக்கு அழைக்கிறதப் போல பேசி வைக்கிறானே...’

காவ்யா பயந்து போனாள்.. அவள் விழிகள் சுழன்று சுமதியைத் தேடின...

“அம்மா மார்க்கெட்டில இருந்து வருகிறதுக்குள்ள நான் பேசியாகனும் காவ்யா..”

‘அடக்கடவுளே..! அவங்க வீட்டில இல்லையா..? இது தெரிஞ்சிருந்தா பாட்டியை விட்டு நகர்ந்திருக்க மாட்டேனே..’

“ஐ லவ் யு காவ்யா..”

கார்த்திக் சொல்லியே விட்டான்.. சும்மாவும் சொல்லாமல் அவள் கைவிரல்களைப் பிடிக்க முயன்றான்.. அவன் விரல்பட்ட அந்த நொடியில் தீக்கங்குகள் பட்டதைப் போல விதிர்த்துப் போய் விலகி நின்றாள் காவ்யா...

“என்னது...?”

அவளின் பதட்டத்தை.. வேறு வகையான பதட்டம் என்று புரிந்து கொண்ட கார்த்திக்..

“ரிலாக்ஸ் காவ்யா.... திடிர்ன்னு நான் சொன்னதில பதட்டமாகிறிங்க.. பட்.. உங்களுக்கு இது தெரியும்ன்னு எனக்கும் தெரியும்...” என்றபடி அவளைத் தொட மீண்டும் முயன்றான்...

புலியைக் கண்ட புள்ளி மானாக விலகி மாடிப்படிகளில் ஏறி ஓடினாள் காவ்யா.. புயல் வேகத்தில் ஓடி வந்தவள் அர்ஜீனின் மீது மோதி.. தடுமாறிப் படிகளில் உருண்டு விழப் போனபோது அவள் இடுப்பில் கை கொடுத்து தாவிப் பிடித்துப் கொண்டான் அர்ஜீன்..

"ஸ்ஸ்.. நான்தான்.. பயப்படாதே..." என்றவன்.. கார்த்திக் மேலே ஏறி வருவதற்குள்... அருகிலிருந்த அறைக்குள் காவ்யாவை இழுத்துப் கொண்டு மறைந்து நின்று விட்டான்...

காவ்யாவின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.. கார்த்திக்கின் திடிர் காதல் வசனங்களினாலும்.. அவன் தொட்டுப் பேச முயன்ற தைரியத்தினாலும்.. அவள் மிரண்டு போயிருந்தாள்.. போதாக்குறைக்கு மாடிப்படிகளில் கால் தடுக்கி விழவிருந்த விபத்தை எண்ணி அவள் உடல் அதிர்ந்து கொண்டிருந்தது...

"கூல்ட் டவுன்..."

அவள் கூந்தலைக் கோதி... முதுகைத் தட்டிக் கொடுத்து சமாதானப் படுத்திக் கொண்டிருந்தான் அர்ஜீன்...

"பயப்படாதே.. நான் உன் பக்கத்தில் இருக்கேனில்ல.."

அவனது வார்த்தைகள் தந்த ஆறுதலில்.. தன்னையுமறியாமல் அவன் மார்பில் முகம் புதைத்தாள் காவ்யா.. அவளின் கரங்கள் அவன் முதுகின் மீது பரவிப் பின்னிப் பிணைந்து கொண்டன...

அவளின் அந்த இறுக்கமான சரணாகதியில் அர்ஜீனின் கண்கள் மின்னின.. தஞ்சமென்று அவனைத் தழுவிக் கொண்டவளின் உச்சந்தலையில் முத்தமிட்டு அணைத்துக் கொண்டான் அவன்..

அறைக்கு வெளியே அவளை கார்த்திக் தேடிக் கொண்டிருந்தான்...

“காவ்யா...” என்ற அவன் அழைப்பில் அவள் பதறி அதிர்ந்தாள்...

“நான் இருக்கேன்னு சொல்றேனில்ல..” உரிமையுடன் அவள் முடி கோதி அதட்டினான் அர்ஜீன்...

தேடிப் பார்த்து விட்டு கார்த்திக் போய் விட... அவன் காலடியோசை தேய்ந்து மறைந்தவுடன் விலகி நின்றாள் காவ்யா..

“இப்பப் புரியுதா..?”

கலைந்திருந்த அவளின் தலை முடியை சரி செய்த வண்ணம் வினவினான் அர்ஜீன்...

“என்ன...?” காவ்யா புரியாமல் கேட்டாள்...

“என்னைக் காயப் படுத்தனும்னு அவனை உசுப்பேத்தற மாதிரி பார்த்து வைச்சியே... அது எங்கே கொண்டு போய் விடும்ங்கிறதை இப்பவாவது புரிஞ்சுக்கிட்டியா...?” அழுத்தமாக.. முகக்சுளிப்புடன் கேட்டான் அர்ஜீன்..

குற்ற உணர்வுடன் தலை கவிழ்ந்த காவ்யாவின் முகத்தில் ஈயாடவில்லை...

“பெரிசா பேசினியே.. என்னை மறந்துட்டேன்.. அது.. இதுன்னு... என்னை மறந்தவ.. இன்னொருத்தன் காதலைச் சொன்னா ஏத்துக்க வேண்டியதுதானே...?” குத்தலாக கேட்டான் அர்ஜீன்...

அவனை நிமிர்ந்து பார்த்த காவ்யாவின் பார்வையில் தீயின் ஜ்வாலை தெரிந்தது...

“என்னை முறைச்சு பிரயோசனமில்லடி... உன் விரலைக்கூட அவன் தொடலை.. அது தாங்க மாட்டாம ஓடி வந்திட்ட.. இதில இருந்தே உனக்கு உன் மனது தெரியலையா.. காவ்யா...?” மென்மையாக வினவினான் அர்ஜீன்...

“தெரியலை...” பிடிவாதத்துடன் வெளியே போகத் திரும்பினாள் காவ்யா...

“ஏய்ய்.. நில்லு...”

கோபத்துடன் அவளைத் தடுத்து நிறுத்திய அர்ஜீன்.. அடுத்து என்ன நாடகக்கப் போகிறதென்று அவள் அனுமானிப்பதற்குள் அவளை முரட்டுத்தனமாக இழுத்து இறுக்கி அணைத்து அவள் முகம் நோக்கிக் குனிந்து விட்டான்...

காவ்யாவுக்கு எல்லாம் மறந்து விட்டது... அவனது அணைப்புக்குள் இருக்கும் நினைப்பை மறந்தவளாக அவள் முகம் நோக்கிக் குனிந்தவளின் முகம் பார்த்தாள்...

அவன் கண்களில் தெரிந்த தாபத்தில் அவள் கட்டுண்டாள்.. போதையுடன் அவள் இதழ் தேடிக் குனிந்து அதை அவன் இதழ்களால் அவன் ஆக்ரமித்துக் கொண்டபோது... சோவென்று கொட்டிய உணர்வு மழைகளிலிருந்து அவளைக் காப்பாற்ற விழைவதைப் போல.. குடை போன்ற அவள் இமைகளிரண்டும் தானாக மூடிக் கொண்டன..

எதிர்ப்பேயில்லாமல் அவன் கைகளுக்குள் அவள் தொய்ந்து சரிந்தாள்.. ஒரு பூமாலையாய் அவன் தோள் சாய்ந்தவளின் கழுத்து வளைவில் முகம் பதித்து.. முத்தம் பதித்து... கிறக்கத்துடன் அவள் முடிமீது முகம் புரட்டினான் அவன்...

“அண்ணா...”

பூஜை வேளைக் கரடியாக கார்த்திக் அவனைத் தேடும் குரல் கேட்க...

“ம்ஹீம்.. இவனும் காதலிக்க மாட்டான்.. என்னையும் நிம்மதியாய் காதலிக்க விடமாட்டான்..” என்று அவள் காதோரமாக முணுமுணுத்தபடி அவளை விடுவித்தான் அர்ஜீன்...

அவன் முகம் பார்க்க முடியாமல் நின்றவளின் கன்னம் தட்டியவன்..

“இப்பவாவது புரியுதா..?” என்று கேட்டான்..

‘இப்ப எதைச் சொல்றான்...’ காவ்யா நிமிர்ந்து பார்த்தாள்...

“என்னால் மட்டும்தான் உன்னைத் தொட முடியும்.. அதாவது என்னை மட்டும் தான் நீ தொட அனுமதிப்ப... இன்னும் சொல்லப் போனா... உன் மனதின் காதல் உணர்வுகளை என்னால் மட்டும்தான்.. என் ஒருவனால் மட்டும்தான் தட்டி எழுப்ப முடியும்.. இதை நீ புரிஞ்சு.. நினைவில் வைத்துக்கிட்டால் உனக்கும் நல்லது.. எனக்கும் நல்லது...”

அவன் விர்ரென்று வெளியே போய் விட்டான்.. போகும்போது மறக்காமல் அறைக்கதவை சாத்திவிட்டுப்

போனதில் தென்பட்ட அவனது அக்கறையில் மனம் நனைய உதட்டைக் கடித்துக்கொண்டு அசையாமல் நின்றாள் காவ்யா...

'என்னால் மட்டும்தான் உன் மனதின் காதல் உணர்வுகளை தட்டி எழுப்ப முடியும்..'

அவன் குரல் காதுகளில் ஒலித்தது.. காவ்யா அறையை விட்டு வெளியே வந்தாள்... மாடி ஹாலில் யாருமில்லை..

'அப்பாடா...' என்ற நிம்மதியுடன் அவள் படிகளில் இறங்கியபோது சுமதி வந்துவிட்டாள்..

"என்னம்மா..?" என்று விசாரித்தாள்...

"பாட்டிக்கு ஆரஞ்சு ஜீஸ் கொண்டு போகலாம்ன்னு வந்தேன்..."

"கார்த்திக்கோட கார் நிக்குதே... அவன் வந்திருக்கானா...?"

"ம்ம்ம்..."

"அப்ப எல்லோருக்கும் ஆரஞ்சு ஜீஸ் அனுப்பி வைக்கிறேன்.. நீ போ..."

"இருக்கட்டும்.. நானே கொண்டு போறேன்.."

உடனடியாக அர்ஜீனின் முன்னால் செல்வதற்கு அவளால் முடியவில்லை... கடந்து சென்ற நொடிகளின்

இனிப்பான நிகழ்வுகளிலிருந்து அவள் மீண்டு எழ சிறிது நேர அவகாசம் அவளுக்குத் தேவைப்பட்டது...

“பிடிச்சா உடும்புப் பிடிதான்.. என் மாமியாரைப் போல.. அதனால்தான் உங்க இரண்டு பேருக்கும் சரிப்பட்டுப் போகுதோ என்னவோ...”

சிரித்தபடி நான்கு கண்ணாடி தம்ளர்களில் ஆரஞ்சு ஜீஸை நிரப்பி டிரேயில் வைத்து அவள் கையில் கொடுத்தாள் சுமதி...

காவ்யா போன போது.. அர்ஜீன் சொல்லிய ஏதோ ஒரு ஜோக்கிற்கு அம்புஜம் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தாள்.. கார்த்திக் மட்டும் சிரிக்காமல் உர்ரென்று இருந்தான்...

# 129

*வெட்டவெளிப் புல்மீது...*
*வீற்றிருக்க ஆசை கொண்டேன்...*

“**வ**ந்துட்டியாம்மா...?”

அம்புஜகத்தின் கேள்வியில் அந்த அறையில் இருந்த இரண்டு ஆண்களும் உடனடியாக திரும்பிப் பார்த்தார்கள்.. இருவரின் விழிகளிலும் ஆர்வம் இருந்தது.. ஆவல் இருந்தது... உரிமை இருந்தது... இவை அத்தனைக்கும் மேலாக ஆசை இருந்தது..

அது காவ்யாவை சங்கடப் படுத்தியது.. அவள் மௌனமாக எல்லோருக்கும் பொதுவாக டிரேயை நீட்டினாள்... அவளைப் பார்த்தபடியே ஆளுக்கொரு கண்ணாடி தம்ளரை அவர்கள் கைப்பற்றிக் கொள்ள.. தானும் ஒன்றை எடுத்துக் கொண்டு அம்புஜத்தின் பக்கத்தில் உட்கார்ந்தாள் காவ்யா...

“ஏம்மா இவ்வளவு நேரம்...?”

இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று சங்கடப் பட்டுப் போனாள் காவ்யா...

அவளுக்கு எதிரேயிருந்த ஆண்களின் விழிகளில் தெரிந்த இருவேறுபட்ட உணர்வுகளில் அவளின் சங்கடம் அதிகமாகியது...

“மேடம் வீட்டில் இல்லை பாட்டி...”

“மேடமா...? அழகா அத்தைன்னு கூப்பிடுன்னு எத்தனை தடவைதான் சொல்றது..?”

அதில் கார்த்திக்கின் விழிகள் மின்ன.. காவ்யாவின் முகம் இறுகியது..

“எனக்கு இதுதான் வசதியா இருக்கு பாட்டி..”

அவளின் பிடிவாதத்தை ரசித்துச் சிரித்தாள் அம்புஜம்..

“பிடிச்சா ஒரே பிடிதான்.. அப்படியே எங்க அர்ஜீனைப் போல...”

அவனுடைய அப்பாவைப் பெற்றெடுத்த பாட்டி.. அவன் காதலிக்கும் பெண்ணிடம்.. அப்படியே அவனைப் போல என்று சொல்லாமல் அர்ஜீனைப் போல என்று சொன்னதில் வெகுண்டு போனான் கார்த்திக்...

‘ஆனாலும் இந்த வயசிலயும் இந்தப் பாட்டிக்கு இந்த அளவுக்கு அக்கா பாசம் இருக்கக் கூடாது... சொந்தப் பேரனோட காதலியை அக்கா பேரனோட கோர்த்து விடப் பார்க்குதே.. இதெல்லாம் ஒரு பாட்டியா...?’

அவனின் மனப் போராட்டத்தை அறியாமல்

“இல்லையா கார்த்திக்...?” என்று அவனின் அபிப்ராயத்தையும் துணைக்கு கேட்டாள் அம்புஜம்...

‘இல்லை...’ என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான் கார்த்திக்.. வெளியில் அதைச் சொல்ல வில்லை..

என்ன செய்வது..? அவனின் உறவு வட்டாரத்தில் அர்ஜீன் என்றால் இமயம் போல அண்ணாந்து பார்த்து வைத்து தொலைக்கிறார்களே.. அர்ஜீனின் ஒன்று விட்ட தம்பியென்பதில் அவனுக்கு சில ஆதாயங்களும்.. மரியாதைகளும் கிடைத்துக் கொண்டிருந்தனவே.. அதை அம்போவென்று காற்றில் பறக்க விட அவனால் முடியாதே...

மௌனமாகி விட்ட கார்த்திக்கை விசித்திரமாகப் பார்த்த அம்புஜம்...

“என்னலே.. திடிர்ன்னு இவன் போதி மரத்தடி புத்தரைப் போல மௌன குருவா ஆகிட்டான்...?” என்று அர்ஜீனிடம் விசாரித்தாள்..

அவனோ...“தெரியலையே பாட்டி...” என்று கைவிரித்தான்..

“என்னவோ போலே.. வரவர இவன் போக்கே சரியில்ல.. தானாச் சிரிச்சுக்கிறான்.. தனியா உக்காந்துக் கிறான்.. விட்டத்தை விட்டத்தை வெறிச்சு வெறிச்சுப் பார்க்கிறான்.. ஏன்லே கார்த்திக்.. தாமிரபரணி ஆத்தங் கரைப் பக்கம் தனியாக் கினியா போயிருந்தியாலே...?”

ஏதற்காக அம்புஜம் இப்படியாகப்பட்ட கேள்வியைக் கேட்கிறாள் என்று புரியாமல் திகைத்தான் கார்த்திக்..

“ஏன் பாட்டி...?”

“ஏனா...? காத்துக் கருப்பு ஏதாச்சும் பிடிச்சிருந்தா உடுக்கையை வர வைச்சு ஓட்டி விடலாம்ன்னுதான்..” என்றாள் அம்புஜம்..

காவ்யாவின் முன்னால் இது போன்ற அறிவார்ந்த பேச்சுக்களை அம்புஜம் பேசிவைப்பதில் கார்த்திக்கிற்கு துளிக் கூட விருப்பமில்லை.. ஆனால்.. அவன் விருப்பத்தை யார் கேட்டார்கள்...? அம்புஜத்தின் பேச்சில் அந்த அறையிலிருந்த மற்ற இருவரும் சேர்ந்து சிரித்து வைத்தார்கள்...

அவர்கள் சிரித்ததைக் கூட கார்த்திக்கினால் பொறுத்துக் கொள்ள முடிந்தது.. சேர்ந்து சிரித்ததைத்தான் அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை...

“அண்ணா...” என்ற அவன் ஆட்சேப குரலில்

‘யு டூ அண்ணா..?’ என்ற மறைமுகக் கேள்வி ஒளிந்திருந்தது..

“ஸாரிடா.. ஸாரிடா...” அர்ஜீன் சிரிப்பதை நிறுத்திக் கொண்டான்...

“பாட்டி.. டிரைவர் வந்திட்டார் போல.. நான் கிளம்பவா..?”

அம்புஜத்தின் அனுமதியை வேண்டுவதைப் போல.. அவள் கிளம்பப் போவதை காவ்யா அறிவுறுத்த...

"அதுக்கென்னம்மா.. கிளம்பு..." என்று அனுமதி வழங்கினாள் அம்புஜம்..

"நான் இவங்களை அனுப்பி வைச்சிட்டு வந்திடறேன் பாட்டி.."

அந்த நிமிடங்களிலாவது காவ்யாவின் பதிலை அறியத் துடித்தவனாக கார்த்திக் எழுந்து நிற்க.. கூடவே எழுந்து கொண்டான் அர்ஜீன்..

"நீ எங்கேண்ணா வர்ற..?"

கார்த்திக் 'வராதே... இரு' என்ற காட்டிய கண் சமிஞ்சைகளை கண்டு கொள்ளாதவனாக...

"எனக்கு வெளியில் வேலை இருக்கு கார்த்திக்... நான் போயாகனும்.." என்று அவனுக்கு முதலில் அறையை விட்டு வெறியேறினான் அர்ஜீன்..

அவசரமாக காவ்யா அவனை பின்பற்றி விட.. இனி பொறுத்தால் வேலைக்கு ஆகாது என்று கார்த்திக்கும் அவர்களை பின்பற்றி விட்டான்.. பொறுத்தார் பூமியாள்வார்.. காவ்யாவை ஆள முடியுமா..?

அதனால் அது என்ன தேவைக்கு என்று பொறுமையை கைவிட்டு அவர்களின் பின்னால் பறந்தோடினான் கார்த்திக்..

பச்சை வண்ணப் புடவையில் இருந்தவளிடம்

“அட்டகாசமா இருக்கிறடி..” என்று முணுமுணுத்து அவள் மனதை சிறகடிக்க வைத்துக் கொண்டிருந்த அர்ஜீன்.. பின்னால் தபதபவென்ற காலடியோசையைக் கேட்டதும் வெறுப்புடன்..

“த்ச்சு... வந்துட்டானா...?” என்று சூள் கொட்டினான்..

போதாக்குறைக்கு காவ்யாவை முறைத்தபடி...

“அவன் ஏண்டி உனக்கு வால் பிடிக்கிறான்...?” என்று விசாரிக்க வேறு செய்தான்..

“என்னைக் கேட்டா...? எனக்கென்ன தெரியும்..? வேனும்னா அவரிடம் விசாரிச்சுட்டு வந்து சொல்லவா...?” அவளும் அக்கறையாக கேட்டு வைத்தாள்...

“நீ அதை வேற செய்வியா..? ஏண்டி.. உனக்கு இந்த டயலாக்கை விட்டா.. வேற டயலாக் தெரியாதா...?”

“ஆமாமாம்.. நாங்கதான் வசனகர்த்தா.. இவரு திரைக்கதை எழுதித் தள்ளுவாரு.. அதுக்கு நானு வசனத்தை எழுதி அனுப்புவேன்.. போவிங்களா.. சும்மா வார்த்தையக் கிளப்பி விட்டுக்கிட்டு இருப்பீங்க.. நீங்களாச்சு.. உங்க அன்புத்தம்பி.. அழகுத்தம்பியாச்சு.. என்னை எதுக்கு ஊடாலே இழுக்கறிங்க...?”

முகத்தை வெட்டி.. கழுத்தைத் திருப்பி... ஒரு நொடிப்பு நொடித்தவளை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான் அவன்...

இந்தப் பார்வையை எதற்காக அவன் இந்த நேரத்தில் பார்த்து வைக்கிறான் என்று திகைத்துப் போனாள் அவள்...

கரடியாக கார்த்திக் வந்து கொண்டிருக்கும் வேளை பார்த்தா அவன் இது போன்ற பார்வையை பார்த்து வைக்க வேண்டும்...?

சிவந்து போன முகத்தை கார்த்திக் பார்த்து தொலைத்து விடாமலிருக்க வேறு திசையில் முகம் திருப்பித் தப்பித்தாள் காவ்யா..

அவளால் அர்ஜீனின் அந்தப் பார்வை வீச்சைத் தாங்க முடியவில்லை...

"ஹாய் அண்ணா..."

மூச்சிரைக்க அவர்கள் முன்னால் வந்து நின்ற கார்த்திக்கை.. மனம் நிறைந்த கடுப்புடன் பார்த்தான் அர்ஜீன்..

"ஏண்டா.. இப்பத்தான் என்னைப் பார்த்தப் போல ஹாய் சொல்லி வைக்கறியே.. உனக்கே இது அபத்தமாத் தெரியலையா...?"

அர்ஜீனின் கேள்வியில் காவ்யாவின் முகத்தில் புன்னகை தெரிந்தது.. அதில் கார்த்திக்கின் முகம் விழுந்தது.. அந்த இக்கட்டான சூழலில் இருந்து அவனைக் காப்பாற்றுவதைப் போல ஒர் போன் அலறி வைக்க.. அதை எடுத்து காதுக்கு கொடுத்தவன்..

“யெஸ்.. யெஸ்.. ஐ அக்ரி...” என்றபடி சற்று நகர்ந்தான்..

கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டவனாக காவ்யாவின் பக்கமாக திரும்பினான் அர்ஜீன்..

“அப்போ என்ன சொன்ன...?” புருவங்களைத் தூக்கினான்...

“என்னத்தைச் சொன்னேன்...?” காவ்யாவுக்கு விளங்கவில்லை..

“அன்புத்தம்பி.. அழகுத்தம்பின்னு சொல்லலை..?”

குற்றவாளியை விசாரிக்கும் தோரணையில் அவன் அதட்டியதில் காவ்யாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

‘இவன் என்ன என்னை வாயைத் திறக்கவே விடக் கூடாதுன்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருக்கானா..?’

“ஆமாம்.. சொன்னேன்.. அதுக்கு என்ன இப்ப..?” அவள் மூக்கை விடைத்தாள்..

“திமிரா…? அன்புத் தம்பி.. ஓகே.. அது என்ன அழகுத்தம்புன்னு சொல்ற..? அவன் அழகை நீ ரசிக்கிறயா..?”

‘ரசிச்சிட்டாலும்..’ காவ்யாவுக்குள் எரிச்சல் மண்டியது.. பேசாமல்.. ஆமாண்டா.. அப்படித்தாண்டா.. போடா.. என்று சொல்லத் தோன்றியது..

ஆனால்.. உண்மைக்கு புறம்பாக பேசி வைத்து பழக்கமில்லாததால் வேண்டாமென்று விட்டு விட்டாள்..

“இல்லேங்கறிங்களா..” வேறு வகையில் அவனைப் போட்டுத் தாக்கினாள்..

“அப்ப.. ஆமாம்ங்கிற..” அவன் முகம் சுளித்தான்..

“இல்லேன்னு சொல்லலை…”

“ஏய்ய்… அவன் அழகை நீ ரசிக்கறேன்னா சொல்ற..?”

அவன் கண்களில் கொலைவெறி தெரிய.. என்னடா இது வம்பாப் போச்சு என்று மானசீகமாக தலையில் கை வைத்துக் கொண்டாள் காவ்யா…

“இந்த விளையாட்டுக்கே நான் வரலை.. நான் பாட்டுக்கு எங்க வீட்டுக்குப் போகக் கிளம்பினா.. அதுக்கு விடாம நீங்க வெட்டிப் பஞ்சாயத்தக் கூட்டிக்கிட்டு உட்காந்திருந்தா.. அதுக்கு நான் ஆளில்ல…”

“ஓ.. நான்தான் உன்னோட ஆள்ன்னு சொல்றியா..?”

அவன் மிதப்பாக அவளை ஊடுறிவிப் பார்த்த விதத்தில்.. நீதாண்டா எனது ஆள் என்று காவ்யாவிற்கு ஒப்புக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

அதை ஒப்புக் கொள்ள முடியாமல் அன்று அவன் சிந்திய வார்த்தைகளின் மனரணம் வலிக்க.. அவள்..

“இல்லை...” என்று முகம் இறுகச் சொன்னாள்..

“ஓ.. அப்ப.. அவன்தான் உன்னோட ஆளா..?”

அவன் சுட்டிக் காட்டிய திசையில் செல்போனை காதுக்கு கொடுத்திருந்த கார்த்திக் திரும்பிப் பார்க்க..

‘இது என்னடா பெரும் வம்பாய் போச்சு..’ என்று அரண்டு போனாள் காவ்யா..

“பேச்சு பேச்சா இருக்கணும்.. இப்ப எதுக்காக அவர் பக்கம் கையை நீட்டிக் காண்பிக்கறிங்க.. அவர் என்ன நினைச்சுக்குவார்..?” அவள் அர்ஜீனுடன் சண்டைக்குப் போனாள்..

“ஓ.. அப்ப உனக்கு அவன் நினைப்பைப் பத்தித்தான் கவலையாய் இருக்குன்னு சொல்லு..”

அவன் ஒரு மாதிரியான குரலில் வினவியதில் காவ்யாவுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது..

# 130

*சாய்ந்து கொள்ள உன் தோள் வேண்டுவதை..*
*நீ புரிந்து கொள்ள ஆசை கொண்டேன்...*

'**எ**ன்னடா வாழ்க்கை இது...!'

காவ்யாவுக்கு வாழ்க்கை வெறுத்தது.. அர்ஜீனை உண்டு.. இல்லையென்று ஒரு வழிபண்ணிவிட அவள் மனம் துடித்தது..

'என்ன ஒரு தைரியமிருந்தா இவன் இப்படி உறண்டை இழுத்துக்கிட்டு இருப்பான்..' ரத்தம் கொதிக்க அவள் அவனை முறைத்தாள்..

"எனக்கு யார் நினைப்பைப் பத்தியும் கவலையில்ல.. உங்க நினைப்பையும் சேத்துத்தான் சொல்றேன்.."

அவள் வார்த்தைகளில் சுட்டதில் அவன் முகம் சுருங்கியது...

"அதான் தெரியுமே.." என்றான்..

"தெரியுதில்ல...? அப்ப.. ஆளை விடுங்க.." அவள் வெறுப்புடன் பேசினாள்...

“விடாம நானென்ன பிடித்தா வைத்திருக்கேன்..? அதுதான் முடியாம போயிருச்சே.. பிடித்து வைத்திருந்தா.. இப்படி திருநெல்வேலிச் சீமைக்கு வந்து உன்னைக் காவல் காக்கிற வேலையைச் செய்ய வேண்டியிருக்காதே..”

அவன் கார்த்திக்கை உறுத்துப் பார்த்தபடி அவளிடம் சொல்ல.. அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

‘இவன் என்னைக் காவல் காக்கிறானாமா..?’ சுள்ளென்று அவளுக்குள் எண்ணம் தோன்றிய போது...

‘பின்னே..? இல்லையா..?’ என்று அவள் மனம் அவளைக் கேள்வி கேட்டது..

‘கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே... அந்தக் கார்த்திக் வந்து ஐ லவ் யுன்னு உன்கிட்ட வழிஞ்சப்ப.. நீ ஓடி ஒளிஞ்சது யார் கிட்ட..? இவன் கிட்டதானே...?’ மனம் உணக்கையாக கேள்வி கேட்க...

‘உனக்கு வேற வேலையில்லை..’ என்று அதன் தலையில் தட்டி அவள் உட்கார வைத்தாள்..

“என்ன...? வீட்டுக்குப் போகிறேன்னு வந்திட்டு.. போகிற எண்ணமில்லாம ஆணியடித்ததைப் போல நிற்கிற..? போன் பேசப் போனவன் திரும்பி வரட்டும்ன்னு காத்திருக்கிறயா..?” அவன் பல்லைக் கடித்தான்...

“இல்லை.. டிரைவர் திரும்பி வரட்டும்ன்னு காத்திருக்கேன்..” அவன் முகம் பார்க்காமல் அவள் நடந்தாள்..

எதிரேவந்த சுமதி.. அவளைப் பார்த்ததும்..

“என்னம்மா.. வீட்டுக்கு கிளம்பிட்டியா..?” என்று கேட்டாள்..

“ஆமாம்.. மேடம்.. டிரைவர் வந்திட்டாரா..?” காவ்யா புன்னகைத்தாள்...

“ம்ம்.. வந்தாச்சு.. வா.. நான் உன்னை அனுப்பி வைக்கிறேன்..” சுமதி காவ்யாவுடன் நடந்தாள்..

“சித்தப்பா எங்கே சித்தி..?” அர்ஜீனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான்..

“கம்பெனிக்குத்தானே போனார்...? உன்னிடம் சொல்லலையா..?” சுமதி கேட்டாள்..

“இல்லையே... கார்த்திக்தான் என்னிடம் சொல்லிட்டுப் போனான்..”

“போய் என்ன பிரயோசனம்..? போன சுருக்கிலேயே திரும்பி வந்து நிற்கிறான்.. ஆயிரம்தான் சொல்லு அர்ஜீன்.. உன்னைப்போல அவன் சைன் பண்றது கஷ்டம்தான்..”

“விளையாட்டு புத்தியிருக்கு சித்தி.. போகப் போக சரியாகிருவான்..”

“என்னவோ போ அர்ஜீன்.. இவனுக்கென்ன வயதா திரும்பியிருக்கு..? இன்னும் சின்னக் குழந்தைபோல பிஹேவ் பண்ணினா எப்படி...? உன்னைப் போல அவனும் பெயர் வாங்கனும்னு உங்க சித்தப்பாவும் நானும் ஆசைப்படறோம்...”

“அதெல்லாம் அவன் சைன் பண்ணிருவான் சித்தி..”

சுமதியுடன் பேசியபடி காருக்கு அருகில் சென்ற அர்ஜீன்.. இன்னும் செல்போனை காதோடு ஒட்டிக் கொண்டிருந்த கார்த்திக்கைத் திரும்பிப் பார்த்தான்...

‘பயலுக்கு இவ கிளம்பிட்டான்னு தெரியலை போல.. இன்னும் இவ பார்த்துக்கிட்டு இருக்காங்கிற நினைப்பில சீன் போடறான்..’

அவனுக்கு சிரிப்புத்தான் வந்தது.. சுமதி டிரைவரை அழைத்து காவ்யாவை வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வரச் சொன்னாள்.. காவ்யா காரில் ஏறி அமர்ந்து சுமதிக்கு கையாட்ட.. அவளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த அர்ஜீன் தலையை ஆட்டினான்...

‘என்ன தெனாவெட்டு...’ காவ்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

அவனின் அந்த தைரியமான செயல்பாடு அவளை வசீகரித்து அவனைப் பற்றிய நினைவுகளில் ஆழ்த்தியது..

திருநெல்வேலியில் உள்ள பெயர் பெற்ற பணக்காரர்களில் முதன்மையான சரவணன் தன் மகன் அர்ஜீனைப் போல வரவேண்டும் என்று நினைக்கிறாரென்றால் அவன் எவ்வளவு உயரத்தில் இருக்க வேண்டும்..!

அப்படிப்பட்டவன் அவளைக் காதலிக்கிறான்..

அவள் மனம் கர்வம் கொண்ட அதே நேரத்தில் அலட்சியமான சுழலும் பார்வையோடு நேகா நினைவுக்கு வந்து தொலைத்தாள்..

“இவதான் என் வருங்கால மருமகள்.. இவளுக்கு ஆரத்தி எடுத்து கடைக்குள்ள கூப்பிடு..”

பார்த்தசாரதியின் உத்திரவு அவள் காதுகளில் எதிரொலித்தது... அவளின் கற்பனைகள் கலைந்து மறைந்தன.. அவள் வெற்றுப் பார்வையோடு சீட்டில் சரிந்து அமர்ந்து... ஜன்னல் வழியாக அவளின் அண்ணனின் வீடு வந்து விட்டதா என்று பார்க்க ஆரம்பித்தாள்..

காவ்யா போனபின்பு அந்த இடமே வெறிச்சென்று ஆகி விட்டதைப் போல உணர்ந்தான் அர்ஜீன்.. அவள் விட்டுச் சென்ற பூவாசம் அவன் மனதிலும்.. நாசியிலும்.. நுழைந்தது.. சுமதி வீட்டுக்குள் போய் விட.. இவன் மட்டும் தனிமையின் நின்று.. காவ்யாவைப் பற்றிய காதல் நினைவுகளை மனதுக்குள் அசை போட்டுக் கொண்டிருந்தான்..

காவ்யா கவனித்துக் கொண்டிருக்கிறாள் என்ற நினைவில் படு ஸ்டைலாக கால் மாற்றி நின்று.. நுனி நாக்கில் ஆங்கிலம் பேசிக்கொண்டிருந்த கார்த்திக் பேசியபடி காவ்யாவை ஒரு நோட்டம் விடலாம் என்று திரும்பிப் பார்த்தான்.. அவள் அங்கு இல்லை..

‘எங்கே போயிட்டா..?’

அரண்டு போனவனாக.. செல்போனை காதை விட்டு எடுத்து அணைத்து சட்டைப் பைக்குள் எறிந்து விட்டு.. அர்ஜீனிடம் ஓடி வந்தான்..

“அவ எங்கேண்ணா..?”

‘எவ.. அவ...?’ அர்ஜீன் பல்லைக் கடித்தான்..

இதற்கே கார்த்திக்கின் பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து விட வேண்டுமென்ற துடிப்பு அவனுக்குள் தோன்றியது..

‘இவனுக்கு கடலை போட உலகத்தில் வேற பெண்ணே கிடைக்கலியா...? என் காதலியிடம் கடலையும் போட்டு.. ஐ லவ் யு சொல்லி அவளை அரண்டு ஓடவும் வைத்து விட்டு.. என்னிடமே வந்து எங்கே அவன்னு கேட்டு வைக்கிறானே.. இவனை என்ன செய்தால் தேவலாம்..?’

“சொல்லுண்ணா.. எங்கே அவ...?”

“வீட்டுக்குப் போயிட்டா..”

“அதுக்குள்ளேயா..?”

“அவ போய் அரைமணி நேரமாச்சு.. இந்நேரத்துக்கு அவ வீட்டுக்குப் போய் யாரோ.. எவரோன்னு சாப்பிட ஆரம்பிச்சிருப்பா.. எனக்கும் பசி வயிற்றைக் கிள்ளுது.. நான் சாப்பிடப் போறேன்.. நீ சாப்பிட வரலையா..?”

“இப்ப அதுவாண்ணா முக்கியம்...?”

“எனக்கு அதுதாண்டா முக்கியம்...”

“என்னண்ணா இப்படி ஆகிப் போச்சு..”

“எப்படியாகிப் போச்சு...?”

“அவகிட்டக் காதல் சொன்னேண்ணா..”

“அதை அவ காதில் சொன்னியா..? ஏன் கேட்கிறேன்னா எனக்கு அது காதில் விழுகலையே.. அதான்..”

“ஆமாண்ணா.. உனக்கும் ஊர் உலகத்துக்கும் கேட்கிறதைப் போல மைக்கை கையில பிடிச்சுக்கிட்டு அவகிட்ட ஐ லவ் யு சொல்றேன்.. ஏண்ணா நீ வேற என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கிற...?”

“எதுக்குடா இப்படி சோக கீதம் பாடற...? அதான் அவகிட்ட உன் காதலைச் சொல்லிட்டயே.. அப்புறம் என்ன..?”

“போண்ணா.. நீ வேற...”

“எதுக்குடா கார்த்திக்.. அப்போப் பிடிச்சு.. நான் வேறங்கிறதை சொல்லிக் காண்பிச்சுக்கிட்டே இருக்கிற..? நான் உன் கூடப் பிறந்தவன் இல்லைதான்.. வேறதான்.. அதை இத்தனை தரம் சொல்லிக் காட்டனுமா..?”

“அண்ணா.. உனக்கு ஒரு கும்பிடு.. தெரியாம வாய் விட்டுட்டேன்.. நீ அதை விட்டிரு..”

“விட்டுட்டேன்.. நீ சொல்லு...”

“அந்தக் கொடுமையை ஏண்ணா கேட்கிற..”

“கேட்க வேண்டாம்ன்னு சொல்கிறயா..?”

“அண்ணா... வேண்டாம்ன்னா... நான் தாங்க மாட்டேன்..”

“நானும்தாண்டா தாங்க மாட்டேன்.. சஸ்பென்ஸ் தாங்கலை.. அப்புறம் என்னதான் ஆச்சு..? அவ உன் காதலை ஒப்புக்கிட்டாளா.. இல்லையா..?”

அர்ஜீன் மர்மத்தை அறிய ஆவலுடன் காத்திருப்பதைப் போல செய்த பாவனையை கார்த்திக் உண்மையென்று நம்பி விட்டான்..

“அவளிடம் என் காதலைச் சொன்னேனா..”

“சொன்ன.. அதைத்தான் சொல்லிட்டயே.. அதுக்கப்புறம் என்னவாச்சு...? அதைத்தானே சொல்ல மாட்டேங்கிற..?”

"அவ வெட்கப் பட்டுக்கிட்டு ஓடிட்டாண்ணா.."

கார்த்திக் உண்மை போலச் சொல்லி வைக்க.. அவனை இழுத்து வைத்து கன்னத்தில் நான்கு அப்பு அப்ப வேண்டும் என்ற வெறி அர்ஜீனுக்குள் கிளர்ந்து எழுந்தது..

'ஏண்டா.. அவ நீ ஐலவ்யு சொன்னதும் பயந்துக் கிட்டு ஓடி வந்து மாடிப்படியில் உருண்டு விழ இருந்தா.. அது தெரியாம நீ... அதை தெரிஞ்சு வைச்சிருக்கிற என்னிடமே ரீல் சுத்தற பார்த்தியா... இதைத்தான் நேரம்ன்னு சொல்லுவாங்கடா தம்பி...'

அர்ஜீன் முறைத்த முறைப்பை.. அவன் வியப்புடன் பார்ப்பதாக நினைத்துக் கொண்ட கார்த்திக்.. கர்வப் பட்டுப் போனான்..

"அவ..? உன்னப் பாத்து வெட்கப் பட்டு ஓடினா..?"

அர்ஜீன் அழுத்தம் திருத்தமாக வினவ... பெருமை பொங்கி வழியும் முகத்துடன் ஆமாமென்று தலையை ஆட்டினான் கார்த்திக்...

"ஆமாண்ணா.. ஆமாம்.. என் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டேனுட்டான்னா பாரேன்..."

'ஆமாண்டா.. அவளே உன் முகத்தைப் பார்க்க முடியாம ஓடித் தொலைத்திருக்கா.. அந்த முகத்தைப் பார்க்க நான்தான் உனக்குக் கிடைச்சேனா...'

“வெட்கப் படறாளேன்னு விட்டுட்டேன்..”

‘பொய் சொல்லாதே.. அவ உனக்குப் பயந்துக்கிட்டு என்கூட ரூமுக்குள்ள ஒளிஞ்சுக்கிட்டா.. அது தெரியாம நீ என்னிடமே கதை விடற...’

அப்போதும்.. காவ்யாவின் மூச்சுக் காற்று நெஞ்சில் படுவதைப் போல உணர்ந்தான் அர்ஜீன்...

அவனுடன் பின்னிப் பிணைந்த அந்தப் பொழுதில்.. அவள் காட்டிய நெருக்கத்தை நினைத்தவனுக்கு உடலில் சூடேறியது... அதையறியாமல் அவன் நினைத்துக் கொண்டிருக்கும் காவ்யாவை நினைத்து பெருமூச்சை விட்டான் கார்த்திக்..

“பதில் சொல்லாம ஓடிட்டாளேண்ணா... இப்படியா வெட்கப்படுவா...? அவ வெட்கத்தை எனக்குப் பிடிச்சிருக்குண்ணா..”

‘நீ பேசறது எனக்குப் பிடிக்கலைடா...’

“அதான்.. பாவம்.. சின்னப் பெண்.. வெட்கப் படறாளேன்னு விட்டுட்டேன்... அவ கிளம்பும் போது பதிலை கேட்டு விடலாம்ன்னு பின்னாலேயே வந்தா... அவ பதில் சொல்லாம ஓடிப் போயிட்டாளேண்ணா..” சோகமானான் கார்த்திக்..

“இல்லையே கார்த்திக் அவ நடந்துதானே போனா..” என்று அவன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான் அர்ஜீன்...

“ஏண்ணா.. உனக்கு என் நிலைமையைப் பார்த்தாக் கேலி செய்யத் தோணுதா..?” அழ மாட்டாத குறையாக வினவினான் அர்ஜீன்..

“சேச்சே..! உன்னை நான் கேலி செய்வேனா..? அவளிடம் பேச வந்தவன் பேசியிருக்கனும்.. அதை விட்டுட்டு செல்போனை காதில ஒட்ட வைச்சுக்கிட்டு அதுல ஏண்டா பேசித் தள்ளின...?”

“ஒரு பில்ட் அப் கொடுக்கலாம்ன்னு தான்..”

“தேவையாடா உனக்கு...? எந்த நேரம் எதை பில்ட் அப் பண்றதுன்னு தெரிய வேண்டாமா..? இப்பப் பாரு.. அவ பறந்து போயிட்டா..”

“நாளைக்கு வருவாள்ல..”

நம்பிக்கையோடு சொன்னான் கார்த்திக்.. நாளை வந்தது.. அவளும் வந்தாள் கார்த்திக்கின் வீட்டுக்கல்ல.. அர்ஜீனின் தோப்பிற்கு..

# 131

*நான் பாடும் பாடல்களை...*
*நீ கேட்க ஆசை கொண்டேன்...*

**கா**வ்யாவுக்குத் தெரியாது... அவள் போகப் போவது அர்ஜீனின் தோப்பு வீட்டிற்குத்தான் என்பது..

முதல் நாள் அவள் அம்புஜத்தின் வீட்டிலிருந்து வந்த பின்பு.. மாலை நேரத்தில் அம்புஜம் அவளுக்குப் போன் செய்திருந்தாள்..

“இப்ப கொஞ்சம் நடக்க முடியுதில்லையா காவ்யா..”

“ஆமாம் பாட்டி.. இன்னைக்கு நல்லாவே நடந்தீங்க.. இனிமே ரூமில மட்டும் நடக்காம.. வெளியில வந்து தோட்டத்திலயும் நடந்து பழகுங்க..”

“நான் நினைச்சேன்.. நீ சொல்லிட்ட..”

“நிசமாவா...?”

“உண்மைதான் காவ்யா.. இங்கே பக்கத்தில தோப்பு இருக்கு... குளுகுளுன்னு... குற்றால அருவியில

குளிக்கிறதைப் போல தண்ணியைக் கொட்டற பம்ப்பு செட்டும்.. அதுக்கு முன்னாடி நாலு ஆளு நீச்சலடிக்கிறதப் போல.. தோதா பெரிய சிமிண்டு தொட்டியும் இருக்கு.. போயிட்டு வரலாமா...?"

"உங்க கால் வலிக்காதா...?"

"காரில போகப் போறோம்.. இங்க தோட்டத்தில நடந்து பழகுறத.. தோப்பில நடந்து பழகறேன்.. ரூமுக்குள்ளேயே அடைஞ்சு கிடந்ததில.. வெளியுலகத்தப் பார்க்கனும் போல ஏக்கமாயிருக்கும்மா..."

அம்புஜத்தின் குரலில் வெளிப்பட்ட அப்பட்டமான ஏக்கத்தில் காவ்யாவின் மனம் இரக்கப்பட்டது..

'பாவம்...' என்று அவள் அம்புஜத்திற்காக அனுதாபப்பட்டாள்..

"ஆனால் பாட்டி.. நீங்க அதிக நேரம் நடக்கக் கூடாது... கொஞ்சம் நடந்தா... உடனடியா ரெஸ்ட் எடுத்துக்கனும்.. வீட்டில இருக்கற தோட்டம்ன்னா நீங்க ரெஸ்ட் எடுத்துக்க வசதியிருக்கும்.." கவலையுடன் சொன்னாள் காவ்யா...

"அங்கேயும் வசதியிருக்கும்மா.." என்றாள் அம்புஜம்..

"தோப்புக்குள்ள என்ன வசதி இருக்கப் போகுது...?"

“என்ன காவ்யா இப்படிக் கேட்டுட்ட.. அதெல்லாம் அருமையா ஒரு வீடிருக்கு... அந்த வீட்டில் இல்லாத வசதியே இல்லை.. நீ வந்து பார்த்தா உனக்கே தெரியும்.. அப்படியில்லைன்னா சரவணன் எனக்கு பெர்மிசன் கொடுத்திருப்பானா..?”

“அப்படியா சொல்றீங்க...?”

“அப்படித்தான் சொல்றேன்.. நாளைக்கு கிளம்பி ரெடியா இரு... நான் காரில வந்து கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்..”

“அண்ணன் என்ன சொல்லுமோ...”

“கண்ணதாசன்கிட்ட நான் பேசிக்கறேன்... கவலையை விடு...”

சொன்னபடி கண்ணதாசனிடம் பேசி அனுமதி வாங்கி விட்டாள் அம்புஜம்..

“அவங்க குடும்பத்தோட போறாங்களாம் காவ்யா.. பாட்டி... அவங்க மருமகன்னு போகிறதால பயமில்ல... நீயும் போயிட்டு வா...” கண்ணதாசன் அனுமதித்து விட்டான்..

காவ்யா அதைப்பற்றி பெரிதாக நினைத்து விடவில்லை.. பெரியவர்களும்.. பெண்களும் துணைக்கு இருப்பதால்.. அவளை அவர்களுடன் அனுப்பி வைக்க ஒப்புக் கொண்டிருக்கிறான் என்று மட்டுமே அவள்

நினைத்தாள்.. மற்றபடி வேறு எந்த நினைவுகளுக்கும் இடம் கொடுக்க முடியாமல் அர்ஜீனுடனான அன்றையப் பொழுதின் நினைவுகள் அவளை ஆக்ரமித்திருந்தன..

அவனுடைய சூடான இதழ்களின் தொடுகை உணர்வு அப்போதும் அவளை அலைக்கழிக்க.. காவ்யா.. கண் மூடி உறங்க முயன்று போராடி.. விடிகின்ற வேளையிலே கண்ணுறங்கிப் போனாள்.. மறுநாள் காலையில் அவள் எழுந்த போது இமைகள் வீங்கி கண்கள் சிவந்திருந்தன..

“பத்திரமா போயிட்டு வா...”

கண்ணதாசன் எச்சரித்து விட்டு அவளை ஊன்றிப் பார்த்தான்...

“ராத்திரி தூங்கலையா...?”

அவனின் அதட்டலான கேள்வியில் உதடுகளைக் கடித்தபடி தலை குனிந்தாள் காவ்யா..

“ஏம்மா.. இப்படி உன்னை நீயே வருத்திக்கற...?” கண்ணதாசன் வருத்தப்பட்டான்..

“இல்லேண்ணே.. தூக்கம் வர மாட்டேனுருச்சு..”

என்னவோ.. தூக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி அழைத்து அது மறுத்து விட்டதைப் போலத் தூக்கத்தின் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்தாள் காவ்யா...

அதைக் கேட்ட கண்ணதாசனுக்கு சிரிப்பு வந்து விட்டது..

"என்னவோ போ.. பாட்டி கூட பேசிக்கிட்டு இருந்தீன்னாத்தான் நீ பழையபடி ஆவ.. அதுக்காகத்தான் உன்னை அவங்க கூட பழக விட்டுக்கிட்டு இருக்கேன்.." என்றபடி கழுத்து டையை சரி செய்து கொண்டான்...

'அவங்க கூட பேசிக்கிட்டு இருந்தா நான் பழையபடி ஆகி விடுவேனா...? உனக்குத் தெரியுமாண்ணே.. இப்போல்லாம் நான் அவங்க கூட பேசறதை விட அதிகமா அவன் கூட பேசிக்கிட்டு இருக்கேன்..' அர்ஜீனின் நினைவில் மௌனமானாள் காவ்யா...

கண்ணதாசன் கிளம்பிய பின்பு.. குளித்து உடை மாற்றி லேசான ஒப்பனையுடன் அறையை விட்டு வெளியே வந்தாள் காவ்யா..

துளிர் இலையின் பசுமை வண்ணத்திலான ஷிபான் சேலையில்.. பட்டுக் கரைகளிட்டு இருந்தது.. அதே சேலையில் வெட்டித் தைக்கப்பட்டிருந்த ரவிக்கை அழகாக பொருந்தியிருந்தது.. எப்போதும் போடும் சின்னச் செயினைத்தான் கழுத்தில் அணிந்திருந்தாள்.. அது அவளின் அழகை அதிகப்படுத்திக் காட்டியது..

"சமையல் ஆகிருச்சாக்கா.."

சமையலறையில் இருந்த மருக்கொழுந்திடம் கேட்டாள்.. திரும்பிப் பார்த்த மருக்கொழுந்தின் விழிகளில் காவ்யாவின் அழகைக் குறித்த பாராட்டு தெரிந்தது..

கட்டை விரலையும்.. நடுவிரலையும் ஒன்று சேர்த்து வளையம் போல ஆக்கி.. பிரமாதம் என்ற முத்திரையைக் காட்டினாள் அவள்...

“இது ஒன்னுதான் குறைச்சல்...” காவ்யா அலுத்துக் கொண்டாள்..

“ஏன்க்கா.. இப்படிப் பேசமாட்டேன்னு அழும்பு பண்ற...?”

‘நானா மாட்டேங்கிறேன்..? எனக்கு படியளக்கிற மகராசன்தானே என்ன வாயத் திறக்க கூடாதுன்னு உத்தரவு போட்டு வைச்சிருக்காரு...’

தன் நிலையை உணர்த்தி விடும் செய்தியை கண்களின் மூலமாக சொல்லி விட மருக்கொழுந்து முயற்ச்சிக்க..

“ஏன்க்கா இப்படி முழிச்சு என்னை பயமுறுத்தற..?” என்று கேட்டு வைத்தாள் காவ்யா...

‘ம்ஹூம்...’

தன் முயற்சியில் தோற்றுப் போனவளாக பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டாள் மருக்கொழுந்து...

“என்னத்தையோ சொல்ல வர்ற.. அது என்னான்னுதான் ஒரு மண்ணும் புரிய மாட்டேங்குது..”

காவ்யா யோசனையுடன் சொல்லவும் கண்களில் வெளிச்சம் பரவ நிமிர்ந்து பார்த்து உற்சாகமாக சைகை செய்தாள் மருக்கொழுந்து...

‘உன் அண்ணன்...’ என்று அவள் சைகை காட்ட.. காவ்யா திரும்பி முதுகுக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்று பார்த்தாள்..

அங்கே அலுமினிய டப்பா இருந்தது...

“இது வேணுமா...? எடுத்துக்கயேன்.. என்னவோ தங்கக் கட்டியைக் கேட்கிறதைப் போலல்ல முகத்தை வைச்சுக்கிற.. தாராளமா எடுத்துக்கிட்டுப் போக்கா...”

காவ்யா தாராளமாக அனுமதி கொடுக்க.. தலையில் கை வைத்துக் கொண்டாள் மருக்கொழுந்து..

‘இவளுக்கு எப்படி நான் புரிய வைப்பேன்..?’ அவள் நொந்து கொண்டிருந்த போது..

“என்னக்கா.. தலையை வலிக்குதா..?” என்று அதற்கும் விளக்கம் கேட்டாள் காவ்யா..

‘உன் தலை...’ மருக்கொழுந்து எரிச்சலானாள்..

“என்னது.. என் தலையா..?” காவ்யா மிகச் சரியாக அதைக் கண்டு பிடித்து விட...

‘இது மட்டும் எப்படி இவருக்குத் தெரிஞ்சுச்சு...?’ என்று கலவரமானாள் மருக்கொழுந்து..

‘இல்லையில்ல...’ அவள் மறுப்பாக தலையை ஆட்ட..

“என்ன இல்ல...? உன் உதடு அசைஞ்சத நான் பார்த்தேனே...” என்று கடுமையான குரலில் அவளை அதட்டினாள் காவ்யா..

‘நீ தப்பா புரிஞ்சுக்கிட்டு இருக்கே...’

மருக்கொழுந்து கையை ஆட்டி அபிநயிக்க...

“என்னது.. அடிச்சுப் புடுவியா...?” என்று கேட்டு அவளை அரள வைத்தாள் காவ்யா..

தாளமாட்டாமல் மருக்கொழுந்து கையெடுத்தே கும்பிட்டு விட்டாள்.. போனால் போகிறது என்று அவளை மன்னித்து விட்டு விட்ட காவ்யா...

“இந்தக் கொடுமைக்கு நீ பேசித் தொலைக்கலாமில்ல...?” என்று அவளைக் கேட்டாள்..

‘எனக்கு மட்டும் அந்த ஆசையில்லையா..?’ மருக்கொழுந்து ஏக்கப் பெருமூச்சை விட்டாள்..

“நீயும் மனசாற மௌன விரதம் இருக்கிறதப் போல தெரியல.. அப்புறமும் எதுக்காக இப்புடி வாயைத்திறக்காம

மூடிக்கிட்டு இருக்கிற.. இது உனக்கு பொருத்தமாவே இல்லைக்கா..”

‘இது உனக்குத் தெரியுது.. உன் அண்ணனுக்குத் தெரியலையே...’

“இப்ப எதுக்கு என் அண்ணனை வம்புக்கு இழுக்கிற..?”

‘அடியாத்தி.. இந்தப் பொண்ணு என்ன இப்படி குண்டத் தூக்கிப் போகுது.. அந்த மகராசனை வம்புக்கு இழுத்தா என் கதி என்னத்துக்கு ஆகிறது...’

“நீ கெட்டிக்காரிதான்... மௌனவிரதம்ன்னு சொல்லிக்கிட்டு மனசுக்குள்ளேயே என்னையும்.. என் அண்ணனையும் திட்டித் தீர்த்துக்கற..”

‘ஏம்மா.. என் மனசுக்குள்ள புகுந்து பாத்ததப் போல பேசி வைக்கிற.. நாந்தான் வாயே திறக்காம சோலிய பாக்கறேனா இல்லையா.. என்னை வம்புக்கு இழுத்தா நான் எங்கேன்னு போவேன்...?’

“எங்கேயாவது போ.. என் முன்னாலேயே என்னை மனசுக்குள்ள திட்டித் தீர்க்கிற நீ எங்கே போனா.. எனக்கென்ன...?”

‘அப்படிச் சொல்லாதேம்மா.. உனக்கு கோடி புண்ணியமா போயிரும்.. எங்கேயும் போகாம உன் ஒரு

வீட்டில வேலயப் பாத்து முடிக்கலாம்ன்னு நினைச்சுத் தான இந்த மௌன விரதத்துக்கு நான் சரின்னு சொன்னேன்..?'

"இப்ப என்னத்தை திட்டற...?"

"ஒரு மண்ணும் திட்டலை..."

மனதுக்குள் பேசிக் கொள்வதாக நினைத்து மருக்கொழுந்து வாய் விட்டு விட...

"அப்படி வா.. வழிக்கு.." என்று சிரித்தாள் காவ்யா..

"உன் மௌன விரதத்தை உடைக்க எனக்குத் தெரியாதா...?"

"பாப்பா.." விழி விரித்தாள் மருக்கொழுந்து..

"இம்புட்டு நேரமும் நீ வேனும்ன்னுதான் பேசினியா..?"

"ஆமாம்.. வீடான வீட்டில பேச்சுச் சத்தம் இல்லைன்னா எப்படி..? மதுரையில எங்க அம்மா திறந்த வாயை மூடாது.. எப்பப் பாத்தாலும் சத்தம் போட்டுக்கிட்டே இருக்கும்.. ஒரு நாள் அது சத்தம் போடலைன்னாலும் எனக்குத் தூக்கம் வந்து தொலைக்காது.. வீடே அமைதியாகிப் போயிட்டாப்புல இருக்கும்.. அது எங்க வீடில்லை.. வேற ஏதோ ஒருத்தங்க வீட்டுக்கு நான் வந்துட்டதைப் போல இருக்கும்.."

“நீ இம்புட்டு ஆசைப்பட்டியினா நான் பேசித்தள்ளரேன் பாப்பா.. ஆனா.. இதை உன் அண்ணன்கிட்ட மட்டும் சொல்லிராதே…”

“அப்படியா சங்கதி…? அண்ணன்தான் உன் வாயை மூட வைச்சுச்சா..?”

“ஆமாம் பாப்பா…”

“எனக்கு இது தெரியாம போச்சே.. இப்ப என்ன…? அண்ணன் இருந்தா நீ பேசாதே.. இல்லாதப்ப பேசிக்க…”

# 132

*நான் பேச நினைப்பதையெல்லாம்…*
*நானே பேச ஆசைகொண்டேன்…*

**ம**ருக்கொழுந்தின் வாய் பூட்டு உடைந்து விட்டது.. அவள் விட்டு விடுதலையானாள்.. கண்ணதாசனின் வீட்டிலும் வாய் விட்டுப் பேச முடிந்த அந்த தினத்தையும்.. சுதந்திர தினமாக அறிவித்தால் என்ன என்ற ஆசை அவள் மனதில் ஓடியது.. பேச முடிந்த ஆனந்தத்தில் அவள் சகட்டுமேனிக்கு ஊர்நிலவரம்.. உலக நிலவரம்.. என்று பேசித் தள்ளினாள்..

“அவ வீட்டுக் குப்பையை என் வீட்டு வாசல்லயே கொட்டினா எத்தன நாளைக்குத்தான் நான் பொறுத்துக்கிட்டு இருப்பேன் பாப்பா..? நீயே சொல்லு..”

“பொறுத்தது போதும்ன்னு பொங்கி எழுந்துட்டியாக்கும்..?”

“ஆமாம் பாப்பா.. நான் குப்பையைக் கூட்டி அவ வாசல்ல தள்ளிட்டேன்...”

“அட.. அது என்ன பண்ணுச்சு...? அள்ளிப் போட்டிருச்சா...”

“அந்தக் கோட்டிக்கழுத அதச் செஞ்சா எதுக்காக இத்தனை பொல்லாப்பு வரப் போகுது..? அந்த ராங்கி ரங்கம்மா என்னா செஞ்சா தெரியுமா..?”

“குப்பையைக் கூட்டி உன் வீட்டு வாசலுக்கே தள்ளி விட்டுட்டாளாக்கும்..?”

காவ்யா கைவிரல் நகங்களை ஆராய்ந்தபடி சொல்ல...

“எப்புடி பாப்பா..?” என்று முகவாயில் கை வைத்து ஆச்சரியப் பட்டுப் போனாள் மருக்கொழுந்து...

“இதுக்குப் போயி வெத்தலையில மை தடவி ஜோஸியமா பாக்கனும்..? கழுதை.. அதத்தானே செஞ்சு வைக்கும்..?”

காவ்யா கேள்வி கேட்க.. அதற்குப் பதில் சொல்ல மறந்தவளாக குப்பைக் கதையை விட்டுவிட்டு.. ஆரூடம் பக்கமாக பாய்ந்தாள் மருக்கொழுந்து..

“வெத்தலையில மை தடவி ஜோஸியம் பாக்குற பழக்கம் இந்தப் பக்கமும் உண்டு பாப்பா...”

“அப்படியா...?”

அசுவாரஸ்யமாய் கேட்டபடி.. வாசல் பக்கமாக அம்புஜத்தின் கார் தென்படுகிறதா என்று பார்வையை ஓட்டினாள் காவ்யா...

காருக்காக காத்திருக்கும் நேரத்தை ஓட்டுவதற்காக அவள் மருக்கொழுந்தின் வாயைக் கிண்டியிருக்கிறாள் என்ற விவரம் அறியாதவளாக மருக்கொழுந்து தன் போக்கில் படு உற்சாகமாக பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்...

“ஆமாம் பாப்பா.. இப்படித்தான் என்னோட காதுக்கம்மலோட திருகாணி ஒன்னு தொலைஞ்சு போச்சு..”

“திருகாணியா..?”

காவ்யா கைவிரல் நகங்களை விட்டுவிட்டு.. காதில் விழுந்த வார்த்தை சரியானதுதானா என்ற சந்தேகத்துடன் மருக்கொழுந்தின் முகம் பார்த்தாள்...

“அட.. திருகாணிதான் பாப்பா...”

“கீழே எங்கேயாவது விழுந்திருக்கும்.. தேடிப் பார்த்தியா..?”

“தலைகீழா புரட்டிப் போட்டுத் தேடிப்பார்த்தேன்.. கிடைக்கனுமே..”

“அப்புறம்..?”

“அப்புறமென்ன.. இப்புடித்தான்.. நீ சொன்னாப்புல தான்.. பாபநாசத்துக்கு பக்கத்தில ஒருத்தரு வெத்தலையில மை தடவி ஜோஸியம் பாக்குறாருன்னு கேள்விப்பட்டு அங்கே போய் பார்த்தேன்.. ரெண்டு மண்டலம் பூஜை கட்டினா திருகாணி கிடைச்சிரும்ன்னு சொன்னாரு...”

“எந்தக் கடவுளுக்கு பூஜை கட்டச் சொன்னாரு..?”

“கடவுளுக்கில்ல பாப்பா.. அவருக்குத்தான் பூஜை கட்டினோம்..”

“கடவுளே..!”

“அவரை ஏன் பாப்பா கூப்பிடறே..?”

“தாங்கலை.. அதான் கூப்பிட்டேன்.. ஆமா, பூஜைக்கு எவ்வளவு பணம் செலவாச்சு..?”

மருக்கொழுந்து சொன்ன தொகையைக் கேட்டவளுக்கு மயக்கம் வந்து விடும் போல இருந்தது..

“அறிவிருக்காக்கா உனக்கு..? அந்தப் பணத்தில நீ ரெண்டு பவுனுக்கு தங்கச்செயினே வாங்கிப் போட்டிருக்கலாம்.. கழுதை பெறுமாம் கால் பணம்.. சுமைகூலி பெறுமாம் முக்கால் பணம்ங்கிற கதையாயில்ல உன் திருகாணிக் கதை ஆகிப்போச்சு..? ஒரு கிராம் பெறாத திருகாணிக்கு.. ரெண்டு பவுனுக்கான பணத்தை செலவளிப்பியா..? உன்னை வாயைத் திறக்கக் கூடாதுன்னு ஏன் அண்ணா சொல்லுச்சுன்னு இப்பத்தான் புரியுது...”

“ஏன் பாப்பா கோவிச்சுக்கற..?”

“நீ செஞ்சு வைச்சிருக்கிற வேலைக்கு உன்னை கொஞ்சவா செய்வாங்க..?”

“போ பாப்பா.. பூஜை வைச்சதால திருகாணி கிடைச்சுச்சா இல்லையா..?”

“கிடைச்சாச் சரி.. ஹப்பா.. உன் கதையைக் கேட்டா.. எனக்கு பத்திக்கிட்டு வருது...”

“சும்மாயிரு பாப்பா.. பூஜை கட்டி முடிச்சிட்டு வீட்டுக்கு வர்றோம்...”

“திருகாணி வாசலில் கிடந்துச்சா..?”

“ஊஹீம்.. பீரோவுக்கு அடியில கிடந்துச்சு...”

“உடனே பார்த்துட்டியா..?”

“ஊஹீம்.. பூஜை கட்டி முடிச்சு.. ஒரு மாசம் கழிச்சுத்தான் பார்த்தேன்...”

“என்னது..?”

“ஆமாம் பாப்பா.. தை மாசம் பிறக்கிறதுக்கு முன்னால வீட்டுக்கு வெள்ளையடிக்கலாமுன்னு சாமான் சட்டை நகர்த்தி வைச்சோமா.. அப்ப.. பீரோவுக்கு அடியில திருகாணி கிடந்துச்சு...”

“வீட்டையே தலைகீழா புரட்டிப் போட்டுத் தேடிப் பார்த்ததா சொன்ன..?”

“பீரோவ தலைகீழா புரட்டிப் போட்டுத் தேடலையே...”

மருக்கொழுந்தின் நியாயத்தில் அவளுக்கு தாலி கட்டிய குமாரின் மீது பரிதாபப் பட்டாள் காவ்யா..

‘ஐயோ பாவம்...’

“இப்ப சொல்லுபாப்பா.. அந்த சாமியாருக்கு சக்தி இருக்குதா இல்லையா..?”

“அவருக்கு சக்தி இருக்கோ இல்லையோ.. உனக்குச் சுத்தமா புத்தியே இல்லைன்னு தெரியுது...”

காவ்யாவின் விமரிசனத்தில் மருக்கொழுந்து சிணுங்கிக் கொண்டிருந்த போது.. கார் வந்து விட்டது...

எதை அந்த காவ்யாகிட்ட அவன் கண்டு விட்டான்..' பார்த்தசாரதிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது...

அவருக்குத் தெரியாது.. நேகாவிடம் இல்லாத பல தன்மைகள் காவ்யாவிடம் இருக்கின்றன என்பது...

அச்சம்.. மடம்.. நாணம்.. பயிர்ப்பு என்று பெண்களுக்கு உரிய பிரத்யேக குணங்கள் காவ்யாவிடம் நிறைந்திருந்தன.. அவள் துடுக்குத்தனமாக பேசினாலும்.. அதை பெண்மையின் மிளிர்வோடு பேசினாள்... அவள் கண்களில் அர்ஜீனை மட்டும் தேடும் பிரத்யேகமான காதல் இருந்தது.. அப்படியொரு காதலை வேறு எந்தப் பெண்ணின் விழிகளிலும் அவன் பார்த்ததில்லை...

அதைப் பற்றியெல்லாம் பார்த்தசாரதி எங்கே கண்டார்..? அவர் சுந்தரிதான் மனைவியென்று அவளைப் பெண் பார்ப்பதற்கு முன்பே தீர்மானித்து விட்டவர்...

சுந்தரி அழகானவள்.. பண்பானவள்.. குத்துவிளக்கைப் போல அமைதியாக சுடர் விடும் தன்மையானவள்.. அதிர்ந்து பேசியறியாதவள்.. குணவதி..

இதையெல்லாமா அவர் கண்டார்..? அவர் கண்டதெல்லாம் அவள்.. அவளுடைய பெற்றோரின் சொத்துக்களுக்கு ஒரே வாரிசு என்பது மட்டும்தானே..

அவள் எப்படியிருந்தாலும் அவர் அவள் கழுத்தில் தாலியைக் கட்டியிருப்பார்.. அவருக்குத் தேவையானது

பணம் மட்டும்தான்.. அது சுந்தரியைப் பெற்றவர்களிடம் கொட்டிக் கிடந்தது.. அவரும்.. சுந்தரியைத் திருமணம் செய்து அந்தச் சொத்துக்களுக்கு அதிபதியானார்... அவரின் அதிர்ஷ்டமோ.. இல்லை.. அவரைப் பெற்றவர்கள் செய்த புண்ணியமோ.. சுந்தரியைப் போன்ற சாத்வீகமான அழகி, அவருக்கு மனைவியாக வாய்த்து விட்டாள்... பூர்வ ஜென்ம புண்ணியத்தில் அப்படிப்பட்ட மனைவி வாய்த்து விட்ட அதிர்ஷ்டத்தைப் பெற்றவருக்கு அர்ஜீனின் மனநிலையை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்..?

அவருக்கு மட்டும் நேகாவைப் போன்ற குணமுடைய மனைவி வாய்த்திருந்தால்.. அவர் மகனின் வாழ்க்கையுடன் விளையாடத் துணிந்திருக்க மாட்டார்... இதை உணராத பார்த்தசாரதி மகனின் கோபமான பேச்சிற்காக மனதுக்குள் கோபப்பட்டார்....

அவரின் மனப்போராட்டத்தை அறியாமல் அவர் முகம் நோக்கிக் கொண்டிருந்த நேகாவிற்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற உணர்வினால் தந்நிலைக்கு திரும்பிய பார்த்தசாரதி...

“உன்னைப் பற்றித்தான் விசாரித்தான் நேகா...” என்று பொய் மூட்டையை அவிழ்த்து விட்டார்...

“ஈஸிட்..? அப்ப போனை என் கையில் கொடுத்திருக்கலாமே அங்கிள்..” நேகா பரபரத்தாள்...

‘கிழிஞ்சது போ..’ என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார் பார்த்தசாரதி...

‘அவன் உன்னைப்பற்றிப் பேசினதை மட்டும் நீ கேட்டிருந்தா.. அவ்வளவுதான்.. அது தெரியாம அவன்கூடப் பேசனும்னு ஆளாப் பறக்காதே..’

“அர்ஜீனிடம் நான் பேசவா அங்கிள்..?” நேகா போனைக் கையில் எடுக்க பார்த்தசாரதி பதறிப் போனார்...

“வேண்டாம் நேகா.. வேண்டாம்...”

“ஏன் அங்கிள்..?” விசித்திரமாக அவரைப் பார்த்தாள் நேகா...

“உனக்கு அவனோட போன் நம்பர் தெரியாதில்ல நேகா.. அதுக்கத்தான் நான் சொன்னேன்..” அபத்தமாக உளறிக் கொட்டி கிளறி மூடினார் பார்த்தசாரதி...

“எந்தக் காலத்தில இருக்கீங்க அங்கிள்..? அர்ஜீனோட போன் நம்பரை நான் தெரிஞ்சு வைச்சுக்காம இருப்பேனா..?”

“நான் உனக்கு அவன் நம்பரைக் கொடுக்கலையே நேகா...”

“குட் ஜோக்..! இந்த நேகாவை என்னன்னு நினைச்சீங்க...? அர்ஜீனைப் போன்ற ஒரு பிஸினெஸ்

மேக்னெட்டின் போன் நம்பரைத் தெரிந்து வைத்துக்-காமலிருக்கும் சின்னப் பப்பான்னா நினைச்சீங்க...? நான் நினைச்சா.. கடலுக்கடியில் மறைந்திருக்கிறதைக் கூட வெளியில் கொண்டு வந்து விடுவேன்.. இந்த செகண்டில உங்க சன் எங்கே.. எந்த ஹோட்டலில்.. எந்த ரூமில் இருக்கிறார்ங்கிற விவரம் எனக்குத் தெரியும்.. அது உங்களுக்குத் தெரியுமா...?”

‘ஏன் தெரியாது...?’ என்று நினைத்துக் கொண்டார் பார்த்தசாரதி...

நேகாவின் வழிமுறைகளைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியுமே.. அந்த வழிமுறைகளைப் பற்றி அர்ஜீனும் தெரிந்து வைத்திருப்பதால்தானே நேகா என்ற பெயரைக் கேட்டவுடன் காத தூரம் ஓடுகிறான்...

இப்படிப்பட்டவள் எப்படி காவ்யாவை மோப்பம் பிடிக்காமல் விட்டு விட்டாள் என்று எரிச்சல்பட்டார் பார்த்தசாரதி...

அப்படி அவள் தெரிந்து வைத்திருந்தால் பார்த்தசாரதிக்கு வேலையில்லாமல் பண்ணியிருப்பாளே.. காவ்யாவை கடையை விட்டு ஓட்டி விட்டிருப்பாளே...

அவள் ஏன் அதைச் செய்யவில்லை..?

அந்தக் கேள்வி அவள் மனதிலும் எழுந்திருக்க வேண்டும்.. சிந்தனையுடன் ஜன்னல் திரையை விலக்கி

தோட்டத்தைப் பார்த்தவள் தனக்குத்தானே பேசிக் கொள்பவளைப் போல பேசினாள்..

“கனடாவில் இருக்கிறவரைக் கண்காணிக்கனும்னு தோணிச்சு.. இதோ இருக்கிற மதுரையில் என்ன நடக்குதுன்னு கண்காணிக்கனும்னு தோணலையே.. எதையும் ஈஸியா நினைச்சிரக் கூடாதுங்கிறதுக்கு இது ஒரு லெசனா அமைஞ்சு போச்சு...”

“லீவ் இட் நேகா.. அதுதான் நீ வந்திட்டயே.. கடையில் முன்னே.. பின்னே இருந்தாலும் அர்ஜீன் வருகிறதுக்குள்ள சரி பண்ணிரமாட்டியா என்ன..?”

“ஷ்யூர் அங்கிள்.. எனக்கு வேறென்ன வேலை...”

நேகா கையிலிருந்த போனை நோண்ட ஆரம்பித்தாள்... பார்த்தசாரதிக்கு ‘பகீர்’ என்றது...

‘இவ பாட்டுக்கு என் மகனுக்கு போனைப் போட்டு பேசி வைச்சுட்டா என்ன செய்கிறது..? அவன் வள்ளுன்னு விழுந்து வைப்பானே...’ பதறிப் போய் விட்டார்...

“யாருக்கு நேகா போனை போடற..?” என்று கேட்டவரை அதிருப்தியுடன் நோக்கினாள் நேகா...

அவள் அந்தக் கேள்வியை விரும்பவில்லை என்பதை அவள் முகபாவமே சொல்லியது...

“அர்ஜீனுக்குத்தான் அங்கிள்..”

உன்னிடமெல்லாம் இவ்வளவு பேசியதே அதிகம் என்பதைப் போல அவள் செல்போனின் எண்களை அழுத்த ஆரம்பிக்க...

“வேண்டாம் நேகா.. வேண்டாம்..” என்று மீண்டும் பதற ஆரம்பித்தார் பார்த்தசாரதி...

‘இவருக்கு என்ன ஆனது...’ முகம் சுளித்தாள் நேகா...

“வாட்ஸ் யுவர் பிராப்ளம் அங்கிள்..? நான் அர்ஜீனுக்கு போன் போட்டால் உங்களுக்கு என்ன வந்தது...?”

என்ன சொல்லி இவளை சமாளிப்பது என்ற பெருங்கவலையில் ஆழ்ந்தார் பார்த்தசாரதி.. அவரது கவலையை அறிந்தவளைப் போல அவருக்கு வழி காண்பித்தாள் நேகா...

“அர்ஜீனை நாலு கேள்வி கேட்கனும் அங்கிள்.. அந்தப் பெண் இருக்கிறாளே.. அவள் பெயர் என்ன..?”

மறந்து விட்டவளைப் போல நேகா நெற்றிப் பொட்டில் ஒற்றைவிரலால் தட்ட....

‘என்கிட்டயேவா..’ என்ற பார்வையை பார்த்தார் பார்த்தசாரதி...

அவருக்குத் தெரியும்.. தூக்கத்தில்கூட நேகா காவ்யாவின் பெயரை மறக்க மாட்டாள் என்று...

இருந்தும் அவள் அலப்பறையைப் பண்ண.. அதையும் ‘சிவனே’ என்று சகித்துக் கொண்டு...

“காவ்யான்னு ஞாபகம்..” என்று பார்த்தசாரதியும் நெற்றிப்பொட்டை ஒற்றை விரலால் பதம் பார்த்தார்...

“யெஸ்... யெஸ்.. அவளைப் போல பாஸின் ஆர்டரை ஓபே பண்ணாத ஆள்களையெல்லாம் அர்ஜீன் எதற்காக வேலையில் வைத்திருக்கிறார்.. தூக்கிக் கடாச வேண்டியது தானே...”

‘ஆஹா.. வழி கிடைத்து விட்டது...’

என்னவோ புதையல் கிடைத்து விட்டது என்பதைப் போல மனம் மகிழ்ந்து போனார் பார்த்தசாரதி...

“இதைப் போல எதையாவது நீ சொல்லி விடுவாய்ன்னுதான் நான் உன்னை பேச வேண்டாம்ன்னு சொன்னேன் நேகா...”

“வாட்..?”

“யெஸ் நேகா.. அர்ஜீனுக்கு ஒரு பழக்கம் இருக்கிறது.. அவன் செலக்ட் பண்ணி வேலையில் உட்கார வைத்திருக்கும் ஆள்களை மற்றவர்கள் குறை சொன்னால் கேட்டுக்க மாட்டான்...”

நேகாவின் முகத்தில் நெருப்பின் நிழல் தெரிந்தது.. அவள் வெகுண்டாள்.. கடையில் வேலை பார்க்கும் பெண்ணிற்காக... நேகாவையே அர்ஜீன் தூக்கி எறிவானா..?

“நான் சொன்னால் கூடவா அங்கிள்..?” நேகாவின் கேள்வியில் ஆணவம் இருந்தது..

‘முக்கியமா நீ சொன்னால்தான் அவன் ருத்ர அவதாரம் எடுப்பான்..’ என்று நினைத்துக் கொண்ட பார்த்தசாரதி..

“நான் சொன்னாலும் அப்படித்தான்..” என்று அவளுக்குச் சமாதானம் சொன்னார்...

“அது எப்படி அங்கிள்.. நீங்களும்.. நானும்.. ஒன்றாகிவிட முடியுமா..?” நேகாவின் குரலில் சவால் இருந்தது...

‘நேரம்தான்..’ நொந்து போனார் பார்த்தசாரதி..

இருந்திருந்து.. மருமகளாக வரப் போகிறவளிடமிருந்தா அவர் குட்டு பெற வேண்டும்..?

‘இவள் கூட இணை சேர்ந்து கூட்டுசதி பண்ண நினைத்ததற்கு கிடைக்கும் பரிசு இதுதான் போல...’ தனக்குள் சொல்லிக் கொண்டார்...

“லுக் நேகா.. அர்ஜீன் அவனுடைய வொர்க்கர்ஸை ரொம்பவும் நம்புவான்.. அவங்களைப் பற்றி நாம கம்ப்ளெயின்ட் பண்ணுவதை விரும்ப மாட்டான்.. அதே நேரத்தில் அவனிடம் இன்னொரு பழக்கமும் இருக்கு..”

“என்ன அங்கிள்...?”

“அவன் நம்புகிற வொர்க்கர்.. அவனுடைய நம்பிக்கைக்கு பாதகமா எதையாவது செய்துட்டா.. அவன் அவர்களை மன்னிக்கவே மாட்டான்.. கிட்டச் சேர்த்துக்கவும் மாட்டான்...”

அவரின் வார்த்தைகளில் நேகாவின் கண்கள் மின்னின.. ஏற்கனெவே அவள் கண்டு பிடித்து வைத்திருந்த வழியும்.. இந்த வழியும் ஒன்று படுவதை அவள் உணர்ந்தாள்..

பார்த்தசாரதிக்குத் தெரியும்.. அவர்கிழித்து விட்ட கோட்டில் நேகா ரோட்டைப் போட ஆரம்பித்து விடுவாள் என்பது..

# 96

*நான் சொன்ன வார்த்தைகளை - நீ*
*நினைத்துப் பார்க்க ஆசைகொண்டேன்...*

**நா**யக்கர் மஹாலை திருமலை நாயக்கரின் மனைவியைவிட அலட்சியமான தோரணையுடன் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தாள் நேகா... அவளுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த பார்த்தசாரதி

செல்போனை காதுக்கு கொடுத்தபடி.. நேகாவைக் கவனிக்காமல் யாருடனோ மும்முரமாக பேசிக் கொண்டிருந்தார்.. அதில் நேகாவுக்கு உடன்பாடில்லை..

‘நான் வந்திருக்கேன்.. என்னைக் கவனிக்காம செல்போனில் பேசிக்கிட்டு இருக்கே.. இந்தக் கிழத்துக்கு மருமகளானவுடன் நான் யாருன்னு காண்பிச்சே ஆகனும் போல இருக்கே...’

அவள் எரிச்சல் கலந்த அசுவராஸ்யத்துடன் நாயக்கர் மஹாலின் தூண்களை பார்வையால் அளவிட்டபடி நடந்தாள்.. ஒரு தூணின் மறைவிலிருந்து வெளிப்பட்ட தேவராஜன் சட்டை காலரை உயர்த்தியபடி அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்து

“வணக்கங்க..” என்றான்...

நேகா அவன் பார்வையை ரசிக்கவில்லை.. அவளை இளைஞர்கள் ஆவலுடன் பார்ப்பதை அவள் ரசிப்பவள் தான்.. அப்படி யாரேனும் பார்க்காமல் போய்விட்டால் உடனடியாக கண்ணாடியின் முன்நின்று முகம் பார்ப்பவள்தான்.. அப்படி மற்றவர்கள் பார்க்க வேண்டுமென்பதற்காகவே கவர்ச்சியாக உடையணிந்து செல்பவள்தான்...

ஆனாலும்.. தேவராஜனைப் போன்ற ஒருவன் அவளை பார்வையிடுவதை அவள் ரசிக்கவில்லை.. எனவே

முகம் சுளித்தபடி.. அப்படியொருவன் அங்கே நிற்காததைப் போன்ற பாவனையுடன் நகர்ந்தாள்...

“மாடம்..” என்று அவள் பின்னே வந்தான் தேவராஜன்..

“மாடமா..?” நேகா திகைத்தாள்...

அவளுக்கு என்ன தெரியும்..? அவளை மரியாதையுடன் மேடம் என்று அழைப்பதாக அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பது..?

“உங்களத்தான் மாடம்..” திரும்பவும் அவளை மாடமாக்கினான் தேவராஜன்..

“ஹீ ஆர் யு மேன்..?” நேகா அதட்டினாள்..

அப்படியொரு அதட்டலை எந்தப் பெண்ணிடமும் கண்டறியாத தேவராஜன் பின்வாங்கினான்...

“என்னா மாடம் கோவிச்சுக்கறிங்க.. நான் உங்க நண்பேன் மாடம்...”

“நண்பனா..? யு மீன் பிரண்ட்..?” நேகா மிடுக்காக வினவியபடி அவனை ஏற இறங்க பார்த்தாள்..

“ஆமா மாடம்..” தேவராஜன் குதூகலமாக சொன்னான்..

“யாருக்கு யார் பிரண்ட்.? நீ...? எனக்கு பிரண்டா..?” நேகா ஆணவத்துடன் கேட்டாள்...

அவளைத் தவிர வேறு யாராவது இதைச் சொல்லியிருந்தால் போடி நீயுமாச்சு.. உன் பிரண்ட்ஷிப்பு மாச்சு என்று தேவராஜன் தன் வழியில் போயிருப்பான்..

அப்படிப் போக முடியாமல் காவ்யாவின் காதலைக் கெடுக்கும் கடமை அவனைத் தடுத்தது...

“இப்ப என்ன மாடம்.. நான் உங்கள பிரண்டுன்னு சொல்லக்கூடாது.. அவ்வளவுதான.. சொல்லலை.. போதுமா..?”

“போதாது...”

“இன்னும் என்ன வேணும்..?”

“இந்த இடத்தைக் காலி பண்ணிட்டு வெளியே போகனும்...”

“அதெப்படி மாடம்.. உங்கள எப்படியாவது தனியாப் பார்த்துப்புடனும்னு இவ்வளவு நாளா.. நீங்க போற பக்கமெல்லாம் தொடுத்து வந்துக்கிட்டு இருக்கேன்.. இன்னைக்குத்தான் தனியா நீங்க ஆப்பிட்டுக்கிட்டு இருக்கீங்க...”

இவன் இந்த அளவுக்கு அவளை ஃபாலோ பண்ணியிருக்கிறானா..? நேகாவுக்கு சுர்ரென்ற கோபம் ஏற்பட்டது.. அவள் இயல்பாக ஜீன்ஸ் பேன்ட் பாக்கெட்டில் கைவிட்டு துப்பாக்கியை எடுத்தாள் அதைக்கண்டு மிரண்டு பின் வாங்கிய தேவராஜனின் நெற்றிப் பொட்டில் வைத்தாள்.. அவன் அலறினான்..

“சுட்டாராதீங்க மாடம்.. நான் கல்யாணம் ஆக வேண்டிய காளைப் பருவத்தில இருக்கிறவன்.. இன்னும் வாழவே ஆரம்பிக்கல.. கருணை காட்டுங்க...”

“உனக்கு நான் கருணை காட்டறதா..? நெவர்.. எவ்வளவு தைரியமிருந்தா நீ என்னை ஃபாலோ பண்ணியிருப்ப...? என் கால் தூசிக்கு இணையாவாயா நீ..?”

“இணையாவேன்னு நான் சொன்னேனா..?”

“பின்னே.. எதுக்காக என் பின்னாலே வருகிற...?”

“ஒரு தகவல் சொல்லத்தான்...”

“தகவலா..? நீ எனக்குச் சொல்கிறயா..?”

“ஆமாம் மாடம்...”

“நீயெல்லாம் தகவல் சொல்ல.. கேட்டுக்கிற நிலைமையில் நான் இல்லை.. புரிஞ்சுதா..? திரும்பிப் பார்க்காம ஓடு பார்க்கலாம்...”

“நீங்க சுட்டுப் போட்டாலும் சரி.. நான் சொல்ல வந்ததை சொல்லாமல் போகிறதாயில்ல...”

“நீ சொல்கிறதை நான் கேட்டுக்கொள்கிறதா இல்லை...”

“அது உங்களோட வருங்காலப் புருசன் அர்ஜீனனோட காதல் விவகாரமா இருந்தக்கூட நீங்க கேட்டுக்க மாட்டிங்களா...?”

தேவராஜன் நிதானமாக குண்டைத் தூக்கி போட நேகாவின் முகம் மாறியது...

“வாட்..?” அவள் துப்பாக்கியை கீழே இறக்கினார்...

தேவராஜன் நிம்மதியாக ஆசுவாசப் பெருமூச்சை விட்டான்...

“யார் நீ...” நேகா கடுமையாக வினவினாள்...

“என்னமோ பேயைக் கேக்கிறதப் போலக் கேட்டு வைக்கறிங்க.. நான் மனுசன்தாங்க.. இந்த ஊரில உங்கள கட்டிக்கப் போகிற அர்ஜீன மகாராஜா ஒரு கடையை வாங்கிப் போட்டிருக்கானே.. அந்தக் கடையை என்கிட்ட இருந்துதான் வாங்கினான்.. அந்தக் கடையோட பழைய முதலாளி நான்தான்...”

“ஓ...”

அவனை ஊடுறிவிப் பார்த்த நேகாவின் பார்வையில் நம்பாத தன்மை தெரிந்தது...

“அந்தக் கடையின் ஓல்டு ஓனரின் பெயர் துரியோதனன்னு அங்கிள் சொன்னாரே..”

“சொல்லிட்டாரா..? உங்க அங்கிள் சொல்ல வேண்டியதைச் சொல்ல மாட்டார்.. தேவையில்லாததைத் தான் சொல்லி வைப்பார்.. அந்த துரியோதனன் வேற யாருமில்லேங்க.. என்னப் பெத்த அப்பன்தான்...”

“ஓ.. அப்படிப் போகுதா ஸ்டோரி..? உங்க அப்பாவோட புராப்பர்டிக்கு நீங்க உரிமை கொண்டாடறிங்களா...?”

“அப்பன் சொத்து புள்ளக்குத்தான மாடம்..?”

“அர்ஜீன் அப்படியில்லை.. அங்கிளோட கம்பெனிப் பக்கம் அவர் போனதே இல்லை.. தனியாய் கம்யூட்டர் கம்பெனி ஆரம்பித்து ஓஹோன்னு இருக்கிறார்.. ஹி இஸ் எ கம்ப்ளீட் மேன்...”

தேவராஜனுக்கு அவள் சொன்னது முழுவதுமாக புரியவில்லை என்றாலும்.. அவள் அர்ஜீனை உயர்த்தி.. தேவராஜனை தாழ்த்திப் பேசுகிறாள் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது...

“ஐஞ்சு விரலும் ஒன்னு போலவாங்க இருக்குது..? இப்ப என்னயே எடுத்துக்கங்க.. வீட்டில பாத்த பொண்ணத்தான் கட்டுவேன்.. அர்ஜீன் அப்படியா..? வீட்டுக்குத் தெரியாம மதுரைக் கடையில வேல பாக்குற பொண்ண கணக்குப் பண்ணிட்டானே...”

நேகாவிற்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.. அர்ஜீனுக்கு காவ்யாவின் மீது ஓர் மயக்கம் இருக்கிறது என்றுதான் அவள் நினைத்திருந்தாள்... அந்த நினைவையே அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை..

அப்படியிருக்கையில் காவ்யாவை அர்ஜீன் காதலிக்கிறான் என்பதை எப்படி அவள் தாங்கிக் கொள்வாள்..?

“உளராதே...” என்று வெடுவெடுத்தாள்...

“உளரலை மாடம்.. இது உண்மை.. வேணும்னா உங்க வருங்காலப் புருசனுக்கு போனைப் போட்டு கேட்டுப் பாருங்க.. அவன் இல்லேன்னு சொல்ல மாட்டான்...”

‘அதனால்தான் அவள் ஆரத்தி எடுக்க மாட்டேன்னு சொன்னாளா..?’ நேகாவின் இதயத்தில் நெருப்பு பரவியது...

“இது எத்தனை நாளா நடக்குது..?” நேகா விசாரணையை ஆரம்பித்தாள்..

“அர்ஜீன் இந்த மதுரக்குள்ள வந்த நாள் முதல் இந்த நாள்வரை நடக்குது மாடம்..” குஷியாகப் பதில் சொன்னான் தேவராஜன்...

“இது யார் யாருக்குத் தெரியும்..?”

“யாருக்குத் தெரியும்..? எனக்குத் தெரியும்.. எனக்குத் தெரிஞ்சது என் அப்பாவுக்கும் தெரியும்.. அம்புட்டுத்தான் எனக்குத் தெரியும்....”

“கடையில வேலை செய்கிறவங்களுக்குத் தெரியாதா...?”

“அந்தப் பாவனாவுக்கு தெரிஞ்சிருக்கலாம்...”

“பாவனாவா..?”

“அதான்.. காவ்யாகூட பசை இல்லாமலே ஒட்டிக்கிட்டு அலைவாளே.. அவள்தான் பாவனா.. அவ காவ்யாவோட உயிர்தோழி...”

“ஈஸிட்..?”

“ஆமா மாடம்...”

“வெல்.. இது உனக்கு எப்படித் தெரியும்..?”

“அதையேன் மாடம் கேக்கறிங்க.. எங்க சொந்தக்காரன் ஒருத்தன் பிளேனில வந்து இறங்குனான்.. அவனக் கூப்பிட்டுக்கிட்டு வர நான் போனேன்.. போறப்ப பாத்தா அர்ஜீனோட காரு ஏர் போர்ட்டுக்கு போற பாதையில ஏர் போர்ட்டுக்கு பக்கமா ஒதுங்கி மரத்தடியில நிக்குது... காருக்குள்ள யாருன்னு எட்டிப் பாத்தா.. அர்ஜீனும் காவ்யாவும் இருக்காங்க.. அவங்க எப்படி இருந்திருப்பாங்கங்கிறத வயசுப் பொண்ணான உங்ககிட்ட.. வாலிபப் பயலான நானு எப்படி மாடம் சொல்ல முடியும்..”

‘வயது பெண்ணும்.. வாலிப பயலுமா..?’ நேகா பல்லைக் கடித்தாள்...

இதுபோன்ற தலைப்புக்களை அவள் ஒரு மாதிரியான பலான திரைப்படங்களின் சுவரொட்டிகளில்

பார்த்திருக்கிறாள்.. அவற்றையே அவளிடம் ஒருவன் சொல்வானென்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை...

'பேசாம துப்பாக்கியைத் தூக்கிடலாமா..'

மனதில் எழுந்த எண்ணத்தை உடனடியாக கைவிட்டாள் நேகா.. அவளுக்கு அவனிடமிருந்து சில விவரங்களைக் கறக்க வேண்டியிருந்தது...

"அப்புறம்..?"

"அப்புறம் என்னங்க.. சப்புறம்தான்.. நானும் ஏர்போர்ட்டுக்கு போயி ரெண்டு மணி நேரமா காத்திருந்து.. பிளேனில பகுமானமா வந்து இறங்கின எங்க சொந்தக்காரப் பயல கூப்பிட்டுக்கிட்டு திரும்பி வந்தா.. அப்பவும் அந்தக் கார் மரத்தடியிலதான் ஒதுங்கி நிக்குது.. எங்க சொந்தக்காரப் பய கூடச் சொன்னான்.. ஏண்டா தேவராஜ்ஜீ.. காருக்குள்ள இருக்கிற மனுசங்கதான் காரை விட்டு இறங்கி.. மரத்து மறைவில ஒதுங்குவாங்கன்னு கண்டிருக்கோம்.. இங்கே என்னடான்னா.. மனுசக்கழுதைக காரை விட்டு இறங்காம உள்ளே உக்காந்திருக்குதுக.. காரு மட்டும் மரத்தடியில ஒதுங்கி நிக்குதேன்னு கேட்டான்.. நான் என்னத்தைச் சொல்ல..?"

தேவராஜன் சொல்லச் சொல்ல.. நேகாவின் முகம் இறுகி பயங்கரமாக மாறியது...

# 97

*ஓர் பார்வை நான் பார்த்தால் - உன்..*
*உயிர்துடிக்க ஆசைகொண்டேன்...*

**நே**கா உறங்காமல் உலாவிக் கொண்டிருந்தாள்.. அவள் மனதில் காவ்யாவின் முகம் எழுந்தது.. இயற்கையான மஞ்சள் நிறத்தின் பொழிவைத் தாங்க முடியாமல் இமை சிமிட்டி அவள் முகத்தைத் துரத்தியடித்தாள் நேகா...

‘அந்தக் காவ்யா எனக்குப் போட்டியா..?’

அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. நேகா யார்..? மிகப் பெரிய தொழில் சாம்ராஜ்யத்தின் மகாராணி.. அந்த காவ்யா யார்..? சாதாரணமாக ஒரு கடையில் வேலை பார்ப்பவள்.. அவள் நேகாவிற்கு போட்டியாக நிற்பதா..?

“ஓட வைக்கிறேன்..” வாய் விட்டுச் சொன்னாள் நேகா...

“அவளை ஓட வைக்கிறேன்.. அவள் கடையை விட்டும் ஓட வேண்டும்.. அர்ஜீனின் வாழ்வை விட்டும் ஓட வேண்டும்...”

அந்த நொடியில் நேகாவின் முகத்தைப் பார்க்க நேர்ந்தவார்கள்.. அந்த இடத்திலேயே ரத்த வாந்தி எடுத்து மோட்சம் அடைந்து விடும் அபாய நிலைக்கு ஆளாகி விடுவார்கள்...

அப்படிப்பட்ட பயங்கரம் அவள் முகத்தில் சூழ்ந்திருந்தது...

மறுநாளில் இருந்து நேகாவின் கவனம் முழுவதும் காவ்யாவின் மீதே இருந்தது.. நிமிடத்திற்கு ஒருமுறை அவள் காவ்யாவை வரச் சொன்னாள்...

“கூப்பிட்டிங்களா...?”

பல்லைக் கடித்தபடி வந்து நின்றவளிடம் பதில் சொல்லாமல் தோரணையாக சுழல் நாற்காலியில் சுழன்றபடி அலட்சியமாக உதாசீனப் பார்வை பார்த்தாள்...

அந்தப் பார்வை எவர் மனதையும் தளர வைக்கும் இகழ்ச்சிப் பார்வை.. ஆனால் காவ்யா மனம் தளரவில்லை.. அர்ஜீனின் வருங்கால மனைவியென்று நேகாதான் சொல்லிக் கொள்கிறாள் அர்ஜீன் சொல்லவில்லை என்ற ஒன்றே அவளுக்குப் போதுமானதாக இருந்தது.. இயல்பாகவே நிமிர்வைச் சொந்தம் கொண்டவளுக்கு நேகாவின் உதாசீனத்தை உதாசீனப்படுத்துவது மிக எளிதாக கை வந்தது...

அலட்டிக் கொள்ளாமல் நேர்பார்வை பார்த்தபடி நிற்கும் காவ்யாவிடம் தோற்றுப் போனதைப் போல உணர்ந்தாள் நேகா.. அவளின் முதல் அஸ்திரமே புஸ்வாணமாகப் போனதில் அவளுக்குள் எல்லையற்ற கோபம் ஏற்பட்டது..

அதவரை அந்த அஸ்திரம் தோற்றுப் போனதில்லை.. எப்பேற்பட்டவராக இருந்தாலும்.. நேகாவின் அந்த உதாசீனப் பார்வையில் மனம் தளர்ந்து போயிருக்கிறார்கள்.. காவ்யா அந்த உதாசீனத்தையே உதாசீனம் செய்ததில் நோகவின் மனம் தளரட்டுமா என்று கேட்டு வைத்ததில் நேகா கொதிகலனாகி விட்டாள்...

பார்வை அஸ்திரம் பலனற்றுப் போனதில் அடுத்ததாக வார்த்தை அஸ்திரத்தை பிரயோகிக்க முடிவு செய்தாள் நேகா...

“கூப்பிட்டாத்தான் வருவியா..?”

‘வா.. போன்னு கூப்பிடறாளா..? என்ன தெனாவெட்டு..’ காவ்யா சிலிர்த்தெழுந்தாள்...

“பாருங்க.. எனக்கு மரியாதை கிடைத்தாத்தான் மரியாதை கொடுப்பேன்.. இது என் பழக்கம்...”

“உன் பழக்கத்தை தூக்கி குப்பையில் போடு.. அதையெல்லாம் எதுக்காக என்னிடம் சொல்கிற...?”

“நீ ‘வா..போ’ ன்னு கூப்பிட்டா.. நானும் உன்னை அப்படியே கூப்பிட வேண்டியிருக்கும்.. பரவாயில்லையா..?”

காவ்யா நிதானமாக கேட்டதில் நேகாவின் முகம் மாறிவிட்டது... அவளால் இந்த அணுகுமுறையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. காவ்யாவை விட அதிகமாகப் படித்த.. அனுபவம் நிறைந்த.. லட்சக் கணக்கில் சம்பளம் வாங்குகிற நபர்களெல்லாம் நேகாவின் முன்னால் கை கட்டி நின்றிருக்க.. மிகச் சாதாரணமான பெண்ணான காவ்யா.. நிமிர்ந்து நின்று நேகாவை மிக எளிதாக ஏக வசனத்தில் பேசுகிறாள்...

“ஏய்ய்...” ஒற்றைவிரலை உயர்த்தி ஏறக்குறைய அலறினாள் நேகா...

அவளின் கூச்சலில் வாசல் பக்கமாக சென்றிருந்த பார்த்தசாரதி அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தார்...

“என்ன நேகா..? என்ன நடந்தது...?”

‘சொல்லேன் பார்க்கலாம்...’ என்ற சவாலை கண்களில் பிரதிபலித்தபடி அலட்சியமாக நின்ற காவ்யாவைப் பார்த்ததும் நேகா தன்னை அடக்கிக் கொண்டாள்...

எந்தவித பக்கபலமும் இல்லாத காவ்யா அலட்சியமாக நேகாவை எதிர்கொள்ளும் போது.. நேகா

மட்டும் சின்னக்குழந்தை புகார் செய்வதைப் போல.. காவ்யாவைப் பற்றி பார்த்தசாரதியிடம் சொல்லி பக்கபலம் தேடிக் கொள்வதா..?

“நத்திங் அங்கிள்...” சமாளித்தாள் நேகா...

“என்னவோ கோபமாய் சத்தம் போட்டயே...” சந்தேகத்துடன் காவ்யாவைப் பார்த்தார் பார்த்தசாரதி...

“என்னை ஏன் சார் பாக்கறிங்க..? சத்தம் போட்டது அவங்க.. நானில்லை...” கிண்டலாகச் சொன்னாள் காவ்யா...

அவளின் கிண்டலில் பார்த்தசாரதிக்குள் கோபம் கிளர்ந்தது.. அவர் நேகாவின் முகத்தைப் பார்த்தார்.. அவள் முகத்திலும் கோபச்சிகப்பு இருந்தது...

“அது ஒன்றுமில்லை அங்கிள்.. இந்தப் பெண்ணுக்கு வேலை செய்யத் தெரியவில்லை.. அதைப் பற்றிக் கேள்வி கேட்டால் தெளிவான பதில் வரவில்லை.. அதான் கோபப்பட்டுட்டேன்...”

நேகா மிகக் கவனமாக.. காவ்யாவை பன்மையிலும் விளிக்காமல்.. ஒருமையிலும் குறிப்பிடாமல் பொதுவாகப் பேசித்தப்பித்தாள்.. அவளின் அந்த வார்த்தை ஜாலத்தை மெச்சி.. மனதுக்குள்...

‘சபாஷ்...’ போட்டுக் கொண்டாள் காவ்யா...

'இவகிட்ட திறமையிருக்கு.. அதைத்தாண்டி உடம்பு முழுக்க திமிர் இருக்கு.. அதுதான் இவள வாய்க் கொழுப்போட பேச வைக்குது... ஆனா.. அது யாரு கிட்ட..?'

"ம்ப்ச்.. எனக்கும் இதுதான் பிராப்ளம் நேகா... அர்ஜீன்பாட்டுக்கு.. இந்த மாதிரியான ஆளுகளாப் பார்த்து செலக்ட் பண்ணி வைச்சிருக்கான்.. இவங்ககூட மல்லுக்கு நின்று நம்ம பிளட்பிரசர்தான் எகிறுது..."

"அதைச் சொல்லுங்க..."

பார்த்தசாரதியின் முகச் சுளிப்போடு நேகாவின் முகச்சுளிப்பும் சேர்ந்து கொண்டதில் காவ்யாவின் ரத்த அழுத்தம் எகிறவா என்று கேட்டது...

'ஊஹீம்...'

மானசீகமாக ஒற்றை விரலை உதட்டின் மீது வைத்து எச்சரித்து அதைக் கட்டுக்குள் கொண்டு வந்த காவ்யா.. மிக பவ்யமாக பார்த்தசாரதியைப் பார்த்து...

"மன்னிக்கனும் சார்..." என்றாள்...

"எதுக்கு..?" பார்த்தசாரதி நேகாவைப் பார்த்தார்...

"இதுமட்டும் தான் வாயில் வருது அங்கிள்.. மற்றபடி வேலையைப் பற்றிய விவரம் வருவதில்லை..." நேகா கிடைத்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொண்டாள்..

“வேலையைப் பற்றி யாரும் விவரம் கேக்கறதைப் போல தெரியலையே...” என்று பதிலுக்குப் பதில் கொடுத்த காவ்யா பார்த்தசாரதியைப் பார்த்து...

“இங்கே வேலை செய்கிற யாரையும் உங்க மகன் செலக்ட் பண்ணல.. நாங்க ஏற்கனெவே துரியோதனன் சார்கிட்ட கடையிருந்தப்ப இங்கே வேலை செய்துக்கிட்டு இருந்தவங்கதான்.. எங்களை செலக்ட் பண்ணினது துரியோதனன் சார்தான்...” என்று சொன்னாள்...

‘என்னதிமிர்..’ நேகா பல்லைக் கடித்தாள்..

அவள் கம்பெனியில் அவள் என்ன பேசினாலும் எதிர்த்து ஒரு சொல்லைக்கூட உதிர்க்க மாட்டார்கள்.. இங்கே என்ன நடக்கிறது..? ஒரு துக்கடா கடையில் வேலை பார்க்கும் சாதாரணப் பெண் அவளை எதிர்த்து நின்று பதில் சொல்கிறாள்..

“வாட் இஸ் திஸ் அங்கிள்..?” நேகா பார்த்தசாரதியிடம் கேட்டாள்...

‘அதையேண்டி உன் வருங்கால மாமனார்கிட்டக் கேட்கிற..? பெரிசா கம்பெனி வைச்சு நடத்துறவன்னு பீத்திக்கறியே.. உனக்கு இது என்னன்னு தெரியாதா..?’ காவ்யா கடுப்புடன் நேகாவை முறைத்தாள்...

“இங்கே என்னதான் நடக்குது அங்கிள்..?”

‘இதுவரைக்கும் மனுசங்க நடந்தாங்க.. நீ வந்த பின்னால நாலு கால் ஜீவனும் சேர்ந்து நடக்குது...’

“என் கம்பெனியில் இப்படியில்லை...”

‘இந்தக் கடையிலயும் இத்தன நாளா இப்படியில்ல.. நீ வந்த பின்னாலதான் இந்த லட்சணமா இருக்கு...’

“திஸ் இஸ் டூ பேட்..”

‘உன்னைச் சொல்லிக்கிறியா..?’

“ஐ கான்ட் டாலரேட் திஸ் அட்மாஸ்பியர்...”

‘அப்படின்னா உன் ஊரப் பாத்து ஓடிப் போயிரேன்.. அதான் உனக்கும் நல்லது.. மத்தவங்களுக்கும் நல்லது..’

“என் லெவலுக்கு இதைப்போல ஆள்களுடன் பேச்சே வைத்துக்க கூடாது...”

‘நானா பேசனும்னு தாவிக்கிட்டு வந்தேன்..? நீதானே முணுக்குன்னா முந்நூறு தரம்ன்னு என்னக் கூப்பிட்டு விடற..?’

“எப்படித்தான் இப்படியொரு அட்மாஸ்பியரை கிரியேட் பண்ணி வைத்திருக்கீங்களோ...”

‘அதை கனடாவில இருக்கிற உன் ஆசை அத்தான்கிட்டக் கேளு.. இப்ப ஆளை விடு..’

காவ்யா வெளியே போகத் திரும்பினாள்.. நேகா கண்கள் இடுங்க அவளைப் பார்த்து சொடக்குப் போட்டு அழைத்தாள்..

"ஏய்ய்ய்... உன்னைத்தான்..."

அந்த அழைப்பில் பார்த்தசாரதி மகிழ்ந்து போனார்.. பார்த்தசாரதி கூட இருந்த மமதையில் காவ்யாவை அப்படி அழைத்து விட்ட நேகாவிற்கு தாமதமாகத்தான் தன் தவறு புரிந்தது...

'இவ சும்மாவிட மாட்டாளே.. அங்கிள் முன்னாலே என்னை ஏகவசனத்தில் பேசித் தள்ளி விடுவாளே...'

அதுதான் நடந்தது.. சும்மா போன சிங்கத்தை நேகா சொடக்குப் போட்டு சொரிந்து விட்டாள்.. சிங்கம் கர்ஜனையோடு திரும்பி விட்டது...

"ஏய்ய்ன்னு யாரைக் கூப்பிட்ட...?"

நேகாவை நேருக்கு நேராகப் பார்த்து அவள் கேட்டதில் பார்த்தசாரதிக்கே பயம் வந்துவிட்டது...

"சும்மாவும் கூப்பிடாம சொடக்குப் போட்டுக் கூப்பிடற.. சொடக்குப் போடற விரல ஒடிச்சுப் போட்டிருவேன்.. இதையெல்லாம் உன் வருங்கால மாமனார் வீட்டில போய் வைச்சுக்க... எங்கிட்ட வைச்சுக்காத.. உன்னைத்தான்னா.. என்ன நினைப்பில

உன்னைத்தான்னு சொல்ற.. நானென்ன உனக்கு வடிச்சுக் கொட்டற சிந்தாமணியா..? உன்னைத்தான்னு கூப்பிடற.. வேணாம்.. சொல்லிட்டேன்.. இந்த வேலையை சம்பளத்துக்காக நான் பார்க்கலை.. எனக்கொரு அடையாளம் வேணும்ங்கிறதுக்காக பாக்கிறேன்.. அதுக்காக ஏளனமா பேசினா.. அப்படிப் பேசற வாயை பேச முடியாம செஞ்சிருவேன்... இது மதுரை.. அடக்கி வாசி..”

“நான் யார்ன்னு தெரியாம வாய் விடாதே...”

“நீ யாராக வேணும்னாலும் இருந்துக்க.. இந்தக் கடையோட நிகழ்கால முதலாளியோட வருங்காலப் பொண்டாட்டியாவே இருந்துட்டுப் போ.. அதைப்பத்தி எனக்குக் கவலையில்லை.. எனக்குத் தேவையானது ஒன்னுதான்.. அது மரியாதை..! அதை நீ கொடுத்தாத்தான் பதிலுக்கு உனக்கு அதைக் கொடுப்பேன்.. இல்லேன்னா நீ கொடுத்ததைத்தான் திருப்பிக் கொடுப்பேன்.. ஜாக்கிரதை..”

காவ்யா விர்ரென்று வெளியே போய் விட்டாள்.. நேகாவினால் பார்த்தசாரதியின் முகத்தைப் பார்க்க முடியவில்லை... அவ மானத்தினால் சிறுத்து விட்ட அவளின் முகத்தை பார்த்தசாரதி சந்தோசமாகப் பார்த்தார்... அவருக்கு இனி என்ன நடக்குமென்று தெரிந்துவிட்டது..

இனி.. அவருக்கும்.. காவ்யாவுக்கும் இடையில் யுத்தம் நடக்கப் போவதில்லை.. நேகாவுக்கும் காவ்யாவுக்கும் இடையினில்தான் யுத்தம் நடக்கப் போகிறது...

# 98

*ஊர் பார்க்க என் கழுத்தில்...*
*உன் தாலி விழ ஆசைகொண்டேன்...*

*"வெற்றிமீது வெற்றி வந்து..*
*என்னைச் சேரும்...*
*அதை வாங்கித்தந்த பெருமையெல்லாம்..*
*உன்னைச் சேரும்.."*

**ச**ந்தோசமாக பாடிக் கொண்டிருந்தார் பார்த்சாரதி... அந்த நள்ளிரவு நேரத்தில் ஹோட்டல் அறையின் முகட்டுப் பகுதியைப் பார்த்து மக்கள் திலகத்தைப் போல கையைக் கையை ஆட்டிக் கத்திக் கொண்டிருந்தவரை யாராவது பார்த்தால் நிச்சயமாக அவரின் மனநிலையைப் பற்றிச் சந்தேகம்தான் படுவார்கள்....

பார்த்தசாரதிக்கும் அந்த பயம் இருந்திருக்க வேண்டும்.. அதனால்தான்.. அவர் பாட்டு என்று சொல்லிக்

கொண்டு கத்துவதற்கான இடமாக அவரது பூட்டிய ஹோட்டல் ரூமையும்.. நேரமாக நள்ளிரவு நேரத்தையும்.. தேர்ந்தெடுத்திருந்தார்...

அந்த அளவுக்கு அவரை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தி விட்டாள் நேகா... காவ்யாவிடம் வாய் கொடுத்து அவள் வாங்கிக் கட்டிக்கொண்டதில் பார்த்தசாரதிக்கு ஏற்பட்டிருந்த மகிழ்ச்சியைப் பற்றி மட்டும் அவளுக்கு தெரிந்திருந்தால்... அவரின் மருமகளாக வர வேண்டுமா என்று அர்ஜீனின் மீதான அவளின் ஆசையை மறுபரீசீலனை செய்திருப்பாள்...

அப்படித் தெரியவிட்டு காரியத்தைக் கெடுத்துக் கொள்ள பார்த்தசாரதி என்ன முட்டாளா..?

அவர் கோபமாகச் சென்ற காவ்யாவின் முதுகை முறைத்தார்.. அவள் சென்ற பின்பு... அவள் சென்ற திசைப் பக்கமாக திரும்பி.. சப்தம் போட்டார்....

“என்ன தைரியமிருந்தா.. இவ என் மருமகளை இந்தப் பேச்சு பேசுவா.. இப்பவே எனக்கு இரண்டில் ஒன்று தெரிந்தாகனும்...”

அறைவாசலில் இருந்த இளங்கோ.. என்னவாக இருக்கும் என்று அறியும் ஆவலுடன் எட்டிப் பார்த்தான்.. காவ்யா வந்த போதும்.. சப்தம் போட்டபோதும் அவன்

அவனுடைய நாற்காலியில் உட்கார்ந்திருக்கவில்லை.. தங்கராஜீடன் டீ சாப்பிட என்று வெளியே போய்விட்டு வந்தவனுக்கு நடந்த சண்டையைப் பற்றிய விவரம் எதுவும் தெரியாது...

அதைத் தெரியப் படுத்திவிட முனைந்த பார்த்தசாரதியை...

“உஸ்ஸ்..” என்று ஒற்றை விரலை வாயில் வைத்து அடக்கினாள் நேகா...

‘இந்தப் பெண்ணின் வயதென்ன.. என் வயதென்ன.. என்னைப் பார்த்து உஸ்ஸீன்னு அடக்குதே...’

பார்த்தசாரதிக்கு அவளின் அந்தச் செய்கையினைப் பிடிக்கவில்லைதான்.. ஆனாலும் அவரால் அதை வெளியில் சொல்லிவிட முடியுமா..?

‘உனக்கு காவ்யாதான் லாயக்கு..’ என்று எரிச்சல்பட்டவராக வாய்மூடிக் கொண்டார்...

“என்ன காரியம் செய்கிறிங்க அங்கிள்..?”

“ஏம்மா..? அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு கண்டித்து வைக்க வேண்டாமா..? அவள் என்ன பேச்சு பேசிவிட்டுப் போகிறா...”

“இதை அவ இருந்தபோதே நீங்க செய்திருக்கனும்.. அவ பேசினபோதே கண்டித்திருக்கனும்.. அவள் போன

பின்னால் சப்தம் போட்டு விவரம் தெரியாதவங்களுக்கு அவ என்னைப் பேசின விவரத்தைத் தெரியப்படுத்தக் கூடாது...”

“அதுக்கில்லம்மா...”

“எதுக்கா இருந்தாலும் தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிற வேலை வேண்டாம் அங்கிள்...”

“அவளைச் சும்மா விடச் சொல்கிறியா..?”

“யார் அப்படிச் சொன்னது..?”

“நீ சொல்கிறதுக்கு அதுதானே அர்த்தம்..?”

“புரியாம பேசாதீங்க அங்கிள்.. அவள் பேசினதுக்கான பதிலடியை.. எப்போ.. எப்படிக் கொடுக்கனும்னு எனக்குத் தெரியும்.. வெயிட் அன்ட் ஸீ...”

அதற்குப் பின்னால் நேகா அந்த சம்பவத்தைப் பற்றி எதையும் பேசவில்லை.. அமைதியான முகத்துடன் இருந்தவளின் மனதில் புயலடிக்கிறது என்பதை பார்த்தசாரதி அறிந்திருந்ததால் அவரும் எதையும் பேசாமல் மௌனம் காத்தார்.. வழக்கத்தை விடச் சீக்கிரமாகவே நேகா கிளம்பி விட்டாள்... பார்த்தசாரதி என்ன... ஏதென்று கேட்காமல் கூடக் கிளம்பி.. அவளை கெஸ்ட் ஹவுஸில் விட்டுவிட்டு ஹோட்டல் ரூமுக்குப் போய்

சேர்ந்தார்... சென்றவரைத் தேடி சில விருந்தாளிகள் வந்துவிட.. பொறுமை காத்து.. நள்ளிரவில் மனம் விட்டுப் பாடி (?) முடித்தார்...

காவ்யா என்ற முள்ளை அர்ஜீனின் பாதையிலிருந்து எப்படி வெளியில் தூக்கிப் போடுவது என்ற கவலை இனி அவருக்கு இல்லை...

அதை நேகா பார்த்துக் கொள்வாள் என்ற நிம்மதியுடன் அன்று இரவு அயர்ந்து உறங்கினார் பார்த்தசாரதி...

**அ**ர்ஜீன் அவசர கதியில் இயங்கிக் கொண்டிருந்தான்.. அவன் நினைத்ததைப் போல உடனே கிளம்ப முடியாமல் புதுஒப்பந்தம் ஒன்று வந்து நின்று விட்டது... அதன் முதற்படியாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வைத்தவனுக்கு சீக்கிரமாக மதுரைக்கு சென்றாக வேண்டுமே என்று மனம் துடித்தது..

இரவுகளில் அவனிடம் செல்போனில் பேசும் காவ்யாவின் குரலில் தெரிந்த கலக்கத்தில் அவனால் நிம்மதியாக வேலையில் ஈடுபட முடியவில்லை.. ஒவ்வொருநாளும்.. ஒவ்வொரு நிகழ்வைப் பற்றிக்கூறி.. காவ்யா கண்ணீர் வடித்தாள்.. வேலையை விட்டு விடுகிறேன் என்று மன்றாடினாள்..

“பெறுத்துக்க காவ்யா..” என்றான் அர்ஜீன்..

“எது வரைக்கும்..” அவள் விம்மினாள்...

“நான் வரும் வரைக்கும்...”

“எப்ப வருவீங்க..?”

“இதோ.. ஜஸ்ட் டூ டேஸ்.. இந்த வீக் என்டில வந்து விடுவேண்டி...”

“இதையே எத்தனை நாளாச் சொல்லுவீங்க..?”

காவ்யாவின் குற்றச்சாட்டிற்கு பதில் சொல்ல அவனால் முடியவில்லை...

அவள் சொல்வதிலும் உண்மை இருக்கிறதே.. கிளம்ப அவன் தயாராக இருந்தபோது திடிரென்று புது ஒப்பந்தம் முளைக்கும் என்று அவன் கனவா கண்டான்..?

“நினைத்துப் பார்க்கலைடி..”

“யாரை..? என்னையா..?”

“அடச்சீ.. உன்னை நினைக்காத நேரமில்லை...”

“பேசியே மயக்கிருங்க...”

“மயங்கிக் கிடப்பவன் நான்தான்...”

“இந்த வித்தாரப் பேச்சுக்கொன்னும் குறைச்சலில்லை...”

“நம்புடி.. திடிர்ன்ன புது காண்ட்ராக்ட் வந்து நிற்குது.. அதை முடிக்காம வரமுடியுமா..?”

“அதுக்குள்ள நான் முடிஞ்சுருவேன் போல இருக்கே...”

“காவ்யா....”

அர்ஜீன் அதிர்ந்து போனான்.. எந்த அளவுக்கு மனம் நொந்திருந்தால்.. இந்த அளவுக்கு காவ்யா வேதனைப் படுவாள்...? அவள் சந்திக்கும் துன்பங்களெல்லாம் அவனுக்காகவல்லவா..?

காதலியை தனியே இன்னல் படு என்று விட்டு விட்டு வந்திருக்கும் குற்ற உணர்வில் வேலைகளை விரைவாக முடிக்க முயன்றான் அர்ஜீன்.. வழக்கத்தை விட அதக நேரம் உழைத்தான்.. தூக்கத்தை குறைத்தான்...

“உங்க ஹெல்த் ஸ்பாயிலாயிடும் சார்...”

அவனுடைய கனடா கிளையின் உதவியாளர் கவலைப்பட்ட போது தோள்களைக் குலுக்கிச் சிரித்தான்...

இரவு.. பகல் பாராமல் புயல் வேகத்தில் அவன் வேலைகளை முடித்ததில் அவன் கனடாவை விட்டுக் கிளம்பும் நாள் வந்து விட்டது...

“நாளைக்கு கிளம்புகிறேண்டி...”

காவ்யாவிடம் போனில் சொன்னபோது அவன் மனம் வேலைப் பளுவிலிருந்து மீண்டு விட்டுச் சிறகடித்தது...

அவன் கிளம்பிவிட்டான் என்ற நிம்மதியுடன் காவ்யாவும் கடைக்குப் போய் வந்தாள்...

தங்கையின் முகத்திலிருந்தே அவளது மனதை படித்துக் கொண்டிருந்த கண்ணதாசன்...

“எதுவும் பிரச்னையில்லையே..?” என்று விசாரித்தான்...

“இல்லைண்ணே...” முகம் ஒளிர பதில் சொன்னாள் காவ்யா...

எதையோ நினைத்துக் கொண்டவனாக...

“காவ்யா...” என்று அழைத்தான் கண்ணதாசன்...

“என்னன்ணே...” படிகளில் இறங்கிக் கொண்டிருந்த காவ்யா திரும்பிப் பார்த்தாள்...

“உன் கடைமுதலாளி எப்ப வருகிறார்..?”

“இந்த வாரக் கடைசிக்குள்ள வந்திருவார்ண்ணே..”

உற்சாகத்துடன் பதில் சொல்லிவிட்டு மான்குட்டியைப் போல படிகளில் தாவி இறங்கிய தங்கையைப் பார்த்தவனின் மனம் கனிந்தது...

‘வரட்டும்..’ என்று நினைத்துக் கொண்டான்...

‘வந்து... அத்தைக்கு மீசையை முளைக்க வைக்கட்டும்.. என்னை ஜெயித்துக் காட்டட்டும்.. இந்தத்

தோல்வியினால் எனக்குத் துக்கமில்லை.. அவனை ஜெயித்து விட்டால்தான் துக்கப்படுவேன்...'

கண்ணதாசன் கண்கள் பனிக்க அலுவலகத்திற்குக் கிளம்பினான்...

கடையில் சுறுசுறுப்புத் தென்பட்டது.. மறுநாள் சம்பளநாளாக இருந்தால் அப்படியொரு சுறுசுறுப்புத் தென்படுமென்று பாவனா சொல்லிச் சிரித்தாள்....

"ஏகாம்பரம் சார் சம்பளம் வாங்கினதும்.. பணத்துக்கு முத்தம் கொடுப்பாரே.. அதைப் பார்க்க கண்கோடி வேணும் காவ்யா..."

ஒப்புதலாக தலையை ஆட்டிச்சிரித்தாள் காவ்யா.. ஏகாம்பரம் அப்படித்தான் செய்வார்.. சம்பள தினத்தில் எல்லோரின் மனதிலும் உற்சாகம் பொங்கும்.. ஆனாலும் ஏகாம்பரத்தின் உற்சாகம் தனியாக இருக்கும்.. அவர் சம்பள பணத்தை வாங்கி.. கண்களில் ஒற்றிக் கொள்வதுடன் நிறுத்திக் கொள்ளாமல் அதற்கு முத்தம் கொடுப்பார்...

"அது இருக்கிறதாலதான் மிஸஸ் ஏகாம்பரம் அவரை வீட்டில் சேர்த்துக்கிறாங்கங்கிற நன்றி உணர்ச்சியில முத்தம் கொடுக்கிறாரோ.. என்னவோ.." என்றாள் பாவனா...

"ஏதோ ஒன்னு.. ஆனா.. எல்லார் மனசிலயும் சம்பள நாள்ன்னா ஒரு சந்தோசம் வரத்தான் செய்யுது..."

“உன் மனசில வருமா..?”

“உனக்கு வராதா..?”

“நான் உன்னைக் கேட்டேன்...”

“வரும்தான்.. என்னதான் ஒரு அடையாளத்துக்காக வேலைக்கு வந்தாலும்.. சுய சம்பாத்தியத்துக்கு இருக்கிற மதிப்பே தனிதான் பாவனா.. இந்தப் பணம் என்னுடையது.. நான் சம்பாதித்தது.. என்கிற நினைப்பு கொடுக்கிற பலம்.. ஆயிரம் யானைகளின் சக்திக்கு சமம்..”

“பாருடா.. இவகூட இந்தப் போடு போடறா..”

“ஏண்டி.. நான் பேசமாட்டேனா..?”

“அப்படிக் கைப்புள்ளைகூடச் சொல்லாது...”

அவர்கள் கலகலத்துச் சிரித்தார்கள்.. அன்று இரவு உணவின்போது கண்ணதாசன் அவளிடம் மெதுவான குரலில் வினவினான்...

“நாளைக்கு சம்பள நாள்தானே காவ்யா..?”

“இதென்ன கேள்விண்ணே.. உனக்குச் சம்பளம் வராதா..? நீ சம்பளம் வாங்க மாட்டியா...?”

“நான் இன்னைக்கே வாங்கிட்டேன்.. இன்னைக்கு தேதி என்னன்னு மறந்து போச்சா.. முப்பத்தியொன்னு..”

“அட.. ஆமாம்.. நீ.. கவர்ண்மென்டு சம்பளக்கார ஆளு.. முப்பத்தியொண்ணாம் தேதியே சம்பளத்தை வாங்கிருவ.. நான் அப்படியா..? ஒன்னாந்தேதிதானே எங்களுக்குச் சம்பளம்..?”

“அதைத்தான் நானும் கேட்டேன்...”

“ஆமாண்ணே.. நாளைக்கு பேங்குக்குப் போகனும்..”

“நானும் கூட வரவா..?”

“வேணாம்.. நான்தான் தனியாப் போய் பணம் எடுக்கப் பழகிட்டேனே...”

மறுநாள் எதிர் கொள்ளப்போகும் பூகம்பம் அவள் வாழ்க்கையையே புரட்டிப் போடப் போகிறது என்பதை அறியாதவளாக இலகுவாக பதில் சொன்னாள் காவ்யா...

# 99

*சின்னச் சின்ன மழைத்துளியில் - நீ*
*என்னை நினைக்க ஆசைகொண்டேன்...*

**அ**ந்த விடியலில் காவ்யா மனதுக்குள் புத்துணர்வை உணர்ந்தாள்.. அர்ஜீனின் சொல்படி அவன் எப்படியும்

அந்தவார இறுதிக்குள் வந்து விடுவான் என்பதே அவளின் புத்துணர்விற்கான காரணமாக இருந்தது.. நேகாவும்.. பார்த்தசாரதியும்.. போர் நிறுத்தம் செய்து விட்டவர்களைப் போல காவ்யாவைக் கண்டு கொள்ளாமல் இருந்ததும் அவளின் புத்துணர்விற்கான மற்றொரு காரணமாக அமைந்தது...

*"புத்தம் புது காலை...*
*பொன்னிற வேளை..."*

பாட்டுப் பாடியபடி சாப்பிட வந்தவளை செல்லமாக முறைத்தாள் அன்னபூரணி...

"இது சாப்பிடற இடமா..? இல்ல நீ பாட்டுக் கச்சேரி நடத்த வந்த மேடையா..?"

"ரெண்டும்தான்னு வைச்சுக்கயேன்..."

காவ்யா தட்டைப் போட்டு அமர்ந்து.. தட்டில் விரல்களால் தாளமிட்டபடி...

*"வைச்சுக்கவா.. உன்ன மட்டும்*
*நெஞ்சுக்குள்ள...*
*சத்தியமா நெஞ்சுக்குள்ள..*
*ஒன்னுமில்ல.."*

என்று பாடினாள்.. அன்னபூரணி கரண்டியால் அவள் தலையில் ஒரு போடு போட்டு பாட்டை நிறுத்தினாள்...

அவன் அதிர்ந்து அவளை உற்று நோக்கினான்.. சலனமில்லாத அவள் முகத்தின் பிடிவாதத்தில் அவன் முகத்தில் கடுமை பரவியது..

"ச்சே.. கடைசியில் என்னை இந்த மாதிரி நினைச்சிட்டயே.."

"எந்த மாதிரியும் நினைக்கலை... நான் உங்களுடையவள்தான்.. எடுத்துக்கங்க.. ஆனா.. உங்க கைபிடிச்சு உங்க வீட்டுக்குள்ள உங்க பெண்டாட்டியா நான் வரமாட்டேன்.."

"முட்டாள்.." அவன் குரல் ஆத்திரத்தில் நடுங்கியது..

"அறிவோடதான் பேசறியா...?"

"அது எனக்குத் தெரியலை.. ஆனா.. ஒன்னே ஒன்னு மட்டும் தெளிவாத் தெரியுது.. அது.. உங்க பெண்டாட்டியா நான் வாழனும்னா உங்களோடு.. உங்க வீட்டையும் சேர்த்து ஏத்துக்கிட்டாகனும்.. அந்த வாழ்க்கையிலே என் மாமனாரா உங்க அப்பாவும் வந்து நிற்பார் அப்ப அவர் என்னை எதுவும் சொல்லலைன்னாலும்... அவர் மனசுக்குள்ள என்னைத் திருடியாத்தானே நினைச்சாருங்கிற நினைப்பு என் மனசில என்னைக் கொன்றுக்கிட்டிருக்கும்... அவர் சாதாரணமா பேசினாக் கூட... என்னை திருடின்னு சொல்ல வர்றாரோன்னு

தோணும்.. மனசார என்னை அவர் மருமளா ஏத்துக்க மாட்டார்.. அதுவும் நிரடிக்கிட்டே இருக்கும்.. அவர் வாயாலேயே நேகாவுக்கு என்னை ஆரத்தி எடுக்கச் சொன்னவராச்சே.. அதை எப்படிங்க நான் மறப்பேன்..? முள்மேல நடக்கலாம்.. அது கொஞ்ச தூரத்துக்குன்னா சரி... வாழ்க்கை பூராவும் முள் மேல நடக்கனும்னா.. என்னால அது முடியுமா..?"

"முடியாதில்ல..?"

அர்ஜீன் மூர்க்கமாக அவளைப் பிடித்துத் தள்ளினான்... அவன் தள்ளிய வேகத்தில்.. தரையில் சரிந்து விழுந்தாள் காவ்யா.. கையூன்றி எழுந்து கொள்ள முயன்றவளுக்கு அவன் கை கொடுக்கவில்லை.. மாறாக அவள் முகத்துக்கு முன்னால் குனிந்து சீறினான்..

"அப்புறம் ஏண்டி அப்படிச் சொன்ன..?"

"அர்ஜீன்..."

"அறைஞ்சேன்னா உன் அத்தனை பல்லும் உதிர்ந்து விடும்.. பேசறா பாரு பேச்சு.. நீ இப்படிக் கூட பேசுவியா..?"

"நீங்க என்னை மறந்து விலகிப் போயிட்டா நான் எதுக்காக இப்படிப் பேசப் போறேன்..?"

“ஓஹோ.. நான் விலகிப் போனா உனக்கு சந்தோசமாகிருமா..? கொஞ்சநேரத்துக்கு முன்னால இந்த வாய்தான் செவ்வந்தியோட சின்னப் பொண்ண.. காலேஜ் படிக்கிற பொண்ணா நினைத்துக்கிட்டு.. சொந்தமில்லை.. பந்தமில்லை.. வாடுது ஓர் பறவைன்னு பாட்டுப் பாடுச்சு..” அவன் உறுமினான்...

அந்த வார்த்தைகளில் இருந்த உண்மையில் அவர் உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

“நான் விலகிப் போயிட்டா இவ சந்தோசமா இருப்பாளாம்.. எழுந்திருடி...”

அவன் எரிச்சலுடன் கை கொடுத்தான்.. வலிமையான அவன் கரங்களை இறுக்கிப் பற்றிக் கொண்டு காவ்யா எழுந்து கொள்ள முயன்ற போது..

“வாட் இஸ் திஸ் காவ்யா..? விழுந்துட்டிங்களா..? என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா...? நான் ஓடி வந்திருப்பேனே..” என்றபடி அவசரமாக கை கொடுக்க அங்கே வந்து நின்றான் கார்த்திக்...

அதைவிட அவசரமாக எழுந்து கொண்ட காவ்யா... கார்த்திக்கை கண்டு கொள்ளாமல் அம்புஜத்தை நோக்கி விரைந்து விட்டாள்.. அவள் போவதையே ஏக்கத்துடன்

பார்த்துக் கொண்டிருந்த கார்த்திக் அர்ஜீனின் பக்கமாக திரும்பி..

“லட்டு சான்ஸ் அண்ணா.. மிஸ் பண்ணிட்டேன்..” என்று வெகுவாக வருந்தினான்..

அப்படியே அவன் பிடறியில் இரண்டு போடு போட்டால் என்ன என்று அர்ஜீனுக்குள் ஆத்திரம் மூண்டது...

அவன் நிற்கும் நிலை என்ன..? அவனிடம் கார்த்திக் கொஞ்சும் மொழியென்ன..?

“வாடா.. டேய்..”

அவன் கையைப் பற்றி இழுக்காத குறையாக அழைத்துக் கொண்டு.. தோப்பின் மறுபக்கமாக போக யத்தனித்தான் அர்ஜீன்...

“அண்ணா.. பாட்டியும் காவ்யாவும்.. அந்தப் பக்கமா இருக்கிறாங்க..” என்று கை காட்டினான் கார்த்திக்..

‘தெரியும்டா.. டேய்ய்.. அதைத் தெரிஞ்சுதானே.. உன்னை அந்தப் பக்கமா போகவிடாம... இந்தப் பக்கமா இழுக்றேன்..’ மனதுக்குள் சொல்லிக் கொண்டான் அர்ஜீன்..

“அங்கே கொய்யா மரம் இருக்கு கார்த்திக்...”

“இந்த ‘நொய்யா’ வேலையெல்லாம் இங்கே வேணாம்.. ஜஸ்ட் மிஸ்ஸிங்.. காவ்யா கையைப் பிடிச்சுத் தூக்காம விட்டுட்டேன்.. திரும்பவும் அது போல சான்ஸ் கிடைச்சா அதை மிஸ் பண்ண நான் ரெடியாயில்லை..”

கார்த்திக் திட்டவட்டமாக மறுத்துவிட....

‘டேய்.. அதுக்கு நான் அவளைப் பிடிச்சு தரையில் தள்ளி விடனும்டா..’ என்று பல்லைக் கடித்தான் அர்ஜீன்..

“உன் கொய்யாவை நீயே சாப்பிடு.. எனக்கு கொய்யா வேண்டாம்.. காவ்யாதான் வேண்டும்..”

கார்த்திக் தீர்மானமாக சொல்லிவிட்டு.. அர்ஜீனின் கரத்திலிருந்து தன் கரத்தை உறுவிக் கொண்டு.. காவ்யா போன திசையில் போனான்..

‘அன்புத் தம்பி..!’ அர்ஜீனின் நெஞ்சம் வருந்தியது..

அவனுக்கு மூத்தவளாக ஆனந்தி பிறந்து விட்டாள்.. அதனால், தங்கைக்கும்... தம்பிக்குமான மூத்தவன் பாசத்தை கார்த்திக்கின் மீதுதான் அவன் காட்டிக் கொண்டிருந்தான்...

அந்த அன்புத் தம்பியுடன் காதல் சதுரங்கத்தில் அவன் போரிட வேண்டுமா..?

*“நீயும் நானுமா..? – கார்த்திக்*
*நீயும் நானுமா..?”*

வாய்விட்டுப் பாடிக் கொண்டவனுக்கு லேசான சிரிப்பு வந்தது.. காவ்யா மட்டும் மனது வைத்தால் அவன் இந்த சதுரங்க விளையாட்டை அனுமதித்திருக்கவே மாட்டான்..

'ஏய்ய்.. அவ உன் அண்ணிடா..' என்று கண்டிப்புடன் சொல்லித் தடுத்திருப்பான்..

அப்படி அவனைச் சொல்ல முடியாமல் வாய் பூட்டு போட்டவள் சற்றுமுன் சொல்லிய வார்த்தைகளில் அவன் கண்கள் சிவந்தன..

## 137

*நேசமனக் கோவிலிலே...*
*நீயிருக்க ஆசை கொண்டேன்...*

**பி**ரம்பினால் செய்யப்பட்ட கூடை நாற்காலியில் வாகாக சாய்ந்து அமர்ந்து செவ்வந்தியிடம் கதை பேசிக் கொண்டிருந்த அம்புஜம் வேகமாக வந்து நின்று மூச்சிரைத்த காவ்யாவை விசித்திரமாகப் பார்த்தாள்..

"ஏம்மா.. நீ தோப்பைச் சுத்திப் பாக்கத்தானே போன..?"

அம்புஜம் கேட்ட விதத்தில் அவள் சந்தேகப் படுகிறாளோ என்று பயந்து போனாள் காவ்யா.. அடுத்து அர்ஜீனைப் பற்றியும் அவள் கேட்கக் கூடும் என்று சஞ்சலப்பட்டவளின் சங்கடத்தை அம்புஜத்தின் அடுத்த கேள்வி துரத்தியடித்தது..

“என்னவோ ஓட்டப் பந்தயத்தில கலந்துக்கிட்ட-வளைப் போல இப்படி மூச்சிரைக்க ஓடி வர்றயே.. ஏன்..?”

‘அப்பாடி.. பாட்டி சாதாரணமாத்தான் கேட்டிருக்காங்க..’ நிம்மதிப் பெருமூச்சை விட்டாள் காவ்யா..

“போய் ரொம்ப நேரமாச்சா.. நீங்க தனியாயிருக்-கீங்களேன்னு வெரசா வந்தேன் பாட்டி..”

“வெரசா வந்தியா...?”

அர்ஜீனைப் போலவே புருவங்களை உயர்த்திய அம்புஜம் அருகிலிருந்த செவ்வந்தியைப் பார்க்க.. அவள் சிரித்து விட்டு..

“வேகமா வந்தேன்கிறதத்தான் வெரசா வந்தேன்னு சொல்லுதாக போல..” என்றாள்..

“அது சரி... பாட்டிய என்ன அத்துவானக் காட்டுக்குள்ள ஒத்தையாவா விட்டுட்டுப் போன..? தோப்பு வீட்டுக்கு முன்னால.. செவ்வந்தி கூடத்தான விட்டுட்டுப் போன..? அதுக்கு ஏன் இந்த ஓட்டம் ஓடி வர்ற..?”

“தெரியலை பாட்டி...”

சலுகையாக அம்புஜத்தின் தோள் மீது சாய்ந்து கூறியவளின் கன்னம் தட்டிப் சிரித்தாள் அம்புஜம்..

“அப்படியே குழந்தைதான்.. அதனாலதான் உங்க அண்ணன் உன்னைப் பொத்திப் பொத்திப் பாத்துக்கிறான் போல...”

கண்ணதாசனின் பேச்சு வந்ததும் மௌனமாகி விட்டாள் காவ்யா.. அர்ஜீனைச் சந்தித்திருப்பதைப் பற்றி அவள் கண்ணதாசனிடம் சொல்லியிருக்கவில்லை...

*‘உள்ளம் நிறைவிலோர்*
*கள்ளம் புகுந்திடில்*
*உள்ளம் நிறைவாமோ..?’*

அன்று அவன் கேட்ட பாடல் வரிகள் அவள் நினைவுக்கு வந்து மனத்தை அறுத்தன...

அவள் ஏன் அண்ணனிடம் அர்ஜீனைப் பற்றி மறைக்கிறாள்..?

அவளுக்கு விடைதெரியவில்லை.. அவனறியாத அவள் வாழ்வின் நிகழ்வா..? பெற்றவர்களுக்குத் தெரியாமல் தங்கையின் காதலையும் அதனால் அவள் பட்ட மன ரணத்தையும் மறைத்து.. அவளது வேண்டு

கோளுக்கிணங்கி.. சொந்த ஊரை விட்டு வேறு ஊருக்கு மாறுதல் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறவனிடம் அவளுடைய காதலனை அவள் சந்தித்திருக்கும் விவரத்தை அவள் சொல்லாமல் மறைக்கலாமா..?

அவளுக்குள் குற்ற உணர்வு எழுந்தது.. ஆனாலும்.. ஏனோ அவளால் அர்ஜீனைப் பற்றி அவளுடைய அண்ணனிடம் சொல்ல முடியாது என்று தோன்றியது..

அது எதனால் என்று அவளால் வரையறுக்க இயலவில்லை.. விவரம் அறிந்தால் அவன் அம்புஜம் பாட்டியைச் சந்திக்க அவளை அனுமதிக்க மாட்டான் என்பதினாலா..?

அம்புஜம் பாட்டிதான் காரணமென்றால்... அவளுடைய கால் சரியாகி விட்டது... அவளைத் தேடி காவ்யா அம்புஜத்தின் வீட்டிற்குப் போக வேண்டிய அவசியமில்லாமல் காவ்யாவைத் தேடி அவள் கண்ணதாசனின் வீட்டிற்கே வந்து விடுவாள்..

அது காரணமல்ல...

காவ்யாவின் அடிமனதில் அர்ஜீனின் மீது அவளுக்கிருக்கும் மாறாத காதலே காரணமாகியிருந்தது..

“என்னத்த யோசிக்கிறவக..?”

செவ்வந்தி கேட்டபடி ஒரு செம்பு நிறைய இளநீரைக் கொண்டு வந்து குடுத்தாள்.. செம்பு மிகப் பெரிய செம்பாக இருந்தது..

யோசனை கலைந்தவளாக அதைப் பார்த்த காவ்யா..

“இவ்வளவா..?” என்று அரண்டு போனாள்..

“குடிம்மா..”அன்புடன் சொன்னாள் அம்புஜம்..

“நிறைய இருக்கே பாட்டி.. ” மலைத்தாள் காவ்யா..

“இப்ப நிறையன்னுதான் தோணும்... குடிச்ச பின்னாலே இன்னும் கொஞ்சம் வேணும்னு தோணும்...” ரசித்துச் சொன்னாள் அம்புஜம்..

தயங்கயிபடியே குடிக்க ஆரம்பித்த காவ்யா.. இளநீரின் சுவையில் அமிழ்ந்து போனாள்.. கற்கண்டைப் போன்ற இனிப்புடன் இருந்த நீரைக் குடிக்கக் குடிக்க.. அம்புஜம் சொன்னதைப் போல.. இன்னும் கொஞ்சம் வேண்டும் போலத்தான் அவளுக்குத் தோன்றியது...

தோப்பில் வெகுதூரம் நடந்து சென்ற களைப்பு.. அர்ஜீனுடன் நடந்த காதல் போராட்டம்.. கார்த்திக்கைக் கண்டதும் விரைந்து திரும்பியது என்று தொடர்ந்து நடந்த நிகழ்வுகளில் அவளின் தொண்டை உலர்ந்து போயிருந்ததை அவளே உணரவில்லை...

அவளைக் கருணையுடன் பார்த்துக் கொண்டிருந்த அம்புஜம் அதை உணர்ந்திருந்ததைப் போலத் தெரிந்தது..

“இன்னும் ஒரு சொம்பு குடுக்கச் சொல்லவா..?”

அம்புஜத்தின் கேள்வியில் செவ்வந்தி வாய் பொத்திச் சிரித்தாள்...

“போதும் பாட்டி..” வெட்கத்துடன் காலிச் சொம்பை செவ்வந்தியிடம் நீட்டினாள் காவ்யா..

அருகிலிருந்த பம்ப் செட்டின் தண்ணீர்.. குற்றால அருவியைப்போல கொட்டுவதை ரசித்து.. அதன் நீர் திவலைகள் தெறித்துச் சிதறி உடல்மீது விழுவதை அனுபவித்துச் சிலிர்த்த காவ்யாவிற்கு... அவளுடைய அப்பாவின் பூர்விக கிராமமும்... அங்கிருந்த தோட்டமும் நினைவுக்கு வந்து விட்டன...

வருடாவருடம் ஊர்திருவிழாவிற்கு குடும்பத்தோடு அவர்கள் அங்கே செல்வார்கள்.. அப்போதெல்லாம் குளித்துத் துவைக்க அவர்கள் தோட்டத்திலிருக்கும் பம்பு செட்டுக்கு செல்வது வழக்கம்..

இன்றும் அதே போல ஒரு திருவிழாக் கலகலப்பை உணர்ந்தாள் காவ்யா.. அவளின் மனப்புழுக்கத்திற்கு அந்த கலகலப்பான சூழ்நிலை இதமாக இருந்தது...

தோப்பை ஒட்டிய பாதையில் நான்காவதாக ஒரு கார் வந்து நின்றது.. சரவணனும் சுமதியும் அதிலிருந்து இறங்கி வர...

“வீட்டில இருக்க மொத்தக் காரும் இங்கே வந்து குமிஞ்சிருச்சு..” என்று சொல்லிச் சிரித்தாள் அம்புஜம்..

“சாரும்.. மேடமும் வர்றாங்க போல..” காவ்யா மரியாதையுடன் எழுந்து நின்று கொண்டாள்...

“இன்னைக்கு எல்லாருக்கும் தோப்பு வீட்டிலதான் மதியச் சாப்பாடு.. இது உனக்குத் தெரியாதா..?” அம்புஜம் கேட்டாள்

“நீங்க சொன்னாத்தானே தெரியும்...” காவ்யா செல்லமாக கோபித்துக் கொண்டாள்...

“அதைச் சொல்லலைல்ல.. மறந்து போயிட்டேன்.. இப்ப சொல்லிட்டேன்ல்ல.. போதுமா..?” அம்புஜம் சமாதானமாக பேசினாள்...

அந்தப் பெரிய வீட்டம்மாள்.. ஒரு இளம் பெண்ணிடம் சரிக்குச் சரியான தோழமையுடன் தன்மையாக பேசிய விதத்தைப் பார்த்து வியந்து போனாள் செவ்வந்தி.. காவ்யாவின் அழகான தோற்றத்தையும்.. நடையுடை பாவனைகளையும் வைத்து அவள் யாரென்று அவளால் கணிக்க முடியவில்லை..

‘இம்புட்டு உரிமையா.. குடும்பத்தில ஒருத்தியா.. ஒன்னு மண்ணா இருக்குது.. ஆனா.. இவங்க சொந்த பந்தம் போலத் தெரியலையே...’

செவ்வந்தியின் நினைவு ஓடியது.. அம்புஜத்தின் வகையறாவைச் சேர்ந்த சொந்த பந்தங்கள்.. இயல்பாக அணியும் நகைகளைக்கூட வைரத்தில்தான் அணிவார்கள்.. காவ்யாவோ.. தங்கத்தினால் செய்யப்பட்ட மெலிதான செயினைத்தான் அணிந்திருந்தாள்...

“என்ன செவ்வந்தி.. மதிய விருந்து தூள் பறக்குமா..?” சரவணன் அவரது இயல்புப்படி பெருங்குரலெடுத்து கடகடவென்று சிரித்தபடி கேட்டார்..

அரக்கப் பறக்க எழுந்து நின்ற செவ்வந்தி.. மரியாதையுடன் தள்ளி நின்று...

“தூள் பறக்காம எப்படியிருக்கும்ங்கய்யா..? சாப்பிட வர்றது உங்க குடும்பமாச்சுங்களே...” என்று வினயமாக பதில் சொன்னாள்...

“அப்படிப் போடு.. அர்ஜீன் வேலை செய்கிறதில மட்டும் திறமையானவனில்ல.. வேலையாள்களை செலக்ட் பண்றதிலயும் திறமையானவன்தான்ங்கிறது ஊர்.. உலகத்துக்கே தெரியுமே..” அவளின் பதிலை மெச்சியபடி.. அம்புஜத்தின் அருகிலிருந்த நாற்காலிகளில் ஒன்றில்

அமர்ந்தவர்.. நின்று கொண்டிருந்த காவ்யாவைக் கண்டதும்...

“ஏம்மா நிற்கிற..?” என்று கேட்டார்..

“ஊம்..? அப்படியொரு வேண்டுதலாம்.. நீ வருகிறேன்னுதான் அவ எழுந்து நிற்கிறாலே...” என்றாள் அம்புஜம்...

“அப்படியா..? அடடா.. மரியாதையெல்லாம் மனதில் இருந்தாப் போதும்மா.. முதல்ல உட்காரு...” சரவணன் அதட்டலாகப் பேசினார்..

அவர்முன் எப்படி உட்காருவது என்று தயங்கிய காவ்யா.. செவ்வந்தியைப் பார்த்தபடி...

“இல்லை.. நான் இவங்ககூட வீட்டுக்குள்ள போகிறேனே...” என்று மென்று விழுங்கினாள்..

“அவ கூடப் போய் என்ன செய்யப் போற..? நீ ஆக்கிப் போடப் போறயா..? செவ்வந்தியோட கைப் பக்குவத்தப் பத்தி இந்தத் திருநெல்வேலிச்சீமையே பேசும்.. அவ ஆக்கிப் போடற சாப்பாட்டைச் சாப்பிடனும்னுதான் நாங்க அத்தனை பேரும்.. ஆசையாசையாய் வந்திருக்கோம்.. அதைக் கெடுக்காம இங்கே உட்காரு...” அம்புஜம் அதட்டினாள்...

அப்போதும் காவ்யா உட்காராமல் நிற்கவும் சுமதி அவள் கையைப் பற்றி நாற்காலியில் உட்கார வைத்தாள்..

“நீயும் எங்க வீட்டுப் பெண் போலத்தான் காவ்யா.. வீட்டு மனுசங்க முன்னால மரியாதைக்காகன்னு நின்றுக் கிட்டே இருப்போமா..? உட்காரு...”

‘எங்க வீட்டுப் பெண்ணைப் போல...’

அந்த வார்த்தைகளை மனதுக்குள் குறித்துக் கொண்டாள் செவ்வந்தி...

‘ஆக.. இவங்க வெளியாளு போல.. வீட்டாளு இல்ல...’

கண்டுபிடிப்பை மனதுக்குள் பொதித்துக் கொண்டவளாக அவள் சமையல் வேலைகளைக் கவனிக்க வீட்டுக்குள் சென்றாள்...

கார்த்திக்கும்.. அர்ஜீனும் வந்துவிட... அவர்களும் நாற்காலிக் கூட்டணியில் சங்கமித்தார்கள்.. அந்த இருவரின் பார்வையும் காவ்யாவை வட்டமிட... அவள் தரைக்குள் புதையல் இருக்கிறதா என்று தேட ஆரம்பித்தாள்...

‘பக்கிக.. இப்படிப் பாத்து தொலைக்குதுக.. ரெண்டும் இப்படிப் பாத்தா.. நான் எப்புடி இங்க உட்கார...?’

அவளின் அவஸ்தையைப் புரியாதவராக சரவணன் அர்ஜீனிடம் பேச ஆரம்பித்தார்...

“கார்த்திக் சொன்னானா அர்ஜீன்..?”

“சொன்னான் சித்தப்பா..”

“கலிவரதன் வழிக்கு வர மாட்டேன்கிறாப்பா..”

“நான் பேசிக்கறேன் சித்தப்பா..”

“நம்ம கம்பெனிக்கு போட்டியா அவன் கம்பெனிதான் இருக்குது.. இப்ப அதை விக்கனும்ங்கிறான்... விற்கிறவன்.. நல்ல விலை கொடுக்கிறவங்க யாராய் இருந்தாலும் விற்றுட்டுப் போக வேண்டியதுதானே... அதெல்லாம் முடியாது.. என் எதிரிக்குத்தான் விற்றுத் தொலைப்பேன்னு அடம் பிடிச்சா என்னப்பா அர்த்தம்..?”

“நான் பார்த்துக்கறேன் சித்தப்பா...”

“அந்த ஆளவந்தானுக்கும் எனக்கும் எப்பப் பார்த்தாலும் ஏதாவது ஒரு விசயத்தில முட்டி மோதிக்கிறாப்புலதான் இருந்து தொலைக்குது.. பகையை அவன் மனசில வளர்த்துக்கிட்டு நிற்கிறான்.. அவன் கைக்கு இந்த கம்பெனி போயிருச்சுன்னா கேட்கவே வேணாம்...”

“போகாது சித்தப்பா.. நான் போகவிட மாட்டேன்..”

“மொத்தப் பணத்தையும் உன் கையில ஒப்படைச்சுடறேன்.. நீ என்ன செய்வியோ.. ஏது செய்வியோ.. மில் என் கைக்கு வந்தாகனும்..”

பணமிருக்கிறவர்களின் வியாபாரப் பேச்சு எப்படியிருக்கும் என்று அன்று தான் உணர்ந்தாள் காவ்யா..

# 138

*எனைப் பார்த்த ஞாபகம் உன் மனதில்..*
*என்றென்றும் நிலைத்திருக்க ஆசைகொண்டேன்...*

**கோ**டிக்கணக்கான ரூபாய்களைப் பற்றி அவர்கள் சர்வசாதாரணமாக பேசிக் கொண்டார்கள்... அந்த இடத்திற்கு பொருந்தாமல் தான் அன்னியப்பட்டு விட்டதைப் போன்ற தனிமையுணர்வைக் கொண்டாள் காவ்யா...

திருநெல்வேலியில் பெயர் பெற்ற பணக்காரரான சரவணனுக்கு அர்ஜீனின் உதவி தேவைப்பட்டது.. அவனும் அதை வெகுசாதாரணமாக முடித்துக் கொடுப்பதாக வாக்களித்தான்.. இவ்வளவு உயரத்தில் இருப்பவர்களின் மத்தியில் அவள் சிறு புள்ளியைப் போல இருப்பதாக உணர்ந்தாள்...

“இதையெல்லாம் கார்த்திக்தான் பார்த்துக்கனும்.. எங்கே..? அவன் இன்னும் விளையாட்டுப் பிள்ளையாகவே இருக்கான்..” சரவணன் பெருமூச்சு விட்டார்...

"விடுலே.. ஒரு கால்கட்டு போட்டுட்டின்னா பொறுப்பு தானா வந்திட்டுப் போகுது.." பாசமுள்ள பாட்டியாக அம்புஜம் பேரனுக்கு வக்காலத்து வாங்கினாள்..

"அவனுக்கு மூத்தவனே சும்மாயிருக்கான்.. இவனுக்கு அதுக்குள்ள என்னம்மா அவசரம்..?" தாயின் கோரிக்கையை நிராகரித்தார் சரவணன்..

"நல்லாயிருக்கே உங்க நியாயம்.. அண்ணன் கடைசிவரைக்கும் மேரேஜ் பண்ணிக்காம சன்யாசியா இருப்பாரு.. அதனால நானும் அப்படியே இருந்துரு முடியுமா டாடி..? இதுக்கு எதுக்கு அண்ணன்கூட என்னை இணை கூட்டறிங்க..?" கார்த்திக் சண்டைக்கு வந்தான்..

"வேற எதுக்குத்தான்லே இணை கூட்டறது..? அவனைப் போல பொறுப்பா இருலேன்னா மாட்டேங்கற.. அவனப் போல நம்ம சொந்த பந்த மத்தியில உயரத்துக்குப் போன்னு சொன்னா அதுவும் முடியாதுங்கிற.. கல்யாணத்திலயாவது அவன்கூட இணை சேர மாட்டியான்னு ஒரு நப்பாசைதான்லே..."

சரவணன் காவ்யாவின் முன்னிலையில் வாரியதை கார்த்திக்கினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை..

'இந்த டாடிக்கு எப்பவும் இவன் மேலதான் பாசம் பொங்கும்...'

அர்ஜீனை விரோதமாக பார்த்தபடி.. அவன் பல்லைக் கடித்தான்.. அதை ஜாடையாக பார்த்த அம்புஜம்..

“ஏன்லே ஒத்துமையா இருக்கிற அண்ணன் தம்பிக்குள்ள வத்திக்குச்சியை உரசிப் போடற..? தாயும்.. புள்ளைக்குமே வாயும்.. வயிறும் வேற வேறன்னு சொல்றாங்க.. இதுல ஒன்னு விட்ட அண்ணன் தம்பிக்கு ஒன்னாவா இருக்கும்..? அவனவனுக்கு அவன் ஆத்திரம்.. அதனால.. மொட்டைத்தலைக்கும்.. முழங்காலுக்கும் முடிச்சைப் போட்டுக்கிட்டு இருக்காம ஆகிற சோலியைப் பாருலே..” என்று மகனை அதட்டினாள்...

“நல்லாச் சொல்லுங்க அத்தை.. அப்பவாவது உங்க மகனுக்கு மனசில ஏறுதான்னு பார்ப்போம்.. எப்போப் பார்த்தாலும் ஒற்றைப் பிள்ளையை கடிஞ்சு பேசிக்கிட்டே இருப்பார்..” சுமதி சடைத்துக் கொண்டாள்..

விட்டால் மாமியாரும்.. மருமகளுமாக.. கார்த்திக்கை மடியில் சாய்த்து.. ‘ஆராரோ’ பாடி விடுவார்கள் போலத் தோன்றவும்.. சரவணன் அடக்கி வாசிப்பதே சாலச் சிறந்தது என்று வாயை மூடிக்கொண்டார்...

“ஆக.. என் பேரன் கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டான்லே.. காலாகாலத்தில பெண்ணைப் பார்த்து கெட்டி மேளம் கொட்டுவோம்.. அதைப் பார்த்தாவது அர்ஜீன் மலையிறங்கி சுந்தரிக்கு ஒரு மருமகளைக் கொண்டு வர்றானான்னு பாப்போம்...” அம்புஜம் அர்ஜீனைப் பார்த்துச் சிரித்தாள்..

அர்ஜீன் சிரிக்கவில்லை.. அவன் பார்வை கார்த்திக் காவ்யாவைப் பார்த்துக் கொண்டிருந்த காதல் பார்வையின் மீதே இருந்தது.. அவன் புருவங்கள் முடிச்சிட... காவ்யாவை உறுத்துப் பார்த்தான்.. காவ்யா தலைகுனிந்து கொண்டாள்.. அவளுக்கு அந்த இடத்தைவிட்டு ஓடிவிட வேண்டும் போல இருந்தது...

தென்னந்தோப்பின் குயில் கூவிய ஒலி அவளுக்குள் மீண்டும் அந்த சோக உணர்வை கொண்டு வந்தது... மனதாரக் காதலிப்பவனின் முன்னிலையில் வேறொருவனின் காதல் பார்வைக்கு ஆளாக நேரிடும் சங்கடத்தில் அவள் வேதனை கொண்டாள்..

“அண்ணன்கூட சொல்லிக்கிட்டு இருந்தாரும்மா..” சரவணன் சேரில் விச்ராந்தியாக சாய்ந்து கொண்டு சொன்னார்...

“பார்த்தனா..? என்ன சொன்னாள்..?”

அக்கா மகனைப் பற்றிய பேச்சை ஆர்வத்துடன் பேசினாள் அம்புஜம்.. பார்த்தசாரதியையும் ஒருவர் அவன்... இவனென்று சொல்ல முடியும் என்பதை அன்றுதான் காதாரக் கேட்ட காவ்யாவிற்கு அந்த ஒரு காரணத்துக்காகவே.. அம்புஜத்தை இன்னும் கொஞ்சம் அதிகமாக பிடித்து வைத்தது..

“சென்னையில நம்ம அர்ஜீனுக்கேத்த பெண்ணைப் பார்த்து வைச்சிட்டாராம்...”

சரவணன் அடுத்துச் சொன்னதில் காவ்யாவின் முகம் மாறிப்போனது.. அவள் அங்கிருந்து எழுந்து சென்று விடத்துடித்தாள்.. அர்ஜீன் அவள் மனதின் உணர்வுகளை அவதானித்து விட்டவனாக சரவணனின் பேச்சை ஆட்சேபித்தான்...

“டாடி ஆயிரம் பெண்ணைப் பார்க்கலாம்.. அந்த ஆயிரத்தில ஒன்றையாவது எனக்குப் பிடிச்சிருக்க வேண்டாமா சித்தப்பா..?”

“இந்தப் பெண் ஆயிரத்தில் ஒருத்திகூட இல்லையாமே.. கோடியில ஒருத்தியாமே..” என்ற சரணவனின் பேச்சுக்கு காவ்யா உதட்டை அழுந்திக் கடித்து வைக்க அவள் பல்வரிசை பட்டு.. லேசாக காயமடைந்த அவளின் உதட்டைக் கவனித்தபடி.. எரிச்சலுடன் பதில் சொன்னான் அர்ஜீன்...

“அப்படின்னு யார் சொன்னது..? டாடி சொன்னாரா..? அதை அவர் மட்டும்தான் சொல்லிக்கனும்...”

“உனக்கு என்னதான் பிரச்னைலே.. அந்தப் பெண் நேகா குருப் ஆ∘ஃப் கம்பெனிஸீக்கு எம்.டியாமே..?”

“இருந்துட்டுப் போகட்டும்.. நானென்ன வேண்டாம்ன்னா சொன்னேன்..?”

“அந்தப் பெண்ணை வேண்டாம்ன்னுதான் சொல்றியாமே...”

“யெஸ்.. அதுக்கென்ன..?”

"இப்படிப்பட்ட பெண் கார்த்திக்கிற்கு அமையாதான்னு நான் சல்லடை போட்டுத் தேடிக்கிட்டு இருக்கேன்.. நீயென்னடான்னா அப்படி அமைஞ்ச பெண்ணை தட்டிக் கழிக்கிற..."

சரவணனின் இந்தப் பேச்சிற்கு.. அவரின் ஒட்டுமொத்தக் குடும்பமும் ஒன்று சேர்ந்து ஆட்சேபக் குரல்களை எழுப்புவார்கள் என்று அர்ஜீன் நினைத்தும் பார்க்கவில்லை...

"ஏன்லே.. அர்ஜீனோட கல்யாணத்தைப் பத்திப் பேசினா அதோட நிறுத்திக்க.. ஏன் கார்த்திக்கையும் ஊடே இழுக்கிற..? அவனுக்கேத்த பெண்ணை நாங்க பார்த்துக்குவோம்.." அம்புஜம் சண்டைக்கு வந்தாள்...

"அம்மா.. அந்தப் பெண் கோடிஸ்வரி..."

"இருக்கட்டுமே.. என் பேரனைக் கட்டிக்கப் போறவ கொண்டு வர்ற பணத்திலதான் நாம வாழனும்கிற நிலைமையிலயா உன்னோட அப்பா உன்னை விட்டுவிட்டுப் போனார்..?"

"அம்மா.."

"பேசாதேலே.. இந்த திருநெல்வேலிச் சீமையிலே பெயராய் பிழைக்கிற குடும்பம் நம்ம குடும்பம்.. நம்ம கிட்ட இல்லாத பணமாலே...? குடும்பம் நடத்த குணவதியைத்

தேடனும்.. பணத்தை நாம சம்பாதிக்கனும்.. அதுதான் நமக்கும் மதிப்பு.. கல்யாணம் பண்ணிக்கப் போகிற என் பேரனுக்கும் மதிப்பு...”

“நல்லாச் சொல்லுங்க அத்தை.. கார்த்திக்கின் மனதுக்குப் பிடித்த பெண்ணைத் தேடுவாரா.. அதை விட்டுட்டு.. கோடிஸ்வரியைத் தேடறாரு.. அவள் கொண்டு வருகிற பணத்தோடா என் மகன் குடும்பம் நடத்தப் போகிறான்...?”

“டாட்.. என் மேரேஜை நான் டிசைட் பண்ணிக்குவேன்.. இதில பெரியப்பாவைப் போல எதையாவது செய்து வைத்தீங்கன்னு வையுங்க...”

“என்னலே செய்வ..?”

“இமயமலைப் பக்கம் சன்யாசம் வாங்கிக்கிட்டு போயிருவேன்..”

“கார்த்திக்...”

“போதுமாலே.. ஒற்றைமகன் பேசற பேச்சை மனம் குளிரக் கேட்டுக்கிட்டியாலே.. வியாபாரத்தில அத்தனை நெளிவு சுளிவையும் தெரிந்து வைத்திருக்கிற.. உன் மகன் மனசை தெரிஞ்சு வைச்சுக்காம இருக்கிற...”

“ஒரு பேச்சுக்கு பேசினேம்மா..”

"பேசறதுக்கு முன்னாலே யோசிச்சுப் பேசனும்.. இதுவரைக்கும் கார்த்திக் கேட்ட எதையும் நாம இல்லைன்னு சொன்னதில்லை.. இப்ப மட்டும் அவன் மனதுக்கு மாறா பெண்ணைத் தேடிருவீங்களா..?"

"ஏண்டி.. நானென்ன பெண் பார்த்து உங்க முன்னாலே கொண்டு வந்து நிறுத்திட்டேனா..? அண்ணனோட கெட்டிக்காரத்தை மெச்சினேன் சுமதி.."

"அந்தக் கெட்டிக்காரத்தனத்தை என்னிடம் காட்ட வேணாம் டாடி.. நான் அண்ணனைப் போல இல்ல..."

"அதுதான் தெரியுமேலே.. இதை நீ சொல்லித்தான் தெரிஞ்சுக்கனுமா..? அர்ஜீன் எங்கே.. நீ எங்கே..."

"இதைப் பேசறதுன்னா.. சக்கரைக்கட்டியாய் பேசி வைப்பீங்களே.. அர்ஜீன் உயர்த்திதான்.. அதுக்காக கார்த்திக்கை குறைவாய் பேச வேண்டாம்.. அவன் பிஸினெஸ்ஸில் அவனும் சைன் பண்ணிட்டுத்தான் இருக்கான்..."

"இல்லேன்னு சொன்னேனா சுமதி..?"

"ஏன்..? அதைச் சொல்லித்தான் பாரேன்..."

"இப்படிக் கூட்டுச் சேர்ந்துக்கிட்டுப் போட்டுத் தாக்கினா நான் தாங்குவேனா அம்மா..?"

சரவணன் சரணாகதி அடைந்த பின்னால்தான் அவர் குடும்பத்தினர் எதிர்ப்புக் குரலை நிறுத்தினார்கள்..

அர்ஜீனுக்கு பொறாமையாக இருந்தது.. அவன் சாதனையாளன்தான்.. அவர்களின் சொந்த பந்தத்தின் மத்தியில் மிக உயரமான இடத்தில் இருப்பவன்தான்.. தகப்பனை மிஞ்சிய வெற்றியாளன்தான்.. அவன் பக்கத்தில் நின்று பேச முடியுமா என்று மிகப்பெரிய தொழிலதிபர்களையும் ஏங்க வைக்கும் அளவிற்கு நட்சத்திர அந்தஸ்தையும்.. பிம்பத்தையும் கொண்டவன் தான்..

ஆனால் கார்த்திக்கின் விருப்பத்திற்கு மதிப்புக் கொடுக்கும் தந்தை அமைந்திருப்பதைப் போல.. அவனுடைய தந்தை இல்லையே...

அர்ஜீனைப் பார்.. அவன் உயரத்தைப் பார்.. அவன் சாதனைகளைப் பார்.. என்று எல்லோரும் அவனை அண்ணாந்து பார்த்து தங்களின் வாரிசுகளுக்கு விரல் நீட்டிக் காட்டிக் கொண்டிருந்த வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தவன் கார்த்திக்கைப் பார்த்து பொறாமைப் பட்டான்..

“சாப்பிட வாங்கய்யா..”

விருந்தை சமைத்து முடித்திருந்த செவ்வந்தி அழைப்பு விடுத்தாள்.. தோப்பு வீட்டின் முன்னால் நீண்ட சாப்பாட்டு மேஜையைப் போட்டு.. அதன் முன்னால்

நாற்காலிகளைப் போட்டு.. தோப்பிற்கு மத்தியில் சாப்பிட ஏதுவாக அமைத்திருந்தான் கதிர்வேலன்...

வரிசையாக இலைகள் போடப் பட்டிருந்தன.. பம்ப்செட்டில் கை கழுவிய குடும்பத்தினர்.. அந்த இயற்கை சூழலை ரசித்தபடி சாப்பிட உட்கார்ந்தார்கள்..

“இங்கே வா காவ்யா...”

அம்புஜம் காவ்யாவை அவள் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள்.. அவளுக்குப் பக்கத்தில் யதார்த்தமாக உட்காருவதைப் போல உட்கார்ந்து விடும் முயற்சியில் கார்த்திக் அருகே வர.. அதற்கு இடம் கொடுக்காமல் மிக இயல்பாக அவள் பக்கத்தில் உட்கார்ந்து விட்டான் அர்ஜீன்...

‘இந்த அண்ணனுக்கு அறிவே இல்லை..’ என்று மனதுக்குள் திட்டிய கார்த்திக்கிற்கு அந்த அண்ணன் மிகப் பெரிய அறிவாளி என்பது தெரியாமல் போனது...

‘இதுதான் என் காதலுக்கு உதவற லட்சணமா..?’ என்று பொறுமியவனுக்குத் தெரியாது.. அந்த அண்ணனின் காதலியைத்தான் தான் கணக்குப் பண்ணமுயன்று கொண்டிருக்கிறோம் என்பது..

அர்ஜீனின் காதலியை கணக்குப் பண்ண.. அவனிடமே கார்த்திக் உதவி கேட்டால் அவன் செய்து விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பானா..?

# 139

### *பேதை மனதின் பேச்சுக்களை – நீ கேட்டுவிட ஆசைகொண்டேன்...*

*“யார் மனதில்..*
*யாரிருப்பார்..*
*யாரறிவார் உலகிலே...”*

**க**திர்வேலனின் ரேடியோவிலிருந்து பாடல் ஒலி பரப்பாகிக் கொண்டிருந்தது.. இலையில் பரிமாறப் பட்டிருந்த விரால்மீன் வறுவலிலும்.. கோழி பிரியாணியிலும் சரவணனின் குடும்பத்தினர் சிறைபட்டு விட்டார்கள்...

“உன் கிணத்து மீனுக்கு ருசி அதிகம்லே..” சப்புக் கொட்டியபடி அர்ஜீனை சிலாகித்துக் கொண்டார் சரவணன்..

“செவ்வந்தியோட கைப் பக்குவத்துக்கும் ருசி அதிகம்..” சுமதி செவ்வந்தியை பாராட்டினாள்...

அதில் உற்சாகமாகிவிட்ட செவ்வந்தி.. பரிமாறுவதில் மும்முரமாகி விட்டாள்.. அர்ஜீன் காவ்யாவை பார்த்தான்.. முகம் வாட... இலையில் பரிமாறப்பட்டவைகளை ஏனோ.. தானோவென்று கொறித்துக் கொண்டிருந்தாள் அவள்..

அர்ஜீனின் திருமணத்தைப் பற்றிய பேச்சில் அவள் மனதில் சூறாவளிக்காற்று சுழன்று அடித்துக் கொண்டிருந்தது...

“உயரே.. உயரே பறந்தாலும்.. ஊர்க் குருவி ஒருநாளும் பருந்துக்கு இணையாய் பறந்து விட முடியாது காவ்யா...”

கண்ணதாசன் அவளின் காதலை அறிந்த புதிதில் விடுத்த மறைமுகமான எச்சரிக்கை அவள் மனதில் வந்தது...

‘இதுக்குத்தான் அண்ணன் சொல்லுச்சா..’ துக்கத்துடன் அவள் நினைத்துக் கொண்டாள்...

எட்டாத உயரத்தில் இருப்பவனின் மீது ஆசைகொள்ளாதே என்று அவள் அண்ணன் அன்று சொன்னான்.. அவள்தான் கேட்கவில்லை.. அர்ஜீனின் மீது ஆசைகொண்டு விட்டாள்.. அவன்மீது அவள் கொண்ட ஆசை எங்கேகொண்டு வந்து அவளை நிறுத்தியது என்ற நினைவில் அவள் மனம் கலங்கியது...

யார் மீதும் ஆசை கொள்ளாத மனம் ஏன் அவன் மீது ஆசை கொண்டு தொலைத்தது..? எங்கிருந்து அந்த ஆசை வந்தது..? எங்கிருந்தோ வந்தவனின் மீது.. அவள் மனதில் எங்கிருந்தோ மையமிட்ட ஆசைகளின் ஆதிக்கத்தினால் அவள் கேட்காத வார்த்தையினைக் கேட்டாள்.. அவன் முகம்

பார்க்கவும் விரும்பாமல் துரத்தும் அந்த ஆசைகளின் பிடியிலிருந்து தப்பிக்க ஊர் விட்டு ஊர் ஓடி வந்தாள்.. இங்கும் அந்த ஆசைகளின் கரங்கள் நீளுகின்றனவே.. இதிலிருந்து தப்பிக்கும் மார்க்கத்தை விரும்பாமல் மீண்டும் அதில் மூழ்க அவள் மனம் விழைகிறதே...

'நானென்ன கோடிஸ்வரியா...?' துக்கத்துடன் அவள் நினைத்துக் கொண்டாள்...

எதிர்காலமே இல்லாத அந்த ஆசைகளை மனதில் வைத்துக் கொண்டிருப்பதால் யாதொரு பலனும் ஏற்படப் போவதில்லையென்ற நிதரிசனத்தின் தாக்கத்தில் அவளுக்கு உணவு ருசிக்கவில்லை...

*"ஓடும் நதியினிலே...*
*ஒருத்தி மட்டும் கரையினிலே..."*

கதிர்வேலனின் ரேடியோ பாடிக் கொண்டிருந்தது.. சில்லென்று வீசிய அந்த தென்னந் தோப்பின் ஈரக்காற்றில் விருந்தை உண்டு முடித்தவர்கள்.. உண்ட களைப்புத் தீர ஓய்வெடுக்க தோப்பு வீட்டுக்குள் போய் விட்டார்கள்.. கதிர்வேலனும் செவ்வந்தியும் சாப்பாட்டு மேஜையை அகற்றி சுத்தம் செய்து விட்டு அவர்களும் சாப்பிட வேண்டுமென்று அவர்களின் வயிறு உணர்த்தியதால் சாப்பிடப் போய் விட்டார்கள்...

காவ்யா ஓய்வெடுக்கப் போக வில்லை.. நீர்வீழ்ச்சியாய் கொட்டிக் கொண்டிருந்த பம்பு செட்டின்

பக்கத்திலிருந்த அகன்ற சிமிண்ட் தொட்டியின் விளிம்பில் உட்கார்ந்து.. நீருக்குள் கைவிட்டு அளைந்தபடி ஏதோ யோசனையில் இருந்தாள்...

"இப்ப உங்களைப் பார்க்கிறப்ப எப்படியிருக்கு தெரியுமா..?"

'இது கார்த்திக்கின் குரலாச்சே...'

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் காவ்யா.. அவளருகில் கார்த்திக்தான் நின்று கொண்டிருந்தான்.. உரிமையுடன அவள் பக்கத்தில் உட்கார வேறு செய்தான்.. அவள் கலவரத்துடன் நகர்ந்து கொண்டதை அவன் கண்டு கொள்ளவே இல்லை..

"இந்தத் தோப்பும்.. பம்ப் செட் தண்ணியும் எப்பவுமே எனக்கு போராடிக்கும்.. இங்கே வரவே எனக்குப் பிடிக்காது..."

'அப்புறமும் ஏன் வந்து தொலைத்த...'

"அண்ணனுக்குத்தான் இது பிடிக்கும்.. இந்தத் தோப்பை அண்ணன் பார்த்துப் பார்த்து உருவாக்கினார்..."

'அவன் இயற்கையின் ரசிகன்..'

"எனக்கு இதிலெல்லாம் இன்ட்ரெஸ்ட் இல்லை..."

'அதான் தெரியுதே...'

"டாடியும் அம்மா பாட்டியும்தான் இங்கே அடிக்கடி வருவாங்க.. நான் வரவே மாட்டேன்..."

‘அப்படியே இருந்து தொலைத்திருக்கலாமே...’

“இன்றைக்கு உங்களுக்காகத்தான் வந்தேன்..”

‘நீ வருவ.. இது அவனுடைய தோப்பு.. இந்த ரெண்டு விவரமும் தெரிஞ்சிருந்தா நான் இங்கே வந்திருக்கவே மாட்டேனே...’

“நீங்க இன்னும் என் கேள்விக்கான பதிலைச் சொல்லவே இல்லை காவ்யா..” கார்த்திக் அவள் கண்களுக்குள் பார்க்க முயன்ற போது...

‘இவன் என்னத்தைக் கேட்டான்..?’ என்று குழம்பிப் போனாள் காவ்யா...

கார்த்திக் ‘ஐ லவ் யு’ சொன்ன விவரத்தையே அவள் அடியோடு மறந்து விட்டிருந்தாள்.. இதில் அவன் அவளுடைய பதிலை வேறு கேட்டு வைத்தால் அவள் எங்கிருந்து பதிலைச் சொல்லுவாள்..

“என்ன காவ்யா.. வெட்கமா..?” கார்த்திக் குழைந்தான்...

அவன் என்ன கேட்டான் என்று திருதிருத்துக் கொண்டிருந்தவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அருகில் கிடந்த தென்னை மட்டைகளில் ஒன்றை ஒடுத்து அவன் தலையில் போட்டாலென்ன என்று தோன்ற.. அந்த எண்ணததை அம்புஜத்தின் பாசம் ததும்பும் முகம் நினைவில் தோன்றி அழித்து வைத்தது..

காவ்யா அங்கிருந்து போய்விட நினைத்து எழுந்து கொள்ள முயன்றபோது அதைக் கார்த்திக் தடுக்க முயன்றான்...

“பொறுங்க காவ்யா... எனக்கு பதிலைச் சொல்லிட்டுப் போங்க..” அவள் கைப்பற்ற அவன் முனைய.. காவ்யா அவன்கை பட்டு விடாமலிருக்க பதறி விலகினாள்...

“பார்த்து காவ்யா.. தொட்டித் தண்ணியில விழுந்து வைக்கப் போறிங்க...” என்று கார்த்திக் எச்சரித்துக் கொண்டிருந்த போதே... கால் வழுக்கி.. தொட்டித் தண்ணீருக்குள் விழுவதற்குப் பதிலாக கிணற்றில் விழுந்து வைத்து விட்டாள் காவ்யா...

நீரின் ஆழத்தில் அமிழ்ந்து கொண்டிருந்தவளின் நினைவு மறையத் தொடங்கியது.. விழுந்த அதிர்ச்சியில் அவள் உணர்விழந்து விட... தண்ணீருக்குள் அவள் தலை தெரிந்து மறைந்தது..

நீச்சல் தெரிந்திருந்தும் கார்த்திக் பயந்து போனான்.. கதிர்வேலனைக் கூப்பிட அவன் தோப்பு வீட்டுக்குள் ஓடிவிட.. அங்கே வேகமாக வந்த அர்ஜீன் நீருக்குள் பாய்ந்தான்...

அப்போதுதான் சாப்பிட்டு முடித்து விட்டு.. வெற்றிலைபாக்கை குதப்பிக் கொண்டிருந்த கதிர்வேலன் கார்த்திக்கின் அபயக் குரலைக் கேட்டு எழுந்தோடி

வருவதற்குள் அர்ஜீன் மயங்கிப் போயிருந்த காவ்யாவை தோளில் போட்டுக் கொண்டு ஈரம் சொட்டச் சொட்ட கிணற்றின் பக்கவாட்டில் இருந்த படிகளின் வழியாக மேலேறி வந்து கொண்டிருந்தான்...

“என்னாச்சுங்கய்யா.. என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா..?”

அவனது எஜமானன் தண்ணீருக்குள் குதித்து விட்டானே என்று பதறினான் கதிர்வேலன்...

“உன்னைக் கூப்பிட நேரமில்ல வேலா...”

அவனுக்கு பதில் சொல்லியபடியே தோப்புக்குள் கிடந்த பிளாஸ்டிக் வயரினால் பின்னப்பட்ட கட்டிலில் காவ்யாவை படுக்க வைத்தான் அர்ஜீன்...

“காவ்யா.. காவ்யா...” என்று அழைத்தபடி அவள் கன்னத்தில் தட்டினான்...

காவ்யா கண் விழிக்கவில்லை...

“காவ்யா.. காவ்யா...” கார்த்திக் சப்தம் போட....

“உஸ்ஸ்...” என்று வாயில் விரலை வைத்து அவனை எரிச்சலுடன் எச்சரித்தான்...

“அண்ணா..”

“அடங்குடா..”

“காவ்யாண்ணா...”

“தெரியுது.. நான் மட்டும் இது நம்ம பாட்டின்னா சொன்னேன்..? உன்னால்தான் எல்லாமும்..”

“நாஙென்ன செய்தேன்..?”

“உஸ்ஸ் சத்தம் போடாதே.. தூங்கப் போயிருக்கிறவங்க எழுந்து வந்திரப் போறாங்க.. நீ இவளைத் தண்ணிக்குள்ள தள்ளி விட்ட... விவரம் மட்டும் பாட்டிக்குத் தெரிஞ்சது.. நீ அம்பேல்தான்...”

அர்ஜீன் சொல்லச் சொல்ல.. கதிர்வேலன் கார்த்திக்கை ‘அட... கொலைகாரா..!’ என்ற ரீதியில் பார்த்து வைத்தான் அந்தப் பார்வையினைத் தாங்கிக் கொள்ள முடியாத கார்த்திக்...

“என்ன அண்ணா.. நீயே போட்டுக் கொடுத்திருவ போல இருக்கே..” என்று அழ மாட்டாத குறையாகச் சொன்னான்...

“தேவைப்பட்டால் அதையும் செய்வேன்.. உன்னை யாருடா கிணற்றுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறவ கிட்ட தேவையில்லாம பேச்சுக் கொடுக்கச் சொன்னது..?” அர்ஜீன் சிடுசிடுத்தான்...

“என்னண்ணா இது வம்பாப் போச்சு..? நான் பேசப் போனா இவங்க தண்ணிக்குள்ள குதிப்பாங்கன்னு நான் கனவா கண்டேன்...?”

கார்த்திக் நியாயம் கேட்க.. கதிர்வேலன் இப்போது..

‘அட.. பாதகா..!’ என்ற பார்வையை பார்த்து வைத்தான்...

“இவரு பேச்சைக் கேக்கறதுக்குப் பதிலா கிணத்துக்குள்ளே குதிச்சுச் செத்துப் போயிரலாம்னே இந்தம்மா முடிவு பண்ணிட்டாங்கன்னா.. இவரு அப்படி என்னத்தங்கய்யா பேசி வைச்சாரு..?”

கார்த்திக்கை வில்லனைப் பார்ப்பதைப் போல பார்த்தபடி கதிர்வேலன் கேட்ட கேள்வியில் கார்த்திக் நொந்து போனான்...

“கேட்டுக்கண்ணா.. நீ பேசுற பேச்சு.. என்னை எதில கொண்டு போய் விடுதுன்னு...”

“அது நான் பேசற பேச்சில்லடா கார்த்திக்.. நீ பேசின பேச்சு..” அர்ஜீன் பிழைதிருத்தம் செய்தான்...

“நான் பேசின பேச்சா..?”

“ஆமாம்.. காவ்யாவை தண்ணிக்குள்ள பாய வைக்கிற அளவுக்கு பேசி வைச்சியே... அந்தப் பேச்சைத்தான் கதிர்வேலன் சொல்கிறாப்புல.. என்ன வேலா.. அப்படித்தானே...”

“ஆமாங்கய்யா.. ஆனா அது என்ன பேச்சுன்னு தான் தெரியல.. இப்படித்தாங்கய்யா..! ஒரு பழைய படத்தில நம்பியாரு ஹீரோயினத் துரத்திக்கிட்டுப் போவாரு.. அவரு கிட்டக்கப் போனதும் ஹீரோயினு அணைக்கட்டு மேலே எறி நின்னு ஆத்துத் தண்ணிக்குள்ள குதிச்சுப்புடும்...”

கதிர்வேலன்.. நம்பியாருடன் கார்த்திக்கை இணை கூட்ட.. கார்த்திக் இன்னும் அதிகமாக நொந்து நூலாகினான்...

தென்னந்தோப்பின் இதமான காற்று மேலே பட்டதில் ஈரஉடைகள் உலர்ந்து விட.... காவ்யா தானாக கண் விழித்தாள்...

"அம்மா எழுந்திருச்சிட்டாங்க..." என்று குதூகலித்த கதிர்வேலன்..

"ஏம்மா.. இந்தய்யாவால கிணத்துக்குள்ளே விழுகற அளவுக்கா போகனும்..? ஒரு சத்தம் கொடுத்திருந்தா நான் ஓடிவந்திருக்க மாட்டேனா..?" என்று காவ்யாவிடம் கேட்டு வைத்தான்...

"ஏங்க.. நான் உங்களை என்னங்க செய்தேன்..? ஒரு கேள்விக்கு பதிலைக் கேட்டா.. அதுக்கு கிணற்றுக்குள்ளேயாங்க குதித்து வைக்கனும்..? அவங்கவங்க.. பெரிய பெரிய எக்ஸாமுக்கான கொஸ்டினுக்கே பதிலை எழுதாம வெற்றுப் பேப்பரை நீட்டி விட்டு போய்க்கிட்டே இருக்காங்க.. நீங்க என்னடான்னா இந்தக் கேள்விக்கு பதிலைச் சொல்ல இந்த பயம் பயப்படறிங்க... இப்பப் பாருங்க.. அண்ணன் என்னை கொலை முயற்சிகேஸில தள்ளி விடப் பாக்கிறாரு.. இவராவது பரவாயில்லை.. அட்டெம்ட் டு மர்டர் கேஸோடு விட்டு வைத்தார்... இந்தக் கதிர்வேலன்

அட்டெம்ட் டு ரேப் வித் மர்டர் கேஸ் வரைக்கும் கொண்டு போயிட்டான்.. உங்களுக்கே என்னைப் பார்த்தா பாவமாயில்லையா...?" கார்த்திக் அங்கலாய்த்தான்..

காவ்யாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. அர்ஜீனை லேசாக நிமிர்ந்து பார்த்தாள்.. அவனைப் பார்த்து பாவப்பட்டு விடவாயா..? என்ற உக்கிரத்துடன் அவளை முறைத்துக் கொண்டிருந்தான்..

"கிணற்றைக் கவனிக்காம கால் தடுக்கி விழுந்துட்டேன்.." என்ற அவள் முணுமுணுப்பில் கார்த்திக் ஆசுவாசப் பெருமூச்சை விட்டான்.. கதிர்வேலன் அப்போதும் அவனை நம்பாத பார்வை பார்த்தான்...

# 140

*நீயிருக்கும் நெஞ்சத்திலே - உன்..*
*நினைவிருக்க ஆசைகொண்டேன்...*

**க**திர்வேலனின் பார்வை வீச்சில் இருந்து தப்பிக்க கார்த்திக் அந்த இடத்தை விட்டு அகன்று விட்டான்.. வழக்கம் போல செல்போனை காதுக்குக் கொடுத்து அவன் காவ்யாவின் கண்களில் படும்படியாக இங்கு மங்கும்

நடந்து கொண்டிருக்க.. உக்கிரமான பார்வையுடன் அங்கே கிடந்த பிளாஸ்டிக் வயரிலான கட்டிலில் உட்கார்ந்து விட்டான் அர்ஜீன்...

சோர்ந்திருந்த காவ்யா கிணற்று மேட்டில் அமர யத்தனிக்க..

"திரும்பவும் கிணத்துக்குள்ள விழலாம்கிற எண்ணமா..? ஏமாளி ஒருத்தன் இங்கே இருக்கானில்ல.. அவனுக்கு இதைவிட்டா வேற வேலையே கிடையாதுன்னு நினைச்சுட்டியா..?" என்றான் காட்டமாக..

அவசரமாக எழுந்து கொண்ட காவ்யா.. எங்கே உட்காருவது என்று விழிகளைச் சுழலவிட.. எதிரேயிருந்த வயர் கட்டிலைக் காட்டி...

"இதில உட்காரலாம்.. நாங்க ஒன்றும் கடிச்சுத்தின்று விட மாட்டோம்..." என்று கடுகடுத்தான்...

'ஏன் இப்படித் தேளாக் கொட்டறான்..?' வேதனையுடன் அவனுக்கு எதிரே குனிந்ததலை நிமிராமல் உட்கார்ந்தாள் காவ்யா... அவன் விழிகள் அவளைத் துளைத்துக் கொண்டிருப்பதை அவளால் உணரமுடிந்தது.. தலை நிமிர அவளுக்குத் தைரியம் வரவில்லை...

"என்ன வார்த்தைடி பேசின..?" அடிக்குரலில் சீறினான் அர்ஜீன்...

காவ்யா பதறிப்போனவளாக சுற்றும் முற்றும் பார்த்தாள்.. கார்த்திக் தொலைவில் நின்றபடி அவளை

நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான்.. அருகில் வந்தால் கதிர்வேலன் 'அட்டெம்ட்டு மர்டர்' முதற்கொண்ட குற்றங்களை அவன் தலைமேல் சுமத்தி விடுவான் என்ற பயம் அவனுக்கு...

கதிர்வேலனோ.. தண்ணீரில் மூழ்கிக் களைத்துப் போன காவ்யாவிற்கும்.. அவளை மீட்கத் குதித்த அர்ஜீனுக்கும் இளநீரைக் கொடுத்துத் தேற்ற வேண்டும் என்ற கடமையில் கட்டுண்டவனாக 'இளநீ' பறிப்பதற்காக தென்னை மரத்தில் ஏறிவிட்டான்...

"என்னத்தை தேடற..? கார்த்திக்கிடம் காதல் சொல்கிறதுக்கு முன்னாலேயே கிணத்தில விழுந்துட்-டோமே.. இப்பத்தான் மேடேறி வந்தாச்சே.. இனிமேலாவது அவனிடம் சொல்கிறதைச் சொல்லிவிடலாம்ன்னு தேடுகிறாயா..?" வார்த்தைக் கொடுக்கினால் அவளைக் கொட்டினான் அர்ஜீன்...

காவ்யா தலை நிமிர்ந்து அவனை முறைத்தாள்..

"இப்படிப் பேச வெட்கமாயில்லை..?" அவனைப் போலவே அவளும் அடிக்குரலில் சீறினாள்...

"ஹ...! அதை நீ சொல்கிறயா..? கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே இதே வாய் என்ன பேசினதுங்கிற நினைவு உன் மனதில் இருக்குதா..?" அவன் முறைத்தான்...

காவ்யா பேசவில்லை.. துக்கத்துடன் குனிந்து கைவிரல் நகங்களை ஆராய்பவளைப் போல அவற்றில் பார்வையை பதித்து விட்டாள்...

அர்ஜீன் அவளையே ஊன்றிப் பார்த்தான்.. கிணற்றில் விழுந்ததினால் நீரில் நனைந்து கலைந்திருந்த தலைமுடியில் அவன் மனமும் கலைந்தது... அவள் முகத்தில் படிந்திருந்த அந்தக் குழல் கற்றையை நீவி சீராக்க அவன் மனம் துடித்தது.. குனிந்திருந்த அவளின் இமைகள் நீள்வடிவ விசிறியைப் போல.. விரிந்திருக்கும் குடைபோல.. பட்டுப் பூச்சிகளின் சிறகினைப் போல.. உயர்ந்து தாழ்ந்ததில் அவன் மனம் சிக்கித் தவித்தது...

"ஏண்டி இந்தப் பாடு படுத்தற..?" ஆற்ற மாட்டாமல் எப்போதும் அவளிடம் கேட்கும் அதே கேள்வியினை அவன் கேட்டான்..

காவ்யாவின் விழிகளில் கண்ணீர் அரும்பு கட்டி முத்துக்களாக உதிர்ந்து அவள் கைவிரல்களில் பட்டுத் தெறித்து வீழ்ந்தது...

"நீயும் சந்தோசமாயில்லை.. என்னையும் சந்தோசமா இருக்க விடலை ஏண்டி..? ஏன்..? காதல்ன்னா இரண்டு பக்கமும் எதிர்ப்பு வருவது சகஜம்தானே காவ்யா.. மலர்பாதை விரித்து நம்மை வரவேற்பாங்கன்னு எதிர்பார்க்கலாமா..? முள்பாதை வந்தா காதலே வேண்டாம்ன்னு விலகி விடலாமா..?"

அர்ஜீனின் கேள்வி அம்புகள் அவள் மனதில் தைத்தன.. அவை உண்டாக்கிய வலி தாங்காமல் கண்களை மூடியவள் தலையை ஆட்டி அதை மறைத்தாள்..

“இல்லை.. அப்படியில்லை.. ரெண்டு பக்கமும் எதிர்ப்பு வந்திருந்தா.. நிச்சயமா நான் போராடியிருப்பேன்.. இது எதிர்ப்பில்லை.. பழி.. அதைத் தாங்க என்னால் முடியாது...”

அவள் சொன்னதில் இருந்த உண்மை அவனைச் சுட்டது...

“இன்னும் எத்தனை நாள்தான் இதைச் சொல்லியே தள்ளி நிற்ப..?”

‘என் ஆயுள் வரை...’

மனதில் நினைத்ததை வெளியில் சொல்லாமல் மௌனம் சாதித்தாள் காவ்யா.. தூரத்தில் கார்த்திக் அவளை விழிகளால் வட்ட மடித்துக் கொண்டிருந்தான்...

“அவன்தான் உனக்குச் சரியான ஜோடி...” சீற்றடித்துடன் சொன்னான் அர்ஜீன்...

“அதைத்தானே நீயும் நினைக்கிற...?”

அவன் குற்றச்சாட்டில் சீற்றத்துடன் நிமிர்ந்தாள் காவ்யா...

“உளராதீங்க...” வேகத்துடன் சொன்னாள்.. அந்த வேகத்தில் இமை துடிக்க அவளையே பார்த்தான் அர்ஜீன்.. அவளது சிவந்த விழிகளில் தெரிந்த கற்பின் கனலில் காதலாகிப் போனான்...

“அவனைத்தான் உனக்குப் பிடிக்கலைல்ல.. அதைச் சொல்லித் தொலைக்க வேண்டியதுதானே.. எதுக்கு அவனை அலைக்கழிக்கற..?”

“கடுப்பைக் கிளப்பக் கூடாது.. யார் அலைக்கழித்தது.. நானா..?”

“பின்னே..?”

“வேண்டாம்ங்க.. உங்க கோபத்தை இப்படிக் காட்ட வேணாம்.. நான் உங்க தம்பியிடம் நின்று பேசினதில்லை..”

“அவன் பேசறானே...”

“அதுக்கு நான் பிணையா..?”

“இல்லேன்னு சொல்ல வேண்டியதுதானே..?”

“சொல்ல விட்டாத்தானே...?”

“விடாம அவன் என்ன உன் கையையா பிடித்திருந்தான்..?”

காவ்யா அவனை முறைத்த முறைப்பில் அர்ஜீனின் மனம் குதியாட்டம் போட்டது.. அவளது பார்வையை காத்திருந்த அவன் பார்வை கவ்விக் கொண்டதில் அவள் இன்பமான இம்சையை உணர்ந்தாள்...

அர்ஜீனின் விழிகள் அவளை அழைத்தன.. கார்த்திக் கண்டு கொள்வானோ என்ற பயமின்றி அவன் கால்களை நீட்டி காவ்யாவின் கால்களைத் தொட்டான்.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு கால்களை இழுத்துக் கொண்டாள்...

‘ஏன்..?’ அவன் கோபத்துடன் கண்களால் மிரட்டினான்...

“ஐயா.. இளநீ...”

கதிர்வேலன் இளநீயுடன் அங்கே வந்து விட்டதில் அவன் கால்களை மடக்கிக் கொண்டான்...

கதிர்வேலன் இளநீயை வெட்டிக் கொடுத்த போது...

“கார்த்திக்கு ஒன்றைக் கொடுத்துட்டுவா...” என்றான் அர்ஜீன்...

“எதுக்குய்யா...? அவரு என்ன தண்ணிக்குள்ள விழுந்தாரா..? இல்ல.. விழுந்தவங்களத்தான் தூக்கிக்கிட்டு வந்தாரா..? நீச்சல் தெரிஞ்சு என்ன பிரயோசனம்..? தண்ணிக்குள்ள ஒரு மனுஷி விழுந்துட்டா உள்ள குதிச்சு அவங்களக் காப்பாத்தாம.. என்னைத் தேடி ஓடி வர்றாரு.. அவரு என்ன செஞ்சு களைச்சுப் போனாருன்னு அவருக்கு எளநியை வெட்டிக் கொடுக்கச் சொல்கிறிங்க...?” கதிர்வேலன் பலமாக மறுத்தான்...

“அட... அவனுக்காக பார்க்கலைன்னாலும் சித்தப்பாவுக்காக பார்க்கனுமே.. நீ போய் கொடுத்துட்டு வா..” அர்ஜீன் கட்டளையிட்டான்...

வாய்க்குள் முணுமுணுத்தபடி கதிர்வேலன் இளநீயைக் கொண்டு போன சமயத்தில் அர்ஜீன் குடிக்க ஆரம்பித்து கையில் வைத்திருந்த இளநீயை கைப்பற்றினாள் காவ்யா.. அவன் புருவங்கள் ஏறியதைக் கண்டு கொள்ளாமல் அந்த இளநீரைப் பருகியவளின் மீது அவனுக்குள் காதல் பெருகியது...

“என்ன..?” என்றான்...

“என்ன.. என்ன..?” ஒன்றுமறியாதவளைப் போல அவள் வினவினாள்...

“இதிலெல்லாம் குறைச்சலில்லை...”

அர்ஜீன் அலுத்துக் கொள்ள காவ்யா மௌனமானாள்.. எழுந்து வேறு ஒரு இளநீயை எடுப்பதைப் போலக் குனிந்தவன்.. கண்ணிமைக்கும் நேரத்துக்குள் காவ்யாவின் கன்னத்தில் முத்தமிட்டு விலக.. அவள் பதறிப் போனாள்...

“என்ன வேலை செய்யறிங்க..?”

“என்ன செய்தேன்..?” அவன் அறியாச் சிறுவனைப் போல வினவி வைத்தான்...

அவனுடன் வாதாட முடியாமல் கதிர்வேலன் திரும்பிவிட... கண்களால் அவளை மேய்ந்து கொண்டிருந்தவனை அடிக்கண்ணால் பார்த்தபடி...

‘கள்ளன்..’ என்று மனதுக்குள் திட்டிக் கொண்டாள்..

அந்தக் ‘கள்வன்’ அவளை முறைத்து முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.. சற்றுப் பொறுத்து நடந்ததை அர்ஜீன் மறந்திருப்பான் என்ற எண்ணத்துடன் அருகே வந்த கார்த்திக்கை...

“என்னடா கார்த்திக்... திரும்பவும் இவங்கள தண்ணிக்குள்ள தள்ளிவிட வந்தியா..?” என்று கேட்டுத் துரத்தி விட்டான்...

“எனக்கு கம்பெனியில் வேலையிருக்குண்ணா..”

காவ்யாவிடம் தனிமையில் பேச முடியாத துக்கத்துடன் அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி காரில் ஏறினான் கார்த்திக்.. அவன் போவதையே பார்த்தபடி பல்லைக் கடித்த அர்ஜீன்...

“தொலைஞ்சான்..” என்றான்...

“இப்பத்தான் யாரோ.. சித்தப்பாவுக்காக பார்க்கனு-மேன்னு சொன்னதா ஞாபகம்..” என்றாள் காவ்யா.

“ஏய்ய்.. அதுக்காக இப்ப என்னடி செய்யனும்..?” கண்சிவந்தான் அர்ஜீன்...

“ஒன்னும் செய்யச் சொல்லலை.. போறவர்தான் போயிட்டாரே... பாவம்... அவரை எதுக்காக கரிச்சுக் கொட்டனும்..?” அனுதாபப் பட்டாள் காவ்யா...

“கரிசனம் பொங்கி வழியுது.. என்ன விசயம்..?” கடுமையாக கேட்டான் அர்ஜீன்...

“ஒரு விசயமுமில்ல...”

“ஒன்றும் இல்லாமலா இந்த அளவுக்கு பாவப்படுவ..? என்ன..? அவன் பக்கம் அனுதாப அலை வீசுதா...?”

“ஒரு அலையும் வீசல.. சும்மா ஒரு வார்த்தைக்காக சொன்னா.. அதைப் பிடிச்சுக்கிட்டு நீங்க தொங்குவீங்களா..? ஆத்தி.. இந்த மனுசன் முன்னால வாயைத் திறந்து ஒரு சொல்லச் சொல்ல முடியலையே...”

அவளையுமறியாமல் அவள் வார்த்தைகளில் கலந்து விட்ட அவளின் வட்டாரத் தமிழை ரசித்தான் அர்ஜீன்...

“அந்த ஒரு சொல்லையும் எதுக்குடி சொல்ற..?” என்று உல்லாசமாகக் கேட்டான்...

அவன் கேட்ட விதத்தில் மனதைப் பறிகொடுத்தாள் காவ்யா.. பேசியபடியே புருவங்களை உயர்த்திய அவனது மேனரிசத்தில் அவள் மனம் சிக்கித் தவித்தது...

தென்னந் தோப்பின் சிலுசிலுவென்ற காற்று அவர்களின் உடலைத் தழுவிச் சென்றது.. மதிய நேரத்து இளைப்பாறுதலை முடித்துக் கொண்டு அம்புஜம் பாட்டி வந்து சேர்வார்களா என்று தோப்பு வீட்டின் வாசலைப் பார்த்தாள் காவ்யா.. அவர்கள் வரும் வழி தெரியவில்லை.. அவள் பார்வையைக் கவனித்த அர்ஜீன்...

“இப்போதைக்கு அவங்க வர மாட்டாங்க...” என்று கண்சிமிட்டினான்...

‘இது ஒன்னைக் கண்டு வைச்சிருக்கான்...’ காவ்யாவின் முகம் சிவந்தது.. அந்த முகச் சிகப்பை ரசித்தபடி..

“இங்கே வந்து விருந்து சாப்பிட்டா இப்படித்தான்..” என்றான்..

“இப்படித்தான்னா.. இதுதான் வழக்கம்ன்னு அர்த்தம்... தோப்பு வீட்டில கிடைக்கிற இயற்கை காத்துக்கு ஈடுயிணையில்லைன்னு பாட்டியும்.. சித்தப்பாவும் சொல்லுவாங்க.. சித்தி எப்போதுமே சித்தப்பாவின்

ஃபாலோயர்.. ம்ஹீம்.. அவர் கொடுத்து வைச்சவர்.. என்னைப் போலவா..?"

அவன் விட்ட பெருமூச்சில் காவ்யாவுக்கு ரோசம் வந்து விட்டது.. அவனுடன் சேர்ந்து வாழப் போவதில்லை யென்ற சங்கல்பம் மனதில் இருப்பதை மறந்தவளாக...

"ஏனாம்..? உங்களுக்கென்ன குறைச்சலாம்..?" என்று கேட்டு விட்டாள்...

"பின்னே...? குறைச்சலில்லையா...? அவர் கைபிடிச்சவங்க அவரோட காலடித் தடத்தில கால் பதிச்சு நடக்கிறாங்க.. எனக்கு அப்படியா..?" குத்தலாக எதிர் கேள்வி கேட்டான் அர்ஜீன்...

"அவங்க கொடுத்து வைச்சவங்க.. நினைச்சவரின் கை பிடிச்சு அவரோட காலடித்தடத்தில காலப் பதிச்சு நடக்க அவங்களாலே முடியுது.. எனக்கு அந்த கொடுப்பினை இருக்கா..?" பொருமினாள் காவ்யா...

"ஏய்ய்... உனக்கு ஏண்டி கொடுப்பினை இல்லை..? உன் முன்னாலே நானில்லையா...? உனக்குன்னு நானில்லையா..?" கோபத்துடன் கேட்டான் அர்ஜீன்...

அவனின் அந்தக் கேள்வியில் அலைபாயும் மனதோடு அவனை நிமிர்ந்து பார்த்தாள் காவ்யா.. தோப்பில் வீசிய காற்றில் அலைபாய்ந்த அவன் முடி.. முன்நெற்றியை மறைக்க... அவளையே குறுகுறுவென்று பார்த்தபடி அமர்ந்திருந்தவனிடம் அவள் மனம் ஓடியது.. எனக்கென்று நீயிருக்கிறாயா என்று விம்மியது...

‘ஆனால்...’ உதட்டைக் கடித்தபடி அவள் முகம் திருப்பிக் கொள்ள... அவன் முகம் கோபத்தில் சிவந்தது...

“அந்தப் பக்கம் யாரிருக்கான்னு அங்கே பார்க்கிற..?” உறுமினான்...

“ஒருவேளை அவனிருக்கான்னு பார்க்கிறயா..?” தொடர்ந்த அவன் கேள்வியில் அவள் திரும்பி முறைத்தாள்..

“எவன்..?”

காட்டமான அவள் கேள்வியில் அவன் அவள் விழிகளுக்குள் ஊன்றிப் பார்த்தான்... குற்றம் சாட்டும் அந்தப் பார்வை அவள் இதயத்தைத் துளைப்பதைப் போல உணர்ந்தாள் காவ்யா.. பேச நினைத்ததை பேச அவளால் முடியவில்லை...

“ஓ...! ‘அவன்’னு சொன்னா உனக்குத் தெரியாதில்ல..? ‘அவர்’ன்னு சொல்லனுமில்ல..? அதை மறந்தே போயிட்டேன் பாரு.. ஆயிரம்தான் இருந்தாலும் அவர் உன்னிடம் காதல் சொன்னவர்.. உனக்கு மரியாதை கொடுக்கிற மாமனாருக்கு மகனாப் பிறந்தவர்.. அவரை ‘அவன்.. இவன்..’ன்னு சொல்லக் கூடாதுதான்.. தப்புத்தான்.. மன்னிச்சிரு...”

அவன் பேசப்பேச.. அவள் கொதிகலன் ஆனாள்...

“கொஞ்சம் நிறுத்தறிங்களா..?” வெடித்தாள்..

“ஏன் நிறுத்தனும்..?”

“யாருக்கு.. யார் மாமனார்..?”

“ஏன்..? உனக்கு அவர் மாமனாரில்லையா..?”

“எனக்கு நல்லா வந்திரும் வாயில.. வாயைப் பிடுங்காதீங்க.. சொல்லிட்டேன்...”

“என்னடி இது..? அவன் என்னடான்னா உன்னிடம் காதல் சொல்லிட்டு.. காதலாகி கசிந்துருகுறான்.. நீ என்னடான்னா யாருக்கு.. யார் மாமனாங்கிற.. என்னதாண்டி நடக்குது...?”

அப்போது பார்த்து... கதிர்வேலன் வளர்த்த பூனையொன்று “மியாவ்..” என்ற சப்தத்துடன் நடந்து போக.. அதைக் காட்டிய காவ்யா...

“அதுதான் நடக்குது...” என்றாள்...

“அதாவது பூனைக்குட்டி வெளியே வந்திருச்சுன்னு ஒப்புக்கிற..” அமர்த்தலாக அவன் சொன்னான்...

“இதில பூனைக்குட்டி வெளியே வர என்ன இருக்கு..?”

“நிறைய இருக்குடி... அவன் உன்கிட்ட காதல் சொன்னான்.. பதிலுக்கு உன் காதலை அவனிடம் நீ சொல்லியிருக்கனும்.. ஆனா.. இன்னும் அதைச் சொல்லித் தொலைக்கலை...”

“அதில உங்களுக்கு ரொம்ப வருத்தம் போல இருக்கே...”

இப்போது முறைப்பது அவனது முறையாகி விட்டது.. அவளை இமைக்காமல் முறைத்தவனின் பார்வையிலிருந்து தப்பிக்க.. எழுந்து கொண்ட காவ்யா.. பக்கத்திலிருந்த புறாக் கூடுகளுக்கு இடையில் போனாள்...

அவை மரத்தினால் செய்யப்பட்ட சின்னஞ்சிறு வீடுகளுடன் கூடிய கழிகளாக இருந்தன.. அந்த கம்புகள் பூமிக்குள் ஆழமாக.. அழுத்தமாக புதைக்கப் பட்டிருந்தன.. அவற்றில் இருந்த சின்னஞ்சிறு ஜன்னல்களும்.. வாசல்களும்.. பார்ப்பதற்கு மிக அழகான முறையில் வடிவமைக்கப் பட்டிருந்தன...

அந்த மரவீடுகளுக்கு இடையில் நின்று கொண்டிருந்த காவ்யா.. அர்ஜீனையும்.. அவன் கேட்கும் எக்குத்தப்பான கேள்விகளையும் மறந்து போனவளாக.. அவற்றை ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்தாள்.

'இது புறாவின் வீடா..?'

குனிந்து ஒரு வீட்டுக்குள் எட்டிப் பார்க்க முனைந்தவளின் தோளில் விழுந்தது அழுத்தமான முரட்டுக் கரம்...

# 141

*குயில் கூவும் தோப்பினிலே...*
*கூடிவிடவே ஆசைகொண்டேன்...*

**அ**ந்த முரட்டுக்கரத்தின் ஸ்பரிசத்தை அடையாளம் கண்டு கொண்டாள் காவ்யா...

“அதையுணராத அவனோ.. அவளை இழுத்து முரட்டுத் தனமாக அணைத்து அவள் காதோரமாக குனிந்து..”

*“என்னை விட்டால் யாருமில்லை..*
*கண்மணியே உன் கையணைக்க...”*

என்று பாடினான்.. காவ்யாவின் மனம் சிறகடித்தது..

அவள் தோள் தழுவிய அவன் கரங்களுக்குள் சிறை புகுந்து அவன் மார்பில் முகம் புதைத்தவளுக்கு அனைத்தும் மறந்து விட்டது.. அவன்.. அவள்.. அவர்களுக்கு இடையே இருந்த காதல்.. அதன் குறுக்கே வந்த நேகா.. அதற்கு துணை செய்த பார்த்தசாரதி.. என்று அனைத்தையும் அவள் மறந்தாள்...

கார்த்திக்.. அவன் சொன்ன காதல்.. அவன் கேட்கும் பதில்.. அர்ஜீனுடைய சீண்டல்.. அதனால் அவனுடன் அவள் கொண்ட பிணக்கு என்ற அவ்வளவையும் அவள் மறந்தாள்...

*“உன்னை விட்டால் வேறொருத்தி...*
*எண்ணமில்லை நான் காதலிக்க...”*

அவன் குரல் தொடர்ந்து பாடியது.. அது சொல்லிய செய்தியில் அவள் கட்டுண்டு அவனுக்குள் சிறைப்பட்டாள்.. இந்த அணைப்பையும் நெருக்கத்தையும் இழந்துதான் ஆக வேண்டுமா.. என்ற தவிப்பு அவள் நெஞ்சில் எழுந்ததில் அவள் கண்களில் கண்ணீர் துளிகள் அரும்பி.. அவள் கன்னத்தில் வீழ்ந்தன...

அதை ஆட்காட்டி விரலையும்.. பெருவிரலையும் வட்டமாக இணைத்து சுண்டி விட்டான் அர்ஜீன்.. அவள் கண்ணீர் துளிகள் தெறித்துச் சிதறின...

*"முத்து முத்தாய் நீரெதற்கு..?*
*நானில்லையோ கண்ணீர் துடைப்பதற்கு..?"*

அவன் கனிவுடன் அவளை அணைத்துக் கொண்டு பாடியபோது.. அவனது திண்மையான மார்பின் வலிமையை உணர்ந்தாள் காவ்யா...

அகன்ற அவன் மார்பின்மீது தலை புதைத்திருந்த போது.. இவனது தேக்குமரம் போன்ற தேகத்தின் முன்னால் அவளது பூஞ்சையான மெலிவான தேகம் பொருந்தி வருமா என்ற தாழ்வுணர்ச்சி அவள் மனதில் எழுந்தது...

கொடி போன்ற உடலையுடைய அவளை.. அவன் அணைத்து நின்ற போது.. வலிமையான மரத்தின் மீது கொடி படர்ந்திருப்பதைப் போல இருந்தது...

*"ராத்திரி நேரம்...*
*ரகசியக் கடிதம்..*
*எழுதியதைப் போல...*
*ஒரு நினைவு..."*

அவனது கிசுகிசுப்பான பாடலில் அவள் தன்வயமிழந்தாள்.. வேண்டாம் என்று அவள் மனம் அரற்றியது...

‘பாடாதே.. எனக்கான ராக்கால ரகசியப் கனவுகளை அனுப்பி வைத்தவன் நீதானே.. அந்தக் கனவுகளின் வெம்மையைப் பற்றி உனக்கென்ன தெரியும்..? அந்தப் பற்றியெரியும் மோகத்தீயில் நான் பட்ட பாட்டைப் பற்றி நீ எப்படி அறிவாய்..? உனக்கென்ன..? கனடாவில் இருந்து காதல் மொழி பேசிவிட்டாய்.. காத்துக் காத்து இற்றுப் போனவள் நான்தானே.. திரும்பவும் எதற்காக அந்த நினைவுகளை அடி ஆழத்திலிருந்து தூண்டிலைப் போட்டு வெளியே இழுக்கிறாய்..?’

அவள் கை உயர்ந்து அவன் வாயைப் பொத்தியது.. அவள் விழிகளில் தெரிந்த இறைஞ்சுதலில் அவன் புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது...

“காவ்யா..?” கேள்வியாக அழைத்தான்...

“வேண்டாம்..” அவள் விம்மினாள்...

“ஏண்டி..?” அவன் கரங்கள் அவளை ஆதுரமாக சுற்றி வளைத்தன.. அவள் முகவாயை நிமிர்த்தி முகம் பார்த்தான் அர்ஜீன்.. அவள் விழிகளில் தெரிந்த கலக்கத்தில் அவன் விழிகளுக்குள் யோசனை வந்தது...

“என்ன காவ்யா..?” மென்மையாக வினவினான்...

“இந்தப் பாட்டைப் பாடாதீங்க..”

“உனக்குப் பிடிக்கலையா...?”

“ரொம்பப் பிடிச்சிருக்கு.. அதனாலதான் வேண்டாம்னு சொல்றேன்..” அவள் மீண்டும் விம்மினாள்..

அவளுடைய விசித்திரமான பதிலில் அவன் நெற்றியில் கோடுகள் படிந்தன.. காதல் எண்ணற்ற விசித்திரங்களை உள்ளடக்கியது.. அதை உணர்ந்திருந்த அவனால் எதையும் வினவ முடியவில்லை.. அவன் பதில் பேசாமல் மென்மையாக அவளை அணைத்துக் கொண்டான்.. அவள் முதுகில் படிந்திருந்த அவன் கரங்கள் அவளைத் தட்டிக் கொடுத்தன...

அப்படியே இருந்து விடலாம் போல அவளுக்கிருந்தது.. அவளும்.. அவனும் மட்டும் இருக்கும் தனித்த உலகில் இருந்து விடவேண்டும்.. அங்கே நேகா வரமாட்டாள்.. பார்த்தசாரதி நுழைய மாட்டார்.. அவளும்.. அவனும் மட்டும் அங்கே இருப்பார்கள்...

'அது இந்தத் தோப்பாக இருந்தால்...'

நினைத்துப் பார்க்கும் போதே காவ்யாவின் நெஞ்சம் இனித்தது..

தென்னந்தோப்பில் அர்ஜீனும் அவளுமாக வாழ்கிறார்கள்... அர்ஜீன் பகல் முழுவதும் தோட்ட வேலைகளைச் செய்கிறான்.. காவ்யா அவனுக்காக உணவு சமைத்து பாத்திரத்தில் நிரப்பி... அவனுக்கு கொடுப்பதற்காக அதைத் தலையில் வைத்து அவனைத் தேடிச் செல்கிறாள்.. அவள் உடுத்தியிருக்கும் கண்டாங்கி சேலையின் பின்கட்டு கொசுவத்தின் மேலே தெரிந்த.. இடுப்புப் பகுதியில் கிள்ளி விட்டு.. அவளைக் கையில்

தூக்கிக் கொள்கிறான் அர்ஜீன்.. சாப்பாடு சிதறப் போகிறது என்று பதறுகிறாள் காவ்யா.. அப்படியெல்லாம் நடக்காது என்று அவன் அவளை சமாதானப் படுத்துகிறான்.. வாய்க்கால் நீரில் கால்களை அளையவிட்டபடி வரப்பில் அவன் அமர்ந்திருக்க.. காவ்யா குழம்பை ஊற்றிச் சோற்றைப் பிசைந்து அவள் கையில் எடுத்து அவன் வாயில் ஊட்டுகிறாள்...

நினைவுகள் தந்த மயக்கத்தினால் விளைந்த சுகத்தில் அவள் மூழ்கியிருந்த போது.. படபடவென்று சிறகையடித்தபடி பறந்துபோன புறாவின் இறக்கையொலி காவ்யாவை தன்னுணர்விற்கு மீட்டுக் கொண்டு வந்தது..

அர்ஜீனின் அணைப்பு மட்டும் நிலைத்திருக்க.. கனவுகள் கலைந்த நிலையில் அவள் ஏக்கப் பெருமூச்சை விட்டாள்.. அர்ஜீன் அவள் முகத்தை விலக்கி உற்றுப் பார்த்தான்...

“இப்படியே இங்கேயே இருந்துருவோமா காவ்யா..?”

அவள் மனதைப் படித்தவனைப் போல அவன் சொல்லியதில் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது...

“முடியுமா..?” ஏக்கத்துடன் அவள் கேட்டாள்...

“ஏன் முடியாது..?” அவன் உறுதியுடன் கேட்டான்...

“உங்க பிஸினெஸ் சென்னையில இருக்கு...”

“இருக்கட்டுமே..”

“அது மட்டுமில்ல.. உங்க குடும்பமும் அங்கேதான் இருக்கு..” தயக்கத்துடன் சொன்னாள் காவ்யா...

அவள் விழிகளில் நிராசையினால் விளைந்த நீர் திரையிட்டது.. அர்ஜுனுக்கு அதைக் காண முடியவில்லை..

“அன்னைக்குப் பார்த்த காவ்யாவாடி நீ..? அந்த காவ்யா அழுகவே மாட்டா.. நீயானா.. எதுக்கெடுத்தாலும் கண்ணீர் விட்டுக்கிட்டு நிற்கிற.. ஏன் காவ்யா..?”

“எனக்கொன்னும் அப்படிப்பட்ட வேண்டுதல் இல்ல..”

“இப்பத்தான் நீ என்னோட காவ்யா.. சென்னையில இருக்கிறது என்குடும்பம்ன்னா.. நீ யாருடி..? நீயும் என் குடும்பம்தானே..? இன்னும் சொல்லப் போனா.. நீ மட்டும்தான் என் குடும்பம்...”

அவனது வார்த்தைகள் மயிலிறகாய் மனம் வருட.. அவன் மார்பில் முகம் புதைத்திருந்த நிலையிலேயே.. அவனை விட்டு விலகாமல் அண்ணாந்து அவன் முகம் பார்த்தாள் காவ்யா...

“அப்படின்னா.. உங்க அக்கா..?”

“அது என் அத்தானோட குடும்பம்...”

“உங்க அம்மா..?”

“என் அப்பாவோட குடும்பம்.. நீதாண்டி என் குடும்பம்...”

அவன் செல்லமாக அவள் தலையில் கொட்டி.. அவள் நெற்றியில் முத்தமிட்டபோது.. இது போன்ற இணக்கமான

பேச்சுக்கள் மனதிற்கு எவ்வளவு இதத்தை அளிக்கின்றன என வியந்து போனாள் காவ்யா...

அவள் தோள் தடவிய அவன் கைகள் அவள் முகத்தை நிமிர்த்தின.. அவள் முகம் நோக்கி அவன் குனிந்த போது நடக்கப் போவதை உணர்ந்த பரபரப்பில் அவள் கண்ணிமைகள் படபடத்தன...

அவன் நிதானமாக அவள் உதட்டில் அவன் உதடுகளை அழுந்தப் பதித்தான்.. ஆழமான அழுத்தமான அவனது அந்த முத்தத்தில் காவ்யாவின் மனதில் ஹோ வென்ற பேரலை யொன்று எழுந்து அவள்மேல் வீழ்ந்தது.. அதன் வேகம் தாங்காமல் அவள் தொய்ந்து அவன் கைகளுக்குள் சரிந்தாள்.. அவள் விழுந்து விடாமலிருக்கும் பொருட்டு அவள் இடுப்பில் கைகொடுத்து வளைத்தவன் அவளைத் தன்மீது சரித்துக் கொண்டான்...

நீண்ட முத்தத்திற்குப் பின்னால் அவன் அவள் உதடுகளை விட்டு விலகி.. கன்னத்தில் முத்தமிட்ட போது.. அவள் கண்களை மூடிக் கொண்டாள்...

*"நெஞ்சுக்குள் பெய்திடும் மாமழை...*
*நீருக்குள் மூழ்கிடும் தாமரை..*
*சட்டென மாறுது வானிலை..*
*பெண்ணே..! உன்மேல் பிழை..."*

ஆண்மை ததும்பும் குரலில் அவன் பாடினான்.. அவள் கைகள் அவன் முதுகில் பரவிப் படற.. அவன் முகம் பார்க்க முடியாமல் அவன் மார்பில் முகம் புதைத்து அவனுடன் பிணைந்து நின்றாள் அவள்...

*“ஓ.. சாந்தி.. சாந்தி..*
*ஓ.. சாந்தி..*
*உன் விழியில்.. விழியில்...*
*எனை ஏந்தி...*
*ஏன் சென்றாய்.. சென்றாய்..*
*எனை நீங்கி...*
*என் வாழ்வில் நீயே..*
*அந்தாதி...”*

அவன் உணர்வு பூர்வமாக அவளை இறுக்கிக் கொள்ள விடுபட மனமில்லாமல் அவனுக்குள் இறுகிக் கொண்டாள் காவ்யா... அவளின் அந்த இணக்கத்தில் அவன் கிளர்ந்தான்.. அவனின் உடலில் இருந்த அத்தனை செல்களும் விழித்துக் கொண்டு அவள் வேண்டும் என்று கேட்டதில் மோக வெள்ளம் தலைக்கேற.. மூச்சுத் திணறிப் போனான்...

*“நில்லாமல் வீசிடும் பேரலை..*
*நெஞ்சுக்குள் நீந்திடும் தாரகை..*
*பொன் வண்ணம் சூடிய காரிகை..*
*பெண்ணே..! நீ காஞ்சனை...!*
*ஓ.. சாந்தி.. சாந்தி...*
*ஓ.. சாந்தி...”*

அவனும்.. அவனது பாடலும் தந்த மயக்கத்தில் கிறங்கிப் போய் நின்றிருந்தவளின் காதருகே தாபத்துடன் வேண்டினான் அர்ஜீன்...

“வந்து விடு காவ்யா...”

அவன் அழைப்பில் அவள் மனம் குழுங்கியது...

“அர்ஜீன்..” அவள் தவித்தாள்...

“வந்து விடுடி.. நாம் கனடாவுக்கு போயிவிடலாம்...”

“போய்..”

“கல்யாணம் பண்ணிக்கலாம் காவ்யா.. வாழலாம்...”

அவன் குரலில் தெரிந்த வற்புறுத்தலில் மனம் கரைந்தாள் காவ்யா.. சட்டென எல்லாவற்றையும் விட்டு விட்டு அவன் பின்னால் போய்விட அவள் மனம் துடித்தது...

‘வா.. போகலாம்..’ என்று சொல்லத் துடித்த மனதை அவள் கட்டுக்குள் கொண்டு வந்தாள்.. அவனை விட்டு விலகினாள்...

அதுநேரம்வரை அவன் முகத்தில் இருந்த மென்மை மறைந்து போனது.. அவன் கடுங்கோபத்துடன்...

“ஏன்..?” என்று உறுமினான்...

“வாங்க.. போகலாம்...” அவள் நகர யத்தனித்தாள்..

“நில்..” அவள் கைபிடித்து அவன் நிறுத்தினான்..

“எங்கே போகலாம்கிற..? கனடாவுக்குத்தானே..?”

அவள் முகத்தையே வெறி கொண்ட பார்வையுடன் பார்த்தபடி அவன் கேட்க.. அவன் முகத்தைப் பார்க்காமல்..

“ஊஹீம்..” என்று தலையசைத்தாள் காவ்யா...

“தோப்பு வீட்டுக்குப் போகலாம்..”

“எதுக்குடி.. குடும்பம் நடத்தவா..?”

அவன் கோபத்துடன் கேட்டான்.. அவள் நெஞ்சில் துக்கம் சூழ்ந்தது...

“அதுக்குத்தான் நான் கொடுத்து வைக்கலையே..” என்று தீனமான குரலில் சொன்னாள்...

“உன்னைக் கொன்றாத்தாண்டி என் மனசு ஆறும்..”

“அதைச் செய்திருங்க முதல்ல..” அவள் கலங்கினாள்..

“நிம்மதியாப் போய் சேர்ந்திருவேன்...”

“காவ்யா.. என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டியா..?”

“நீங்கதான் என்னைப் புரிஞ்சுக்கல...”

“ஆமாண்டி.. உன்னைப் புரிஞ்சுக்கத்தான் முடியல.. இவ்வளவு நேரமும் என் கைக்குள்ள அடங்கி நின்னவளுக்கு இப்ப என்னவந்ததுன்னு எனக்குப் புரியத்தான் இல்ல..”

“பாலைவனத்தில நடக்கிறவளுக்கு.. ஒரு சொட்டு நீர் கிடைத்தாலே அதை தேவாமிர்தமா அவ நினைப்பா.. இங்கே ஒரு அருவியே அவ முன்னாலே கொட்டினா.. ஒரு கை அள்ளிப் பருகாம எப்படியிருப்பா..?”

அவளின் தவிப்பில் அவன் விழிகளில் மென்மை வந்தது...

“ஒரு கை போதுமா..?” லேசாக கண் சிமிட்டினான்..

“எல்லாம் போதும்..” அவள் முகம் சிவந்து தரையைப் பார்த்தாள்...

“ஏண்டி..? இந்த அருவி உன்னுடையது காவ்யா.. இதில நீ அள்ளி அள்ளி குடிக்கலாம்.. காலம் முழுவதும் குளிக்கலாம்.. அதைவிட்டு ஏன்டி உன்னை நீயே துன்பப் படுத்திக்கற..?”

“நீங்க சொன்னாப் போதுமா..?” அவள் தீர்க்கமாக அவனைப் பார்த்தாள்...

“வேற யார் சொல்லனும்..?” அவன் முகம் இறுகக் கேட்டான்..

“உங்க அப்பா சொல்லனும்.. அவர் சொல்வாரா..? ஒருநாளும் சொல்ல மாட்டார்.. இந்த அருவியில குளிக்க நேகா மட்டும்தான் உரிமைப் பட்டவன்னு சொல்லுவார்..”

பார்த்தசாரதியைப் பற்றிய பேச்சு வந்து விட்டதில் காவ்யாவின் மனதிலிருந்த காதல் மயக்கம் தெளிந்துவிட.. அவள் சட்டென்று அங்கிருந்து விலகி நடந்தாள்..

விலகிப் போகிறவளை வெறித்துப் பார்த்தபடி அசையாமல் நின்றிருந்தான் அர்ஜீன்..

## 142

*மீளாத இந்தத் துயரிலிருந்து..*
*மீட்சி பெற ஆசைகொண்டேன்...*

**கா**வ்யாவினால் உறங்க முடியவில்லை... இரவின் அமைதியில் கண் மூடினால்.. கண்ணுக்குள் அர்ஜீனின் தென்னந் தோப்பே வந்து நின்றது... அவளைக் கட்டியணைத்தான்.. அந்த போதை தரும் மயக்கத்துடன்

புரண்டு படுத்த காவ்யாவினால் உறங்க முடியவில்லை.. அவனுக்காக அவள் ஏங்கினாள்...

"வந்து விடு.."

அர்ஜீனின் தாபமான அழைப்பு அவள் காதுகளில் ஒலித்தது.. அவள் சென்றுவிடத் துடித்தாள்.. அவன் கைகளுக்குள் சென்று.. அவன் வாழ்வுக்குள் சென்று விட மனம் துடித்தாள்...

"வருகிறேன்..." காவ்யா முணு முணுத்தாள்...

"ஆனா உங்க பொண்டாட்டியா இல்ல.."

கிசுகிசுப்பான குரலில் சொல்லி விட்டு.. அந்தச் சொற்களின் வீரியம் தாங்காமல் அவள் சத்தமின்றி குமுறி அழுதாள்...

"முடியாதில்ல..."

அவளைத் தென்னந் தோப்பின் தரையில் தள்ளி விட்டுச் சீறிய அர்ஜீனின் ஆண்மை நிறைந்த தோற்றம் அவள் மனதில் எழுந்தது..

"அறைஞ்சேன்னா உன் அத்தனை பல்லும் உதிர்ந்து விடும்.. பேசறா பாரு பேச்சு.. நீ இப்படிக்கூட பேசுவியா..?"

அவன் குரல் காதுகளில் ஒலித்தது.. அதில் தொனித்த ஆத்திரத்தில் அவள் மனம் கரைந்தாள்...

"என் அர்ஜீன்.." முணுமுணுத்தபடி தூங்கிப் போனாள்..

**அ**டுத்த நாளில் அவள் அம்புஜத்தின் வீட்டிற்குப் போனபோது அர்ஜீனும் அங்கே இருந்தான்.. கார்த்திக்கை அவள் கண்கள் தேட....

“அவன் இல்லை..” என்று கடுமையாகச் சொன்னான்..

‘அப்பாடி..’ அவள் நிம்மதிப் பெருமூச்சை விட்டபோது..

“என்னடி.. அவனைத் தேடற.. ஆள்மாத்த உத்தேசமா..?” என்று அவள் காதுகளில் தீங்கங்குகளை அள்ளிப் போட்டான்...

உதட்டைக் கடித்தபடி அவனை இமைக்காமல் பார்த்தாள் காவ்யா.. அந்தப் பார்வையில் மனம் நனைந்தபடி அவன் நின்றிருந்த போது...

“அர்ஜீன்..” என்று அழைத்தபடி.. கார்த்திக் பின் தொடர அவசரமாக அங்கே வந்தார் சரவணன்..

‘வந்துட்டானா..’ காவ்யா கார்த்திக்கைப் பார்ப்பதை தவிர்த்து மாடியேறினாள்...

அர்ஜீனைப் பார்க்கும் ஆசையில் அவள் லேசாக திரும்பியபோது சரவணன் ஒரு சூட்கேஸைத் திறந்து அவனிடம் காட்டிக் கொண்டிருப்பதை அவள் பார்க்க நேர்ந்தது.. அந்தப் பெட்டி முழுவதும் கட்டுக் கட்டாக பணக்கட்டுக்கள் அடுக்கப் பட்டிருந்தன...

“இந்தப் பணத்தை உன் பொறுப்பில் வைத்துக்க அர்ஜீன்...”

"ஓகே சித்தப்பா..."

"கலிவரதனிடம் நான் சொன்ன டீலிங்கை பேசி முடித்துவிடு.."

"ஆகட்டும் சித்தப்பா..."

"ஆளவந்தான் ஊடே வந்து விடக் கூடாது.."

"வரவிட மாட்டேன்..."

அதற்கு மேல் அங்கே காவ்யா நிற்கவில்லை.. மடமடவென்று மாடிப்படிகளில் ஏறியவளின் மனக் கண்ணில் அந்தப் பணப்பெட்டியே சுழன்றது.. அப்படிப் பெட்டி நிறையப் பணக்கட்டுக்களை தன் வாழ்நாளில் பார்த்திருக்கிறோமா என்று யோசித்தபடி அம்புஜத்தின் அறைக்குள் அவள் சென்றாள்...

"பாட்டி.."

ஓய்வாக அமர்ந்திருந்த அம்புஜம் அவளைப் பார்த்ததும் முகம் மலர்ந்து சிரித்தாள்...

"வா.. காவ்யா..."

"இப்ப எப்படியிருக்கீங்க..?"

"நல்லாகிட்டேனில்ல.. தோப்புக்கெல்லாம் போய் வந்தாச்சு.. இப்பல்லாம் சாப்பிட நானே கீழே போயிடறேன்னா பார்த்துக்கயேன்.."

"நீங்க கீழே இருக்கிற ரூமிலயே இருந்திருக்கலாம்.."

“இல்ல காவ்யா.. நடமாட்டம் இருந்தா கீழே இருக்கிறது பெட்டரா இருந்திருக்கும்.. நடமாட்டம் குறைஞ்சிருக்கிறப்ப அங்கே இருக்கக் கூடாது.. மாடியில இருந்தா தோட்டத்தைப் பார்க்கலாம்.. ரோட்டைப் பார்க்கலாம்.. ஏன்.. தாமிர பரணி ஆற்றைக் கூடப் பார்க்கலாம்...”

அம்புஜத்தின் பேச்சை ரசித்துச் சிரித்தாள் காவ்யா.. வாழ்வின் மீதான அவளின் அணுகு முறையை எப்போதும் போல அப்போதும் அவளுக்குப் பிடித்திருந்தது...

“மாத்திரை சாப்பிட்டிங்களா பாட்டி..” கார்த்திக் காவ்யாவை பார்த்தபடி உள்ளே வரவும் காவ்யாவுக்கு ‘திக்’ கென்று இருந்தது...

‘இவன் வீட்டில் இல்லைன்னு சொன்னானே...’

கார்த்திக்கை நிமிர்ந்து பார்க்காமலிருக்க அவள் முயன்றாள்...

“அப்ப நான் கிளம்பறேன் பாட்டி...” அர்ஜீன் அங்கே வந்தான்...

‘கிளம்பறானா..? எங்கே..?’ காவ்யா பதட்டத்துடன் அவனைப் பார்த்தாள்..

“கனடாவுக்கு கிளம்பலை.. இங்கேதான்.. அம்பாசமுத்திரம் வரைக்கும் போய்விட்டு வர்றேன்...”

காவ்யாவைப் பார்த்தபடி சொன்னான் அர்ஜீன்.. அவள் முகத்தில் மீண்ட மலர்ச்சியில் அவன் கண்களில்

மின்னல் வந்தது.. அவனை நிமிர்ந்து பார்த்த அவளின் இமைகளின் படபடப்பில் அவன் தன்னை இழந்து கொண்டிருந்தான்...

“அங்கே என்ன வேலைலே..?”

“சித்தப்பா விசயமாகத்தான் போகிறேன் பாட்டி.. கலிவரதன் கம்பெனியை அவர் விலை பேசறார்..”

“தெரியும்லே.. அந்த ஆளவந்தான் ஊட வர்றானாமே...”

“வரட்டுமே.. என்னை மீறி எதுவும் நடக்காது பாட்டி...”

“பார்த்துலே.. அவன் அடாவடிக்காரன்...”

“நான் அவனைவிட அடாவடிக்காரன்.. இவனைப் போல எத்தனை ஆயிரம் பேரை நான் பார்த்திருப்பேன்..? பழம் தின்று கொட்டை போட்ட ஆள்களையே நான் உண்டு இல்லைன்னு பண்ணியிருக்கேன்.. இவனெல்லாம் எம்மாத்திரம்..?”

“அதானே.. நீ யாருலே.. அந்த அர்ஜீனனில்ல...”

அம்புஜத்தின் மெச்சுதலில் காவ்யா பெருமையுடன் அர்ஜீனை பார்த்து வைத்தாள்.. அவன் மின்னிய கண்களுடன் புருவங்களை உயர்த்தி அவளை வசீகரித்து.. விழிகளால் கேள்வி கேட்டான்.. அவள் ஒன்றும் இல்லையென்ற பாவனையில் இமை மூடித் திறந்தாள்...

அதை நம்ப வேண்டுமா..? என்று அவன் விழிகள் கேட்டன.. நம்பா விட்டால் போங்க என்று அவளின் இமைகள் வெட்டின..

ஆயிரமாயிரம் வார்த்தைகளில் கிடைக்காத இன்பத்தை அவர்களின் கண்களின் வார்த்தைகள் கொடுத்துக் கொண்டிருந்தன...

*“கண்ணாலே ரகசியம் பேசிக்கிட்டோம்..*
*நாங்க ரெண்டு பேரும்*
*காதல் வலை வீசிக்கிட்டோம்..”*

தோட்டக்காரனின் ரேடியோவிலிருந்து எழும்பிய பாடல் மாடி ஜன்னல்களின் வழியாக உள்ளே வர...

“எங்க காலத்துப் பாட்டு..” என்று அதை ரசித்தாள் அம்புஜம்...

அர்ஜீன் ரகசியப் புன்னகையுடன் எழுந்து காவ்யாவிற்கு மட்டும் தெரியும் படியாக லேசாக தலையசைத்து விடைபெற்றான்.. காவ்யாவுக்கு அது பிடித்திருந்தது.. அவள் இமைகளை மூடி அவனுக்கு விடை கொடுத்த விதம் அவனுக்குப் பிடித்திருந்தது...

“கார்த்திக் போகலாமா..?” அர்ஜீன் கிளம்பி விட்டான்...

“நானா..? நான் எதுக்கு..?” கார்த்திக் நகரவில்லை...

“அறிவிருக்காலே.. அண்ணன் எதுக்காக கூப்பிடறான்.. இதுபோல பிஸினெஸ் டீலிங்கை நீயாய் பேசி முடிக்கக் கத்துக்கனும்னுதான கூப்பிடறான்..? கூடப் போய்விட்டு வாலே..” சரவணன் சீறியபடி வந்தார்..

“டாடி.. இது அண்ணன் பேசி முடிக்கப் போகிற டீல்..”

“யாருக்காகலே பேசி முடிக்கப் போகிறான்..? தெருவில் போகிற வழிப் போக்கனுக்கா பேசி முடிக்கப் போகிறான்..?”

“உங்களுக்காகத்தான்..” கார்த்திக்கின் குரல் இறங்கியது..

“உனக்காகவும்தான்லே.. இந்தச் சொத்தெல்லாம் யாருக்கு வரப் போகுது.. உனக்குத்தானே..”

சரவணனின் இந்த அதட்டலை கார்த்திக்கிற்கு பிடித்திருந்தது.. அதை காவ்யாவின் முன்னால் அவர் சொன்னதை அவன் விரும்பினான்...

‘கேட்டாயா.. நான் இத்தனை சொத்துக்கும் அதிபதி..’ காவ்யாவை பார்த்தான்..

அவள் எனக்கென்ன என்று தலை குனிந்து கொண்டாள்.. அவள் நிமிருவாளா என்று அவன் காத்து நின்றான்.. அவள் நிமிர்வதாக இல்லை...

“கிளம்புலே..” அம்புஜமும் அதட்டிவைக்க..

“கூட்டுச் சதியாயிருக்கே..” என்று புலம்பியபடி அவன் கிளம்பினான்..

என்னவோ புலி வேட்டைக்கு அவன் கிளம்புவதைப் போல காற்றில் கைகளை வழித்து கன்னத்தில் நெட்டி முறித்துக் கொண்டாள் அம்புஜம்..

“அவனைக் கெடுக்கிறதெல்லாம் நீங்கதான்ம்மா...” சரவணன் தலையில் அடித்துக் கொண்டார்...

காவ்யாவிற்கு சிரிப்பு வந்தது.. பெரியவர்களின் முன்னால் சிரிக்கக் கூடாது என்று சிரிப்பை அடக்கிக் கொண்டாள்... ஆனால்.. அவளின் கண்கள் அந்தச் சிரிப்பை பிரதிபலித்து விட்டன.. அவள் கண்களின் சிரிப்பை ரசித்துப் பார்த்தபடி அர்ஜீன் அறையை விட்டு வெளியேறினான்...

காவ்யாவுக்கு வெறிச்சென்று இருந்தது.. அவனில்லாத அந்த வீட்டில் இருக்க அவளுக்குப் பிடிக்கவில்லை... அர்ஜீனின் வருகைக்குப் பின்னால் அந்த வீட்டிற்கு அம்புஜத்திற்காக அவள் வந்து போகவில்லை என்பதை அவள் மனம் அறிவுறுத்தியது..

அவன் வாழ்விற்குள் அவள் நுழைய விருப்பப் படாமலிருக்கும் போது எதற்காக அவள் அவன் அருகாமையைத் தேடி ஆவலுடன் ஓடி வருகிறாள்..?

அவளுக்கே அது புரியவில்லை..

"அண்ணன் போன் பண்ணுச்சு பாட்டி..."

செல்போனை காதுக்கு கொடுத்தபடி காவ்யாவும் கிளம்பிவிட்டாள்..

"இப்போத்தானே வந்த.." அம்புஜத்திற்கு ஏமாற்றமாக இருந்தது...

"நாளைக்கு ரொம்ப நேரம் இருக்கிறேன் பாட்டி..."

அவனும் இருப்பான் என்ற நினைவில் அவள் உத்திரவாதம் அளித்தாள்...

வீட்டிற்கு அவள் போனபோது மருக்கொழுந்து கிளம்பிக் கொண்டிருந்தாள்...

"வந்துட்டியா பாப்பா.." ஆவலுடன் கேட்டாள்...

அவள் ஆவல் அவளுக்கு.. கண்ணதாசன் இல்லாத நேரங்களில் பேச வழி வகுத்த காவ்யாவிடம் பேச்சு வார்த்தை நடத்தும் ஆவலில் அவள் துடித்தாள்..

"பாப்பான்னு சொன்னதுக்குத்தானே அண்ணன் உனக்கு வாய்ப்பூட்டு போட்டு வைச்சிருக்கு.. இன்னும் நீ அடங்கலையே..."

"ஏன் பாப்பா.. நம்ம வீட்டுப் புள்ளையை நாம செல்லமாக் கொஞ்சினா அது தப்பா பாப்பா.."

"அது தப்பில்ல.. கல்யாண வயசில இருக்கிற குமரியப்பாத்து பாப்பாவாக்கறயே அதுதான் தப்பு.. எனக்கு சூடா காபி குடேன்.."

“உனக்கில்லாத காபியா பாப்பா..?”

மருக்கொழுந்து சமையலறைக்குள் பாய்ந்தாள்.. அவள் போட்டுக் கொடுத்த காபியைக் குடித்தபடி காவ்யா கதை பேச.. அவளும் பதிலுக்கு திறந்த வாயை மூடாமல் ஊர்கதை.. உலகக் கதையெல்லாம் பேசிக் கொண்டிருந்தாள்.. வாசலில் கண்ணதாசனின் அலுவலகக் கார் வந்து நிற்கும் சப்தத்தைக் கேட்டதும்.. இவள் சப்தம் அடங்கியவளாக அமைதிப் பூங்காவாகி விட்டாள்..

“தூள் பரப்பறக்கா..” காவ்யா ரகசியமாக மருக்கொழுந்தைப் பார்த்துக் கண்சிமிட்டினாள்...

முதல் நாள் சோர்வாக இருந்த தங்கையின் முகத்தில் சிரிப்பைக் கண்டதில் மலர்ச்சியாகி விட்ட கண்ணதாசன் நிம்மதியுடன் குளித்து உடைமாற்ற அவன் அறைக்குள் போனான்...

மருக்கொழுந்து கிளம்பிப் போனதும்.. அவனுக்கு காபி கொடுத்துவிட்டு பொதுவாக பேசிக் கொண்டிருந்தாள் காவ்யா இரவு உணவுக்குப் பின் தூங்கப் போனபோது அவள் மனதில் அந்தக் கேள்வி எழுந்தது...

‘அவன் அந்த டீலை முடிச்சிருப்பானா...’

**இ**ல்லை.. அந்தப் பேச்சில் தடங்கல் வந்திருப்பதை அடுத்தநாள் அம்புஜத்தின் வீட்டிற்குப் போனபோது அவள் தெரிந்து கொண்டாள்.. குடும்பமே அம்புஜத்தின் அறையில்

குழுமியிருந்தது.. அர்ஜீனும் அங்கேதான் இருந்தான்.. அவன் முகம் கருத்திருந்தது...

“லாஸ்ட் மினிட்ல அந்தாளு பெட்டியைக் கேட்டப்ப அண்ணன் பெட்டியைத் திறக்குது.. அது வெறும் பெட்டியா இருக்குப்பா..” கார்த்திக் சொன்னான்...

“ஏ.டி.எம்மில கோடிக்கணக்காய் பணம் எடுக்க முடியாதே சித்தப்பா.. பேங்கில டைம் ஓவராயிருச்சு...” அர்ஜீன் முகத்தில் ஈயாடவில்லை...

அப்போதுதான் அவனைப் பார்த்து சரவணன் அந்தக் கேள்வியைக் கேட்டார்...

“எப்படி அர்ஜீன்..? பணத்தை உன் பொறுப்பில் தானே கொடுத்திருந்தேன்..? அந்தப் பணத்துக்கு நீதானே பொறுப்பு.. எப்படி பணம் காணாம போச்சு..?”

‘அதே கேள்வி..!’ காவ்யா சிலையாக சமைந்தாள்..

அன்று அவளைப் பார்த்து அர்ஜீன் கேட்ட அதே கேள்வியை இன்று சரவணன் அவனைப் பார்த்துக் கேட்கிறார்...

காலம் அவன் பக்கம் திரும்பிக் கேட்ட கேள்வியில் அவள் மகிழ்ந்து விடவில்லை.. ‘அவனுக்கா இந்த நிலை..?’ என்று உயிர் துடிக்க நின்றாள்...

அதே துடிப்போடு அர்ஜீனின் முகத்தை மனம் கனக்க அவள் பார்த்தாள்...

# 143

## உன்னோடு ஓர் நாளில்... வாழ்ந்துவிட ஆசைகொண்டேன்...

**கா**வ்யாவினால் அவள் காதுகளை நம்ப முடியவில்லை... இதைக் கேட்பது சரவணன்தானா..? அர்ஜீனிடமா அந்தக் கேள்வியைக் கேட்கிறார்..?

அவள் விழிவிரிய நோக்கியதைப் போல.. அம்புஜமும் மகனை நோக்கினாள்...

“என்னலே.. என்ன பேச்சு பேசுத.. யாருகிட்டப் பேசுதன்னு தெரிஞ்சுதான் பேசறியா..? இவன் அர்ஜீன்லே.. உன் மகனுக்கு இவனைப் போல ஆகனுமுன்னு அடையாளம் காட்டி வளர்த்தியே.. அந்த அர்ஜீன்லே.. உன் அண்ணன் பெத்த மகனாயிருந்தாலும்.. நீ அண்ணாந்து பார்க்கிற உயரத்தில இருக்கானே.. அந்த அர்ஜீன்லே...”

“இருக்கட்டும்மா.. இதையெல்லாம் யாரு இல்லைன்னு சொன்னது..? இப்ப நடந்திருக்கப் பேச்சைப் பேசுங்க.. பெட்டியில கொடுத்த பணம் எங்கே போச்சு..?”

காவ்யாவினால் அந்தக் கேள்வியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவள் இமைமூடி அதைச்

சகித்துக் கொள்ள முயன்றாள்.. அவள் கண்ணுக்கு முன்னால் நடக்கும் அந்த நிகழ்வைச் சகித்துக் கொள்ள அவளால் முடியவில்லை..

அர்ஜீன் குற்றவாளிக் கூண்டில் நிற்பதா..? அதை அவள் பார்த்துக் கொண்டு நிற்பதா..?

அப்படித்தான் ஆனது.. சரவணன் கொதிப்பான மனநிலையில் இருந்தார்.. அவருக்கு மிக முக்கியமாக இருந்த அந்த வியாபார பரிவர்த்தனை நின்று போயிருக்கிறது... அதற்கு காரணமான அர்ஜீன் கொடுத்த பெட்டியில் பணம் இல்லை என்று சொல்லப் படுகிறது...

அதைத்தான் சரவணன் ஏனென்று கேட்டார்..

“உன் கையில் பணத்தைக் கொடுத்தேன் அர்ஜீன்...”

“நான் இல்லைன்னு சொல்லலையே சித்தப்பா..”

“இப்ப அந்தப் பணம் இல்லாமப் போயிருச்சே... அதுக்கு என்ன சொல்ற...?”

“தெரியலை சித்தப்பா.. சம்திங் ஹேப்பன்...”

“இருக்கலாம்.. பட்.. அதையெல்லாம் நீ எதிர்பார்த்-திருக்கனுமா இல்லையா.. உன் அஜாக்கிரதையாலேதானே பணம் காணாமல் போயிருக்கு..?”

“ஐ கான்ட் பிலிவ் திஸ்.. ஹௌ இஸ் இட் பாஸிபிள்..? பெட்டி என் கையில்தான் இருந்தது சித்தப்பா...”

“உன் கையிலிருந்த பெட்டியிருந்த பணம் எப்படிக் காணாமல் போச்சு..? குருவி வந்து தூக்கிட்டுப் போயிருச்சா...”

“ப்ச்.. என்ன சித்தப்பா இது..? விளையாடாறிங்களா..?”

“நீ விளையாட்டுப் பிள்ளையில்லை அர்ஜீன்.. அப்படியிருந்தால்தான் நான் இந்தப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்திருக்கவே மாட்டேனே.. நீ பெரிய பிஸினெஸ் மேக்னெட்.. சாதனையாளன்.. உன்கிட்ட வந்து பேசற உரிமை உனக்கு சொந்தம்கிறதால மட்டுமே எனக்குக் கிடைச்சிருக்கு.. இது தெரிந்ததினாலதான் நான் இந்தப் பொறுப்பை உனக்குக் கொடுத்தேன்...”

“அதில் தப்பில்ல சித்தப்பா..”

“வேற எதில் தப்பு...?”

“பதட்டம் வேண்டாம் சித்தப்பா.. பணத்துக்கு நான் ஏற்பாடு பண்றேன்...”

“இது பணத்தைப் பத்தின பேச்சில்லை.. நீ ஒப்புக்கிட்ட பொறுப்பை சரியானபடி நிறைவேத்தல.. அதைப் பத்தித்தான் பேச்சு.. மத்தபடி நீ என்னைப் போல நூறுமடங்கு அதிகமான பணக்காரன்னு இந்த ஊர் உலகத்துக்குத் தெரியுமே அர்ஜீன்.. இந்தப் பணத்தை நீ திருப்பிக் கொடுக்க மாட்டேன்னு கைப்பிள்ளை கூடச் சொல்லாது.. உனக்கு இந்தப் பணமெல்லாம் பெரிய விசயமேயில்லைன்னு எல்லாருக்கும் தெரியும்...”

“அப்புறமென்ன சித்தப்பா..?”

“உனக்குத் தெரியாதா..? இல்லை.. தெரியாததைப் போல நடிக்கிறயா..? கலிவரதன்கிட்ட அந்தக் கம்பெனியை நான் வாங்கியே ஆகனும்.. இது எனக்கு முக்கியம்...”

“ஏறக்குறைய டீல் முடிந்து விட்டது சித்தப்பா.. பணத்தைக் கொடுக்க பெட்டியை நீட்டினால்.. அதுக்குள்ளே ஒன்னுமேயில்ல.. அதுதான் பேச்சில் தடங்கலை உண்டு பண்ணிருச்சு...”

“சொல்லாதே.. இந்நேரத்துக்கு ஆளவந்தான் எல்லாததையும் முடிச்சிருப்பான்..” வயிறெரிச்சலோடு சொன்னார் சரவணன்...

அர்ஜீன் காவ்யாவைப் பார்த்தான்.. சலனமில்லாத அவன் முகத்திலிருந்து... அவன் நினைவலைகளை அவளால் கணிக்க முடியவில்லை...

“விடுங்க.. அது அமையனும்னு இருந்திருந்தா அமைஞ்சிருக்கும்...” சுமதி கணவரை ஆறுதல் படுத்த முயன்றாள்...

“அமையத்தான் இருந்தது சுமதி.. இவன் பணத்தைக் காணோம்ன்னு சொல்லி எல்லாத்தையும் கெடுத்திட்டான்..” சரவணன் குமுறினார்...

“நீ பேசறது சரியில்லைலே.. அவ்வளவுதான் நான் சொல்லுவேன்...” அம்புஜம் மகனைக் கண்டித்தாள்...

“உங்க அக்கா பேரன் செய்தது மட்டும் சரியாம்மா..?” சரவணன் தாயை முறைத்தார்...

“டாடி.. நானும் அண்ணன் கூடத்தான் இருந்தேன்..” கார்த்திக் நிலைமையை விளக்க முயன்றான்...

“நீ கூடப்போய் என்னத்தைலே கிழிச்சே.. பணத்தை கோட்டை விட்டுட்டு வந்து நிற்கிற...”

சும்மாவே மகனை வாங்கு வாங்கென்று வாங்குபவர் காரணம் கிடைத்தால் சும்மா விடுவாரா..? பத்து நிமிடத்திற்கு அவனை கிழி.. கிழியென்று கிழித்துத் தோரணம் கட்டி தூளி ஆட்டி விட்டார்..

அங்கே அனல் பறந்து கொண்டிருந்தது.. காவ்யாவினால் அங்கே நிற்கவும் முடியவில்லை... அர்ஜீன் அந்த நிலைமையில் நின்று கொண்டிருந்த போது விட்டு நழுவவும் முடியவில்லை.. முள்மேல் நிற்பது என்றால் எப்படியிருக்கும் என்று அன்றொரு நாள்.. மதுரையில்.. அர்ஜீனின் கடையில் அவள் அனுபவித்து உணர்ந்தாள்.. அதே உணர்வை மறுபடியும்.. திருநெல்வேலியில்.. அம்புஜத்தின் வீட்டில் அவள் உணர்ந்து கொண்டிருந்தாள்...

“ஆளவந்தானுக்கு லட்டு போல சான்ஸ் கிடைச்சிருச்சு..” சரவணன் புலம்பினார்...

“கண்ணா.. லட்டு திங்க ஆசையான்னு கடவுள் அந்தாள்கிட்டக் கேட்டிருப்பார் போல டாடி...”

நேரம் காலம் தெரியாமல் பேசிவைத்த கார்த்திக்.. தன் நகைச்சுவையில் மகிழ்ந்து போனவனாக...

‘எப்படி..?’ என்ற பார்வையை வேறு காவ்யாவின் பக்கமாக வீசி வைத்தான்...

‘சகிக்கலை...’ காவ்யா முகம் சுளித்ததில் கார்த்திக்கின் முகம் பியூஸ் போன பல்பாக பொழிவிழந்தது...

தாள மாட்டாமல் செல்ல மகனை முறைத்தாள் சுமதி.. கனல் வீசும் அந்தப் பார்வையில் வாயை இறுக மூடிக் கொண்டவன் அர்ஜீனின் முகம் பார்த்தான்...

“நீயெல்லாம் இப்படியிருக்கப் போய்தாண்லே.. இந்தப் பொறுப்பை நான் இவன்கிட்ட ஒப்படைச்சேன்...” லேசாக தலையில் அடித்துக் கொண்டார் சரவணன்...

அம்புஜத்திற்கு மகன் படும் பாட்டைக் காணப் பொறுக்கவில்லை.. அதே சமயத்தில்.. அவர்களின் சொந்த பந்தத்திற்குள் மிக உயரமான இடத்தில் இருக்கும் அர்ஜீனை சரவணன் குறை சொல்வதையும் அவள் விரும்பவில்லை...

“சரவணா.. எதுவும் வேணும்னே நடந்ததில்லையே..”

“அப்படி நானும் சொல்லலைம்மா..”

“அர்ஜீன் மேலே ஏன் குறை சொல்ற..?”

“யாரும்மா குறை சொன்னது..? மலைபோல இவனை நம்பினா.. இவனே இப்படிச் செய்து வைக்கலாமா..?”

“இதுக்கு இவன் என்னலே பண்ணுவான்..?”

“என்னம்மா இப்படிப் பேசறிங்க..? இந்த டீலிங்கைப் பத்தின எல்லா விவரத்தையும் இவனுக்கு நான் சொல்லியிருக்கேன்... அந்த ஆளவந்தான் எதுக்கும் துனிஞ்சவன்னு இவனுக்கு நல்லாவே தெரியும்.. தெரிஞ்சிருந்தும் பணத்தை கோட்டை விட்டிருக்கான்னா நான் என்னத்தைம்மா சொல்றது..?”

“பொறுமையா இருலே...”

“போங்கம்மா.. நீங்களும் உங்க உபதேசமும்.. நானே கம்பெனி என் கை நழுவி போயிருச்சுங்கிற கடுப்பில இருக்கேன்.. நீங்க பொறுமையைப் பத்திப் பேசறிங்க...”

அம்புஜத்தால் மகனைச் சமாதானப் படுத்த முடியவில்லை.. ஆனாலும் அவள் தன் முயற்சியைக் கை விடவில்லை..

“பாருலே.. இதுல யாரை குறை சொல்லியும் பிரயோசனமில்ல.. நடக்கிறதுதான் நடக்கும்...”

“இதைச் சொல்லுங்க.. அந்த ஆளவந்தானுக்குத் தான் நினைச்சதெல்லாம் நடக்கும்.. எனக்கு எதுவும் நடக்காது...”

சுமதி தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.. நடந்து விட்ட நிகழ்வில் அவள் யாருக்கென்று பேசுவாள்..? யாருடைய நியாயத்தைப் பற்றி யாருக்கு உணர வைப்பாள்..?

மகிழ்ச்சி ததும்பிக் கொண்டிருந்த வீட்டில்.. அது போன்ற சூழல் நிலவி நிற்பதை யாராலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

"சரவணா.." அம்புஜம் மீண்டும் மகனைச் சமாதானப் படுத்த முனைய.. அவர் வெடித்தார்..

"என்கிட்டயே பேசறிங்களேம்மா.. கொஞ்சம் உங்க பேரன்கிட்டயும் பேசுங்க.. ஏன் இப்படிச் செய்தான்னு கேளுங்க.. சும்மா.. குற்றம் சொல்கிறேன்னு என்மேலேயே குற்றப்பத்திரிக்கை வாசிக்கக் கூடாது.. அவன் மேல குற்றமில்லைன்னு புரூவ் பண்ணனும்..."

சரவணனின் கோபத்தில் காவ்யா அதிர்ந்து விட்டாள்.. நிருபிக்க வேண்டுமா..? யார்..? அர்ஜீனா...?

அம்புஜம் இதை பலத்த கண்டனத்துடன் ஆட்சேபிப்பாள் என்று அவள் எதிர்பார்த்தாள்...

'பாட்டி இதைச் சும்மா விட மாட்டாங்க.. மகனைப் பார்த்து நாலு கேள்வி கேட்டுட்டுத்தான் விடுவாங்க...'

அவள் கொதித்துக் கொண்டிருந்த போது அம்புஜம் நான்கு கேள்விகளைக் கேட்டாள்..

சரவணனைப் பார்த்து அல்ல.. அர்ஜீனைப் பார்த்து அந்தக் கேள்விளைக் கேட்டு வைத்தாள்...

“சரவணன் கேட்கிறதிலயும் ஒரு நியாயம் இருக்கு அர்ஜீன்.. அந்தப் பணம் உன் பொறுப்பில்தான இருந்துச்சு..?”

“பாட்டி..?”

“உன் பொறுப்பில் இருந்த பணம் எப்படிக் காணாமல் போச்சு...?”

“பாட்டி..?”

“களவு போயிருந்தாலும் அதுக்குக் காரணமா உன்னைத்தானே சொல்லுவாங்க..? அப்படியிருந்தும் ஏன் அஜாக்கிரதையாய் இருந்த அர்ஜீன்...?”

“பாட்டி..”

“இதுக்கெல்லாம் பதில் சொல்ற பொறுப்பு உனக்கு இருக்குலே.. தெரிஞ்சிருந்தும் ஏன் பணத்தை தொலைச்சே அர்ஜீன்..?”

“பாட்டி..”

அர்ஜீன் திகைத்தானோ இல்லையோ.. பாட்டி கேட்ட நான்கு கேள்விகளில் காவ்யா திகைத்து சிலையாக சமைந்தாள்...

- ஐந்தாம் பாகத்தில் தொடரும் -


லட்சுமி பாலாஜி பதிப்பகம்